# சந்திர கிரகணம்

த. நா. குமாரஸ்வாமி



# சந்திர கிரகணம்

த. நா. குமாரஸ்வாமி

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

உரிமை பதிவு]
கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை
[விலை ரூ. 2/8

முதற் பதிப்பு : 1946

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 573
நன்கொடை எண்: 573



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

Printed at the Madras Law Journal Press, Mylapore, Madras
MS 7[illegible]—1st April, 1946—1500c.

# முகவுரை

பல சந்தர்ப்பங்களில் நான் நெய்த இந்தக் கதைகள் இப்பொழுது ஒரு திரட்டாகக் கடைக்கு வந்திருக்கின்றன. இதில் ரகம் ரகமான சரக்குகள்; ஜரிகைப் பேட்டுப் போட்டதும் உண்டு, சாதாக் கரையும் கிடைக்கும். விசித்திர வர்ண இழைகள் போட்டதும் இருக்கும். சிலந்தி வலை போன்ற தூவெண்மையானதும், தடித்த நூலில் யாத்துப் பழுப்பு நிறம் வாய்ந்ததும், 'லைட் கலர்' கொண்டதும், உத்தர வாதமான கெட்டிச் சாயம் உள்ளதும் நீங்கள் பார்வையிடலாம். எல்லாம், பச்சென்று குளிர்ந்த கிராமத்தில் குடிலின் நிழலில் பாவு போட்டுச் சொந்தத் தறியில் உருவானவையே. பட்டணத்துச் சந்தடியில் புகை கப்பிய ஆலைகளில் அவசரமாக வெளிவந்தவை அல்ல. பொருளுக்கு ஏற்ற மதிப்பைத் தந்து அன்பர்கள் என் கதைகளை வரவேற்பர் என நம்புகிறேன்.

திருவலிதாயம்
மாசி.

யாத்தவன்
**தண்டலம் நா. குமாரஸ்வாமி**

★

யே புல நா புடிதே
ஜரேசே தரணீதே;
யே நதீ மருபதே
ஹாராலோ தாரா,
ஜாநி ஹே, ஜாநி தா ஓ
ஹய்நி ஹாரா*

★

---

* மண்ணில் உதிர்ந்து மட்கும் மலரா அரும்புகள்; அவை மறைவன அல்ல. மணலில் உலரும் தீம்புனல் ஆறும் என்றுமே மறைவதும் இல்லை.

★

உதிர்ந்துபோன
என் இரு பிள்ளை - அரும்புகள்
ஜதீன் — கிருஷ்ணன்
இவர்கள் நினைவாக

★

காமராசர் பல்கலைக்...
தி.க. சண்மு...
தமிழ்...

# பொருளடக்கம்

பக்கம்

1. சந்திரகிரகணம் ... 1
2. தேவதாசி ... 18
3. ஹஸ்தி சைலம் ... 30
4. பரோபகாரம் ... 39
5. தீபாவளிச் சித்திரங்கள் ... 46
6. நீறு பூத்த நெருப்பு ... 60
7. விளையாட்டும் விபரீதமும் ... 76
8. ஜோலார்த் தங்கம் ... 85
9. கண்ணீர்த் துளிகள் ... 97
10. உத்தியோக பர்வம் ... 103
11. விநோத வேட்டை ... 107
12. கிருஷ்ணவேணி ... 119
13. பாசமும் பக்தியும் ... 123
14. ஜார்ஜெட் சேலை ... 139
15. மழையும் வெயிலும் ... 145
16. திரை மறைவில் ... 153
17. ரகுராமனின் கல்யாணம் ... 164
18. கவியின் தாபம் .. 175
19. வண்டும் மின்மினியும் ... 186
20. வீரத் தியாகி ... 189
21. 'இவாகுவேஷன்' விசித்திரம் ... 197

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

# சந்திர கிரகணம்

## 1

இளம் பல்லவ வீரர்கள் இருவர் போர்த் திறன் வாய்ந்த தம் படையுடன் ஆர்யாவர்த்தத்திலிருந்து கிளம்பி விந்திய பர்வதத்தைக் கடந்து, தென் திசையே சென்று, கோதாவரி என்னும் ஆற்றின் கரையில் வதிந்து, அங்கு வசித்து வந்த புராதனக் குடிகளை வென்று தம் கொடியை நாட்டினர். வளம் பொருந்திய அந்தப் பிரதேசம் முழுவதையும் தம் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டனர். தான்ய கடகம் என்றும், அமராவதி என்றும் தங்கள் ராஜதானிக்குப் பெயர் சூட்டினர். ராஜ்யத்தைச் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வந்தவர்கள் இவர்கள். தென்னாட்டில் ஆரிய நாகரிகத்துக்கு அடிகோலியவர்களுள் இவ்விரு வீரர்களும் முக்கியமானவர்கள். பப்ருவாஹனனும் கீர்த்திஸிம்ஹனும் இணைபிரியாத நண்பர்கள்.

பல்லவ வீரர்கள் இருவரும் சேர்ந்து தம் தேக பலத்தால் தென்னாட்டில் கொற்றத்தை அசையாமல் நிறுவினர். ஆனால் ஒரு பிரச்னை கிளம்பியது: "யார் அரசனாக இருப்பது?" என்பதே அது.

"கீர்த்திஸிம்ஹா! நீ ராஜாவாகிவிடு; நான் சேனாதிபதியாக இருக்கிறேன்" என்றான் பப்ருவாஹனன்.

இந்த யோசனைக்குக் கீர்த்திஸிம்ஹன், "ஊஹூம், நீதான் அரசனாகத் தகுதி உடையவன். நான் சேனைக் காவலனாக இருப்பேன்" என்றான்.

யார் அரசனாவது என்னும் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. தான் அரசனாகிவிட்டால் நண்பனை வஞ்சித்தது போல் ஆகும் என்பதே இருவருடைய எண்ணமும். 'ராஜ்யத்தைச் சம பாதியாகப் பகிர்ந்துகொண்டாலோ ராஜ்யத்தின் விஸ்தீர்ணம் மிகவும் குறைந்துவிடும். எதிரிகள் நாற்புறமும் சமயம் வாய்க்குமா என்று

காத்துக்கொண்டிருக்கிறார்கள்; ராஜ்ய பாகத்தினால் ஒற்றுமைக்கும் ஹானி உண்டாகலாம்' என்று இவ்வாறு இரு நண்பர்களும் தீவிரமாக ஆலோசிக்கத் தொடங்கினர். யார் அரசனாக வருவது என்பதைப் பற்றி இவர்கள் ஒரு முடிவுக்கு வரவில்லை.

ஒரு நாள் இரவு. சந்திரன் முழு வட்டமாகக் கிளம்பியது. அன்று பூரணிமை. கற்களால் கட்டப்பட்ட அரணின் முகட்டில் சிநேகிதர்கள் இருவரும் நெற்றியில் சிந்தைக் கீற்றுக்கள் தோன்ற மதியத்தைப் பார்த்தபடி வீற்றிருந்தனர். வெகு நேரம் சிந்தித்தும் யார் அரசனாவது என்பதைப் பற்றி ஒரு முடிவும் ஏற்படவில்லை.

பப்ருவாஹனன் பிங்கல நிறம் வாய்ந்த அடர்த்தியான தன் தாடியில் விரலைவிட்டுச் சற்று நேரத்துக்கு ஒருதரம் அதைக் கோதிக்கொண்டே கொத்தளத்தில் இப்படியும் அப்படியுமாக நடக்கலானான். காளை மாட்டை ஒத்த சாயல்; ஈயம் போன்ற கண்கள்; இரும்பினால் வடித்தாற் போன்ற உடல் அமைப்பு அவனுக்கு மூளைக்கு வேலையே கொடாததால் அவனுடைய சரீரம் முழு வளர்ச்சியுடன் விளங்கியது. அப்போது, 'யார் அரசனாவது' என்ற தொல்லை மூண்டதனால் அவன் தன் தாடியைத் துரிதமாக உருவி விட்டுக்கொண்டதுதான் மிச்சம். மூளை மட்டும் வேலை செய்யவில்லை. கீர்த்திஸிம்ஹனோ முருகு வாய்ந்தவன். பூவின் மென்மையோடு இருந்தாலும் அவனது உடல் வயிரம் பாய்ந்தது; செம்பட்டைத் தலை மயிர். கண்ணில் பாவைகள் கருநிறமாகவே தோற்றின. முகத்தில் தாடி இல்லை. வில்லின் கடைபோல் வளைவான மீசையை மட்டும் வளர்த்திருந்தான். மீசையை விரலினால் முறுக்கி விட்டுக்கொண்டே மதிற் சுவரில் சாய்ந்த வண்ணம் அவன் குணதிசையில் வட்டமாக எழும் திங்களைக் கண் கொட்டாமல் கவனித்தான்.

நிலவு கதிர் விரித்து மகிழ்ச்சியுடன் விளங்கியது. சற்று நேரத்திற்கெல்லாம தனக்கு ஏற்படப்போகும் விபத்தை அறிந்துகொள்ளாமல் பூர்ண சந்திரன் சிரித்தான்.

சட்டெனப் பப்ருவாஹனன், "நாம் இருவருமே ராஜாக்களாக இருந்தால் என்ன தவறு?" என்றான்.

"இருவரும் ராஜாக்களாக இருந்தால் யாருடைய ஆக்ஞைக்கு யார் கீழ்ப்படிவது? பிரஜைகளுக்குக் கட்டளையிடுவது யார்?" என்றான் கீர்த்திஸிம்ஹன்.

"வாஸ்தவமே!" என்று தலையசைத்தான் பப்ருவாஹனன்.

இந்தப் புருஷர்களுக்கு வான நூலிலும் கால கணிதத்திலும் ஞானம் சிறிதளவும் இல்லாமையால் பெருந் தொல்லையில் சிக்கிக்கொண்டனர். அந்தப் பக்கம், ஆகாயத்தில் ஒளிரும் சந்திரனும் கஷ்டத்துக்குள்ளானான். கீர்த்திஸிம்ஹன் சட்டென்று நிமிர்ந்து பார்க்கையில் வானிடைத் தோன்றிய காட்சி அவனுக்கு அச்சத்தை விளைவித்தது. 'அடே, இதென்ன?' என்றான்.

கீர்த்திஸிம்ஹனுடைய கண்கள் செல்லும் திக்கிலேயே பப்ருவாஹனனுடைய பார்வையும் சென்றது. ஆகாயத்தில் துளிக்கூட மேகத்தைக் காணவில்லை. ஆனால் சந்திரன் மட்டும் விளிம்பு தேய்ந்து ஒளியாகத் தென்பட்டான். புகை நிறம் போன்ற கருமை அம்புலியை மெல்ல விழுங்கிக்கொண்டே வந்தது. வானும் இருள் தோய்ந்து விளங்கிற்று.

நண்பர்கள் இருவரும் திகிலும் கலவரமும் கொண்டனர். அதைப்போன்ற ஒரு காட்சியை அவர்கள் முன்பு சில முறை கண்டிருந்தும் அது இயற்கையில் தோன்றும் ஒரு நிகழ்ச்சி என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை. எதிர்பாராத கேடு ஒன்று உலகிற்கு வந்துவிட்டதாகவே எண்ணினர். பப்ருவாஹனன் பயத்தினால் கீர்த்திஸிம்ஹனை நெருங்கி அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

கீர்த்திஸிம்ஹன் முகத்திலும் சுயாடவில்லை. இருந்தும் தன் உயிர்ப்பாங்கனைத் தேற்றவேண்டி, "அஞ்சத்தக்கது ஒன்றும் இல்லை, நண்பா! இதோ சற்றுப் பொறுத்துச் சந்திரன் விடுபடுவான். சிறு வயசில் நான் குரு குலத்தில் படிக்கும்போது ஹாரீத ரிஷி, ராகு என்ற அரக்கன் சந்திரனை விழுங்கும் அதிசயத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்" என்றான்.

இருவரும் கைகோத்துக்கொண்டு இமை கொட்டாமல் வானத்தையே கவனிக்கலாயினர். ஆபத்தில் சிக்கி ஒளியிழந்த திங்களைப் பார்த்து அரணுக்கு வெளியே திரண்டிருந்த ஜனங்களும் தங்களுக்கு உண்டான அச்சத்தைப் போக்கிக்கொள்ளப் பலவிதமாக இரைச்சலிட்டுப் பேரிகை, பாங்கா போன்ற ரண பேரிகளை முழக்கினர்.

சந்திரனது ஒளிமயமான வடிவம் வெளிப்படுவதற்கு அதிக நேரம் ஆயிற்று. அரவு விழுங்கிய மதியம் மாசின்றி மீண்டும் அமிருத கிரணங்களைப் பொழிவதைப் பார்த்துச் சந்தோஷத்தால் ஆர்த்தனர் அனைவரும். பப்ருவாஹனனும் கீர்த்திஸிம்ஹனும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். "அப்பாடா! இன்று நாம் பிழைத்தது. புனர்ஜன்மம்!" என்று பெருமூச்சு விட்டான் பப்ருவாஹனன்.

"அது மாத்திரமா? நம்மை வருத்தும் பிரச்னைக்கும் முடிவு ஏற்பட்டுவிட்டதே" என்ருன் கீர்த்திஸிம்ஹன்.

"எந்த மாதிரியான முடிவு?"

"கேள் : இன்று தொடங்கி நீ ராஜாவாகிவிட்டாய். மறுபடியும் எப்போது சந்திர கிரகணம் வருகிறதோ அப்போது உன் அரசாட்சியின் காலம் முடிவடையும். நான் அரசனுவேன். இந்தப்படியே கிரகணத்திற்குக் கிரகணம் மாறி மாறி நாம் அரசர்களாவோம்."

"இது சரியான யுக்திதான். என் மூளைக்கு இது தோன்றவே இல்லை, நீ குருகுலத்தில் வாசித்தவன் ஆயிற்றே. அதனுல்தான் பளிச்சென்று யோசனை வருகிறது உனக்கு. அது இருக்கட்டும். முதலில் நான் ராஜா ஆக வேண்டிய காரணம் என்ன என்பதை நீ சொல்லவில்லையே?" என்ருன் பப்ருவாஹனன்.

"எப்படி இருந்தால் என்ன ? இந்த யுக்தி சரியானதல்லவா ? நான் வருகிறேன், மஹாராஜா ! நாளைக்கே படை திரட்டிக்கொண்டு திக் விஜயத்திற்குச் செல்வேன் ; அரக்கர்களை வெல்வேன் ; அளவற்ற செல்வம் கொணர்

வேன். ஹே ராஜன்! பிரஜைகளின் குறைகளைக் கவனித்து ராஜ்ய பரிபாலனம் செய்யும். ராக்ஷஸாந்தகரான தங்களுக்கு ஜயம் உண்டாகட்டும்.''

இவ்வாறு கூறிவிட்டுக் கீர்த்திஸிம்ஹன் வெளியே போனபோது பப்ருவாஹனன் ஒன்றும் தோன்றாதவனாய்ப் பரபரப்புடன் தன் தாடியை இரண்டு மூன்று தரம் தடவிக் கொடுத்தான்.

மூளைக்கு அதிகமான சிரமம் கொடுக்காத பப்ருவாஹனனுக்கும் திடீரென்று அரசனுக்குரிய அதிகார புத்தி உதயமாயிற்று. கம்பீரமான த்வனியில், "ஏ ஸேனாபதி, கீர்த்திஸிம்ஹ! நில்!'' என்றான்.

கீர்த்திஸிம்ஹன் திரும்பி அரசன் முன் வந்து வணக்கமாக, "தேவரீர்! ஆக்ஞை என்னவோ?'' என்றான்.

பப்ருவாஹன ராஜா இடி போன்ற குரலில், "உனக்கு நாம் ஆக்ஞை இடுகிறோம்: நாளைக்கு அதி காலையிலேயே சைன்யங்களைச் சேகரித்து யுத்தத்திற்குப் புறப்படுவோம். நாம் திரும்பி வரும் வரையில் குடிகளை ரக்ஷித்து நமக்குப் பதிலாக ராஜ்ய பாரத்தை வகிக்கவேண்டியது உன் கடமையாகும். இவ்வளவுதான். போகலாம் நீ. இப்போது சயன அறைக்குச் செல்கிறோம்'' என்றான்.

மெல்லச் சிரிக்கப் பப்ருவாஹனனுக்குத் தெரியவே தெரியாது. தன் நண்பன் கீர்த்திஸிம்ஹனை நோக்கிக் கண் சிமிட்டிவிட்டு, 'ஹோ ஹோ' என்று நகைத்தான். முகத்தில் அசடு தட்டக் கீர்த்திஸிம்ஹன் தலையைச் சொறிந்துகொண்டான். அரசனுடைய சொல்லுக்கு எதிர்ச்சொல்கூட உண்டோ!

## 2

ராஜா பப்ருவாஹனன் தன் படைவீரர்களில் பெரும் பகுதியினரைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். அவன் திரும்பி வருவதற்குப் பல நாட்கள் ஆயின. கடைசியில் ஒரு நாள் அமராவதிக்குப் பப்ருவாஹன ராஜா வெற்றிக் கோலத்துடன் திரும்பினான். உடலில் அணிந்திருந்த தோற் கவசங்கள் கிழிந்து தொங்க, செந்நிறமுடைய

தலை மயிர் கறுத்து விளங்க, இளைத்த தோற்றமுடைய வனாய் அவன் வருவதைப் பார்த்த கீர்த்திஸிம்ஹன், "ஏன் மிகவும் இளைத்திருக்கிறாய்? தென்னாட்டில நல்ல ருசிகரமான உணவு எதுவும் கிடைக்கவில்லையா, என்ன?" என்று சொல்லிக்கொண்டிருந்த போதே சட்டென்று அவன் ராஜா என்ற கவனம் வரவே மரியாதையுடன், "ராஜமார்த்தாண்ட! எல்லாம் நல்ல சமாசாரந்தானே?" என்று விசாரித்தான்.

"பாதகமில்லை, அந்தப் பாண்டியர்கள் என்ன வேலை யெல்லாம் காட்டினார்கள், தெரியுமா? நமக்குச் சற்றும் இளைத்தவர்கள் அல்ல அவர்கள். நானா விடுகிறவன்? சக்கையாக வெளுத்தேன். சைன்யங்களில் நமக்குக் கொஞ்சம் நஷ்டந்தான். அது இருக்கட்டும். நான் பாண்டிய தேசத்திலிருந்து ஓர் அதிசயமான வஸ்துவைக் கொண்டு வந்திருக்கிறேனே, தெரியுமா? என்னுடன் வா, காண்பிக்கிறேன்" என்று இயம்பி, பப்ருவாஹனன் தன் நண்பனை அழைத்துச் சென்றான்.

அபஜயமடைந்த பாண்டியர்களிடமிருந்து கிடைத்த அபூர்வமான பொருள்கள் பல அரச மாளிகையின் ஓர் அறையில் வைக்கப்பட்டிருந்தன.

"கீர்த்திஸிம்ஹா! பிரஜைகள் யாவரும் க்ஷேமந் தானே?" என்று பப்ருவாஹனன் நடுவே ஒரு முறை விசாரிக்காமல் இல்லை.

அரசனும் சேனாபதியும் விந்தையான சாமான்கள் வைத்திருந்த அறைக்குள் நுழைந்தனர். அப்பொழுது திடகாத்திரமான போர்வீரர் இருவர் பெரியதொரு பிரம்புப் பேழையைச் சுமந்து கொண்டு வந்து உள்ளே வைத்தனர். பெட்டி மூடப்பட்டிருந்தது. அதனுள் இருந்த வஸ்து சற்றுப் பளுவாகத்தான் இருக்கவேண்டும் என்று கீர்த்திஸிம்ஹனுக்குப் பட்டது. வியப்புற்றவனாய், "பெட்டியில் இருப்பது என்ன? மலயத்வஜனுடைய மலைப் பாம்பா?" என்றான் அவன்.

கை ஜாடை செய்து வீரர்களை அனுப்பிவிட்டுப் பப்ருவாஹன ராஜா தம் முகத்தில் களிபொங்கப் பெட்டியின் மூடியைத் திறந்தார். சீறி எழுந்து நின்றது பாம்பல்ல;

ஒரு பாவையே! அவளுடைய தடங் கண்களில் அடிக்கடி மின்னல் வெட்டியது. இந்த அதிசயத்தைப் பார்த்தபடியே பிளந்த வாயுடன் நின்றான் கீர்த்திஸிம்ஹன்.

"இதென்ன வேடிக்கை? பாம்பல்லவோ இருக்கும் என்று எண்ணினேன். பெண் அல்லவா இவள்?" என்றான் கீர்த்திஸிம்ஹன்.

எக்காளச் சிரிப்புடன் பப்ருவாஹனன், "இவள் நல்ல அழகி அல்லவா?" என்றான்.

தின்று விடுவதுபோல் வெகு நேரம், கீர்த்திஸிம்ஹன் சிறைப்பட்ட அந்தப் பேதையை ஏற இறங்கப் பார்த்தான். மாந்தளிர் போன்ற நளிர் மேனியும், கயலைப் பழிக்கும் இரண்டு நீண்ட கரு விழிகளும், அறலை ஒத்த அவள் கூந்தலும் கீர்த்திஸிம்ஹனை மயங்கச் செய்தன. பகட்டான உடை ஒன்றும் அவள் உடலில் இல்லை. அவள் கழுத்தில் ஒரு வித மணிமாலை அழகுறத் தொங்கியது. கைகளில் சங்கு வளையல்கள் அணிந்திருந்தாள். சுரிகுழலிலும் காதுகளிலும் செருகியிருந்த மலரணிகள் வாடிக் கிடந்தன. இடையிலிருந்து கணுக்கால் வரையில் பல வர்ணங்கள் இழைத்த பட்டுச் சேலை. மடந்தை மெலிவுற்று இருந்தபோதிலும் உள்ளத்தில் காய்ந்த சினம் மட்டும் அவளுடைய கண்கள் வழியாகத் தெறித்துக்கொண்டே இருந்தது.

"இவள் உன் கண்ணுக்குப் பிடித்திருக்கிறாளா?" என்று கேட்டான் பப்ருவாஹனன்.

கீர்த்திஸிம்ஹன் திடுக்கிட்டு இகழ்ச்சி நிரம்பிய குரலில், "பெரிய வீர புருஷன்தான் நீ? போருக்குச் சென்று கடைசியில் ஒரு பெண்ணையா கொண்டுவந்தாய்? இவளை வைத்துக்கொண்டு என்ன செய்வது?" என்றான்.

"கல்யாணம் செய்துகொண்டால் போகிறது! என் எண்ணமும் அதுவே."

திகைத்துப் போன கீர்த்திஸிம்ஹன், "கல்யாணமா?" என்று கேட்டான்.

"ஆமாம், அதில் என்ன தோஷம்? இவள் யார் தெரியுமா? பாண்டிய அரசனுடைய செல்வப் பெண்."

திடீரென்று கீர்த்திஸிம்ஹனின் முகம் ஆழ்ந்த சிந்தனையுடன் விளங்கிற்று.

"பாண்டியர்களின் துர்க்கத்தைப் பல தினங்கள் முற்றுகையிட்டு முடிவில் வெற்றியுடன் அவர்களது பதியில் புகுந்தபோது எவரையும் காணவில்லை. இந்த யுவதி மட்டுமே எங்களுடைய கையில் சிக்கிக்கொண்டாள். கண்ட பொழுதே இவள்பால் மையலுற்றேன். என்ன வெல்லாமோ இவளைப் பார்த்துக் கேட்டேன். ஆனால் நம்முடைய பாஷை இவளுக்குப் புரியவில்லை. காற்று நுழையும்படியான பேழையில் இவளைப் பத்திரமாக வைத்து இங்கே எடுத்து வந்திருக்கிறேன். பல்லவ ராஜாவுக்குப் பட்டமகிஷியாவதற்கு இவள் எந்த விதத்திலும் தகுதி வாய்ந்தவளே" என்றான் பப்ருவாஹனன்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் தென்னவன் மகளான அம்மங்கையின் கண்கள் மாறி மாறி இவர்கள்மீது சுட்டு விடுவதுபோல் பாய்ந்த வண்ணம் இருந்தன. அவள் முகத்தில் பயமோ வியாகுலமோ ஒன்றுமே தென்படவில்லை. வெறுப்புக் கலந்த அலக்ஷ்யமான பாவனையே அவள் வதனத்தில் உலவிற்று.

புருவத்தைச் சுளித்துக் கீர்த்திஸிம்ஹன் தன் நண்பனைப் பார்த்து, "நீ செய்த காரியம் நம்மவருக்கு அழகல்ல. ஆயிரம் இருந்தாலும் இவள் ஓர் அரசனுடைய மகள். இவளைப் பலவந்தமாகப் பிடித்து வந்தது பெரும் பாதகமாகும்" என்றான்.

"விவாகம் செய்து கொள்வதற்காகப் பெண்களைக் களவாடுவது நம்முடைய வழக்கங்களில் ஒன்று என்பது படித்தவனான உனக்குத் தெரியாதா?" என்றான் பப்ருவாஹனன்.

"இருக்கலாம். ஆனால் துணையின்றி இருக்கும் நிலையில் பெண்ணைக் கவர்வது சுத்த அநாகரிகமான காரியம். அப்படியானால் ராவணனுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? இந்த க்ஷணமே நாம் இவளை மரியாதையுடன் அனுப்பிவிடுவதுதான் உசிதம். அப்புறம் உன் இஷ்டம்" என்றான் கீர்த்தி.

பப்ருவாஹனனுக்குச் சட்டென்று தான் அரசன்

என்ற நினைவு வந்துவிட்டது. வேந்தனுக்குச் சினம் அடிக்கடி வருவது வழக்கம். ஆகையால் அவன் கொதித்தெழுந்து, "அப்படி ஒருபோதும் நடக்காது! நான் யார்? பப்ருவாஹன ராஜா! சேனாபதியான நீ எனக்கு அடங்கி என் சொற்படி நடக்கவேண்டும். அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசுவதா? இந்தக் கன்னிகையை அவளுடைய அந்தஸ்துக்கு உரிய ஓர் இடத்தில் வைத்து நீ காவல் புரியவேண்டும். அவள் ஓடிவிடாதபடி பத்திரப்படுத்து. அவள் காணாமற்போகும் பக்ஷத்தில் நீதான் உத்தரவாதம்'' என்று ஆக்ஞாபித்தான். அகம்பாவங் கொண்ட தன் நேயனைக் கீர்த்திஸிம்ஹன் ஒரு முறை கூர்ந்து பார்த்துவிட்டுப் பிறகு கை கட்டி வணக்கத்துடன், "எல்லாம் மஹாராஜாவின் விருப்பப்படியே" என்றான்.

அரணின் மேலுள்ள ஒரு தனி அறை பல்லவனுக்கு ராணியாக வரப்போகும் பாண்டியன் புதல்வி சிறை இருக்கும் இடமாக உபயோகப்பட்டது. இளவரசியின் இதழ்கள் திடத்தினால் அழுத்தமாய் இருந்தன. சற்றும் நடுங்காமல் அவள் சிறைக்குள் சென்றாள். பெயருக்குச் சிறையே ஒழிய, அந்த இடம் அவள் சௌகரியமாக இருப்பதற்கு ஏற்றதாய் விஸ்தீர்ணமாக இருந்தது. தப்பித்துச் செல்வதற்கு மட்டும் வசதியாக இல்லை.

மறுநாள் விடியற்காலையில் ஒரு தூதன் குற்றுயிரும் குலை உயிருமாய் முக்கியமான செய்தி ஒன்றைக் கொண்டு வந்தான். "தங்கள் அரசன் மகளைக் களவாடிச் சென்றதைக் கேட்டுப் பாண்டிய நாட்டினர் ஆக்கிரோஷத்துடன் பல்லவர்களைப் பூண்டோடு ஒழிப்பதற்காகக் கடல் கிளர்ந்து எழுந்தாற்போல் வருகிறார்கள்'' என்று சொல்லிவிட்டு அவன் உயிரை விட்டான்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்டவுடன் சேனாபதி கீர்த்திஸிம்ஹனுக்கு ரத்தம் கொதித்து எழுந்தது. 'எடு எடு, வில்லை!...குதிரை எங்கே? அரசே! உத்தரவு கொடும். உம்முடைய மைத்துனர்களுக்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டு வருகிறேன் !'' என்றான்.

இதற்குச் சற்றும் இணங்கவில்லை பப்ருவாஹனன். "வேண்டாம். நானே போகிறேன்! பையன்களுடைய

சாமர்த்தியத்தைத்தான் பரிசோதிக்கிறேனே!'' என்று மொழிந்துவிட்டுச் சமர்க்களத்தை நோக்கிப் பாய்ந்தான். சேனாபதி கீர்த்திஸிம்ஹனுக்கு மஹா வீரனான பப்ருவாஹனனிடத்தில் அளவற்ற நம்பிக்கை உண்டு. யுத்த தந்திரத்தில் பல்லவர்கள் ஒரு படி உயர்ந்தவர்கள் என்பது அவனுடைய துணிபு. யுத்த ரங்கத்தை நோக்கி ஓடிய பப்ருவாஹனன் திரும்பி வந்து, "ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். நான் வருவதற்குள் அவளுக்கு நன்றாக நம்முடைய மொழியைக் கற்றுக் கொடு'' என்று கீர்த்திஸிம்ஹனுக்குக் கட்டளையிட்டான்.

மனத்துள் குமுறும் பிணக்கை மறைத்துக்கொண்டு "ததாஸ்து, ராஜன்!'' என்றான் கீர்த்திஸிம்ஹன்.

## 3

இரண்டொரு நாள் பழக்கத்திலேயே அவ்வழுதியின் மகள் ஸூக்ஷ்ம புத்தி படைத்தவள் என்று கண்டுகொண்டான் கீர்த்திஸிம்ஹன். அவனுடைய போதனா முறையின் பயனாகத் தென்னவன் குமரி இரண்டொரு வாரத்திற்குள்ளாகவே வடமொழியைத் தட்டுத் தடுமாறிப் பேச ஆரம்பித்துவிட்டாள்.

மடந்தையின் பெயர் வஞ்சி. வட நாட்டுப் பெயர் அல்ல. ஆனால் கீர்த்தியின் செவிக்கு அது இனிமையைப் பயந்தது. அவன் பன்முறை, 'வஞ்சி, வஞ்சி' என்று உச்சரித்தான். அந்தப் பெயர் அழகிய பூ ஒன்றின் பெயர் என்பதை அவன் அவள் மூலமாகத் தெரிந்துகொண்டான்.

வடமொழியைக் கற்றுக்கொண்ட வஞ்சி கேட்ட முதல் கேள்வி, "அந்த ஆள் யார் - என்னைக் களவாடிக் கொண்டு வந்தானே அவன்?'' என்பதே.

"அவரா? பப்ருவாஹன மஹாராஜா! என்னுடைய சிநேகிதர்'' என்றான் கீர்த்தி. 'சிநேகிதன்' என்ற பதத்திற்குப் பொருள் தெரியாதவளான வஞ்சி, "அப்படி என்றால் காட்டு மிருகமா?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்ட கீர்த்திஸிம்ஹன் ஸ்தம்பித்துவிட்டான். "என்ன! நாங்களா காட்டு மிருகங்கள்?'' என்றான்.

நாளுக்கு நாள் வடமொழியில் உரையாட வஞ்சிக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டுவிட்டது. அவள் அம் மொழியில் பற்றும் கொண்டாள்.

ஒரு நாள் வஞ்சி, "என்னை இங்கே எதற்காக அடைத்து வைத்திருக்கிறீர்கள்?" என்றாள்.

கீர்த்திஸிம்ஹன் விழுங்கிக்கொண்டே, "எங்கள் பாஷையைக் கற்றுக்கொண்டு எங்களையே ஏசப் பார்க்கிறாயே? உம்" என்றான்.

"இழவெடுத்த பாஷை! அதைக் கற்றுக்கொண்டு எனக்கு என்ன ஆகவேண்டும்?" என்றாள் வஞ்சி.

வேடிக்கையாகக் கீர்த்திஸிம்ஹன், "பப்ருவாஹன ராஜாவுடன் பிரேம சம்பாஷணை செய்ய இது உதவும். உன்னை விவாகம் செய்துகொள்ள அவர் ஸ்திரம் கொண்டு விட்டார். உன் பாடு அதிருஷ்டந்தான்" என்றான்.

வஞ்சி, உட்கார்ந்தவள், நிதானமாக எழுந்து நின்றாள். வெகுநேரம் இமையாத கண்களுடன் கீர்த்திஸிம்ஹனையே நோக்கினாள். மீண்டும் தன் இடத்தில் அமர்ந்து தயக்கமின்றி "அவனையா நான் மணம் செய்து கொள்வேன்? அநாகரிகமே!" என்றாள்.

கீர்த்திஸிம்ஹன் ஆரியர்களைப் புகழும் நோக்கத்துடன், "பப்ருவாஹன மஹாராஜா மசமசவென்று தாடி வைத்துக்கொண்டிருக்கிறார் என்று உனக்குப் பிடிக்கவில்லையா? அவரைப்போல் நல்லவர் இந்த உலகில் கிடைக்கவே மாட்டார்" என்றான்.

வஞ்சியுடன் நெருங்கிப் பழகுவதில் வர வர உத்ஸாகமும் வெறியும் கொண்டான் கீர்த்திஸிம்ஹன். அரைக் கணம் அவளைப் பார்க்காமல் போனால் அவனுக்கு இருப்புக்கொள்ளாது. அவள் பழக்கத்தால், புதிய ஜாதியாரின் கலைச்சிறப்பை உணரும் அவகாசமும் அவனுக்கு ஏற்பட்டது. வஞ்சி அவனுக்குப் பல்லவ உலகத்தைத் தவிரப் புதிய உலகங்களும் இருப்பதைப் பிரத்தியக்ஷமாக்கினாள். இருவருடைய பழக்கமும் காதலின் எல்லையைத் தொட்டன.

நாட்கள் பறந்தன. தெற்கே சென்ற பப்ருவாஹனன்

இன்னும் திரும்பவில்லை. பாண்டியர்களுக்கு அவன் பாடம் கற்பித்தானா, அல்லது அவர்கள் தாம் அவனுக்குக் கற்பித்தார்களா என்பதொன்றும் தெரிந்தபாடில்லை. கீர்த்திஸிம்ஹனுக்கு மனத்துள், 'பப்ருவாஹனன் இறந்து போயிருப்பானோ?' என்ற கலக்கம் மூண்டது. அவன் கீர்த்திக்கு வலது கை போன்றவன். வஞ்சியின் திவ்ய வதனங் கூட இப்பொழுதெல்லாம் கீர்த்திக்கு ஆறுதலைத் தர வில்லை.

கீர்த்திஸிம்ஹன் ஒரு நாள் வழக்கம்போல் பகற் பொழுதில் வஞ்சியுடன் உரையாடிக்கொண்டிருக்கையில் அறையின் பலகணியின் மூலமாகப் பப்ருவாஹனனுடைய சைன்யம் செம்புழுதியைக் கிளப்பிக்கொண்டு நகர வாயிலை அணுகுவது தெரிந்தது.

"உயிர் வந்ததப்பா! இதோ பப்ருவாஹனன்!" என்று துள்ளி எழுந்தான் கீர்த்திஸிம்ஹன்.

"உம்......அந்தக் காட்டு மிருகம் வந்தால் என்ன? இதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம்?" என்றாள் அம்மடக் கொடி, இகழ்ச்சிக் குறிப்புடன்.

"அந்தக் காட்டு மிருகந்தான் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறது!" என்றான் கீர்த்திஸிம்ஹன், தன் நண்பனை விட்டுக் கொடுக்காமல்.

"அப்படியா? என் இஷ்டத்திற்கு மாறாகக் கூடவா? அந்த மாதிரி பலவந்தமாக என்னைக் கொள்ளக்கூடிய ஆடவன் உங்கள் நாட்டில் இன்னும் பிறக்கவில்லை. இதோ பார்த்தாயா, என் கழுத்தில் தொங்கும் இந்த மணி வடத்திலிருந்து ஒரு மணியைத் தின்றாலே போதும். என் சடலத்தைத்தான் காண்பீர்கள்!" என்றாள் வஞ்சி.

பயந்துவிட்டான் கீர்த்திஸிம்ஹன். "ஐயோ, இதென்ன கர்மம்! அந்த மணி மாலையைச் சீக்கிரம் கழற்றிக் கொடுத்துவிடு! கொடு!" என்று அவளை வற்புறுத்தினான்.

"இத்தனை நாட்கள் உங்களுக்கு அடங்கி இருந்தேன் என்று பார்த்தீர்களா? என் உயிர் என் கரத்தில் இருக்கிறது" என்றாள் வஞ்சி.

கீர்த்திஸிம்ஹன் திருதிருவென்று விழித்து, "ஆனால் நீ அந்த விஷ மணியை விழுங்கி இருக்கலாமே?" என்றான்.

இளவரசிக்குரிய எழிலுடன், "அது என் இஷ்டம்" என்றாள் வஞ்சி.

கடைசியில் கீர்த்திஸிம்ஹன் கெஞ்சும் தோரணையில், "வஞ்சி! அசட்டுத்தனமாகப் பேசாதே. அவனை நீ கல்யாணம் செய்துகொள். அப்புறம் தெரியும், அவனுடைய நல்ல ஸ்வபாவம். உன்னை வேண்டிக் கொள்கிறேன். அசட்டுப் பிசட்டு என்று ஏதாவது செய்துவிடப் போகிறாய்!" எனறு கூறிவிட்டுத் தன் நண்பனை வரவேற்க வேகமாகச் சென்றான்.

"தீர ஆலோசியாமல் காரியங்களைச் செய்பவள் நான் அன்று. இந்தப் பப்ருவாஹனன் மட்டும் பலவந்தமாக, என் இஷ்டத்திற்கு விரோதமாக, என்னை மணந்து கொள்ள முற்பட்டால் கட்டாயம் என் உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்று தன்னோடு கிளத்திக்கொண்டாள் வஞ்சி.

"எல்லாம் நல்ல செய்திதானே?" என்று கீர்த்திஸிம்ஹன் பப்ருவாஹனனை விசாரித்தான்.

"ஒரு விதமாக முடிந்தது காரியம். இந்தப் பாண்டியர்களைச் சமாளிப்பது மிகவும் கடினமப்பா! முரட்டுத்தனமாகச் சண்டை போடுகிறார்கள். சமரச உடன்படிக்கை செய்துகொண்டு திரும்பி வந்தேன். நம் பக்கம் அதிக நஷ்டம்" என்றான் பப்ருவாஹனன்.

"உடன்படிக்கையின் நிபந்தனைகள் எவையோ?" என்று கேட்டான் கீர்த்திஸிம்ஹன்.

"அந்த வேடிக்கையைச் சொல்லட்டுமா? இந்தப் பாண்டிய நாட்டில் பெண்களுக்கே அதிகச் சுதந்தரம். இளவரசிதான் அரசுக்கு உரியவளாம். இந்த மாதிரி எங்கேயாவது கேட்டிருக்கிறாயா?"

"அப்புறம் நடந்ததைச் சொல்லு."

"அவர்களுடைய குலக் கொடியான ராஜ குமாரியை நான் அபகரித்துக்கொண்டது அவர்களுக்குக் கௌரவக்

குறைவாக இருக்கிறதாம். இந்தக் களங்கத்தைப் போக்கிக்கொள்ள நான் அந்தப் பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமாம். அப்படிச் செய்யத் தவறினால் நம்மை இந்த நாட்டை விட்டே அடியோடு கிளப்பிவிடுவார்களாம். எப்படி உன் யோசனை? கல்யாணம் பண்ணிக்கொண்டால் பாதி ராஜ்யமும் வருகிறது. உடன்படிக்கை மோசமாக இல்லையே?'' என்றான் பப்ருவாஹனன்.

தலை குனிந்து இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான் கீர்த்திஸிம்ஹன். கடைசியில் தெளிந்து எழுந்து, மெல்லச் சிரித்துவிட்டு, ''ஒன்றும் இல்லாததற்கு இது எவ்வளவோ மேல்; ஆனால் அந்தப் பெண்ணை நீ விவாகம் செய்துகொள்ளத் துணிந்துவிட்டாயா?'' என்றான் கீர்த்திஸிம்ஹன்.

''முன்பே சொன்னேனே. அவள் சரிப்பட்டுவிட்டாளா?''

'' சரிப்படுத்திவிட்டேன்.''

'' நம்முடைய பாஷையில் பேசுகிறாளா ?''

'' மிக நன்றாக.''

''ஆனால் நாளைக்கே விவாகத்திற்கு ஏற்பாடுகள் செய்வாய்.''

சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டுக் கீர்த்திஸிம்ஹன், ''பெண்ணின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?'' என்றான் சாம்பிய உள்ளத்துடன்.

## 4

அன்றிரவு தூக்கமே பிடிக்கவில்லை கீர்த்திஸிம்ஹனுக்கு. அவனை என்னவோ ஒன்று வருத்திக்கொண்டிருந்தது. பப்ருவாஹனன் ஏன் திரும்பி வந்தான் என்று கூட அவன் நினைக்கும்படி ஆயிற்று. பால்போன்ற நிலவு பொழிந்துகொண்டிருந்தது. இத்தகைய சந்திரிகையில் தனியாகத் தன் அறையில் வஞ்சி கண்ணயர்ந்து படுத்திருந்தாள்.

சப்தம் செய்யாமல் காதல் நோயுற்ற கீர்த்திஸிம்ஹன்

அவள் அருகே சென்றான். குனிந்து அவளையே வெகு நேரம் உற்று நோக்கினான். அவள் மார்பிடை விளங்கிய விஷமணிகளால் ஆன அந்த மாலை மூச்சு விடும்போதெல்லாம் அசைந்தது.

வஞ்சி ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். மூடிக் கிடந்த அவளுடைய விழிக் கடையிலிருந்து நீர் பெருகித் துகிலை நனைத்திருந்தது கனவு காண்பதன் அடையாளமாக அவளுடைய உதடுகள் என்னவோ பேசப் பிரிந்தன. குரல் மட்டும் கண்டத்திலிருந்து நன்கு எழவில்லை. "கீர்த்தி! கீர்த்தி......சாக எனக்கு இஷ்டமில்லை நீ என்ன மனுஷ்யன்! என்னை வருத்தும் வேதனை உனக்குத் தெரியவில்லையா இன்னும்?......கீர்த்தி!" என்றதோடு அவளுடைய கண்டத்வனி அடங்கிவிட்டது.

எந்தக் காரியத்தைச் செய்யக் கீர்த்தி அங்கே வந்தானோ அது நிறைவேறாமல் நின்றது. வஞ்சி அணிந்திருந்த விஷ மாலை அவள் கழுத்திலேயே கிடந்தது. கீர்த்திஸிம்ஹன் வந்த பிரகாரமே திரும்பினான்.

மறுநாள் பௌர்ணமி. அன்று அந்திப் பொழுது மணத்திற்குரிய நல்வேளையாக இருந்தது. பகல் முழுவதும் பப்ருவாஹனனுடைய உடம்பு ஓர் இடத்தில் இல்லை. கீர்த்திஸிம்ஹனைக் கூப்பிட்டு. "வேளை ஆகிறது. அவளை அலங்காரம் செய்துகொள்ளச் சொல்லு. கோதுளி லக்கினம் நெருங்கிவிட்டது. இன்னும் என்ன தாமதம்?" என்று குதித்துக்கொண்டே இருந்தான்.

இந்த வைபவத்தைக் காணத் திரளாக வந்திருந்தனர் பிரஜைகள். மங்கள வாத்தியங்கள் கோஷித்துக்கொண்டிருந்தன. ஜோதிமயமாக நிறை மதியம் கிழக்கே உதயமாயிற்று. மணப் பந்தலில் ஹோமாக்கினியும் கொழுந்து விடத் தொடங்கியது. பூர்வாசாரங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. பெண் முகச்சீலையிட்டு வந்து மணையில் அமர்ந்ததும் பப்ருவாஹன மகாராஜா பாணிக்கிரஹணம் செய்ய வேண்டியதுதான் பாக்கி.

"என்ன கீர்த்திஸிம்ஹா? நின்றுகொண்டிருக்கிறாயே? ...அவள் எங்கே?" என்றான் பப்ருவாஹனன், பொறுமை இழந்தவனாய்.

அரண் வாயிலில் வட நாட்டு மேளம் வஸந்த ராகத்தின் இன்னிசையை நாற்றிசையும் பரப்பிக்கொண்டிருந்தது. இன்னும் வரவில்லை மணப் பெண். கீர்த்திஸிம்ஹன் கிழக்கே கிளம்பும் பூர்ண சந்திரனைக் கவனிப்பதில் ஊக்கம் செலுத்தினுன். விவாக லக்கினம் வருவதற்குச் சற்று நாழிகைதான் இருந்தது.

பப்ருவாஹனன் கோபத்துடன் கீர்த்திஸிம்ஹனுடைய உடலைக் குலுக்கி, "ஏய்! என்ன மரப் பொம்மை மாதிரி நிற்கிருயே?" என்ருன்.

கீர்த்திஸிம்ஹன், முகத்தில் பேருவகை தவழ, "அவசரப்படாதே! அதோ பார், சந்திர பிம்பம் மறைய ஆரம்பிக்கிறது. என்ன தெரியுமா, அது?" என்ருன்.

பப்ருவாஹனனும் சந்திர கோளத்தையே கூர்ந்து நோக்கினுன். அதன் விளிம்பில் மறு ஒன்று தென்பட்டது. ஆனுல் ஆகாயத்தில் மேகத்தையே காணவில்லை. வர வர மதிவட்டம் குறைந்துகொண்டே வந்தது.

கீர்த்திஸிம்ஹன் பப்ருவாஹனனைப் பார்த்து, "ஏ பப்ருவாஹன! வதுவை அழைத்துவர நானே செல்கிறேன். பாண்டியருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி நானே அவளை மணம் புரிந்துகொள்கிறேன். இதற்குள் விஷயம் என்ன என்பதை இங்கே கூடியிருக்கும் மகா ஜனங்களுக்கு நீ அறிவிப்பாய்" என்று கூறிவிட்டு அகன்ருன்.

நெடிய கம்பம் போல் அசையாமல் நின்ற பப்ருவாஹனனுக்குச் சிரிப்பு வெடித்துக்கொண்டு வந்தது. கைகூப்பி, "எல்லாம் தங்கள் ஆதேசத்தின்படி நடக்கும், கீர்த்திஸிம்ஹராஜன்!" என்ருன்.

வஞ்சி, முகவாட்டத்துடன் தன் அறையின் சாளரக் கோப்பில் வீற்றிருந்தவண்ணம் வெளியே சந்திரனுக்கு ஏற்பட்ட பீடையை நீர் வார்ந்த கண்களுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். தனக்கு நேரப்போகும் கதியை நினைந்து, விஷத்தைத் தின்று மரிப்பதா, விதிக்குப் பணிந்து அடிமை வாழ்வை மேற்கொள்வதா என்றெல்லாம் அலை பாய்ந்தது அவள் மனம்.

தான் வருவது தெரியாதபடி கீர்த்திஸிம்ஹன் பின்புறமாக அவளை அணுகி அவளுடைய மலர் விழிகளைத் தன் கைகளினால் மூடிவிட்டான்.

"யார், கீர்த்தியா? யம தூதனைப்போல் வந்துவிட்டாயா, என்னை அழைத்துச் செல்ல?" என்றாள் வஞ்சி உளம் வெதும்பி.

"ஆமாம், மலயத்வஜன் பெண்ணே! பல்லவ மன்னன் உன்னைப் பாணிக்கிரகணம் செய்துகொள்ளக் காத்துக்கொண்டிருக்கிறான்" என்றான் கீர்த்தி.

"என் தலையில் இதைத்தான் எழுதியிருக்கிறதோ? இன்னும் என்ன?" என்றாள் வஞ்சி.

"விசேஷம் ஒன்றும் இல்லை, எங்களுக்குள் ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்தின்படி இந்த க்ஷணம் முதல் நானே பல்லவ மன்னனாகிறேன். உன்னை மணந்துகொள்ள வேண்டியவனும் நானே! என்ன சொல்லுகிறாய்? அப்படிச் செய்யச் சம்மதமா, விஷத்தைத் தின்று இறக்க இஷ்டமா?" என்றான் கீர்த்திஸிம்ஹன்.

பலபலவென்று தாடையில் கண்ணீர் பெருகக் கீர்த்திஸிம்ஹனுடைய கைகளைப் பற்றித் தன் மார்பில் சேர்த்துக்கொண்டாள் வஞ்சி. விழி நீரை உதறிவிட்டுக் கீர்த்திஸிம்ஹனை ஊடுருவிக் கவனித்தாள். அவனுடைய கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டி, "இதுவும் உங்கள் நாகரிகத்தின் ஒரு லக்ஷணமாக்கும்?" என்று மிழற்றி நாணத்தால் முகத்தை வேறு புறமாகத் திருப்பிக்கொண்டாள்.

# தேவதாசி

மதுரைப்பதிக்கு அதிதேவதைகள் மீனாக்ஷியும் சுந்தரேசுவரரும். இணைபிரியாது இவர்கள் வாழும் ஆலயத்தில் அநேக தேவதாசிகள் உண்டு அவர்களுள் வயதில் சிறியவள் சாந்தநாயகி. தேவதாசிகள் என்றால் தேவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டவர்கள்; நாட்டியம் ஆடுதல், இசைபாடுதல், இம்மாதிரி ஆலய சம்பந்தமான பல்வேறு தொண்டுகளைச் செய்யும் (தேவனுடைய) அடிமைகள். முத்திரைபோட்ட தாசிகளே இந்தத் தொழிலுக்கு யோக்கியதை உடையவர்களாம். சாந்தநாயகி குழந்தையாக இருந்தபோதே அவளுடைய தாய் இறந்துவிட்டாள். கோயில் பெரிய குருக்கள் ஹாலாஸ்யநாதர் இவளை வளர்க்கும் பாரத்தை ஏற்றுக்கொண்டார். பால்யமும் யௌவனமும் சந்திக்கும் வயது வரையில் சாந்தியை ஆதரவுடன் வளர்த்து வந்தவள் கிழத் தாசி சண்பகம்.

கோயிலுக்குச் சமீபத்திலே சித்திரை வீதியில் தேவதாசிகளுக்குப் பிரத்தியேகமான சின்னஞ் சிறிய மாளிகைகள் இருந்தன. கிழத் தாசி சண்பகம் ஒரு நாள் சாந்தநாயகியைப்பார்த்து, "சாந்தி, இன்று முதல் நீ தனி வீட்டில் வாசம் செய்யவேண்டும். வா என்னுடன்; அந்த வீட்டைக் காண்பிக்கிறேன்" என்றாள். பாலிகை ஒன்றும் சொல்லாமல் அவளைப் பின் தொடர்ந்தாள். யௌவனத்தின் லக்ஷணங்கள் தென்பட்டதும் தாசி வகுப்பினருள் சிறுமிகளைத் தனி இல்லத்தில் வைப்பது வழக்கம். அன்று அவர்கள் வாழ்க்கையின் ஒரு புதிய பக்கம் திறக்கப்படுகிறது!

இந்தச் சிறுவயதிலேயே தனக்கென்று சொந்த வீடு வருவதை நினைத்து ஆனந்தங்கொண்டாள் சாந்தநாயகி. வீட்டிலுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் தொட்டு 'இது என்னுடையதுதானே!' என்று பூரிப்பு அடைந்தாள். சயன அறையில் நுழைந்து, சாளரத்தின் வழியே பார்த்தபோது நிலவு கதிர் விரித்த வெளியுலகு, அவளுக்கு

ஸ்வப்ன லோகம்போல் தோன்றிற்று. சட்டென்று பெரிய நிலைக்கண்ணாடியின் முன்பாக நின்றுகொண்டு வாசனைத் தைலமிட்டு எரியும் வெள்ளி விளக்கின் குளிர்ந்த பிரகாசத்தில் தன் அழகைக் கண்ணுற்று மயங்கிப் போனாள். 'இவ்வளவு உடைமைகளுக்கும் நான்தானே உரியவள்' என்று எண்ணியபோது அவள் பெருமை கொண்டாள்.

ஆனால் இந்தப் பூரிப்பெல்லாம் எத்தனை நாளைக்கு? எல்லாம் க்ஷணநேரந்தான்! இரவில் தனியாக அறையில் படுக்கவேண்டும் என்பதைக் கேட்டவுடன் சாந்தநாயகிக்கு என்றும் இராத பயம் மூண்டது. சண்பகத்தின் புடைவைத் தலைப்பைப் பற்றிக்கொண்டு, "அம்மா, நான் உன் வீட்டிலேயே படுத்துக்கொள்கிறேனே. நீ போய்விட்டால் எனக்கு எப்படித் தூக்கம் வரும்?" என்று உருக்கமாகச் சொன்னாள்.

"சீ அசடே, உன்னோடு நான் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்; உனக்கு வயதாயிற்றே?"

"ஏனம்மா?"

"நீ தேவதாசி ஆயிற்றே. வரப்போகிற பங்குனி உத்தரத்தில் கோயிலுக்கு உன்னை முத்திரை போடப் போகிறார்கள்."

சாந்தநாயகி இதைப்பற்றிக்கேள்விப்பட்டிருக்கிறாள். முத்திரை போடுவதையும் பார்த்திருக்கிறாள். தேவதாசி ஆவதில் ஒரு கஷ்டமும் இல்லை. பட்டுச் சேலைகள் உடுத்து, உயர்ந்த ஆபரணங்கள் அணிந்து, மைதீட்டிக் கண்களை இன்னும் நீளமாக்கிக்கொண்டு, செஞ்சீறடிக்குச் செப்பஞ்சுக் குழம்பு பூசி, கலீர் கலீரென்று நூபுரம் ஒலிக்கக் குலுக்கி ஒய்யாரமாக நடந்து, சிங்காரப் பேச்சுப் பேசி எவர் மனத்தையும் ஈர்த்து நாட்டியத்திலும் சங்கீதத்திலும் பொழுதைப் போக்குவதுதானே? இவ்வளவு சௌகர்யமான வாழ்வு சாந்தநாயகிக்கு வெறுப்பை அளிப்பது ஏனோ? பங்குனி உத்தரத்தன்று தனக்கும் சுவாமிக்கும் திருமணம் என்பதில் உண்மையில் மகிழ்ச்சியே ஆனால் என்றும் பரிசுத்தமாய் சரீர மனோ வாக்கு மூலமாகத் தேவனுக்குத் தொண்டு புரியச் சாத்தியப்படுமா? இதுவே அவளுக்கு உண்டான கலக்கம். தாசி

யாகப் பிறந்தாலும் தூய குணங்கள் அவளிடம் தோன்று வதில் யாதோர் அதிசயமும் இல்லை. சாந்தநாயகி மனத் தில் ஈசனையன்றி வேறு எவரையும் நினைக்கக் கூடா தென்று உறுதி கொண்டிருந்தாள். அவள் கிழட்டுத்தாசி யான சண்பகத்தைக் கட்டிக்கொண்டு, "அம்மா, நீ என்னை விட்டுவிட்டுப் போகாதே" என்று கெஞ்சினள்.

"அடி என் சமர்த்தே, நீ வாழ்ந்தாற்போலத்தான். இப்படி இருந்தால் எந்த ஆடவனும் உன்னைக் கொள்ளவே மாட்டான். இப்பொழுதே பழகினல்தானே." (சண்பகம் அனுபவத்தினல் சொல்லும் இந்த வார்த்தைகளில் ஒரு விகல்பமும் இல்லை.) "இன்று முதலே நீ போக விலா சங்களில் ஈடுபடவேண்டும். நீ எத்தனையோ தனிகர் களின் மனத்தைக் கவரவேண்டும். இப்பொழுது போய் நிச்சிந்தையாய்த் தூங்கு, என் அம்மா!" என்ருள். சண்பகம் சொன்னதெல்லாம் சாந்திக்கு விசித்திரமாயிருந் தன. தாசித் தொழிலின் இழிவை உணர்ந்த அவள் மனம் அதற்கு இணங்க மறுத்துவிட்டது.

உலகத்தின் போக்குத் தெரியாத பேதையே! நீ என்ன சீலமாக இருக்க விரும்பினலும் உன்னைச் சுற்றி யுள்ள சிற்றின்பப் பேய்கள் பாபக் குழியில் உன்னை இழுத்துச் செல்லுமே. இடி, உன் தலையில்விழச் சித்தமாய் இருக்கிறது. நீ செல்லும் வழி தாஸிகளின் வாழ்விற்கே நேர் விரோதமானது. உன் இனத்தாரே உன்னை இகழ்ந்து பேசுவர். ஆயினும் சர்வேசுவரனுக்கு உண்மையில் நீ அடிமையானல் கர்மாக்கினி உன்னைத் தொடாது!

அன்று சாந்திக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பஞ்ச ணையில் கவிழ்ந்தபடி, இறைவன் தன்னை ஆட்கொள்ளும் வண்ணம் உள்ளம் நெக்குருகிக் கண்ணீர் விட்டுக்கொண் டிருந்தாள். தன்னைச் சுற்றிலுமுள்ள ஆபத்துக்களை நினைத்து அவள் மனம் துன்பக் கடலில் முழுகியது. யாரோ வெளியில் கதவைத் திறப்பது போலவும், காமத்தினல் சிவந்த அநேகம் கண்கள் தன்னைப் பார்த்து நகைப்பது போலவும் அவள் பிரமை கொண்டாள். மஞ்சத்தில் புரண்ட வண்ணம் அவள் தனக்கு நேரிடப்போகும் கதியை எண்ணித் துடிதுடித்தாள். "அம்மா!" என்று

அன்புடன் அழைக்க அவளுக்கு யார் இருக்கிறார்கள்? அவளுடைய கண்ணீரும் கம்பலையும் இந்தத் தீராத ஏக்கத்தை வெளிக்காட்டின.

இன்னும் பொழுது நன்றாகப் புலரவில்லை. கீழ்வானத்தில் தொங்கிய சுக்கிர நக்ஷத்திரம் ஒளியை இழந்து கொண்டே வந்தது. காலையில் வீசிய குளிர்ந்த காற்றின் ஸ்பர்சம் நெற்றியில் பட்டு, அவளுக்குச் சுகமான நித்திரையை உண்டுபண்ணியது. ஈசுவரனுடன் அமர்ந்து ஊஞ்சலில் ஆடுவதுபோல அவள் கனவுகண்டுகொண்டிருந்தாள். இரவெல்லாம்வேதனையுற்றுவாடின அவள் முகம் துயின்ற போது மலர்ச்சியடைந்து அழகுபெற்று விளங்கிற்று. கோயில் மேளம் கேதாரம் இசைத்தபோது, சாந்தியின் கனவடர்ந்த இரு விழிகளும் தாமரை அலர்வதுபோல் மெல்லத் திறந்தன. என்றும் இல்லாத ஒரு மகிழ்ச்சி அவள் உடலில் பரவி விரிந்தது. தனியாக வாழும் இந்தத் தாசி ஜன்மமும் அவளுக்குப் பிடித்துவிட்டது. ஏன்? இந்த ஜன்மத்தில் அல்லவா அவள் யாதொரு தொல்லையும் இன்றிக் கடவுளை நேராக வழிபட முடியும்? இந்த இன்பமே அவளுக்குப் புதிய பலத்தைக் கொடுத்தது. தன்னைச் சுற்றி வரும் பகையை, "நில்லாதே போ. நான் கடவுளுக்கு அடிமையே ஒழிய உடலை விற்கும் ஈனப்பிறப்பல்ல' என்று விரட்டி விடுவதுபோன்ற சாகசம் கொண்டு நின்றாள்.

பங்குனி உத்தரத்தன்று சுந்தரேசுவரருடைய விக்கிரகத்தின் கழுத்தில் மாலை இட்டாள். அவர் கொடுத்த தாலியைத் தன் கழுத்தில் கட்டிக்கொண்டாள். தினம் தவறாமல் காலையும் மாலையும் சாந்தநாயகி ஒவ்வொரு ஜாமப் பூஜைக்கும் பலவர்ணப் புடைவைகளை அணிந்து விதவிதமான மலர்களைக் கொண்டையில் சூடிச் சிவனையே நாடின ஏகாக்கிர சித்தத்துடன் கோயிலுக்குச் சென்று, *வல்லகியை எடுத்து வாசித்து, சந்நிதானத்திற்கு எதிரே பரவசமாக நின்று, பல பாவங்களைக் காட்டும் பதங்களைப் பாடி, தேவனை ஆற்றுப் படுத்துவாள். ஈசனை மகிழ்விக்க இவள் பேரெழிலுடன் வருவதைக்

*வல்லகி - ஒரு வகை வீணை

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

கண்டு அநேக யுவர்களின் இதயம் காமத்தீப் பட்டு எரியும்.

சாந்தநாயகியின் தந்தை போன்ற பெரிய குருக்கள் ஹாலாஸ்யநாதர் இறந்துவிட்டார். அந்த ஸ்தானத்தைச் சதாசிவக் குருக்கள் இப்போது வகிக்கிருன். அவன் வைத்துக்கொண்டிருக்கும் காமவல்லி என்ற தாசி க்ஷயரோகத்திஞல் பீடிக்கப்பட்டிருந்தாள். புதிய யௌவனத்துடன் பூத்து விளங்கும் பதினறு வயது இளநங்கையான சாந்தியின் அழகு அவனுடைய கண்களைச் சிதறச் செய்தது. கோயிலில் அவள் இருக்கும்போது சதாசிவன் குடலையிலுள்ள பூவைக் கொண்டுவரும் சாக்காகவோ, இன்னும் வேறு வியாஜமாகவோ சாந்தநாயகியின் மேல் உராய்ந்து கொண்டே செல்வான். சர்ப்பத்தைக் கண்டால் வெருவி ஓடுவதுபோல் அவள் ஒதுங்கித் தூண் மறைவில் நிற்பாள். பஞ்சப்ரதீபம், தேர்விளக்கு, குடவிளக்கு இவற்றைக் கடவுளுக்குக் காட்டும்போதெல்லாம் இந்தக் காமப் பித்தனின் கவனம் முற்றும் சாந்தியின் பேரில் தான். ஒருமுறை தேவனுக்குச் சாமரம் வீச மறந்து அவள் பக்கமாக வீசினுன். கற்பூரக்கிலேயை ஏற்றி அம்பிகை மீனுக்ஷிக்குக் காண்பிக்கத் தவறிச் சாந்தநாயகிக்குச் சுற்றினுன். இதைக் கண்டு கோயிலில் உள்ளவர் யாவரும் கைகொட்டி ஏளனத்துடன் நகைத்தனர். சாந்தநாயகிக்கு மானம் போய்விட்ட மாதிரி இருந்தது. தான் பரிசுத்தமாக இருக்க விரும்பினுலும் இந்தக் காமாந்தகர்கள் தனக்குத் தீங்கு இழைப்பதை நினைத்து அவள் உருகிப்போவாள்.

ஒருசமயம் கோயிலில் ஏதோ விமரிசையான உத்ஸவம். நன்ருக அலங்கரிக்கப்பட்டு, உத்ஸவர் நாட்டிய மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார். சாந்தநாயகி அன்று கண்களைப் பறிக்கும் விண்நீல மேலாக்கை அணிந்துகொண்டு சுவாமியின் ஸந்நிதியில் அபிநயம் பிடித்தாள்; பதங்கள் பாடினுள். அவள் அன்று நிகழ்த்திய ஆடல் பாடல் அங்கே கூடியிருந்தவர் மனத்தில், சுவர்க்கத்திலிருந்துதான் ஓர் அப்ஸரஸ் இங்கே தோன்றியிருக்கவேண்டும் என்ற ஐயத்தை மூட்டியது, நிருத்தம் ஆடியபோது அவள் அழகு குதித்தோடும் மலை அருவியோ, மின்னற்

கொடியோ, இசையின் ஒரு மூர்ச்சனையோ என்று திகைக்கும்படி இருந்தது. தோடி ராகத்தில், "ஏலரா சலமேலரா" (கோபம் ஏனோ என்மீது?) என்ற பதத்தைப் பாடிய போது எல்லோரும் உலகத்தையே மறந்து பாவ சமுத்திரத்தில் நீந்திக்கொண்டிருந்தனர். எல்லோர் கண்களிலும் நீர் பெருகிக்கொண்டிருந்தது. அப்போது பாவாவேசத்துடன் ஒரு குரல், "ஹே சுந்தரீ! நீ பாடும் இசை மறையாது என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கக் கூடாதா?" என்றது. இது எவனுடைய மொழிகளோ? எத்தனையோ சஞ்சல விழிகள் அவளைப் பருகிக்கொண்டிருந்தன. அவர்களில் யாரோ? சாந்தநாயகிக்கு மயிர் சிலிர்த்தது. அவளால் யாரையும் நிமிர்ந்து நோக்க முடியவில்லை. லஜ்ஜையினால் கண்களைக் கீழே தாழ்த்திக் கொண்டாள். அரசன் ரகுநாதநாயகனே அவளைப் பார்த்து, "சுந்தரீ! இந்த இசை அழிவற்று இருக்க வேண்டுமே" என்று பிரசம்ஸா வாக்கியம் கூறுவதை அவள் செவி நம்பவில்லை. அரசனுடைய கண்டத்தில் அம்மாதிரியான இன்மொழி எழுந்த காரணம் என்னவோ?

இரவு அதிக நேரம் ஆகிவிட்டது. கோயிலிலுள்ள கடம்ப விருக்ஷங்களின் கிளைகளினூடே வளர்பிறைச் சந்திரன் மஞ்சள் நிறமாக மறைவது தெரிந்தது. சாந்தநாயகி தனிமையாக வெளியேயுள்ள துவஜ மண்டபத்தில் உட்கார்ந்தவண்ணம் அரசனுடைய வசனங்களில் அடங்கிய மர்மத்தை அறியத் தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தாள். ஆனால் சந்தேகம் அவளுக்குத் தெளியவில்லை. அன்று இரவு தன் வீட்டை அடைந்து அவள் படுத்துக்கொண்டும், மலர்ப்பள்ளி முள் நிரம்பியதாகவே தோன்றிற்று. 'ஆஹா! அரசனும் இந்தப் பித்தத்திற்கு ஆளாய் இருக்கிறானா? அரசனே என்னைப் பாழாக்க நினைத்தால் யார்தாம் என்னைக் காப்பாற்றுவார்கள்? ஈசா! இது என்ன சோதனை?' - இம்மாதிரிக் கலவரங்கள் மனத்தில் சுழன்றபோது அவளுடைய கமலவிழிகள் சோர்வடைந்து துயில் கொண்டன. கனவிலும், 'சுந்தரீ! உன்னுடைய இசை நீடித்து ஒலிக்கக் கூடாதா?' என்ற மொழிகள் கேட்டுக்கொண்டே இருந்தன.

காலையில் கண்விழித்துப் பார்த்தபோது உலகமே

அவளுக்குப் புதுமையாகத் தோன்றிற்று. சூரியனுடைய கிரணம், பூவின் மணம், புள்ளின் இசை யாவும் புதுமையாக இருந்தன. இன்று இயற்கை அன்னையின் முகத்தில் புன்முறுவல் தோன்றுவது எதன் அறிகுறியோ? இத்தனை நாள் அவள் குருடாக இருந்திருக்கவேண்டும். இன்றுதான் அவளுடைய கண்கள் திறந்தன. அரசனுடைய அதிசய வசனங்களின் மாதுர்யமே இதற்குக் காரணமாய் இருக்குமோ?

மறுநாள் பிரதோஷகால பூஜைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவந்தபோது, 'நேற்று இதே வேளை அல்லவா—' என்று அரசன் தன்னைப்பற்றிச் சொன்ன மொழிகளை நினைத்த மாத்திரத்தில் சாந்தநாயகியின் உள்ளம் குளிர்ந்து மேனி சிலிர்த்தது. அப்போது ஒரு கம்பீரமான குரல், "சாந்தி!" என்று அழைத்தது.

திடுக்கிட்டுச் சாந்தநாயகி திரும்பிப் பார்த்தாள். அவளுடைய உடல் ஓர் அபூர்வ உணர்ச்சியினால் துடிக்க ஆரம்பித்தது. ஏன்?—அரசன் ரகுநாத நாயகனே எதிரே நின்றான்!

அரசன் அவளை அணுகி, "பயப்படாதே, அம்மா! உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லவே வந்தேன். நீ சுவர்க்கத்திலிருந்து நழுவி இந்தப் பாழும் பூமியில் விழுந்த பரிசுத்த மலர். குருட்டு மாந்தர் உன் மேன்மையை அறியார். நீ நேற்றுப் பாடிய உருக்கமான பதம் என்னை என்னவோ பண்ணிவிட்டது. நீ கடவுளை அடைய ஏங்கும் பாவத்தை நான் கண்டுகொண்டேன். தாசிகளுள் ஒருத்தி இம்மாதிரி வாஸ்தவமான பக்தியுடன் இருப்பதை நான் கண்டதே இல்லை, அம்மா! நீ செவி கொடுக்கச் சம்மதித்தால் நான் ஓர் உபாயம் கூறுகிறேன்" என்றான்.

அரசன் இதைச் சொன்னபோது மின்னல் தீண்டினதுபோல் சேதனமற்றுக் கிடந்தாள் சாந்தி. அவளுடைய விழிகள் மாத்திரம் அரசனையே நோக்கிக்கொண்டிருந்தன. பதில் சொல்ல நா எழவில்லை. 'இது என்ன, என்னையும் மீறி இந்த மாதிரி மகிழ்ச்சி!' என்று மட்டும் அவள் மனத்தில் தோன்றியது.

“தேவபுஷ்பமே! இந்த ஆலயம் புண்ணிய பூமிதான். ஆனால் ஒரு தேவதாசியைப் பொறுத்த வரைக்கும் இது நரகம்! இதைப் பரிசுத்தமான இடம் என்று சொல்வதற்கில்லை. தேவதாசி என்றால தேவனுக்கு அடிமை என்று அர்த்தமில்லை; தேவப் பிரதிநிதியான குருக்களுக்கே அடிமை. ஏன் இப்படி உன் உடல் நடுங்குகிறது? நீ ஒன்றும் அறியாதவள். உன் பரிசுத்தத்தைப் போக்க இன்னல்கள் விளையலாம். விரைவில் நீ இந்த ஆலயத்தை விட்டு அகல்வதே மேல்” என்று அரசன் கூறியபோது, சாந்திக்கு அதன் மர்மம் விளங்கவே இல்லை.

சமீபத்தில் ஆபத்து என்றதும், அவளுக்குக் கண்கள் இருட்டி வந்தன. ‘தேவனுக்குப் பணி செய்வதில் கூடவா ஆபத்து? ஆனால் கடவுளின் வாஸஸ்தலம் பாபத்திற்கு இருப்பிடமா? குருக்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? ஈசா! நான் உன்னை விட்டு வேறு எவரையும் கொள்ளேன்.’ அவளுக்கு அதற்குமேல் ஒன்றுமே தெரியவில்லை, அரசனிடமும் அவளுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது. ‘இது ஏதாவது சூழ்ச்சியோ? நான் அரசனுக்கும் வாழ்க்கைப் படமாட்டேன்’ என்று மனத்தோடு புலம்பிக்கொண்டிருந்தாள்.

சாந்தியின் நிலைமையைத் தெரிந்துகொண்ட ரகுநாத நாயகன், “நீ அந்த மாதிரி எண்ணவேண்டாம்...என் சுவபாவம் உனக்கு எப்படித் தெரியும்? தேவநிர்மால்யமான உன்னைத் தலையில் அணிந்துகொள்ளலாமே தவிர வேறுவிதமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. உத்தரவு கொடு; உன்னை ஆபத்து இல்லாத இடத்தில் கொண்டுபோய விடுகிறேன். நீ அங்கே பயமின்றித் தேவனை வழிபடலாம்” என்றான்.

தரையை நோக்கிய வண்ணம் சாந்தி சித்திரப் பாவையென மௌனமாய் இருந்தாள்.

அரசன் மீண்டும், “அவசரமில்லை, நீ யோசித்துச் சொல். நாளைக்கு இதே இடத்தில் உன்னைச் சந்திப்பேன். உண்மையில் நான்கூட மாறிவிடுவேனோ என்னவோ? ஆனால் தேவனுக்குரிய பொருள்களின் மேல் எவன் ஆசை கொள்கிறானோ அவன் நாசமடைவான். காமுகர்கள்

இருக்கும் இந்தக் கோயிலில் தெய்வம் நிற்குமா? ஆனாலும் உன்னைக் காப்பாற்றுவது என் ஒருவனால்தான் சாத்தியம்'' என்றான்.

அச்சமயம் நிழல்போன்ற ஓர் உருவம் இவர்கள் பக்கமாகச் சென்று இருண்ட மண்டபத்தில் மறைந்து விட்டது. இதைக் கண்டுகொண்ட அரசன், "இதோடு நிற்போம்'' என்று கூறினான். ரகுநாதநாயகனுடைய கம்பீரவடிவம் கம்பங்களின் இடுக்கில் இருளுடன் கலந்து விட்டது.

* * * *

பல குழப்பங்கள் மனத்திடையே சுழலத் தன் இல்லத்தை அடைந்தாள் சாந்தி. துர்ஸ்வப்பனங்கள் அன்று இரவு முழுவதும் பயமுறுத்திககொண்டிருந்தன அவளை. அவள் நித்திரை கலைந்து சுந்தரேசுவரரை மனத்தில் தியானித்தாள். அரசனுடைய அளவற்ற கருணை அவளைத் திகைப்படையச் செய்தது. 'இது என்ன, நான் தேவனுடைய அடிமையாயிற்றே? காமவேட்கையைத் தீர்ககவா என்னைப் பிரமன் படைத்தான்? நான் ஈசனுடைய பத்தினி; நான் தேவி; என் உடலையா நான் விற்பேன்? நான் உயிரோடு இருக்கும்வரையில் இந்தத் தேகத்தை யாராலும் தொடமுடியாது'—இம்மாதிரியான எண்ணங்கள் ஆவேசத்துடன் அவள் மனத்தில் ஓடின. அப்போது வாசலில் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. 'இது யார், இந்தப் பாதிராத்திரியில் என்னைக் கூப்பிடுவது?'—சாந்தி கை கால் உதறல் எடுக்கக் கீழே சென்று தாழை நீக்கினாள். வந்த ஆள் சதாசிவக் குருக்களே! சாந்தநாயகி வெருண்ட மானைப்போல் ஜீவன் ஒடுங்கி ஒரு மூலையில் நின்றாள்.

சதாசிவன், "அடி தாசி! அரசன் உன்னோடு என்ன பேசிக்கொண்டிருந்தான்? நடந்ததைச் சொல்லு'' என்றான்.

எங்கிருந்தோ தைர்யமும் சாகசமும் தோன்றவே சாந்தநாயகி, "'நீ பெயருக்குத் தேவதாசியே தவிர உண்மையில் குருக்களின் தாசியே' என்றுதான் அரசர்

சொன்னார்'' என்றாள். காமவெறியுடன் சதாசிவக் குருக்கள் சாந்தியைத் தீண்ட வந்தான். தன் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள, "ஐயோ'' என்று அபயக் குரலிட்டுப் புறக்கடையை நோக்கி ஓடினாள் சாந்தி. அதே கணத்தில் ஒரு நெடிய வடிவம் சதாசிவக் குருக்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. அரசன் அங்கே சங்கடமான சந்தர்ப்பத்தில் தோன்றியதைக் கண்டு, 'ஈசன்தான் என்னை ரக்ஷிக்க இவரை ஏவி இருக்கவேண்டும்' என்று மனத்தில் எண்ணிச் சாந்தி மகிழ்வெய்தினாள். அவளுக்கு 'ஜில்' என்று வேர்த்தது.

சதாசிவக் குருக்கள் அரசன் பிடியில் சிக்கித் தன் மனோரதம் ஈடேறாத ஆக்கிரோஷத்தினால் கர்ஜித்து, "அடி, இன்றைக்கு அரசன் உன்னைக் காப்பாற்றினான்; ஆனால் நாளைக்கு நீ படப்போகும் பாட்டைப் பார். அரசனுடைய அதிகாரம் நாட்டில் செல்லுமேயொழிய, கோயிலில் செல்லாது. சதாசிவக் குருக்கள்தான் கோயிலுக்கு அதிகாரி...'' என்றான். பண்டனுக்கு அரசனை நிமிர்ந்து நோக்க முகம் இல்லை. 'நாமும் தோல்வியடைந்தோமே' என்ற அகங்காரம். கண்களில் தீப்பொறி பறக்க அரசனை நோக்கி, "அரசே! நீர் இவளிடம் இவ்வளவு தயை காட்டுவது சரியே. ஆனால் எனக்கு உரிய பொருளை உங்களால் கவர முடியாது, இந்தச் சாந்தியை நான் கெடுக்காவிட்டால் என் பெயர் சதாசிவக் குருக்கள் அல்ல'' என்று உறுமினான்.

"தூர்த்தா, வாயை அடக்கு! இவ்விடத்திலேயே உன்னை வெட்டி மடிக்கவும் என்னால் முடியும். ரகுநாத நாயகன் ஆட்சியில் குருக்களுக்கு ஒரு பலமும் கிடையாது. ...போ! காமப்பேயே'' என்று கழுத்தைப் பிடித்துக் கொண்டே வந்து சதாசிவனை வீதியில் தள்ளினான் அரசன்.

மறுநாள் கோயிலுக்குப் போயிருந்தபோது சதாசிவக் குருக்கள் வீங்கிய முகத்துடன் சாந்தியின் கண்களில் அகப்படாத வண்ணம் திரிந்துகொண்டிருந்தான். அன்று கோயிலுக்குக் குழந்தையுடன் ஒரு ஸ்திரீ சுவாமி தரிசனம் செய்ய வந்திருந்தாள். முந்திய தினம் நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிய வண்ணம், 'இன்னும் என்ன புதுமாதிரிக் கஷ்டங்கள் வரப்போகின்றனவோ?' என்றெல்லாம்

சம்சயம் மனத்தில் கிளம்ப ஒரு தூண் ஓரமாக நின்று கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தாள் சாந்தி. சேவிக்க வந்த ஒருத்தியின் குழந்தை அவளைக் கண்டு, "அம்மா... அம்மா" என்று தாவிச் சென்றது. அவள் அக்குழந்தையை எடுத்துத் தன் மார்போடு அணைத்து முத்தமிட்டபோது புதிய அனுபவம் ஒன்று சாந்தநாயகிக்கு ஏற்பட்டது. 'ஏனோ இந்தப் பாழும் தாசி ஜன்மம் எடுத்தேன்?' என்று எண்ணியபோது சேல் போன்ற அவளுடைய கண்களி லிருந்து பலபலவென்று நீர் வடிந்தது. இதைப் பார்த்த குழந்தையின் தாய், "நீ யாரம்மா? ஏன் அழுகிறாய்?" என்றாள். சாந்தி தான் தேவதாசி என்றும், குழந்தைகள் என்றால் தனக்கு உயிர் என்றும் பதில் உரைத்தாள்.

"அடி அம்மா!....நீ தாசியா? குழந்தையைக் கொடுத்துவிடு. யாராவது என்னைப் பார்த்துச் சம்சாரிக்குத் தாசியுடன் என்ன பேச்சு என்று சிரிக்கப்போகிறார்கள். தளுக்கி. மினுக்கி உடலை விற்பவர்களுடன் எனக்கு என்ன ஜோலி?" என்று குழந்தையின் தாய் மொழிந்து விட்டுச் சாந்தியிடமிருந்து அதைப் பிடுங்கிக் கொண்டாள்.

'தூய்மையின் உருவான சிசுவைத் தொட்டால்கூடப் பாவமா? என்ன வெட்கக்கேடு, இந்தத் தாசித்தொழில்! ஐயோ! தெய்வத்திற்கு உண்மையில் தொண்டுபுரிந்தும் அவதூறுக்கு இடம் ஏற்படுகிறதே. இதைவிடச் சாவதே மேல். வீடு வாசல் சுக போகங்கள் எல்லாம் இருந்தும் கவலையை ஆற்ற ஒரு ஜீவன் எனக்கு இல்லையே' என்று வருந்தினாள் சாந்தி. மனம் உடைந்த சாந்திக்கு ஒரே நாளில் வாழ்க்கையின் மீது வெறுப்பு உண்டாயிற்று.

கார்த்திகை மாதம் முதல் சோமவாரம்; அன்று கோயிலில் லக்ஷதீப வைபவம். ஒவ்வொரு கர்ப்பக் கிருகத்திலும், மண்டபங்களிலும் ஜகஜ்ஜோதியாக அகல் விளக்குகளும், தோரணவிளக்குகளும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. தீபங்களின் ஜ்வாலை யாரோ உஷ்ணமாகப் பெருமூச்சு விடுவதுபோல் இருந்தது. சுவாமி சந்நிதியில் அபிஷேகம், தீபாராதனை எல்லாம் முடிந்ததும். மீனாக்ஷி அம்மன் சந்நிதியில் தீபாராதனை ஆரம்பமாயிற்று. வெளியே பெரிய மணிக் கூடுகளில் தொங்கிய

வெண்கல மணிகளிலிருந்து மதுரநாதம் எழுந்துகொண்டிருந்தது. அந்த அந்திப்பொழுதின், இன்ப மயமான நாகஸ்வரத்திலிருந்து பொழியும் உருக்கமான பந்துவராளி அதிகரித்தது. மீனாக்ஷி சந்நிதியில் பூஜாவிதிகள் முடிந்தன.

நாட்டியம் ஆடவேண்டிய சமயம் நெருங்கிற்று. நட்டுவன், முக வீணைக்காரன் எல்லோரும் சித்தமாய் இருந்தனர். ஆனால் சாந்தநாயகி எங்கே? எல்லோருடைய கண்களும் இதையே வினவின. "தாசி எங்கே?......சாந்தி எங்கே?" என்று கோயிலின் எல்லாப் பிராகாரங்களிலும் தேடச் சென்றனர். தூபத்தின் மிருதுகந்தம் ஆலயத்தைச் சுற்றிப் பரவிச்செல்வது, ஒரு பரிசுத்த ஆத்மா இந்த உலகவாழ்வை நீத்துச் செல்வதுபோல் இருந்தது.

கோயிலில் ஓர் இடம் பாக்கி இல்லாமல் சாந்தியைத் தேடி அலைந்தார்கள். கடைசியில் சிலர் உத்ஸவர் சந்நிதியில் போய்ப் பார்த்தபோது, உலகத்திற்கே அரிதான அந்தத் திவ்விய மலராகிய சாந்தநாயகி கைகூப்பிய வண்ணம் சுந்தரேசுவரரையே பார்க்கும் பாவனையாய் ஒரு தூணில் சாய்ந்து கிடந்தாள். அந்த மஹாத்தியானத்திலிருந்து அவளை யாராலும் எழுப்ப முடியவில்லை.

# ஹஸ்தி சைலம்

ஸாஞ்சியில் உள்ளது போலவே காஞ்சியிலும் அசோகனால் நிருமிக்கப்பட்ட பௌத்த ஸ்தூபம் ஒன்று உண்டு என்று சீனயாத்திரிகர் தம் பிரயாண வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார். புராதன தத்துவ நிபுணர்கள் கச்சி முழுவதும் ஆராய்ந்து பார்த்தார்கள். ஆனால் இந்த ஸ்தூபம் இருந்த இடமே தெரியவில்லை. சித்தார்த்தனின் ஒரு தந்தமோ (பல்), ஒரு நகமோ, ஒரு எலும்புத் துண்டோ (அஸ்தி) ஏதாவது ஒன்றை ஸ்படிக பாத்திரத்தில் வைத்துக் கல்லினுள் அடக்கம் செய்து, யானை முதுகின் ஆகிருதியைப் போலவே இந்த ஸ்தூபங்களைக் கட்டுவித்திருக்கிறார்கள். பிரம்ம காஞ்சியிலுள்ள அவ்வளவு பெரிய ஸ்தூபம் எப்படிப் போயிருக்கும்? முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிற கதையாக இருக்கிறதே! அது இருந்த இடத்தைக் காட்ட ஒரு மேடாவது இருக்க வேண்டாமா? பௌத்த மதம் சீர்குலைந்த காலத்தில் சைவ வைஷ்ணவ சமயத்தவர் பௌத்த சின்னங்களின் மீதே தத்தம் தேவாலயங்களை எழுப்பினர் என்று சரித்திரம் கூறுகிறது. குன்று என்னும் நாமதேயமே இராத கச்சியில் வரதனுடைய கோயிலுக்கு 'ஹஸ்தி சைலம்' என்ற பெயர் வருவானேன்? மேட்டில் திருமால் இடம் தேடிக்கொண்டிருப்பதனால் மறைந்து போன அந்த அசோக ஸ்தூபம் இதுவே என்ற சம்சயம் வந்துவிடுகிறது. ஆனால் அதை நிரூபிக்க இப்போது சான்றுகள் கிடைக்கவில்லை. மொழித் தத்துவத்தை வைத்துக்கொண்டு பார்த்தாலும் இந்த முடிவிற்கே வர வேண்டியதாய் இருக்கிறது. ஹஸ்திசைலம் என்றால் யானைக் குன்று (ஸ்தூபம் கஜப் பிருஷ்டத்தின் உருவாக இருந்தமையால்). அஸ்திசைலம் எலும்பு மேடு. (புத்தரின் அஸ்தியை உடைய மேடு). புராணாசாரியர்கள் கஜேந்திரனுக்கு இங்கேதான் மகாவிஷ்ணு மோக்ஷம் அளித்தார் என்றும், இதனால்தான் இங்குள்ள கடவுளுக்குக்

கரி (யானை) வரதன் என்ற நாமம் வந்ததென்றும் எழுதியிருக்கிறார்கள். புராணக் கதைக்கும் உண்மைக்கும் வெகு தூரம். பண்டைத் தமிழ்நாட்டில் கோயில்களும் அவற்றிலுள்ள தெய்வ மூர்த்திகளும் மரத்தால் ஆனவை என்று தெரிகிறது. கருங்காலி, அத்தி, சந்தனம் இவை போன்ற மரங்களே இந்த வேலைக்கு உபயோகமாய் இருந்தன. இன்றும் திருவனந்தபுரத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமான் இருப்பை மரத்தினால் ஆனவர். கச்சியில் காட்சி தரும் நெடுமாலின் பழைய பிரதிமை அத்தி மரத்தினால் செய்யப்பட்டதே. அத்தி மரத்திற்கு உடும்பர விருக்ஷம் என்று பெயர். அது விஷ்ணுவின் ஸ்வரூபம் என்று சொல்லுவார்கள். ஆகையால இந்தப் பிரதிமைக்கு அளவற்ற மகிமை இருந்தது. சிற்பிகளின் உளிக்குச் சமைந்து இருப்பது இந்த மரம ஒன்றே. இதல் அமையும் சிற்பம் வழுவழுப்பாகவும் லேசாகவும் இருக்கும். இந்த அபூர்வ மரப் பதுமையினாலும் வரதர் கோயிலுக்கு அத்தி சைலமென்று நாமகரணம் ஏற்பட்டிருக்கலாம்!

* * *

இன்றைக்குச் சுமார் 500 வருஷங்களுக்கு முன்பு இந்த மர வரதர் இக் கோயிலில் மூலவராக விளங்கினார். விக்கிரகத்திற்குப் பல இடங்களில் பின்னங்கள் ஏற்படவே அது பூஜைக்கு அருகதையற்று ஒதுக்கி வைக்கப்பட்டது. விஜயநகர ஸாம்ராஜ்யபதி அந்தப் பழைய வரதர் கோயிலைப் புதுப்பித்துப் பெரிதாகக் கட்டி ஏறக்குறைய அந்த மரப் பதுமையின் இலக்கணம் வாய்ந்த ஒரு கற்சிலையை ஸ்தாபனம் செய்தார். இந்த அத்திப் பதுமை கோயிலிலுள்ள அனந்தஸரஸ் தீர்த்தத்தில் அமிழ்த்தப்பட்டது. 50 வருஷங்களுக்கு ஒரு முறை, வறட்சிக் காலத்தில் குளம் வற்றியவுடன் சகலரும் கண்டு சேவிக்க இதை வெளியேற்றுகிறார்கள். இந்த வருஷம் அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று கிட்டியது. வாழ்நாளில் ஒரு தரமே வரக்கூடிய அரிய தருணம். காஞ்சி மண்டலத்தைச் சேர்ந்தவனான நானும் அதைக் கைநழுவ விடவில்லை. அந்தச் சௌந்தரிய மூர்த்தியைப் பார்க்க வரும் பக்த கோடிகளுள் ஒருவனாக நானும் கச்சிக்குச் சென்றிருந்தேன். சங்க சக்ர கதா

பாணியான அந்த வனமாலியைக் கண்டேன்; கலி தீர்ந்தேன். ஜன நெருக்கத்தில் மூச்சுத் திணறினாலும் உயிரோடு மீண்டேன். அனந்த ஸரஸின் கரையிலுள்ள மண்டபத்தில் சுத்தக் காற்றுக்காக நான் வந்து சற்றுச் சாய்ந்தவுடன் இந்தக் கோயிலின் அமைப்பு, அத்திப் பதுமையின் வடிவழகு, ஹரிநாம கோஷ்டி, எதிரே குளத்தில் இருக்கும் நீராழி மண்டபம், நான் படித்த சரித்திர வரலாறு எல்லாம் ஒன்று கூடி என் மூளையில் வேலை செய்ய ஆரம்பித்து விட்டன. களைப்பும் என் கண் இமைகளை அழுத்தியது. அனந்த ஸரஸிலுள்ள நீராழி மண்டபம் சட்டென்று ஒரு செங்கமல மலராக மாறிற்று. கற்பனைச் சித்திரங்கள் ஒவ்வொன்ருகப் புறப்பட்டன:

தங்க ரேக்குப் போன்ற சரீரமும், சாந்த முக பாவனையும் உடைய ஒரு தேஜஸ்வி, ஹரியின் குண கீர்த்தனங்களைப் பாடியவண்ணம் குளத்து நீரில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார். ஸ்நானம், ஜபம் எல்லாம் முடிந்ததும், நெற்றியில் திலகமிட்டுச் சென்னியில் துழாய் மாலையைச் சுற்றிக்கொண்டு, நீர்க் கலசத்துடன் வரதராஜப் பெருமானின் சந்நிதானத்தை அடைந்தார். அங்கே வெகு நேரம் பகவத்பிரேமையில் ஈடுபட்டுப் பாடிக்கொண்டிருந்தார். பிரதி தினமும் இந்தப்படி பகவானைத் தரிசனம் செய்தபிறகே இந்தப் பரமவைஷ்ணவர் உஞ்சவிருத்திக்காகத் தெருக்களில் போவது வழக்கம். தெய்வப் புலமை வாய்ந்த ஸ்ரீதர ஸ்வாமிக்கு அநேக சிஷ்யர்கள் - சம்சாரத்தைத் துறந்தவர்களே இவரை அண்டினர். விஷ்ணு சம்பந்தமான அரிய கீதங்களையும் அஷ்டபதிகளையும் இவர் ஸ்வயமாக இயற்றிப் பல ராகதாளங்கள் அமைத்துப் பாடி வந்தார். பக்தியின் வெள்ளம் நகர் முழுவதும் பெருகிச் சென்றது. ஹரியின் நாம சங்கீர்த்தனத்தைக் கேட்டு, தேகம் தெரியாமல் குதிக்காதவனே இல்லை. தாம் கனவிலும் நினைவிலும் காணும் திருமால் இந்த அத்தி வரதரை ஒத்து இருக்கவே இந்த வைஷ்ணவ குரவர் கச்சியையே வைகுண்டமாகப் பாவித்து வரதன் இருக்கும் ஊரை விட்டு அரைக் கணமேனும் பிரியாமல் இருந்துவந்தார்.

வரதராஜப் பெருமாளின் கோயில், மரத்தினால் ஆன

தாகையால் அது உளுத்துக்கொண்டே அழிவிற்கு வந்து விட்டது. தன் இஷ்ட தெய்வம் இடம் இல்லாமல் தவிக்குமோ என்ற பெரும் ஏக்கம் இந்த வைஷ்ணவ உத்தமரின் மனத்தை வாட்ட ஆரம்பித்தது. ஏழையான அவர் எங்ஙனம் கோயிலைப் புதுப்பிப்பார்? அவருடைய சிஷ்யர்களோ பரம தரித்திரர்கள். அந்த ஊர்ச் சிற்றரசனும் இதில் அக்கறை செலுத்தவில்லை. ஸ்ரீதர ஸ்வாமி மட்டும் நம்பிக்கையை விடாமல் தினந்தோறும் தம் மனத்தில் பிரம்மாண்டமான ஆலயம் ஒன்று கட்டிக்கொண்டிருந்தார். மனப்பீடத்தில், தம் பரந்தாமனை வீற்றிருக்கச் செய்தார். பக்தியென்னும் தூபதீப நைவேத்தியங்களைத் தம் மனோ தெய்வத்திற்குச் சமர்ப்பித்துவந்தார்.

* * *

விஜயநகரத்து ஸாம்ராஜ்யபதி கிருஷ்ணதேவனின் கொலுவில் தமிழ் நாட்டுப் பாடகர்கள் சிலர் திவ்யப் பிரபந்தத்திலிருந்து அழகிய பாக்களையும் ஸ்ரீதர ஸ்வாமியின் கீர்த்தனங்களையும் பாடி அரசனை மகிழ்வித்தனர். ஆண்டாள் திருப்பாவையும், ஸ்ரீதரரின் விஷ்ணு விலாஸ காவ்யமும் அவனுக்கு எல்லாவற்றைக் காட்டிலும் பிடித்திருந்தன. இவை இரண்டிலும் மிளிரும் நாயக நாயகி பாவங்களே அவனைத் தெலுங்கு பாஷையில் 'ஆமுக்த மால்யதா' (சூடிக் கொடுத்த மாலை) என்ற சிறந்த காவ்யத்தை எழுதத் தூண்டின. ஒரு நாள் அவனுக்குத் தன் ஆட்சியில் இருக்கும் அந்தக் கச்சியம்பதியைக் காண ஆவல் ஏற்பட்டது. பரிவாரங்களுடனும் நிதிக் குவியல்களுடனும் கிளம்பி, பல மன்னர் ஆண்டு, பல் வேறு சமயங்களுக்கு உறைவிடமாகி யிருந்த, புராதனப் பிரசித்தியுடைய காஞ்சீ க்ஷேத்திரத்தை அடைந்தான் அரசன். அரசனின் வருகையைக்கூட லக்ஷ்யம் செய்யாமல், அகலமானதோர் ராஜ வீதியில் பெரு வெள்ளமாக ஜனங்கள் சென்று கொண்டிருந்தனர். அரசன் நிற்கவேண்டியதாயிற்று. விஷயம் என்ன என்று தன் அமாத்தியன் ஒருவனை விசாரிக்கவே அவன், "பிரபோ! ஸ்ரீதர ஸ்வாமியின் பஜனாம்ருதத்தைப் பருகவே இவர்கள் இப்படிப் புரண்டு செல்கிறார்கள். அதோ வருகிறாரே, அந்த மஹா புருஷர்தாம்

ஸ்ரீதரஸ்வாமி!'' என்றான். தேவராயன் மூக்கில் விரலை வைத்தபடியே ஹரிநாமத்தைக் கோஷித்துச் செல்லும் ஜனப் பிரவாகத்தைப் பார்த்து நின்றான். கும்பலின் நடுவிலிருந்து ஒரு திவ்ய கண்டம் ஸம்ஸ்க்ருத கீதங்களைப் பாடுவது அவன் செவிக்கு எட்டியது. தேவராயனின் உள்ளத்தில் அவ்வழகிய மொழி இன்பரஸத்தைப் பொழிந்தது.

ஸ்ரீதரர் பாடிய ஓர் அஷ்டபதி அரசனை என்னவோ செய்துவிட்டது. அரசனும் அதன் தாளத்திற்கேற்பக் குதிக்கலானான். தன்னையும் மீறி ஹரியின் நாமாவளியை உச்சரித்தான். இருப்புக் கொள்ளாமல் ஜனத்திரளை நோக்கி ஓடினான். வைஷ்ணவ உத்தமரும் அரசனைத் தழுவிக்கொண்டு, 'இதுவும் உன் கிருபையா?' என்ற அர்த்தத்தையுடைய ஒரு பாட்டைப் பாடினார். கிருஷ்ண தேவன் உள்ளம் குழைய, விழிகளினின்று பக்தி மாரி பெய்ய, அவரை விளித்து, "ஹே மஹாநுபாவா! என்னை உம்முடைய அடிமையாக்கிக் கொள்ளும். எனக்கு நாடும் வேண்டாம்; நிதியும் வேண்டாம். உமது காருண்யமே எனக்குப் போதும்'' என்றான், தழுதழுத்த குரலுடன். அதற்கு ஸ்ரீதரர், "அரசே! நீ ஸாம்ராஜ்யபதி; விஷ்ணுவின் அம்சம். உன்னுடைய பராக்கிரமத்தால் அல்லவோ இந்த நாடு மிலேச்சர்கள் கையில் சிக்காமல் இருக்கிறது?...நீ ராஜ்யம் துறக்க வேண்டாம். இதோ இந்தக் கரிவரதனுடைய கோயிலைப் புதுப்பித்து, ஹரியின் பிரேமையை நாடு முழுவதும் பரவச் செய்ய வேண்டும். இந்த ஆலயம் என்றும் சாசுவதமாக இருக்கும்படி தர்ம கைங்கரியம் செய்வாய். இதுவே எனக்கு நீ செய்யும் பணிவிடை. என் மனத்தில் இத்தனை நாளாக வரதனுக்கு ஒரு கோயிலைக் கட்டிக்கொண்டிருக்கிறேன். ஸாக்ஷாத் வைகுண்டவாஸனே உன்னை இதைச் செய்யும்படி ஏவியிருக்கிறார். நீ உடனே இந்தக் காரியத்தில் முனைவாய்'' என்று கூறி ஹரியின் மகிமையை வியந்து ஜயஜயந்தி ராகத்தில், 'உன் மனத்தை யாரறிவார்?' என்ற ஸம்ஸ்கிருத கிருதியை உருக்கமாகப் பாடினார். அரசன், "இந்த ஒரு பாட்டிற்கே என் ராஜ்யத்தைக் கொடுத்துவிடலாமே'' என்று எண்ணியவனாய், ஸ்ரீதரரின் பாத தூளியைச் சிரமேற்கொண்டு, 'தன்யனானேன், தயாபரனே' என்று

உடல் புளகிக்க ஹரிகோஷம் செய்துகொண்டே தன் அரண்மனையை அடைந்தான்.

வரதர் வீற்றிருக்கும் பழைய ஆலயத்தின் முன் பெரிய பெரிய பாறைகள் வந்து குவியலாயின. ஆயிரக் கணக்கான சிற்பிகளின் உளிகளிலிருந்து அழகிய தூண் களும், முகப்புகளும், ஆளிகளும், பத்ம பீடங்களும், மந்திரவாதியின் மாயக்கோலிலிருந்து வருவனபோல் தோன்றலாயின. பிராகாரங்களும், அலங்கார மண்டபங் களும், ஊஞ்சல் மண்டபங்களும், ஆனை மாடங்களும், வஸந்த விழாவிற்குத் தகுந்த சித்திர மண்டபங்களும் கண்களைக் கவர்வனவாய் இருந்தன. மேற்குப் புறமாக அந்தணர் வீதியைப் பார்த்தாற்போல் அகலமான கோபுர மும், கிழக்கே உயர்ந்த சிகரங்களையுடைய விண் அளா வும் கோபுரமும் நகரின் எழிலை இன்னும் எடுத்துக் காட் டின. கர்ப்பக் கிருகத்தைச் சுற்றி மழையிலும் நனையாமல் வரதப்பன் பவனி வர, தாழ்வாரங்களும் மாடங்களும் ஏற்படலாயின. சுவர்களில் விஷ்ணு லீலை களைக் காட்ட ஓவியர்கள் சித்திரங்கள் வரைந்திருந்தார் கள். அவற்றின் வர்ண விந்யாஸம் கண்ணைப் பறித்தது. அழகிய கற்சிலையும் செய்தாகிவிட்டது. வைகாசி பூர் ணிமைக்காக எல்லோரும் காத்திருந்தனர். அன்றுதான் சிலா ஸ்தாபனமும், மூர்த்தி ஆவாஹனமும், கும்பாபி ஷேகமும். பழைய மரக்கோயில் இப்போது வைகுண்ட மாகவே விளங்கிற்று. அடிக்கடி கிருஷ்ணதேவன் தன் அரசியல் தொல்லைகளுக்கு இடையே காஞ்சிக்கு விஜயம் செய்து, திருப்பணியை நேரில் கவனித்தான் என்றுல்சொல் லவும் வேண்டுமா? இந்த மஹாப் பிரயத்தனத்தை இனிது முடித்தவர் ஸ்ரீதரஸ்வாமி என்றே அரசன் கருதினுன். அவருக்கு அவன், 'ஸார்வபௌமர்' என்ற பட்டத்தை அளித்தான். முராரியின் அருளைப்பெற்ற மஹாத்மாவுக்கு இது ஒன்றும் பிரமாதமல்ல. வரதனு டைய கழலடித் தாமரையை அவருடைய பிராணன் என் னும் வண்டு சுற்றி அலைந்து, முக்தியடையும் நாளை எதிர் பார்த்துக்கொண்டிருந்தது. அந்த நாளும் நெருங்கி விட்டது.

அடுத்த நாள் வைசாக பூர்ணிமை. கோயிலில், இரவு வெகு நேரம் வரையில் மறு நாளைக்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை நடத்துவதில் மும்முரமாக இருந்தனர், பணி யாட்கள். பாதி ராத்திரியில் எவர்க்கும் நித்திரை ஏற்படு வது சகஜம். தொழிலாளர் அயர்ந்து மூலைக்கு ஒருவ ராகப் படுத்துக்கொண்டனர்.

அன்று இரவு வெகு நேரம் வரையில் கீர்த்தனங் களைப் பாடிப் பின் கண்ணயர்ந்த ஸ்ரீதரர், ஓர் அபூர்வ ஸ்வப்னம் கண்டார். பெரிய சுடர்வட்டத்தினுள் புன் முறுவலுடன் ஜகன் மாயனான ஸ்ரீ மஹாவிஷ்ணு பிரசன்னமாகி, "ஹே வத்ஸ! நாளைக்கு உன்னை நான் ஆட் கொள்கிறேன். வைகறையில் என் சாந்நித்தியத்தை வந்து அடை" என்று சொன்னதுபோல் இருந்தது அவருக்கு. அந்த வார்த்தைகள் தேவவாணியினது வீணையின் ஜங் காரம்போல் சற்றுநேரம் அவர் படுத்திருக்கும் அறையில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவர் சட்டென்று விழித்துக் கொண்டு என்றும் இராத பேரானந்தம் முகத்தில் பிரதி பலிக்க, "பக்தவத்ஸலா, க்ருபாஜலதே, எனக்கு உன் இரு பாதமலர் தாராய்" என்று விஷ்ணுவின் செயலை வியந்து கூறிக்கொண்டே, தம் விடுதியை விட்டு நேராக ஆலயத்தை அடைந்தார்.

'பகவானுடன் இன்று ஐக்கியமாகப் போகிறோம்' என்ற எண்ணம் வரும்போதெல்லாம் அவருடைய மெய் சிலிர்த்தது. உன்மத்தம் பிடித்தவர்போல் சீதளமான குளத்து நீரில் குதித்தார். கோயிலில் உள்ளவர் இவ ருடைய போக்கைக் கவனிக்கவில்லை. எல்லோரும் நித்திரா தேவியின் உபாசனையிலேயே ஈடுபட்டிருந்தனர். பொழி லில் உள்ள மலர்களை இன்னும் வண்டு மோந்து செல்லவரவில்லை. பனிதோய்ந்த புஷ்பங்களை அஞ்சலியாக எடுத்துக்கொண்டு படியேறித் திருமாலின் சந்நிதியை அடைந்தார். கர்ப்பக்கிருகத்தில் குத்துவிளக்குகள் அணை யும் தறுவாயில் இருந்தன. உள்ளத்தில் ஒளி கொண்ட வருக்கு வெளி அந்தகாரம் ஒரு பொருளா? பவாந்த காரத்தை நீக்கும் பேரண்ணல் பக்கத்தில் நிற்கும்போது பயம் எதற்கு? என்னவோ ஒன்று அவரை அந்த அபூர்வ

அத்திப் பிரதிமையினிடம் இழுத்துச் சென்றது. காதலர் இருவர் கூடி மகிழ்வதுபோல் நம் பக்த சிரேஷ்டர் தம் இன்னுயிர்த் தெய்வமான அத்தி வரதனுக்கு மாலையிட்டு, அவரை இன்புறத் தழுவிக்கொண்டார். வெகு நாட்களாகப் பதிந்திருந்த அந்த அத்தி வரதரும் தம் பக்தனை அணைத்துக்கொள்ள இடம் பெயர்ந்து சாய்ந்தார்.

அதே சமயம் கீழ்வானம் சிவக்க ஆரம்பித்தது. பங்கயங்களின்மீது அளிகள் முரன்றன. வைகறைத் தேவியை வந்திக்கப் புள்ளினம் இசைத்தன. காலையில் கர்ப்பக்கிருகத்திற்குப் பரிசாரகர்கள் வந்து அத்தி வரதரின் பிரதிமை கீழே குப்புற விழுந்திருப்பதைப் பார்த்துத் திடுக்குற்றனர். அது விழுந்த காரணம் யாருக்குமே புலப்படவில்லை. அதை எடுத்து நிறுத்தி வைத்தபோது கீழே அன்று பூத்த ஒரு மலர்மாலை கிடந்தது. அதன் மணம் இன்னும் வீசிக்கொண்டிருந்தது. மாலை அங்கே தோன்றிய அதிசயத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அத்தி வரதருக்குப் பதிலாகக் கற்சிலை வரதர் வரப்போகிற குதூகலத்தால் இந்தப் பதுமைக்கு ஏற்பட்ட சிதைவுகளை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

இதென்ன, தினமும் பொழுது புலரும்போதே பகவானை வந்து தோத்தரிக்கும் அந்தப் பரம பாகவதரைக் காணோமே!—அவருக்காக ஆளை ஏவினான் அரசன். அவர் வீட்டிலும் இல்லை; எங்கும் இல்லை. எல்லோரும், "அவரைக் காணோமே! இன்று முக்கிய தினமாயிற்றே!'' என்று பேசிக்கொண்டிருந்தனர். பெருமாள் மறைத்துக்கொண்ட பக்த மணியைத் தேட யாரால் சாத்தியம்? அரசன் மனத்திலும் மற்றும் அங்குள்ள யாவர் மனத்திலும் ஏக காலத்தில் ஓர் எண்ணம் உதித்தது: 'இது பகவானுடைய திருவிளையாடலாக இருக்குமோ? கீழே இருக்கும் துளசி மாலைதான் அவர் விட்டுப் போன கடைசிச் சின்னமோ?' என்று அதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டனர் அனைவரும். பட்டர்பிரான் மாயமாக மறைந்ததை நினைந்து அவர்களுக்குச் சந்தோஷமும் துக்கமும் ஏற்பட்டன.

புதிய சிலையை நிறுத்தியதும், சிதைவுகள் ஏற்பட்ட

அந்த மரப்பதுமையை அனந்த ஸரஸில் அமிழ்த்தி விட்டனர்.

* * *

என்னுடைய கற்பனைத் தாமரையும் தன் இதழ்களை மெல்ல மூடிக்கொண்டது. களைப்பு நீங்கி என் கண்களும் திறந்தன. இப்போது இருக்கும் கோயில், குளம், மனிதர் அரவம் யாவும் என்னைச் சுற்றியிருந்தன. பழைய யுகத்திலிருந்து மீண்டும் நான் தற்காலத்திற்கு வந்துவிட்டேன். என் பக்கத்தில் பட்டை நாமம் பரக்கச் சாத்திய ஒரு வைஷ்ணவக் கிழவர் திருவாய்மொழி ஓதிக் கொண்டிருந்தார். அதன் அபஸ்வரத்தை என்னால் கேட்க முடியவில்லை. ஆஹா! என் கனவில் தோன்றிய அந்தத் திவ்விய புருஷன் எங்கே, இவர் எங்கே? ஸ்வப்னத்தில் கேட்ட அந்த இனிய சாரீரத்தை மறுபடியும் எங்கே கேட்கப் போகிறேன்!—நான் மெல்ல எழுந்து பிராகாரத்தை ஒரு பிரதக்ஷிணம் செய்துவிட்டு ஹரியின் மகிமையை நினைத்தவாறு வீடு திரும்பினேன்.

# பரோபகாரம்

## 1

நிர்மானுஷ்யமான பாட்டை; இராவேளை. மேகங்களின் இடுக்கிலிருந்து அடிக்கடி நக்ஷத்திரங்கள் கண் கொட்டி மின்னின. சற்றுத் தூரத்தில் ஒரு கிராமம் இருளில் தென்பட்டது. சாலை ஓரமாக ஒரு பிச்சைக்காரக் கிழவன் வந்துகொண்டிருந்தான். களைப்பு மேலிடவே அவன் ஒரு மரத்தடியில் தங்கிக் கழியில் மாட்டிய சிறு மூட்டையின் பேரில் தலையை வைத்துச் சுருட்டிக்கொண்டு படுத்தான்.

அவனுக்குத் தன் பெற்றோர்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது. யாரோ பரிதாபம் கொண்டு, பச்சைக் குழந்தையாய் இருந்தபோது அவனை வழியில் கண்டெடுத்து இந்தப் பாழும் பிரபஞ்சத்தில் வாழ வைத்தார்கள். சிறுவயது முதற்கொண்டே தன் வயிற்றைக் கழுவ அவன் அரும்பாடு படவேண்டியதாயிற்று. என்றைக்கும் மாறாத துரதிருஷ்டம் ஒன்றுதான் அவனுக்குத் துணையாக இருந்தது. பாவம்! அவன் தன் சாண் வயிற்றிற்காக எவ்வளவு கஷ்டங்களை அநுபவித்திருப்பான்! குளிர் காலங்களில் சற்றுத் தலை சாய்க்க எங்கெல்லாம் இடம் தேடி அலைந்திருப்பான்! பிச்சை கேட்ட இடங்களில் வசவு; யமன் வரமாட்டானா என்ற ஏக்கம்! தூங்கும் போது, ' இந்தத் தூக்கமே எனக்குக் கடைசித் தூக்கமாக இருக்கக்கூடாதா?' என்று எண்ணுவான். யாரை அண்டினாலும் அவர்கள் அவனை அசூயையுடன் ஒதுக்கிவிடுகிறார்கள். சிறு பையன்கள்கூட அவனுடைய விகாரமான ரூபத்தைக் கண்டு ஓடிவிடுகிறார்கள். அவனுடைய அழுக்கடைந்த கந்தலைப் பார்த்து நாய்களும் குரைத்துத் துரத்திக்கொண்டு வருகின்றன. ஆனால் உலகத்தில் யாரிடமும் அவனுக்குப் பகை என்பதே இல்லை. கஷ்டத்தை அநுபவித்ததால் அவனுடைய சரீரம் குன்றிவிட்டது. ஆனால் அவன் உள்ளத்தில் மாத்திரம் சாந்தம் நிறைந்திருந்தது.

தூக்கம் அவன் கண்களை அழுத்திற்று. அதே சமயத்தில் தொலைவில், 'டிங் டிங்' என்று மாட்டு வண்டி வரும் சப்தம் கேட்டது. பிச்சைக்காரன் தலையைத் தூக்கிப் பார்த்தான். லாந்தரின் வெளிச்சத்தில் வண்டியின் நிழல் நீண்டும் குறுகியும் தென்பட்டது.

கழுத்தை நீட்டிக்கொண்டு மாடுகள் இரண்டும் பளுவைச் சற்று இழுத்தும் சற்று நின்றும் வந்தன. அடிக்கடி அவைகள் மண்டியிட்டு இழுத்தன, எனினும் வண்டி நகரும் வழியாகக் காணவில்லை. மறுபடியும் சவுக்கு முறிய அடி. மாடுகள், நாசித்துவாரம் துடிக்க மூச்சு வாங்க ஒரே இடத்தில் நின்றுவிட்டன. வண்டியின் சக்கரம் ஒன்று உளையில் அழுந்திவிட்டது. இவ்வளவு பளுவான வண்டியை எப்படித் தள்ளுவது?

ஒன்றும் தோன்றாதவனாய் வண்டிக்காரன் சுற்றுமுற்றும் பார்த்தான். சட்டென்று மரத்தின்கீழ்ப் பிச்சைக்காரன் படுத்திருப்பது அவன் கண்ணுக்குப் பட்டது. "யாரப்பா அங்கே? இப்படி வாயேன். கொஞ்சம் சக்கரத்தைத் தள்ளு" என்றான்.

பிச்சைக்காரன் எழுந்திருந்தான். உடலில் சீவனே இல்லாமற்போனாலும் மூச்சைப் பிடித்துக்கொண்டு தன் பலம் கொண்ட வரையிலும் சக்கரத்தைத் தள்ளினான். "உம்... உம், நெக்கு...நெக்கு...இன்னும் கொஞ்சந்தான்" என்று வண்டிக்காரன் முக்கினான். மறுபடியும் சவுக்குப் பிரயோகம். வண்டி நகர்ந்தால்தானே? எவ்வளவு பெரிய மூட்டைகள்! பிச்சைக்காரன் பாடு ஓய்ந்துவிட்டது. மாடுகள் படும் அவஸ்தையைப் பார்த்துச் சகிக்காதவனாய் அவன், "ஐயா, அதுங்க கொஞ்சம் இளைப்பாறட்டுமே, அப்புறம் பார்க்கலாம்" என்று சொன்னான். "இல்லே, அப்பேன். அதுங்க இப்படித்தான் பாசாங்கு பண்ணுறது வழக்கம். இப்போ இதுங்களெ விட்டு விட்டாக்கா எதிர் மோட்டைத் தாண்டப்போறதேது? சூட்டோடு சூடா ஒரு கை பாப்போம்! வா.....தூக்கு" என்று வண்டிக்காரன் சொல்ல இருவரும் வண்டியைத் தள்ளினார்கள். வண்டி அசையவே இல்லை. இரண்டுபேரும் வேர்த்துப் போனார்கள். "கல்லு ஒண்ணு கொண்டா, நான் சக்கரத்

தில் அண்டைக் கொடுக்கிறேன். இப்படியே ரெண்டு அடி தாண்டினால் அப்புறம் மாடு பறக்கும்!" என்றான் வண்டிக்காரன். பிச்சைக்காரன் ஒரு கல்லை எடுத்துக்கொண்டு வந்தான். வண்டிக்காரன், "நீ போய் அந்தச் சக்கரத்தைத் தள்ளு; நான் கீழே கல்லை வைக்கிறேன். மாடுகளை அதட்டி ஓட்டு; வண்டி பள்ளத்தில் நழுவப் போகிறது; ஜாக்கிரதை" என்றான்.

அடி தாங்க முடியாமல் மாடுகள் இரண்டும் உடலை வளைத்துக்கொண்டு வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் நுரை தள்ள இழுத்தன. குளம்புகள் தரையில் தேயவே, லாடத்திலிருந்து நெருப்புப் பொறிகூடக் கிளம்பிற்று.

"அடி......அடி! இன்னும் கொஞ்சந்தான்......ஒரு தம்......தூக்கு...தூக்கு!"

மாடுகளினால் ஒன்றும் முடியவில்லை. பாவம்! அவை கால் இடறித் தரையில் குப்புற விழுந்தன. அதோடு வண்டியிலுள்ள பாரமான மூட்டைகளும் ஒரு புறம் சரிந்தன. உடனே சக்கரத்தின் கீழிருந்து ஒரு விகாரமான கூச்சல் கேட்டது. வண்டிக்காரன் துடையின்பேரில் சக்கரம் ஏறிவிட்டது. மூச்சுத் திணற அவன் கீழே சாய்ந்தான்.

## 2

வண்டிக்காரன் வலி தாளாமல் உரக்கக் கூவி, "கொஞ்சம் மாட்டை ஓட்டு ஐயா! வண்டியைத் தள்ளேன்! நான் செத்துப் போறேன்! ஐயோ என் துடை!" என்று அலறிக்கொண்டிருந்தான், பிச்சைக்காரன் திக்பிரமை பிடித்து நின்றான். மங்கிய வெளிச்சத்தில் என்ன நடந்ததென்று அவனுக்கு ஸ்பஷ்டமாக விளங்கவில்லை. வெறும் அனுமானத்தால் நடந்ததை ஊகித்தான். சவுக்கினால் அடித்து மாடுகளை ஓட்டிப் பார்த்தான். மாடுகளும் வண்டியைக் கஷ்டத்துடன் இழுத்துப் பார்த்தன. ஆனால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. போதாக் குறைக்கு வண்டியின் கீழே தொங்கிக்கொண்டிருந்த லாந்தரும் அணைந்துவிட்டது. அந்தப் பயங்கரமான இருளில் மாடுகள் "புஸ்

புஸ்' என்று இரைப்பு வாங்கும் சப்தம் ஒன்றுதான் கேட்டது.

கிழவன் சக்கரத்தில் நசுங்கும் ஆளை மீட்கச் சக்கரத்தைத் தள்ளினான். முகம் வெடிக்கத் தன் முழுப் பலத்தைப் போட்டும் சக்கரம் ஓர் அங்குலங்கூட நகரவே இல்லை. வண்டிக்காரன், "ஐயா, ஓடிப் போய் அதோ தெரிகிறதே அந்த ஊரில் தெரு முனையிலே எங்க வீடு. போய்ச் சொல்லு. ஜல்தி! நாயனா, அப்பா......என் உயிரு போகுதே!" என்று வீரிட்டான்.

இரைக்க இரைக்கப் பிச்சைக்காரன் கிராமத்தை நோக்கி ஓடினான். நேரே கிராமத்தில் நுழைந்ததும் தெரு வந்தது. இடது கைப்புறம் இருந்த வீட்டெதிரே போனான். வீட்டில் ஒரு விளக்காவது காணவில்லை. வழியில் யாரையாவது சந்திக்கலாம் என்றால் ஒரு பிராணி ஏது? பிச்சைக்காரனுடைய மனம் துடிதுடித்தது. அவன் கண்களுக்கு, வண்டிக்காரன் நசுங்கிக் கூழாய்ப் போவது போல் தோன்றிற்று.

சட்டென்று என்னவோ அவனுக்குத் தோன்றவே வீட்டின் எதிரே போனான். மூடிய ஜன்னலின் பிளவு வழியாக வெளிச்சம் தெரிந்தது. கிழவன் ஜன்னல் கதவைத் தட்டினான். உள்ளே இருந்து யாரோ, "யாரது? கண்ணனா? வந்தூட்டயா?" என்று பதில் சொல்லுவது கேட்டது. வேகமாக ஓடிவந்ததால் பிச்சைக்காரனுக்கு மேல் மூச்சு வாங்கிற்று. அவனால் உடனே சமாளித்துக் கொண்டு மேலே பேச முடியவில்லை. ஆனால் ஜன்னலை மாத்திரம் அடிக்கடி தட்டினான். யாரோ எழுந்து ஜன்னல் கதவைத் திறந்து தூக்கம் இன்னும் கண்களில் சுழல, "யாரது, கண்ணனா?" என்று கேட்டார்கள்.

பிச்சைக்காரன் "இல்லை. நான்தான்" என்றான். இதைக் கூறி முடிப்பதற்குள் உள்ளே இருந்த ஆசாமி, "யாரோ என்று பார்த்தேன். இந்த நிசி வேளையில் இங்கே உனக்கு என்ன வேலை? போடா! இந்த இடத்தை விட்டுப் போகிறாயா, இல்லையா?" என்று கோபத்துடன் சீறி விழுந்தான். உடனே பட்டென்று ஜன்னல் கதவும் மூடப்பட்டது.

சும்மாத் திரும்பிவிடலாம் என்றால் அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. 'பாதையில் ஒரு பிராணன் துடிக்கிறதே! சற்றுத் தாமதித்தால் என்ன நேர்ந்துவிடுமோ?' என்று எண்ணி மனம் தாளாதவனாய் என்ன வந்தாலும் வரட்டும் என்று மறுபடியும் ஜன்னலைத் தட்டினான்.

உள்ளே இருந்து, "டேய்! உனக்கு ஒரு தரம் சொன்னால் போதாதா? இந்த மாதிரி, பிச்சை எடுக்கறாப்பலே வறது; கடைசியில் ஊரில் புகுந்து திருடறது, மரியாதையாய்ப் போய்விடு!" என்று மறுபடியும் அதே குரல் கேட்டது.

கண்ணுக்கு புலப்படாத, ஏதோ ஒரு சக்தி தூண்டவே, பிச்சைக்காரன் தைரியத்துடன் மறுபடியும் ஜன்னலைத் தட்டி, "கதவைத் திறவையா!" என்றான்.

ஜன்னல் கதவு திறக்கப்பட்டது. சட்டென்று பிச்சைக்காரன் பின்வாங்கினான். ஒரு பெரிய குண்டாந்தடி கம்பி வழியாக வெளியே கிளம்பிற்று. வீட்டுக்காரன் கண்களில் கோபம் ஜ்வலிக்க நின்றுகொண்டிருந்தான்.

குண்டாந்தடி பிச்சைக்காரன்மேல் ஓங்கப்பட்டது. பிச்சைக்காரன் வெலவெலத்துப் போய்ப் பின்னடைந்தான். அவன் என்ன தவறு செய்துவிட்டான், வீட்டுக்காரன் இப்படி நடத்துவதற்கு? பாவம்! ஒரு பிடி சாதங் கூடக் கேட்கவில்லையே! ஒருவனுக்கு உதவி செய்ய வேண்டி வந்ததனால் என்ன பிரதிபலன் கிடைத்தது பார்! பாட்டையில் தன் நண்பன் சாகும் தறுவாயில் இருப்பதைக்கூட அப்போது கிழவன் மறந்துவிட்டான். அவன் வாழ்நாளில் இந்தத் தடவைதான் என்றும் இல்லாத கோபத்திற்கு ஆளானான். இதுவரைக்கும் யாரும் அவனை இப்படிக் குரூரமாக நடத்தியதே இல்லை.

"இந்தத் தடியினால் ஜன்னலை உடைத்துவிடலாமா?" என்று அவனுக்கு ஆத்திரம் வரும். மறுபடியும், "ஐயோ, அவன் இறந்துவிட்டிருப்பானோ!" என்று கலங்குவான், அடுத்த கணமே, 'வேண்டாம். மறுபடியும் கதவைத் தட்டினால் அந்தப் பாவி ஊரை எழுப்பிவிடுவான். பாவி

மக்கள் எதுவும் விசாரிக்காமல் என்னைக் கொன்று போடு வார்கள்! ஐயோ, விதியே!' என்று எண்ணுவான் அந்த அதிசயமான பிச்சைக்காரன்.

சற்று நேரம் அங்கேயே தயங்கிவிட்டு, மறுபடியும் பாட்டையை நோக்கி நடந்தான் அவன். 'ஒருவேளை நாமே கொஞ்சம் சிரமப்பட்டால் வண்டி நகருமோ என்னவோ, ஆள் பிழைக்கலாம்' என்ற ஒரு சிறு நம்பிக்கை மாத்திரம் அவனுக்கு இருந்தது. வெறி பிடித்தவன் போல அவன் வேகமாக ஓடினான்.

## 3

அந்தக் கிழவனுக்கு எங்கிருந்தோ யானை பலம் வந்தது. வண்டிக்காரன் விழுந்து கிடக்கும் இடத்திற்கு நேராகச் சென்றான். "தம்பி!" என்று கூப்பிட்டான். ஒரு பதிலும் இல்லை. திரும்பவும் கூப்பிட்டான். அதற்கும் பதில் இல்லை. இருள் கன்னங் கறேலென்று கப்பி இருந்ததால் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தடவிக்கொண்டே சக்கரத்தண்டை சென்று வண்டிக்காரன் விரைத்து மூச்சுப்பேச்சற்றுச் சக்கரத்தின் கீழ் இருப்பதைப் பார்த்தான். கிழவனுடைய முகத்தில் ஒரு பயங்கரமான கலவரம் தோன்றிற்று. "செத்துப் போய்விட்டானோ?......நம்முடைய பிரயத்தனம் வீணாகப் போய்விடுமோ?......எதற்கும் கடவுள் இருக்கிறார்" என்று திடம் கொண்டான்.

வண்டிக்காரனுடைய மார்பில் கையை வைத்துப் பார்த்தான். இருதயம் அடித்துக்கொள்ளவில்லை. பயத்தினாலோ என்னவோ பிச்சைக்காரனுக்கு ஒன்றும் தெரியவில்லை. வண்டியை ஒரு மயிரிழை நகர்த்திவிட்டால் ஆளைக் காப்பாற்றிவிடலாம் என்று அவனுக்குத் தோன்றிற்று.

தெய்வந்தான் அந்தப் பலஹீனமான கிழவனுக்கு அப்போது சகாயம் செய்திருக்கவேண்டும். உடம்பிலுள்ள நரம்புகளெல்லாம் வீங்க ஒரே மூச்சில் அவன் சக்கரத்தைத் தள்ளினான். வண்டியும் சரிவில் சாய்ந்தது. வண்டிக்காரன் மீண்டான். சற்று நேரம் வரையில் பிச்சைக்காரனுக்கு உலகமே சுழல்வதுபோல் இருந்தது.

வண்டிக்காரனை அணுகிப் பார்த்தபோது அவனுக்கு மெல்ல மூச்சு வருவதைக் கவனித்தான்.

பிச்சைக்காரன், மெலிந்த தன் இரு கைகளையும் கூப்பிக் கண்களில் நீர் பெருக, எல்லாம் வல்ல இறைவனை நோக்கி வணங்கினான். எலும்புக் கோவையென விளங்கிய அவன், தன் முதுகில் வண்டிக்காரனைச் சுமந்துகொண்டு, தள்ளாடத் தள்ளாட, இரைக்க இரைக்க ஊரை நோக்கிச் சென்றான்.

இனிமேல் பயமில்லை; அவனை யார் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும்! பேய் பிடித்தவன்போல் வீட்டை அடைந்தான். மெதுவாகப் பிரக்ஞையற்ற வண்டிக்காரனைக் கீழே படுக்கவைத்துவிட்டுக் கதவைத் தட்டினான். "யாரது கண்ணனா! வந்துட்டயா, நாயனா?" என்று பதில் வந்தது. பிச்சைக்காரன் பதில் ஒன்றும் பேசவில்லை. கதவு திறக்கப்பட்டது. ஒரு ஸ்திரீ, "யாரது?" என்று வினவினாள். பிச்சைக்காரன், "அம்மணி, இதோ உங்கள் கண்ணன்! சற்றுமுன் அவனுக்காகத்தான் இங்கே உதவியைத் தேடிவந்தேன். என்னை யாரோ தடிகொண்டு துரத்தினார்கள். பாட்டையில் வண்டியின் கீழ் அகப்பட்ட உங்கள் மகன் இதோ படுத்திருக்கிறான்!" என்றான்.

"ஐயோ என்ன!...என்ன!...அவனுக்கு என்னடாப்பா சொல்லேன்!" என்று அவள் கோவென்று கதற ஆரம்பித்தாள். பிச்சைக்காரன் தன் மூட்டையை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். "அம்மணி! எனக்கு வேறு ஜோலி இருக்கிறது. நான் அப்பவே கூப்பிட்டேன். இதுவும் பகவானுடைய வேடிக்கை. நல்லதைச் செய்தால் எப்பவும் எனக்குக் கெடுதியே வருவது வழக்கம், தாயே!" என்றான்.

"அப்பா! நீ எந்தப் புண்ணியவானோ, இங்கே இருந்துவிட்டுப் போயேன்" என்று அந்தப் பெண்பிள்ளை கெஞ்சி அழைத்தாள். ஆனால் அதை யார் கேட்கிறார்கள்? தன் ஒரே ஆஸ்தியான மூட்டையுடன் பிச்சைக்காரன், தடியை ஊன்றிக்கொண்டே, வாடைக்காற்றில் தன்னுடைய இளைத்த மேனி நடுங்க இருளில் மறைந்து போனான்.

# தீபாவளிச் சித்திரங்கள்

தீபாவளிக் கிராக்கி. காகிதம் பென்சில் விற்ற கடைக ளெல்லாம் பட்டாசு மத்தாப்புக் கடைகளாக மாறி விட்டன. ஜேஜே ராம் போன்ற பெரிய துணிமணிக் கடைகளில் தீபாவளி 'ரிடக்ஷன்' விற்பனை சூடாக நடந்துகொண்டிருந்தது. உள்ளே மின்சார வெளிச்சத்தில் வானவில் வர்ணங்களில் புரளும் சேலைகள் கண்ணைப் பறித்தன.

விற்பனை செய்யும் ஆட்கள் தினுசு தினுசாகப் புடை வைக் குவியல்களை எடுத்துப் போட்டுப் போட்டு அலுத் துக் கிடந்தனர். புதிதாக வேலை கற்றுக் கொள்ளும் இளைஞன் ஐம்பது ரகமான சேலை, வேஷ்டிகளுக்கு மேல் விற்றுவிட்டு ஓய்ந்து நிற்கும் சமயத்தில், "டே ராமா நுஜம்! சீக்கிரம் வா, இந்தப் பக்கம்!" என்று முதலாளி ஜேஜேராமின் கட்டளை பிறந்தது.

முதலாளி வாயிலில் வந்து வரவேற்க, பர்வதாகார மான பனையூர் ஜாகீர்தார் தடபுடலாகப் பட்டுத் திரை விட்ட மோட்டாரிலிருந்து கீழே இறங்கினர். அப் போது 'கார்' வில்போல் ஒருதரம் குதித்தது. அவர் பின்னாலேயே அவருடைய காரியதரிசி ஒரு கனமான தோல் பையுடன் வந்தார்.

பரபரவென்று ஆட்கள் இங்கும் அங்கும் ஓடினர். 'சூரியபவ'னிலிருந்து ஐஸ்கிரீம் முதலியவை வந்தன. ஜாகீர் முதலியார், வந்த அலுப்பினால் அங்கே இருந்த சோபாவில் தொப்பென்று சாய்ந்தார்.

முதலியார் வழக்கமாக வாங்குபவர் ஆகையால் முத லாளி, "ஏய் சுந்தரம், ஐயாவுக்குப் பட்டுச் சேலைகளை எல் லாம் கொண்டுவந்து காட்டு!" என்றார். மேஜையிலிருந்த மின்சார விசிறி இப்படியும் அப்படியுமாக முதலியா ரையே பார்த்துக்கொண்டு ஆடியது. கண்கள் பூத்துப் போகும்படியான வர்ணப் பகட்டுடைய விலை உயர்ந்த,

பங்களூர், கராச்சி, பனாரஸ் புடைவைகள் வந்தன. முதலியார் எல்லாவற்றையும் பார்த்துவிட்டுக் கடைசியாகக் 'கிளேஸ்' காகித உறையில் இருந்த ஒரு பனாரஸ் புடைவையை எடுத்தார். வயிர மோதிரம் அணிந்த அவருடைய கை விரல்கள் அடிக்கடி சேலையைத் தடவிக் கொடுத்தன.

"என்ன விலை?" என்றார்.

"அப்படியாக ஒன்றுமில்லை, முதலியார்வாள்! நானூறு ரூபாதான்....." என்றார் ஜேஜேராம்.

"என்ன! என்ன! நானூறா? அதென்ன அவ்வளவு விலை இந்தக் காசிப் பட்டிற்கு?"

"முதலியாருக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை. காசிப் பட்டு ஆகுமா மற்றப் பட்டுக்களெல்லாம்! இந்தச் சேலை இருக்குதே, ஸ்பெஷலாகச் சாந்திபூர் ராணி 'ஆர்டர்' கொடுத்துச் செய்யச் சொன்னது. உங்களைப் போல நாலு பெரிய மனுஷ்யாள் பார்வையிட வேண்டும் என்றே இதை நான் வரவழைத்தேன். நானூறு இல்லை, அறுநூறு கொடுத்தாலும் இந்த மாதிரி மனசுக்குப் பிடித்த சேலை கிடைப்பது அரிது. உங்கள் விஷயத்திற்காக நான் விலையைக் குறைத்தே சொன்னேன்" என்றார் ஜேஜேராம், தம் தொழிலுக்குரிய தந்திரத்துடன்.

முதலியாருக்குப் பின்னால் நின்றிருந்த ஒல்லியான காரியதரிசி புடைவை விலையைப்பற்றி முணுமுணுத்ததும் முதலியார் தம் ராவண மீசையை ஒரு தரம் கூராக முறுக்கிவிட்டுத் தம் சிவந்த கண்களால் காரியதரிசியை நோக்கினார்.

"சரிதான்னா, புடைவை பேஷாக இருக்கு" என்று கூறிவிட்டு ரூபாயைக் கட்டிவிடும்படி காரியதரிசிக்கு ஆக்ஞாபித்தார். நாலு பச்சை நோட்டுக்கள் பழுத்துப் போயின. ஆட்கள் பெரிய காகிதத்தில் புடைவையை நன்றாக மடித்துக் கட்டினர். ஜேஜேராம் தாமே முதலியார் கையில் அதைக் கொடுத்துவிட்டுப் பல்லை இளித்த வண்ணம் 'கார்' வரைக்கும் சென்று முதலியாரை வழி அனுப்பிவிட்டுத் திரும்பினார்.

"அப்பாடா தொலைந்தது! பத்து வருஷமாகப்

பீரோவில் அழுகிக்கொண்டிருந்தது. நல்ல காலம் பிறந்தது'' என்று ஜேஜேராம் பரம திருப்தியைக் காட்டும் பெருமூச்சு ஒன்றை விட்டார்.

* * *

ஜன நெருக்கமுள்ள வேறொரு ஜவுளிக் கடை. வற்றிச் சுண்டிய கிழவர் ஒருவர் அவசரமாக அந்தக் கடையில் நுழைந்தார். “மட்டமாக மூன்று ரூபாய்க்குள் நூல் சேலை வேண்டும்'' என்று கிழவர் கேட்டது எவர் காதிலும் விழவில்லை. இரண்டு மூன்று தடவைக்கு மேல் கூப்பிட்டும் பதில் வராமற் போகவே ரோஷத்துடன் கிழவர் வெளியே செல்லுகையில் கடைப் பையன் ஒருவன், “பெரியவரே! ஏன் போறீங்க? என்ன வேணும்? வந்து பாருங்க'' என்று கூப்பிட்டான். இதைக் கேட்டுக் கிழவரும் திரும்பினார்.

“அப்பா, மூன்று ரூபாயில் கெட்டிச் சாயமாக, நல்ல மாதிரி நூல் சேலை ஒன்று எடு, பார்ப்போம்'' என்றார்.

விற்பனை செய்பவன் பல தினுசுச் சரக்குகளை எடுத்துக் கிழவர் எதிரே போட்டான்.

“இது பிரபாத் சேலை. இப்போ இந்த மாதிரிதான் எல்லாரும் கட்டறாங்க. விலை சரசம். நாலே ரூபாய் தான். கெட்டிப் பேட்டு...''

“வேண்டாமப்பா இதெல்லாம்.''

“இதைப் பாருங்கள்...சாதா ‘பார்டர்'. தோய்த்துக் கட்ட உதவும். நீங்க கேட்ட விலைக்கு மேலே முக்கால் ரூபாய்தான். 80-ஆம் நெம்பர் நூல். நல்லா இருக்கும்.''

கிழவர் சேலையைக் கெட்டியான நூலா இல்லையா என்று அறிய இழுத்துப் பார்த்துக்கொண்டே, “நன்னா இருக்குது. விலைதான் அதிகம். மூன்று ரூபாய்க்குத் தர மாட்டாயா?'' என்று கேட்டார்.

“சாமி, அதோ என்ன எழுதி யிருக்குது பாருங்கோ; இந்தக் கடையிலே ஒரே விலைதான். எங்களுக்கு என்ன லாபம் கிட்டும்? போய் வாங்கோ. இன்னொரு கடையிலே இதே விலையானால் நம்ம கிட்டேயே வாங்குங்கோ'' என்றான் கடைக்காரன்.

கிழவருக்கு அந்தச் சிவப்பு டிக்கட் கரை போட்ட கிளிப் பச்சை நூல் புடைவை மேல் சபலம். பாவம், அவர் கையில் இருந்ததெல்லாம் நாலே வெள்ளி வில்லைதான். புடைவையில் செலவழித்துவிட்டால் தம் ஒரே நோயாளிப் பெண்ணுக்கு மருந்து வாங்கப் பணமே இல்லை. இவரு டைய தயக்கத்தைப் பார்த்து விற்பவனும், புடைவையைப் பீரோவில் சேர்க்காமல் மடிக்கத் தொடங்கினான்.

"இந்தா ரூபாய்! பில் கொடு" என்று பணத்தைக் கொடுத்து, சேலையை வாங்கிக்கொண்டு வெளியே சென்றார் கிழவர்.

* * *

துரைஸாமி ஸாவின் புடைவைக் கடை. கித்தான் பையில் பழங்களும் பூவும் அடைத்துக்கொண்டு, நடுவயதி னர் ஒருவர் - தோற்றத்திலிருந்து ஏதோ கம்பெனி உத்தி யோகஸ்தர் என்று ஊகிக்க வேண்டியிருந்தது - திரிந்து திரிந்து அயர்ந்து போய், நடக்க முடியாமல் மாடிப் படி ஏறி வந்து, பெரிய ஹாலில் விரித்திருந்த பாயின்மீது உட்கார்ந்தார். பின் புறமாகக் கைகளை ஊன்றிய வண்ணம், "சீனா வெடி ஒரு டஜன். மத்தாப்பில் ஏதாவது இரண்டு தினுசு" என்றார்.

"என்ன ஐயா? இது புடைவைக் கடை" என்றான் கடையிலுள்ள ஓர் ஆள்.

"அட ராமா! அப்படியா சொன்னேன்? வீட்டில் பசங்கள் பண்ணும் உபத்திரவத்தினால் இந்தப் பட் டாஸ் கவனமே எனக்கு. எட்டுக் கஜத்தில் நூல் சேலை தேவை. எந்தெந்த மாதிரி இருக்கு, காண்பியுங்கோ—"

மதுரைப் புடைவை, கொள்ளேகாலம், நாராயண வரம் எல்லாத் தினுசும் கேட்டவர் எதிரே வந்து குவிந் தன. சரக்கெல்லாம் புத்தம் புதியவை யாகையால், சாயத் தின் மணம் கமழ்ந்தது. உத்தியோகஸ்தர் தமக்குப் பிடித்த ஒரு ரகத்தைச் சுட்டி, "இது என்னவாகும்?" என்று கேட்டார்.

விற்பவன் சீட்டைக் கவனித்து முதலாளியை ஸங்

கேத பாஷையில் என்னவோ கேட்டுவிட்டு, "ஒன்பது ரூபாய் ஆகும்" என்றான்.

"அதற்குக் குறையாதா?" என்று உத்தியோகஸ்தர் துரைஸாமி ஸாவைக் கேட்டார்.

"ஸ்வாமி, அதற்கு மேல் நான் என்ன சொல்லுவது? இந்த மாதிரி ரகம் நம்ம கடையை விட்டால் வேறு எங்கேயும் கிடைக்காது. ஏதோ இவ்வளவு தூரம் கேட்கிறீர்களேன்னு அரை ரூபாய் குறைக்கிறேன், ஐயர்தான் தின்னட்டுமே" என்றார் ஸா.

தம் பணப் பையைப் பரிசோதித்தபோது உத்தியோகஸ்தருக்கு முகம் விகாரமுற்றது. ஏழு ரூபாய் நாலே காலணாவுக்கு மேல் செப்பால் அடித்த காசு அதில் ஏது? பெரிய யோசனைக்கு ஆளானார் அவர். சட்டையில் போட்டுக்கொண்டிருந்த தங்கப் பித்தானைத் திருகிக்கொண்டே இருந்தார். பாவம், அவர் மனம் என்ன சஞ்சலப்பட்டதோ? ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய், "இதோ அரை மணி நேரத்தில் திரும்பி வந்து இதை எடுத்துக் கொண்டு போகிறேன். இதை எடுத்து வையுங்கள்" என்று சொன்னபோது ஸா, சப்புக் கொட்டி, "வாங்கோ. அதுவரையில் யாரும் வாங்காமல் இருந்தால் உங்கள் அதிர்ஷ்டம்" என்று சொல்லி, ஆளைப் பார்த்து, "டேய்! அதை அந்த ஓரமாக எடுத்து வை" என்றார்.

உத்தியோகஸ்தர் வெளியே சென்றார். கித்தான் பையை அவர் விட்டுச் சென்றதைக் கவனித்தபோதுதான், அவர் திரும்பி வருவாரென்று ஸாவுக்கு நம்பிக்கை விழுந்தது.

அரைமணி கழித்து, பித்தான் இல்லாமல் திறந்த சொக்காய் வழியாகப் பூணூல் உடைய மார்பு வெளியே புலப்பட, உத்தியோகஸ்தர் ஸாவின் கடைக்கு வந்து நெற்றி வேர்வையை உதறிவிட்டு, விலையைக் கொடுத்துத் தாம் விரும்பிய புடைவையை மட்டும் எடுத்துக்கொண்டு கிளம்பினார். கலவரத்தினால் பூவும் பழமும் உள்ள பையை மறந்து வைத்துவிட்டார். அவர் சற்றுத் தொலைவு போன பிறகுதான் ஸா அதைக் கவனிக்க நேர்ந்தது. தம் ஆளைக் கூப்பிட்டு, "டே! பாவம், ஐயர் பையை மறந்து

போய்விட்டார். ஓடு சீக்கிரம்! கிட்டத்தான் போய்க் கொண்டிருப்பார்" என்ருர்.

* * *

அகலமான மௌண்ட் ரோட்டிலுள்ள 'நாஷனல் எம்போரியம்'. இந்தியக் கைத் தொழிலினுல் ஆன எல்லாச் சாமான்களையும் அங்கே பார்க்கலாம்: குங்குமப் பரணியிலிருந்து காஷ்மீரச் சால்வை வரையில். சாமான் களின் விலை வெளியிடத்திற்குச் சற்று அதிகமே தவிர அவற்றின் உயர்வைப்பற்றிச் சந்தேகப்பட வேண்டியதே இல்லை. சாமான்களைப் பார்த்துவிட்டு வாங்காமல் சென் ருலும், அந்தச் சுதேசிக் கடையின் நிர்வாகிகள் மனஸ் தாபப் படக் கூடியவர்கள் அல்ல. எவரையும் இன்முக மாக வரவேற்று, எத்தனை தரம் கேட்டாலும் பொறுமை யுடன் பதில் சொல்லி மரியாதை காட்டும் பெருந்தன்மை உடையவர்கள்.

இப்பேர்ப்பட்ட உயர்வான கடை வாயிலில் 'ஸைட் கார்' உள்ள மோட்டார் சைகில் ஒன்று 'டுடுப்......டப்' என்று புகையை வெடித்துக்கொண்டே வந்து நின்றது. அழுந்த வாரப்பட்ட 'கிராப்' வைத்துக்கொண்டு, 'ஸூட்' 'ஹாட்' அணிந்த ஒரு நவயுவன் அதினின்று இறங்கினுன். அங்கே கடைக்கு வருபவர்களை வரவேற்று விசாரிககப் பெண்மணிகளையே வைத்திருந்தார்கள். அதிக நாகரிக உடையணிந்த அழகிய ரமணி ஒருத்தி எழுந்து வந்து நவயுவனுக்குக் கைலாகு கொடுத்து உள்ளே அழைத்துச் சென்ருள்.

ஆங்கிலத்திலேயே, "தங்களுக்கு என்ன தேவை?" என்ருள்.

"பட்டுச் சேலை. ரொம்ப நேர்த்தியானதாக, இன்றைய நாகரிகத்திற்குத் தகுந்தபடி இருக்கணும். விலையும் கொஞ்சம் சரஸமாக இருக்கணும்."

"அப்படியே" என்று அவள் உடனே மெதுவாகப் பீரோவைத் திறந்து ஐந்தாறு வகைப் புடைவைகளை எடுத்துவந்தாள். ஒரு சேலையைக் காட்டி, "உங்களுக் குப் பிடித்ததை எடுங்கள். இது அசல் காஷ்மீரப் பட்டு.

நூல் கலப்படமே இல்லை. கேர்த்தியான கரையில் இத்தகைய அழகிய சேலை எங்குமே கிடைக்காது. எங்களுடைய விலை எண்பது ரூபாய். இதை எடுத்துக் கொள்கிறீர்களா?'' என்றாள். எந்த ஆடவனும் அந்த இடத்தில் மறு பேச்சே பேச மாட்டான். முகவசீகரமே வெற்றிக்குக் காரணம். நவயுவகனும் பேரமாடாமல் சொன்ன விலையைக் கொடுத்துவிட்டு ஒரு விதத்தில் திருப்தி அடைந்தும், ஒரு விதத்தில் அதிருப்தியுடனும் 'ஷாப்' வாயிலில் நின்ற பெண்மணியை முகத்தில் அசடு வழியக் கவனித்துவிட்டு, மோட்டார் சைகிளைக் கிளப்பிக்கொண்டு டிராம், பஸ் ஜனங்களின் குழப்பத்தில் மறைந்தான்.

தீபாவளியன்று அதிகாலை. ஆகாயத்தில் மேகத் திரை இட்டிருந்தது. பிசுபிசுவென்று தூற்றல். நானூறு ரூபாய் காசிப் பட்டுச் சேலை இதற்குள் போய்ச்சேர வேண்டிய இடத்தை அடைந்துவிட்டது. 'பனையூர் ஹௌஸி'ல் முதலியார் தம் பெரிய தேகத்திற்கு ஏற்ற தான ஒரு பெரிய சுகாஸனத்தில் கால்களை நீட்டிக் கொண்டு சாய்ந்து கிடந்தார். பக்கத்தில் ஆறு கோணமான சிறிய பீடத்தில் வெள்ளிக் கிண்ணத்தில் செவேலென்று இருக்கும் விலையுயர்ந்த மதுபானம். அவரைச் சூழ்ந்து இச்சகம் பாடுவோர் ஏழெட்டுப் பேர். எதிரே வர்ணம் சற்றும் போகாத பெரிய ரத்தினக் கம்பளத்தின் மீது காலுக்கும் கைக்கும் திண்டும் திவாசும் துணையாகக் கொண்டு கரி வழியும் தாசி ஒருத்தி பாழான குரலில் பாடிக்கொண்டிருந்தாள். காதால் கேட்க வழங்காதபடி அவளும் பிடில்காரனும் ஸங்கீதத்தைக் கொலை செய்தனர். அவள் கழுத்தை உருட்டும் போதெல்லாம் வைர அட்டிகை பளிச்சுப் பளிச்சென்று ஒளி வீசியது. முதலியார் வாங்கிய ராணிகள் அணியும் பட்டுச் சேலையை இந்த அவலக்ஷண ரூபந்தான் கட்டிக்கொண்டிருந்தது. நடு நடுவே கிண்ணத்திலுள்ளதை ஜாகீர்தார் ஒவ்வொரு விழுங்காக அருந்திக்கொண்டே உத்ஸாகம் மூண்டவராய், "அடி!... என் மேலே ஒரு பதம் பாடு பார்க்கலாம்" என்றார். உடனே அவள், "உன் மீது மயலேறுதே, என் சாமீ"

என்று எடுத்து விட்டாள். அதற்கு ஏற்ற அபிநயங்களையும் காட்டினுள். அதற்குமேல்...திரை விழுகிறது.

* * *

அதிக ஜன நடமாட்டம் இராத முட்டுச் சந்தில் ஒரு கிலமான வீடு. அதன் ஓர் அறையில் சின்ன மண்ணெண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. லேசாக அதன் புகை அறை எங்கும் கப்பியது. மூலையில் கிழிந்த பாயில் எலும்பும் தோலுமாக, ரத்தம் இல்லாமல் வெளுத்த முகத்துடன் ஒரு நோயாளிப் பெண் படுத்திருந்தாள். தரித்திரத்தின் சின்னம் எல்லா வஸ்துக்களிலும் தென்பட்டது. ஒட்டடை தொங்கிய அலமாரியில் மருந்துக் குப்பிகள் சில.

ஜுரம் காயும் அவளிடம் வந்து அவள் நெற்றிக்கட்டைத் தொட்டு, முகத்தில் வழியும் அவளது கூந்தலை ஒதுக்கிவிட்டு, கிழவர் வாத்ஸல்யத்துடன், "அம்மா, எப்படி இருக்குது உடம்பு இப்போ?" என்று விசாரித்தார்.

நோயால் துன்புறும் அந்தப் பெண் கண்ணைத் திறக்கவே இல்லை. அதிக அசதியினுல் வெறுப்புக் கலந்த குரலில், "அதே போல்தான் இருக்கு. உம்..." என்ருள்.

"அம்மா சூடாமணி! குழந்தே, தீபாவளி ஆகட்டும், வேறு எங்கேயாவது நாட்டுப்புறமாகப் போகலாம்...... இடம் மாறினுலே வியாதி வீடும்."

"ஆமாம், அப்பா. நீயும் சொல்லிக்கொண்டுதான் இருக்கே; இந்த இடத்தை விட்டு இரண்டு வருஷமாக நகர்ந்த பாட்டைக் காணேம்" என்று அவள் கஷ்டத்துடன் உரைத்துவிட்டுப் படுக்கையில் வேறு பக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டாள். கிழவருக்கு அவள் ஒரே பெண். அவருக்குக் கண்ணினுள் மணி போன்றவள். செல்வக் குழந்தை. தாய் இல்லை. எவ்வளவோ சீராகவும் சிறப்பாகவும் நல்ல வரனைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொடுத்தார். சாந்தி முகூர்த்தத்திற்குக் கையில் பணம் தரவில்லை என்று அவளைத் தள்ளிவிட்டு, மாப்பிள்ளை வேருெரு விவாகம் செய்துகொண்டு

விட்டான். அதுமுதல் அவளை இந்த நோய் உருக் குலைத்துவிட்டது. கிழவர் தமக்கு வருகிற இருபது ரூபாய் பென்ஷனில் தம் பெண்ணுக்கு எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தார். ஆனால் மருந்துக்குச் சளைக்குமா மனோ வியாதி ?

" அம்மா, எழுந்து உட்கார்...பார்லிக் கஞ்சி கொண்டு வந்திருக்கேன்...குடி."

" எனக்குப் பிடிக்கவில்லை, அப்பா."

" மருந்தையாவது சாப்பிடேன்."

" எனக்கு எதற்கு...?"

" அம்மா, எனக்காகவாவது கொஞ்சம் சாப்பிடம்மா ...உனக்கு ஒரு வஸ்து வாங்கி வந்திருக்கேனே...சாப்பிட்டு விடு, காண்பிக்கிறேன்."

நோயாளியின் கண்கள் சட்டெனத் தீவிரமாக ஒளிர்ந்தன. பாதி எழுந்து உட்கார்ந்த வண்ணம், " என் னப்பா, அப்படி அதிசயமான வஸ்து ! காட்டு, சீக்கிரம் காட்டு " என்றாள்.

அவர் காகிதப் பொட்டலத்தை அவிழ்த்து நூல் புடைவையை எடுத்துத் தம் பெண்ணுக்குக் காட்டினார். அவள் அசட்டையாக, " போ.....இதையா பொறுக்கிக் கொண்டு வந்தே, போயும் போயும் ?......யாருக்கு வேணும் ?...வீட்டு வேலைக்காரிக்குக் கொடுத்தால்கூட இதைத் தூர எறிவாள் " என்றாள். கிழவருக்கு ஒன்றுமே தெரியவில்லை. எவ்வளவோ சிரமப்பட்டுத் தாம் அவளுக் காக விரும்பி வாங்கிய புடைவையை உதறித் தள்ளிய போது, அவரது குழி விழுந்த கண்களில் நீர் துளித்துக் கீழே தரையில் உதிர்ந்தது.

" அம்மா, என் செல்வமே, இந்தத் தடவை தெரியாத் தனமாக இதை வாங்கிவிட்டேன். தீபாவளியும் நல்ல நாளுமாக எழுந்து இதை உடுத்துக் கொள் " என்றார்.

" அப்பா, எனக்கு எழுந்திருக்கவே சக்தி இல்லை... தீபாவளிக் கொண்டாட்டங்கூட இந்தச் சனியன் பிடித்த வளுக்கு வேண்டியிருக்கா ? உன் மனசு நோகக் கூடா

தேன்னு பார்க்கிறேன். புடைவையைப் பிரித்து என் மேல் போர்த்துவிடு.''

இதைக் கேட்டுக் கிழவர் குலுங்கக் குலுங்க அழுதார். அவருடைய துக்கம் சொல்லுக்கு அடங்காமல் இருந்தது.

* * *

''பாழும் மழை கொஞ்ச நாழியாவது நிற்கக் கூடாதா? குழாய் அடியண்டை போக விட மாட்டேன் என்கிறதே! இன்னும் நாலு பேர் ஸ்நானம் பண்ண வெந்நீர் எப்போ காயப் போகிறது?'' என்று வருண பகவானைச் சபித்தாள் அந்த உத்தியோகஸ்தருடைய ஸம்ஸாரம். வீடு நிறைந்த மனுஷி; கஷ்ட நிஷ்டூரங்களுக்குப் பாத்தியதைப்பட்டவள்; நாலைந்து குழந்தைகளுக்குத் தாய்; புருஷனை அதிகமாக வாட்டி எடுக்காத உத்தமி; செட்டாகக் குடித்தனம் செய்பவள்; உலக அனுபவம் உள்ளவள். அவள் இராது போனால் உத்தியோகம் பண்ணும் அந்தப் பிராம்மணருடைய குடும்பம் குட்டிச்சுவராகத்தான் போயிருக்கும். அவர் மறதிக்கு இன்னொரு ஸ்திரீயாக இருந்தால் ஓடியே போயிருப்பாள். காவேரி ரொம்பப் பொறுமைசாலி. பாவம்! அவளுக்கு அதிருஷ்டந்தான் சப்பை!

உத்தியோகஸ்தரான கிருஷ்ணஸ்வாமி ஐயருக்குத் தூக்கமே வரவில்லை. பொன் பீத்தான் சற்றைக்கொரு தரம் கண்ணெதிரே வரும்போது அவருக்குத் திடுக்கிடும். காவேரி தனக்காகப் புடைவையோ, சாமானோ எதுவும் வாங்கிக்கொண்டு வரச் சொல்லவில்லை. அப்படியிருக்க, அவர் பல நாளாகக் காப்பாற்றி வந்த தம் அருமைத் தங்கப் பீத்தான்களை விற்று மனைவிக்கு இத்தனை நாட்களுக்குப் பிறகு புடைவை வாங்கிக்கொண்டு வந்ததன் கருத்து அவருக்கே புரியவில்லை என்றால், நமக்கு எப்படிப் புரியும்? மனிதனுக்குப் பழைய வாஸனைகள் எப்போதாவது ஒரு சமயம் ஏற்படுவது இயல்பே. ஒருவேளை கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு, காவேரியுடன் தாம் இளமையில் குலவியது திடீரென்று கவனம் வந்து இந்த அசட்டுக் காரியத்தைச் செய்திருக்கலாம். புடைவை

என்னவோ வாங்கியாயிற்று. அதை ஒளித்து வைக்க முடியாமல் பின் கட்டிற்கு வந்தார். "காவேரி... காவேரி..." என்று மெல்லக் கூப்பிட்டார்.

"ஏன் கூப்பிட்டீர்கள்?......அவசரமாக வரணுமா என்ன?" என்ருள்.

"ஒண்ணுமில்லே...ஒரு ஸமாசாரம்......பையன்கள் யாரும் இங்கே இல்லேயே...நீ கோவிச்சிப்பாயோ என்னவோ...உனக்குத் தீபாவளியின்போது கட்டிக்கொள்ளப் புடைவை வாங்கிப் பல நாளாச்சேன்னு ஒண்ணு வாங்கி விட்டேன்..."

"நேக்கா புடைவை! கேலி பண்றைகளாக்கும். புடைவைக்குத் துட்டேது? வர வரும்படி உப்புப் புளி மிளகாய்க்கே போறல்லேயே!"

"இல்லேயடி...நிஜமாத்தான்......இதோ பாரேன்" என்று சேலையைக் காண்பித்தார். அதைப் பார்த்துச் சந்தோஷப்படாமல் இடிவிழுந்து நின்ருள் காவேரியம்மாள்!

அதே சமயத்தில் தூங்கிக்கொண்டிருந்த பையன்கள் எழுந்து வந்து இவர்களைச் சுற்றிக்கொண்டனர்.

"என்னப்பா கையிலே...என்ன பொட்டலம்...சீனு வெடியா? எனக்கு..." என்று கூவ ஆரம்பித்து விட்டனர்.

"சனியன்களே...எல்லாரும் கூடத்துக்கு வாங்கோ. அவாளவாளுக்கு இத்தனை வெடி, இத்தனை மத்தாப்பு என்று பங்கிட்டுத் தந்துவிடுகிறேன். கூச்சல் போட்டைகளோ அறைதான்."

"அதிருக்கட்டும், புடைவை வாங்க உங்களுக்குத் துட்டு எங்கே கிடைச்சுது?" என்று காவேரி அம்மாள் அவரைக் கேட்காமல் விடவில்லே.

"ஓர் அசட்டுத்தனம் பண்ணினேன்...உனக்கு இந்தத் தீபாவளிக்கு வாங்கணுமென்று தோணித்து... பித்தானை விற்று வாங்கிவிட்டேன்...வாங்கி ஆச்சு. பேசாமல் கட்டிக்கொள்..." என்ருர்.

"நான் வேறு எதுவும் சொல்லவில்லையே! நமக்கு இருக்கிற கஷ்டகாலத்தில் இந்தச் செலவு எதற்காக என்றுதான் கேட்டேன்... இருங்கோ சத்தே..." என்றதும் காவேரி அறைக்குள் சென்று குங்குமம் தடவிப் புதுப் புடைவையை உடுத்துக்கொண்டு, வெளியே வந்து தன் பதியை நமஸ்கரித்தாள். பட்டாசு வெடித்துக்கொண்டே கூடத்தில் நடக்கும் இந்த அதிசயத்தைப் பையன்களும் பார்த்தனர். ஆனல் அவர்களுக்கு இதன் அர்த்தம் விளங்கவில்லை.

* * *

மாம்பலத்தில் அமைதியான விடுதியொன்றில் சித்திரம் போல் சின்னஞ் சிறிய பங்களா; தற்கால வசதிகள் மலிந்த உட்புறம். மணிகளாலாகிய திரையை விலக்கிக் கொண்டு நுழைந்தால் பெரிய ஹால். அங்கே ஓர் அழகிய மேஜைமீது, பள பளவென்று மின்னும் ஜோத்பூர் பித்தளைப் பாத்திரத்தில் உள்ள வர்ண மலர்கள் நம்மை வரவேற்கும். அதிகப்படியான சோபாக்களோ நாற்காலிகளோ இல்லை. சுவர்களில் பொறுக்கி எடுத்தாற் போல் ஏழெட்டுப் போட்டோக்கள். ஒவ்வொரு சாளரத்திற்கும் லேசான நிறத்தில் திரை விடப்பட்டிருந்தது. கண்ணுக்கு எரிச்சல் இராத வர்ணம் தீட்டிய சயன அறையில் சுப்ரமான மெத்தை விரித்த இரு மஞ்சங்கள்.

வேருேர் அறையில் பெரிய கருங்காலி மேஜை. அதுவே வீட்டுக்காரரின் ஆபீஸ் அறை. சுழலும் சிறிய பீரோவில் பல்வேறு புத்தகங்கள். இரண்டு சாளரங்களுக்கு மத்தியில் சற்று உயர்ந்த ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் 'ரேடியோ ரிஸீவர்.' இத்தகைய விசித்திரமான இல்லத்தின் சொந்தக்காரன்தான் அந்த நவ யுவன். அவனுடைய மனைவி சுசீலா அதி நாகரிக கோஷ்டியைச் சேர்ந்தவளாய் இருந்தாலும், நம் நாட்டுப் பழக்க வழக்கங்களை முற்றும் துறந்துவிடவில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்து உழைத்துச் சேகரித்த தனத்தைக் கொண்டு நிருமித்த அழகிய இல்லறம் என்றே சொல்ல வேண்டும் அவர்களுடைய வாழ்க்கையை.

ராஜசேகரன் இதுவரையில் சுசீலாவிடம் எந்த விஷ

யத்தையும் மறைத்ததில்லை. அது போலவே சுசீலாவும், எண்பது ரூபாயைக் கொட்டி அந்தப் பட்டுப் புடைவையை வாங்கினதுதான் அவன் மனத்தைச் சற்று உறுத்தியது. ஏனென்றால் சுசீலாவைக் கலக்காமல் அவன் முதல் முதலில் செய்த காரியம் இதுவே. இதைப் பற்றிய பேச்சை நிதானமாக எடுக்கலாம் என்று இருந்தாள். சுசீலாவின் கண்ணுக்குத் தெரியாமல் அதை மறைத்து வைக்கக் கூடிய இடமே அந்த வீட்டில் இல்லை. என்ன செய்வதென்று தோன்றவில்லை, ராஜசேகரனுக்கு. உடைத்துச் சொல்லிவிடுவதே மேலென்று தீர்மானித்து, "சுசீலா! உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்...உனக்கு ஒரு புடைவை வாங்கி வந்திருக்கிறேன்" என்று சொல்லி அதை அவளுக்குக் காட்டினான்.

சுசீலா 'ஸாரி'யைப் பார்த்ததும் மோகித்தவளாய், "ரொம்ப நன்னுப் பொறுக்கி யிருக்கிறீர்களே!" என்றாள். தன் உடம்பில் அதை வைத்துப் பார்த்துக் கொண்டே, "என் நிறத்துக்கு எடுத்துக் காட்டும். என்னிடம் சொல்லவே இல்லையே, வாங்கப் போறேன்னு. இருக்கட்டும், விலை என்ன?" என்றாள்.

ராஜசேகரனுக்கு எதனாலோ வாய் கூசிற்று, விலையைச் சொல்ல. தட்டுத் தடுமாறி, "எண்பது" என்றான்.

"ரொம்ப அதிகம். இப்படித்தான் புருஷர் எல்லாருமே ஏமாந்து போகிறார்கள். இவ்வளவு விலை தண்டம். சிரமப்பட்டுச் சம்பாதித்ததை வைத்துக் கொண்டு சிக்கனமாக இருந்ததனால் அல்லவா இவ்வளவு முன்னுக்கு வந்திருக்கிறோம்? வாங்கி யாயிற்று; இனிமேல் என்ன பண்ணலாம்? நாழிகை ஆகிறது, போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்."

ராஜசேகரன் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் யாதொரு கிலேசத்தின் சின்னமும் தென்படவில்லை; மழு மழுவென்று நிர்மலமாக விளங்கியது. அருகில் உள்ள சாளரத்தின் மூலமாக எதிரேயுள்ள இருண்டு தெரியும் மரங்களை நோக்கியவண்ணம் சுசீலா சிந்தையில் ஆழ்ந்திருந்தாள். இந்தச் சிறு தவறுக்காகக் கணவனை ஏன் குறை கூறினோம் என்று சுசீலா வருத்த

முற்றுள். தன் கணவனின் நிச்சலமான முகத்தை ஒரு தரம் கூர்ந்து கவனித்தாள். அந்த வேதனையே அவளை இரவெல்லாம் தூங்க விடவில்லை. மணி நாலு அடித்தது கடிகாரத்தில். எதிரேயுள்ள வீட்டில் பையன்கள் ஏற்றும் மத்தாப்பூ வத்தியின் பச்சை நிற ஒளியும், செந்நிறமும் அடிக்கடி ஸ்வர்க்கம் போன்ற அந்த அழகிய படுக்கை அறையைப் பளிச்சென்று விளக்கின. ஏதோ உணர்ச்சி மூண்டவள் போல், சுசீலா திடீரென்று ராஜசேகரன் முகத்தையே குனிந்து நோக்கிவிட்டுத் தன் மிருதுவான தாடையை அவனுடைய கன்னத்தில் பதித்தாள். அவள் கண்கள் சொரிந்த வெம்பனி அவனைத் தூக்கத்தினின்றும் எழுப்பியது.

"சுசீலா, கூப்பிட்டாயா என்ன? தீபாவளி ஸ்நானம் செய்ய வெந்நீர் காய்ந்துவிட்டதா?" என்றுன்.

சுசீலாவின் முகத்தில் அப்பொழுது ஓர் அபூர்வ லாவண்யம் திகழ்ந்தது.

# நீறு பூத்த நெருப்பு

பட்டணத்து மூலைத் தெரு ஒன்றில் இரண்டே கட்டுகளுடைய ஒரு சின்ன வீடு. முன் கட்டில் ஒன்றும் பின் கட்டில் ஒன்றுமாய் இரண்டு குடித்தனம். பொதுவான ஓர் இடத்தில் குழாய் முற்றம். அங்கே செழுமையாக வளர்ந்த கொய்யா மரம் ஒன்று. இரு குடும்பத்தவர்களுக்கும் இடையே எந்த விதமான சண்டையோ கூச்சலோ இல்லை. அந்நியோன்யமாக வாழ்ந்துவந்தனர்.

சிவகாமு விதவை. இளம் பருவத்திலேயே அந்த மாதிரி ஆகிவிட்டாள். கிருஷ்ணஸ்வாமி, அவளுடைய அண்ணன்; பஸ் டிரைவர் சந்திரன் அவன் தம்பி, சின்னப் பையன், ஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தான். ஒரு சமயம் இவர்கள் நல்ல ஸ்திதியில் இருந்தவர்கள்...... ...தகப்பனார் பல விதமாக ஆடிச் சொத்தை யெல்லாம் தொலைத்துவிட்டு, இறந்து போய்விட்டார்; சிறு வயதிலேயே தாயாரையும் இழந்துவிட்டனர். கிருஷ்ணஸ்வாமியின் பேரில் பாரம் விழுந்தது. நல்ல காலம்; அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை. வேறு வேலை கிடைக்காது போகவே மோட்டார் ஓட்டியாக அமர்ந்தான். சொற்ப சம்பளமே. குடும்பத்தைச் சமாளிக்க வேறு உபாயமும் தேடவேண்டியதாயிற்று. ஊதுவத்தி, அரைக்கீரைத் தைலம் போன்ற சரக்குகளைத் தயாரிப்பதில் கெட்டிக்காரி சிவகாமு. ஒழிந்த நேரங்களில் அவள் செய்து வைக்கும் சாமான்களைக் கிருஷ்ணஸ்வாமி கடைகளுக்குப் போட்டுக் கைமேல் காசு சம்பாதித்துக்கொண்டு வருவான். மூவரும் ஒத்துழைத்ததால் கோப்பியமாகக் குடும்பம் நடந்தது.

முன் கட்டில் குடி யிருந்தவர் பென்ஷன்தாரர். அவருடைய நிலைமை நடுத்தரம் என்றே சொல்லவேண்டும். ஸேதுராமையருக்கு ஒரு பிள்ளை, ஒரு பெண். பிள்ளை ராஜகோபாலன் கல்யாணமானதும் மாமனாரிடமே அடைக்

கலம் புகுந்துவிட்டான். மாமனுர் பெரிய உத்தியோகஸ்தர். அவர் மாப்பிள்ளைக்குத் தம் ஆபீஸிலேயே வேலை பண்ணி வைத்துவிட்டார். ஸேதுராமையர் தம் பிள்ளையை ஊட்டி வளர்த்ததுதான் மிச்சம். பெண் கனகத்திற்கு விவாகமாகி இரண்டே வருஷங்கள்தாம் ஆயின. புக்ககத்தைச் சேர்ந்தவர்கள் எவருமே இல்லை. ஆகவே, அவள் தாயார் வீட்டிலேயே இருந்தாள். அவளுடைய கணவன் ஸௌந்தரராஜனுக்கு ரெயிலில் உத்தியோகம்...... 'ரிலீவிங் ஏ. எஸ். எம்.' பந்து அடிப்பது போல் ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்கு அவனைத் தூக்கிப் போடுவார்கள். அவனுடைய நாட்களில் பாதி ரெயில் பிரயாணத்திலேயே கழிந்து போகும். 'ரச்சை'யான வேலை. பாவம், மாதம் இருமுறைதான் அவனுல் இந்தப் பக்கம் வர முடியும்.

ஸேதுராமையர் சிவகாமுவைத் தம் வயிற்றுப் பெண்ணுகவே பாவித்து வந்தார். கனகத்துக்கும் அவளிடத்தில் ஒரு தனி அன்பு. சிவகாமுவும் பெரியவர்கள் துணை இல்லாத தன் குடும்பத்திற்கு ஸேதுராமையரையே பெரியவராகக் கருதியிருந்தாள்.

சிவகாமு எல்லாருக்கும் முன்னமே எழுந்துவிடுவாள். கிருஷ்ணஸ்வாமி ஐந்து மணிக்கெல்லாம் புறப்பட வேண்டுமே. அவனுக்கு ஏதாவது ஆகாரம் சரசர வென்று செய்து போட்டு அனுப்புவாள். அவன் போனதும் சந்திரனுக்கு அரைமணி நேரம் தானே பாடம் சொல்லித் தருவாள். சிவகாமு 'மெட்ரிக்' வரையில் படித்தவள்.

சாப்பாட்டுக் கடை பத்து மணிக்கெல்லாம் முடிந்துவிடும். அப்புறம் மத்தியான்னம் ஒரு மணி வரைக்கும் அவளுடைய சொந்த ஜோலிகள்: நாவல் படிப்பது, சீசாக்களைச் சுத்தம் செய்து அவற்றுள் எண்ணெய் ஊற்றி 'லேபில்' ஒட்டுவது, ஊதுவத்திக்காகச் சரியான அளவில் வாசனைக் கலப்புகளைக் குழைத்து வைப்பது இவை போன்றன. ஒரு மணிக்குக் கிருஷ்ணஸ்வாமியும் அகோரப் பசியுடன் வந்துவிடுவான். நிஜாரைக் கழற்ருமலே இரண்டு அள்ளாகச் சோற்றை வாயில் போட்டுக்

கொண்டு, சிறிய கண்ணுடியில் தன் முகத்தைப் பார்த்துக் கிராப்பை வாரிக்கொள்வான். இரண்டெட்டாக 'ஷெட்' டிற்குச் சென்று பஸ்ஸை எடுப்பான், அவன் சென்றதும் சிவகாமுவுக்கு அளவற்ற அவகாசம். கூட மாட அவளுக்குக் கனகம் உதவி புரிவாள். புட்டிக்கு 'லேபில்' ஒட்டும் காரியம் அவளுடையதே.

நித்தியம் ஒரே மாதிரி வேலையைச் செய்வதால் சிவகாமுவுக்கு வெறுப்பே தோன்றும். புதுமைக் கிளர்ச்சி அற்றிருந்தது அவளுடைய வாழ்க்கை.

"என்னுல் இனிமேல் ஆகாதம்மா" என்று சில சமயம் கையிலுள்ள காரியத்தை எறிந்துவிடுவாள் சிவகாமு.

"நான் செய்யட்டுமா அதை?" என்பாள் கனகம்.

"போடி, போ! வேலையுமாச்சு மண்ணுங்கட்டியுமாச்சு! இவ்வளவு உழைத்தும் என்ன சுகம்?" என்றதும் பெருமூச்செறிவாள் சிவகாமு. அவளுடைய கண்கள் கலங்கும். கொஞ்ச நேரம் கனகத்துடன் எதுவுமே பேசாமல் வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொள்வாள்.

அவளுடைய பாழும் நெற்றியில் இருள் படரும். அதைக் கவனித்த கனகம் தன் அறைக்கு எழுந்து செல்வாள்.

இரவானதும், விளக்கை ஏற்றிவிட்டுச் சிவகாமு மறுபடியும் மலர்ச்சியுடன் சந்திரனுக்குப் பாடம் சொல்லித் தருவாள். பத்தரை மணிக்கெல்லாம் கிருஷ்ணஸ்வாமியும் களைத்துப் போய் வீடு வந்து சேர்வான், அவனுக்குச் சாதம் போட்டுவிட்டு மட மடவென்று வீட்டுக் காரியங்களை முடித்துக்கொண்டு நல்ல காற்றுக்காகத் தனிமையான குழாய் முற்றத்தில் வந்து உட்காருவாள் சிவகாமு. அதே சமயத்தில் சந்தடி செய்யாமல் ஓர் உருவம் அவளுடன் கலந்துகொள்ளும். யாராக இருப்பாள்? கனகந்தான்! இதைப் போல் ஒரு நாள்.

"காகு, எனக்குத்தான் தூக்கம் வரவில்லை. உனக்கென்னடீ கேடு?" என்ருள் சிவகாமு.

கனகம் பதில் சொல்லாமல், நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

"என்னடீ சிரிக்கிறே?......ஏதோ ஸமாசாரம் இருக்கு?" என்ருள் சிவகாமு.

"ஒண்ணுமில்லே" என்ருள் கனகம்.

"அந்தச் சிரிப்பிலே ஏதோ ரகசியம் இருக்கு, மறைக்கிருயே" என்று சொல்லிச் சிவகாமு நேச பாவனையில் கனகத்தின் முதுகில் ஒரு தட்டுத் தட்டினுள்.

"சொல்லப் போகிருயா, இல்லேயா?"

"ஒண்ணுமில்லேன்னு—" என்று இழுத்தாள் கனகம்.

"எனக்குத் தெரியாதாடீ...இது. இதைத் தெரிந்து கொள்ளாது போனல் நான் பெண்ணுய்ப் பிறந்தது எதற்கு?" என்ருள் சிவகாமு.

கனகம் பேசவில்லே. இதழ்க்கடை மட்டும் அடிக்கடி வளைந்துகொண்டிருந்தது. கண்களில் அபூர்வமான ஓர் ஒளி துள்ளிற்று.

"தெரிஞ்சு போச்சு!" என்றதும் கனகத்தின் மோவாயைத் தடவி சிவகாமு தாழ்ந்த குரலில், 'உன் ஆத்துக்காரர் கடி தந்தானே?...நிச்சயமாக அதுதான்...... பார்த்தாயா, கண்டு பிடிச்சூட்டேன்" என்ருள் சிவகாமு.

மயிர்க் கூச்செறியக் கனகம் தன் இடுப்பில் செருகி வைத்திருந்த கணவனின் கடிதத்தை வெளியே எடுத்துச் சிவகாமுவினிடம் தந்து, "படித்துத்தான் பாரேன்" என்ருள்.

அருவியின் மெல்லொலிச் சிரிப்பைக் கொட்டிய சிவகாமு "அதை நான் ஏன் படிக்க வேண்டும்?......நீ படி, கேட்கிறேன்" என்ருள்.

கனகத்தின் வாழ்க்கையில் வஸந்தகாலம் தோன்றியது. புதியனவும் இனியனவுமான அனுபவங்களே அவள் பெற்ருள். அவளுக்கு ஸுந்தரராஜன் எழுதும் கடிதங்களில் காதலேப் பற்றிய ரஸமான பிதற்றல்களே நிரம்பி

யிருக்கும். கடிதங்களை ஒரு தரம் இல்லை, நூறு தரம் படிப்பாள். அந்த மயக்கத்தில் ஆழ்ந்து விசித்திரமான மனோபாவனைகளைக் கொள்வாள். ஆனால் அதே மாதிரி பாஷையில் பதில் எழுதத் தனக்குத் தெரியவில்லையே என்று வருந்துவாள். ஒவ்வொரு சமயம் தனக்குள் மூண்ட கிளர்ச்சிகளை வெளியாரிடம் காட்ட அவள் மனம் அலை பாயும். இது, பெண்பாலாரிடத்தில் உள்ள ஒரு பலவீனம். தாம் அடைந்த சுகங்களைப்பற்றிப் பிறர் அறிய வேண்டும் என்பது அவர்களுக்குள்ள ஆவல். யாரிடத்தில் சொல்லலாம் யாரிடத்தில் சொல்லக்கூடாது என்று வியவஸ்தையே இல்லை. தாம் பெற்ற இனிய அனுபவங்கள் பிறர் மனத்தில் என்ன என்ன விகாரங்களைக் கிளப்பும் என்பதை அவர்கள் உணரமாட்டார்கள். கனகமும் உள்மர்மங்களைக் கபடமின்றிச் சிவகாமுவிடம் கூறிவிடுவாள். இது காரணமாகச் சிவகாமுவுக்குக் கனகத்தினிடம் ஒரு தனிப் பிரீதி. தன் துரதிருஷ்டத்தை நினைத்துக்கொள்வதால் என்ன லாபம்? கனகத்தின் தாம்பத்திய லீலைகளைப் பார்த்து மனச் சாந்தி அடைவாள்.

கனகத்துக்கு வந்த கடிதத்தைப் படிப்பதென்றால் முதலில் சிவகாமுவுக்கு லஜ்ஜையாக இருந்தது. அதைப் படித்துப் பார்க்காது போனாலும், தோழியான கனகத்தின் அழகிய முகம் வாடிப்போகும்.

"இப்படிக் கொடு, படிக்கிறேன்......என்னதான் எழுதி யிருக்கு?" என்றாள் சிவகாமு.

கனகம் சிவகாமுவின் தோள்மீது கவிந்தபடி கடிதத்தைப் பன்முறை படித்திருந்தும் சலிப்பு ஏற்படாதவளாய் மீண்டும் படிப்பாள். கடிதத்தில் சில வரிகளைக் காணும்போது இருவரும் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு ஓரக் கண்ணால் பார்த்துக் கொள்வார்கள். சிவகாமுவின் முகத்தில் குபீரென்று சிவப்புப் பரவும்.

"பார்த்தாயாடீ, புருஷர்களே இப்படித்தான்! கடுதாசியில் இப்படி யெல்லாங்கூட எழுதுவார்களோ? உனக்கு இப்படி எல்லாம் எழுதத் தெரியாதே, காகு?" என்றாள் சிவகாமு குத்தலாக.

கனகம் நாணம் நிரம்பிய பார்வையுடன், "எழுதலாம்

...ஆனால் அந்த மாதிரி எழுத எனக்குத் தோன்றுவதில்லை. நான் கடிதம் எழுதும் அழகு உனக்குத் தெரியாதா என்ன?'' என்றாள்.

"நானாக இருந்தால், அதற்கு ஏற்றாற்போல் எழுதுவேன்'' என்றாள் சிவகாமு பெருமிதத்துடன்.

"அப்படியானால் நீதான் எழுதித் தாயேன், எனக்குப் பதிலாக. வர்ணித்து எழுத எனக்குக் கையாலாகாதம்மா!.....உன்னால் முடியும்!'' என்றாள் கனகம்.

"என்னால் முடியும் என்று உனக்கு எப்படித் தெரியுமடீ?'' என்றாள் சிவகாமு.

"ஏன், நீ எழுதிய கதைகளை நான் பத்திரிகைகளில் படிக்கவில்லையா? இந்தத் தடவை நீதான் எனக்குக் கடிதம் எழுதித் தர வேண்டும், என்ன?'' என்றாள் கனகம்.

"சீ......அது யார் செய்கிற காரியம்? தப்புன்னா!''

"எப்படித் தப்பாகும்? நான்தானே எழுதச் சொல்லுகிறேன்?''

"போடீ பைத்தியமே...உன் புருஷனுக்கு நான் எழுதலாமாடீ?''

"முன் நாளெல்லாம் யாராவதுதான் எழுதித் தருவாளாம், அம்மா சொன்னாள். புருஷர்களைக்கொண்டு பெண்கள் தம் கணவனுக்குக் கடிதம் போடுவார்களாம். எனக்கு எழுதச் சக்தி இருந்தால் உன்னை ஏன் கேட்கிறேன்? இவ்வளவு கிராக்கி பண்ணிக்கொள்ளுகிறாயே!'' என்றாள் கனகம்.

சட்டென்று சிவகாமுவின் வதனம் ஆழ்ந்து விளங்கியது. அவள் பார்வை வெகு தூரத்தில் எங்கோ லயித்து விட்டது. தலை குனிந்தவாறே, "புருஷர்கள் எழுதலாம்.....என்னைப்போல் ஒருத்தி எழுதுவது எவ்வளவு பேச்சுக்கு இடமாகும்!'' என்றாள்.

உலகத்தின் போக்கை முற்றும் உணராத கனகத்திற்கு இதன் அர்த்தம் விளங்கவில்லை. சிவகாமு கடிதம் எழுத மறுத்தது மட்டும் அவளுக்கு வருத்தத்தைத்

தந்தது. 'சிவகாமு விதவை ஆயிற்றே. தன் கணவன் அவள் வரை பிற புருஷன்.' இதை யெல்லாம் யோசியாமல் தன் பேச்சைச் சிவகாமு தள்ளிவிட்டதைக் குறித்துக் களுக்கென்று அவள் கண்களில் நீர் நிறைந்தது. அசட்டுப் பெண், கணவனுடைய கடிதத்தை எடுத்துக் கொண்டு மெல்ல எழுந்து போய்விட்டாள்.

சிவகாமுவும் படுத்து நித்திரை செய்யத் தன் அறைக்குள் சென்றுள். மனத்துள் குழம்பிய பல கிளர்ச்சிகளை அடக்க முற்பட்டாள். சற்றுக் கண்ணயர்வாள். திடீரென்று தூக்கம் கலையும். பைத்தியக்காரியான கனகத்தின் வாடிய முகம் அவள் கண்முன் அடிக்கடி வந்து நிற்கும். அவளுக்கு என்ன தெரியும்? புருஷனுடன் உறவு ஏற்பட்டு இன்பக் கனவுகள் காணும் காலம் அல்லவா அது? விதவையின் உள்ளத்தில் எரிந்து சாம்பலாகும் ஓர் ஏக்கத்தை உணரக்கூடிய வயசு அவளுக்கு ஆகவில்லை. எந்தக் காரியத்தைச் செய்யலாம் எதைச் செய்யலாகாது என்று எங்ஙனம் தெரியும்? உலக இச்சையே அற்று இருக்க வேண்டியவர்களுக்கும் காதற் கடிதங்களுக்கும் என்ன சம்பந்தம்? நடை உடை பாவனை எதன் மூலமாகவும் காதல் உணர்வை அவர்கள் காட்டுவது பாவம் அல்லவா? இருந்தும் சிவகாமுவின் உள்ளத்துள் ஒரு மூலையில் முன் பின் அறியாத ஓர் யுவனின் சித்திரம் மெல்ல எழுந்து கொண்டிருந்தது. சொல்ல வேண்டியதில்லை, அந்த உருவம் அவளுடைய கணவனுடைய சாயலைப் பாதி கொண்டிருந்தது. கணவனுக்குத் தன் காதலைக் கடிதத்தின் மூலம் வெளியிட, கனகத்திற்குத்தான் என்ன ஆவல், என்ன குதூகலம்! இவை யாவற்றையும் சிவகாமு ஜாடையாகக் கவனித்தாள். அவள் மனத்திலும் இதன் சாயம் தீட்டியிருந்தது. அபூர்வமான சஞ்சலத்தை மூட்டிவிட்டது அது. குடத்துள் விளக்கைப்போல் அடங்கியிருந்த ஒரு பூர்விக வாஸனை குன்றின் உச்சியில் எரியும் பேரொளியாகக் கிளம்பத் தலைப்பட்டது. மனத்துள் முளைத்தெழுந்த இந்த விகாரங்களை எவ்வளவோ நசுக்க முயன்றுள் சிவகாமு.

அடுத்த நாள் இரவு........அதே குழாய் முற்றத்

தண்டை வேலை யெல்லாம் முடிந்ததும் சிவகாமு வந்து பார்த்தாள். வழக்கம்போல் அங்கே வரும் கனகத்தைக் காணவில்லை. அதிகமாகப் பழகின தோஷத்தால் அவளுக்காகச் சிவகாமுவின் மனம் துடித்தது. முன்கட்டுக்கு வந்து, "காகு !" என்று கூப்பிட்டாள். முதலில் கனகம் குரலே கொடுக்கவில்லை. இரண்டு தரம் சிவகாமு தன்னைக் கூப்பிடவே அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை.

"என்ன, சூதா !" என்றாள்.

"இங்கே காற்று நன்னா வருகிறதடீ...வாயேன் இப்படி !".

"எனக்கு என்னமோ மனசு சரியாக இல்லை... எனக்கு எதுவும் பிடிக்கவில்லை..."

"ரொம்ப ரோஷமாடீ, அம்மா, வாடீ!"

"உனக்கு எதற்குக் கஷ்டம் ?"

"என்ன இப்படி விட்டேத்தியாகப் பேசுறாய்?" என்றாள் சிவகாமு.

கனகம் மெல்ல அவளண்டை வந்து நின்றாள். சிவகாமுவை நோக்க முகமில்லை. கண்களில் நீர் வந்து மறைத்தது. முகம் சுண்டிக் கிடந்தது. "இவ்வளவு கோவிச்சுக்கப்படாதம்மா..." என்று அவளை இழுத்துத் தன் பக்கத்தில் அமரச் செய்தாள் சிவகாமு. கொய்யா மரக் கிளைகளுடே காற்று விளையாடும் மெல்லிய ஓசை. கனகத்தை அழுத்திய மனோபாரம் சற்று லகுவாயிற்று.

"என்னடீ சொல்லிவிட்டேன், மூஞ்சி அப்படித் தொங்கிப் போகும்படி ? நான் அந்தக் காரியத்தைச் செய்வது யாருக்காவது தெரிந்தால் என்ன நினைத்துக் கொள்வார்கள் ? நீயே சொல்லு" என்றாள் சிவகாமு.

"எனக்குப் பதிலாகத்தானே உன்னை எழுதான்னேன் ? அதில் என்ன குற்றம் ?...எனக்கென்னமோ அவா எழுதுவதைப் போலவே ஒரு கடிதமாவது எழுத வேணுமென்று ஆசையாய் இருக்கு தாடீ ?...நீதான் மாட்டேங்கறயே...நானும் அவாளுக்குக் கடிதம் எழுதப்

போவதில்லை...'' என்றாள். குறை இன்னும் இருப்பதை அவள் குரல் வெளிப்படுத்தியது.

வெள்ளையான மனம் படைத்த கனகத்தின் கடைசிச் சொற்கள் சிவகாமுவின் இருதயத்துள் மறைந்திருந்த ஓர் உணர்வைத் தட்டி எழுப்பின.

"அதென்னடீ பிடிவாதம்...நான் முடியாதென்றால் நீ எழுதாமல் இருப்பானேன்?......நீயே எழுதப் போகிறே பார். காகிதம் பேனா கொண்டுவா, என் எதிரிலேயே எழுதுகிறாய், பார்!'' என்றாள்.

"தெரியும், முடியாது என்பதற்கு இதெல்லாம் லக்ஷணமாக்கும். பளிச்சென்று சொல்லிவிடேன்... இவ்வளவுதானே? இதுக்கா என்னைக் கூப்பிட்டாய்?'' என்று கனகம் எழுந்து போய்விட்டாள்.

அவள் குரலில் இரக்கம் தென்படுவதை உணர்ந்து சிவகாமு நிமிர்ந்து பார்க்கையில் கனகம் அங்கே இல்லை.

"காகு...அடி காகு!'' என்று மெல்லக் கூப்பிட்டாள். ஆனால் அந்த ரோஷக்காரி வரவே இல்லை. கனகத்திற்குத் தூக்கம் பிடிக்கவில்லை. எட்டிப் பார்த்தாள். முன் கட்டில் விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. முகத்தில் பொலிவில்லாமல் ஒரு மூலையில் அவளைப் பார்த்த வண்ணம் கனகம் பிணக்குடன் உட்கார்ந்திருந்தாள். சிவகாமு மெல்ல அவள் பின்புறமாகப் போய், "என்னடீ யோசனை, என் கனகமே?'' என்றாள்.

"ஆகா!'' என்றதும் விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள் கனகம்.

"அசடே, எழுந்து வா...உன் அகமுடையான் கடிதத்தைக் கொண்டு வா, சொல்லுகிறேன்'' என்றாள் சிவகாமு.

"எதற்கு?''

"நான் பதில் எழுதித் தருகிறேன்!''

பிணக்கின் முறுக்கு அவிழ்ந்தது. பரபரவென்று பேனா, காகிதம், மசி முதலியவற்றை எடுத்துக்கொண்டு வந்தாள் கனகம். பெரியவர்களெல்லாம் மொட்டை

மாடியில் காற்றுக்காகப் படுத்துக்கொண்டிருந்தார்கள். பதியை இழந்து பிரிவாற்ருமையினுல் வதங்கும் விதவை சிவகாமு, தன்னை ஒரு காதலியாகப் பாவித்துக் கொண்டு கற்பனையில் தோன்றிய ஓர் அயலானுக்குப் பிரேம லிகிதம் எழுத உட்கார்ந்தாள்.

எவ்வளவோ நாளாயிற்று. வெறும் கனவயாகி நிற்கும் அவள் உள்ளத்தில் பழைய ஆசை திடீரென்று மலர்ந்தது. காதல் ஒரு மந்திரம் போல் அவள் மனத்துள் ஒலிக்கத் தொடங்கியது. தெய்வம் எனப் போற்றிய தன் கணவனைப் பற்றிய இனிய நினைவுகள் மடமடவென்று அவள் மனத்துள் சென்றன. உடல் சிலிர்த்தது. அந்தக் காலத்தில் தன் புருஷனுக்குக் கடிதம் எழுதும் போதெல்லாம் ஆனந்தக்கடலாடும் அவள் உள்ளம் கணவனிடமிருந்து வரும் கடிதத்திற்காக வழி நோக்கிப் பொழுது போவதையும் மறந்துபோவாள். அத்தகைய சிவகாமு. அதே மாதிரிக் காதல் லிகிதம். தம்பதிகளிடையே திகழும் அதே மர்மமான தொடர்பு. ஆனால், 'இதென்ன வெட்கக் கேடு, யாருக்கோ அல்லவா கடிதம் எழுதுகிறேம்?...பாவமாயிற்றே!' இவ்வாறு நினைத்துக் கொண்டபோது அவள் இருதயம் திக் திக்கென்று அடித்துக்கொண்டது. அன்று அவள் உள்ளத்தில் முகிழ்த்தது உண்மைக் காதல். இன்று வெறும் நடிப்பு. என்ன வித்தியாசம் இரண்டிற்கும்? பழைய அனுபவ வேகத்தில் மடமடவென்று கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். இதுவரையில் மனத்துள் பதுங்கி இருந்த ஓர் இச்சை விடுதலை பெற்று எழுந்தது. இறந்துபோன தன் புருஷனைத் தவிர வேறு எவரை அவள் கற்பனை செய்துகொள்வாள்? இந்தக் காதல் கடிதத்தை எழுதுவதில் யாதொரு தோஷமும் இல்லை என்றே அவளுக்குப் பட்டது.

கடிதம் எழுதியாயிற்று. ஓர் எழுத்து விடாமல் கனகத்தின் கண்கள் ஊன்றிப் படித்தன. பெருமூச் செறிந்து, "என்னை அழ வைத்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்றுதானே இப்படிச் செய்தாய்" என்ருள்.

* * *

கனகம் கடிதத்தைப் பத்திரமாக மடித்து வைத்துக் கொண்டு குதித்துக் கொண்டே தன் அறைக்குள் சென்ருள். சிவகாமு தாழ்வாரத்திலேயே முன்ருனை யைப் பிரித்துக்கொண்டு படுத்தாள். கண்ணில் தூக்கக் கலக்கம். மனத்துக்குள் பெரும் போராட்டம். தூக்கம் கண் இதழ்களை அழுத்தும். உடனே திடுக்கிட்டாற் போல் விழித்துக்கொள்வாள். இப்படியே சரியான நித்திரை வராமல் அயர்ந்திருந்த சமயம் அவளை யாரோ காலைத் தொட்டு எழுப்பினுற் போல் இருந்தது.

"யார்?" என்ருள்.

"ஏன் அலறிப் போட்டுக் கொள்கிறே? நான் தான்!"

"நீர் ஏன் இங்கே வரவேண்டும்?"

"வந்தால் என்ன தப்பு?"

"கனகத்தின் அகத்துக்காரர்தானே...பரவாயில்லை" என்றதும் பரபரப்பை அடக்கிக்கொண்டு, "உட் காருங்கள்" என்ருள் மரியாதைக்காக.

"உன்னைப் பார்த்துக்கொண்டு நிற்பதே போதும் எனக்கு."

"ரொம்ப நாழிகை தூங்கிவிட்டேன். நீர் வந்து எழுப்பினீரே!...இந்த மாதிரி நான் ஒரு நாளும் தூங்கி னதே கிடையாது."

"ஆமாம், இந்த மாதிரித் தூக்கம் எப்போதுமே வராது. அதிருக்கட்டும், நீ ஏன் கட்டாந் தரையில் படுத்துக்கொண்டிருக்கே?"

சிவகாமு வேடிக்கையாகவே, "என்னைப் போன்ற வர்கள் எந்த இடத்தில் படுத்துக்கொண்டால் என்ன?" என்ருள்.

"உன் மனத்துக்குள் ஒரு கல்மஷமும் இல்லை. ஆனுல் உலகத்தவர் இப்படி இருப்பவர்களைத்தான் சந்தேகப் பட்டுத் தூஷிக்கிருர்கள்."

"எல்லாரும் ஒரே மாதிரி இருக்கிருர்களா?"

சற்று நேரம் நிச்சப்தம்.

"நேற்று ராத்திரி நீ நன்ருகத் தூங்கவில்லையா என்ன?" என்ருன் கனகத்தின் புருஷன்.

"எப்படித் தூக்கம் வரும்?......காற்றும் மழையுமாய் இருந்தது."

"ஆமாம், நேற்று என்ன காற்று, மழை? இப்போ இந்த ஆகாயத்தில் மேகத்தையே காணும். இல்லையா?" இருவரும் இதன் கருத்தை உணர்ந்து சிரித்தார்கள்.

"அந்தக் கதையை இப்போது எடுத்து எனக்கு லஜ்ஜையை மூட்டவா இங்கே வந்தீர்கள்?"

பேச்சை மேலே வளர்த்தாமல், "இங்கேயே சற்று இருங்கள். வெயிலுக்குக் குளிர்ந்த ஷர்பத் பண்ணிக் கொண்டு வருகிறேன், போய்விடாதீர்கள்" என்ருள்.

"எதுக்கு இவ்வளவு உபசாரம்? மாப்பிள்ளை என்பதற்கா?"

"பின் இல்லையா? நம்ம வழக்கப்படி மரியாதை மனுஷ்யன் வந்திருக்கச்சே—"

"வாஸ்தவம், சிவகாமு......நீ அழகாகப் பேசுகிருய்" என்றதும் அவளையே உற்று நோக்கி, "சரி, என் எதிரிலேயே அந்த ஷர்பத்தைப் பண்ணு" என்ருன் சுந்தரராஜன்.

நொடிப் பொழுதில், இரண்டு எலுமிச்சம் பழம், சர்க்கரை, ஒரு கிளாஸ் கோப்பையில் ஜலம் எல்லாம் வந்து குதித்தன. எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து கொண்டே சுந்தரராஜனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள் சிவகாமு.

"நேற்றெல்லாம் உன்னைப் பற்றிய நினைவுதான் எனக்கு. உன்னுட்டம் எனக்கு ஒரு தங்கை இல்லையே என்ற குறை. இருந்தால் எதையாவது சொல்லிச் சண்டைக்கு இழுத்துக்கொண்டே இருப்பேன்" என்ருன் சுந்தரராஜன்.

சிவகாமுவின் வெளிப் புலன் நடுக்கமுற்றது. இந்த மாதிரிச் சரசப் பேச்சுக்கு இடம் கொடுப்பது தன்னைப்

போன்ற விதவைகளுக்கு அழகன்று என்று எண்ணிக் கொண்டாள்.

"எனக்கு இருக்கும் ஒரு நிஷ்கபடியான அண்ணனே போதும்..."

"அட ராமா, நான் என் மனத்துள் இருப்பதைச் சொன்னேனே தவிர, எனக்கு எந்தத் துர் எண்ணமும் இல்லை. எனக்குள்ள குறையைத்தான் சொல்லிக் கொண்டேனே ஒழிய..."

பேசிக்கொண்டிருக்கையில் ஸ்கூலிலிருந்து சந்திர னும் வந்துவிட்டான். அவனைக் கண்டதும் சுந்தர ராஜன், "சிவகாமு, ஒன்று உன்னைக் கேட்கிறேன்... அதற்கு நீ உத்தரவு கொடுக்க வேண்டும்" என்றான்.

"என்னால் முடிகிற காரியமானால் செய்கிறேன்."

"சந்திரனைச் சினிமாவுக்குக் கூட்டிக்கொண்டு போகட்டுமா ?"

"அந்த வேடிக்கைகளில் எல்லாம் பசங்களுடைய புத்தி திரும்பக் கூடாது என்பது என் எண்ணம்."

"ஆனால் அவனை அனுப்ப மாட்டே ?"

"நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன்...அதற்கு நீங்கள் சம்மதித்தால்—"

"என்ன சொல்லு...சொல்லு!" என்றான் ஆவ லுடன்.

"கனகம், நீங்கள் எல்லாம் போங்கள்...இன்றைக்கு ராத்திரி எங்காத்துலேயே உங்களுக்கு விருந்து... என்ன ?"

"இன்று ராத்திரி வேண்டாமே ?"

"ராத்திரித்தான் அண்ணாவும் வருவான்...நீங்கள் இருவரும் சந்திக்கலாம்."

"சரிதான், நீ சொன்னபடியே !"

சிவகாமுவைத் தவிர எல்லாரும் சினிமாவுக்குச் சென்றார்கள்.

மனத்துள் உத்ஸாகம் துளிர்க்க, பாடிக்கொண்டே சிவகாமு விருந்துக்கு வேண்டிய விசித்திரமான ஆகாராதிகளைச் சமைத்துக்கொண்டிருந்தாள். நித்தியம் யந்திரம் போல் சுழன்ற அவளுடைய வாழ்க்கையில் அன்று ஒரு புதுவிதமான மாறுதல். இந்த இன்னிசையுடன் அவள் மனத்துள் அடங்கியிருந்த ஒரு வீணை மட்டும் அபஸ்வரமாக ஒலித்துக்கொண்டே இருந்தது. சுந்தரராஜனை விட்டுத் தன் மனத்தை அவளால் இழுத்துக் கொள்ள முடியவில்லை. உள்ளூறக் காதலைக் கொட்டி அவனுக்குக் கடிதம் எழுதியதை அவளால் மறக்க முடியவில்லை. கற்பனையில் கண்ட காதலன் காகித சரீரியாக இருந்தாலும், அவளுக்கு உயிருள்ளவனாகவே தோன்றினான். பிசகி நடக்காதவள் இருதயத்தில் புயலை அல்லவோ எழுப்பிவிட்டான்?

சினிமாவுக்குச் சென்றவர்கள் திரும்பினார்கள். எல்லாரும் சாப்பிட்டு எழுந்திருக்க மணி பத்து அடித்தது. சிவகாமுவுக்கு வீட்டுக் காரியமெல்லாம் முடிந்துவிட்டது. அவள் இருதயத்தை மட்டும் ஒரு பெரும் பாரம் அழுத்திக்கொண்டிருந்தது. படுக்கை அவளுக்கு முள்போல் இருந்தது. சுந்தரராஜனுக்கு எழுதிய கடிதமே அவளுக்குச் சத்துருவாக இருந்தது; அதை எப்படியாவது கைப்பற்றினால்தான் அவளுக்குப் பாட்டில் போடும். இதே சிந்தை அவள் மூளையைப் புழுவைப் போல் துளைத்தெடுத்தது. அந்த ஒரு பிழையினாலேயே அவள் மெலிந்துவிட்டாள். நள்ளிரவில் இந்த யோசனையே அவளைத் தூங்க விடாமல் கொன்றது.

சிவகாமு மெல்லப் படுக்கையை விட்டு எழுந்தாள். எந்தப் பக்கமும் சந்தடியே இல்லை. இவர்கள் அறைக்குப் பக்கத்திலேயே முன் கட்டில்தான் சுந்தரராஜன் படுக்கும் அறையும். அதன் வாயிற்படியில் வந்து நின்றாள் நிழல்போல். பயத்தினாலும் பரபரப்பினாலும் அவளுடைய உடல் நடுங்கியது. அவளுக்குச் சௌகரியமாகவே அறைக் கதவும் திறந்தபடியே இருந்தது. உள்ளே நிச்சப்தம். சிவகாமு விரல்மேல் நடந்து சென்றாள். ஸூட் கேஸைத் திறந்து தான் எழுதிய

கடிதத்தை இடுக்கிக்கொண்டு, இருந்தபடியே அதை மூடிவிட்டு வெளியே வந்த பிறகுதான் அவளுக்கு மூச்சு வந்தது. யாருமே இராத குழாய் முற்றத்துக்கு வந்தாள். ......பின் பக்கமாக ஓர் ஆள் வந்து அவளுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்!

அவள் கூவ வாயெடுத்தாள்.

"உஸ்......கத்தாதே. நான்தான்......பயமென்ன நோக்கு? என் ஸூட்கேஸிலிருந்து என்ன திருடிக் கொண்டு போகிறே?" என்ருன் சுந்தரராஜன்.

"என் கையைத் தொடாதீர்கள்...விடுங்கள்!... உங்களுக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை..." என்ருள் சிவகாமு.

"அது இருக்கட்டும், அது என்னதான் சொல் லேன்...!"

"சொல்ல முடியாது. என்னை விட்டுவிடுங்கள்..."

"சொன்னுல்தான் விடுவேன்!"

"நான் திருடி என்ற எண்ணமா உங்களுக்கு?"

"அந்த மாதிரி சொல்லுவேனு உன்னை, சிவகாமு...... அதுவும் நீ எடுத்துக்கொண்டு போவது என்னவென்று தெரிந்துகொண்ட பிற்பாடு—"

"என்ன, சொல்லுங்களேன்?"

"நீ எழுதிய கடிதந்தானே?"

"என்னை நடுச்சந்தியில் இழுக்க உங்களுக்கு ஆசையா என்ன? காலில் விழுந்து கெஞ்சுகிறேன். யாராவது நம்மைப் பார்த்துவிடப் போகிருர்கள். விடுங்கள் கையை!"

"சிவகாமு, இந்தக் கடிதம் ஒரு பிரமாதம் இல்லை எனக்கு. நீயே எடுத்துக்கொள். அந்தக் கடிதத்தின் மூலமாக எனக்குக் கிடைத்த இன்பம் என்றென்றும் என் மனத்துள் பதிந்து கிடக்கும். அதை உன்னுல் கவர்ந்து கொள்ள முடியாதே! மனப் பூர்வமாய் நீ எனக்குத் தந்த தானம் அல்லவா அது?"

சிவகாமுவுக்கு மார்பை அழுத்துவது போன்ற ஒரு வேதனை உண்டாயிற்று. அவள் திணறிக்கொண்டே, "ஐயோ! விட்டுவிடுங்கள் என்னை இத்தோடு...... கோடிப் புண்ணியம் உண்டு" என்றாள்.

அவன் விடவில்லை. இவ்வளவு அவள் வேண்டிக் கொண்டும். நிமிர்ந்து நின்று, "அன்னிய புருஷனை எனக்குக் கடிதம் எழுத எவ்வளவு துணிவு உனக்கு? உனக்கு வெட்கமாய் இல்லை?......" என்றான்.

"அதை எண்ணி எண்ணித்தான் இப்படி உருகிச் சாகிறேனே? இன்னுமா வருத்த வேண்டும்?...... விட்டுவிடேன்" என்றாள் சிவகாமு.

அவள் திமிறிக்கொண்டு ஒரு பக்கமாக ஓடினாள். வண்டின் சிறகுபோல் அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் மூச்சேபோய்விடும்போல் இருந்தது அவளுக்கு. ஓவென்று அவள் மூளையில் இரைச்சல்கேட்டது.

"சிவகாமு! எழுந்திரு!..இன்றைக்கு என்ன இப்படி அயோமயமாகத் தூங்குகிறாய்?...நாழியாகிறதே! எத்தனை தரம் கத்துவது உன்னை எழுப்ப?" என்ற கிருஷ்ணஸ்வாமியின் குரல் அவள் துயிலைக் கலைத்தது.

சிவகாமு, கண்களைக் கசக்கிக்கொண்டே, பலஹீன மான குரலில், "ராத்திரி என்ன மழை கொட்டித்து!" என்றாள்.

கிருஷ்ணஸ்வாமி இடி இடியென்று நகைத்து, "மழை யும் பெய்யும், உனக்கென்று ராத்திரி வெயிலும் காயும்" என்றான்.

'சே..கடைசியில் இதெல்லாம் ஒரு துர் ஸ்வப்னம்' என்று தெரிந்துகொண்டாள். அவளுடைய வாழ்க்கைச் சகடு என்றும்போல் ஆடியது. கனகத்தின் புருஷன் எவனும் வரவில்லை. எல்லாம் அவள் மனத்துள் எழுந்த விகாரங்களே. பாழும் கனா!

# விளையாட்டும் விபரீதமும்

வாழ்க்கையில் அதிசயமான சம்பவங்கள் எவ்வளவோ நிகழ்கின்றன. அவற்றைச் சொல்லப் போனால் அசல் கதை போலவே தோன்றும்.

என்னுடைய வாழ்க்கையிலும் இவ்வாறான சம்பவம் ஒன்று நடந்தது. அது காதல் சம்பந்தமானதன்று. எந்த ரகத்தில் அதைச் சேர்ப்பதென்று தெரியவில்லை. சர்வ சாதாரணமாய் நடப்பதுதான் அது. சிலந்தி பின்னிய சூக்ஷ்மமான வலையை மெல்ல இழுத்தாலே அது பட்டென்று அறுந்து போகும். அதிகமாக விஸ்தரித்தாலும் சுருக்கமாக முடித்துவிட்டாலும், இதன் சுவை அடியோடு கெட்டுவிடும். அதற்காகவே வெகு ஜாக்கிரதையாக விஷயத்தைக் கையாள வேண்டியிருக்கிறது.

இதற்கு மேல் வேண்டாம் பீடிகை; கதையைச் சொல்லுகிறேன். நான் சொல்லும் சமயத்தில், எனக்கு விவாகம் ஆகவில்லை. பண்ணிக்கொள்ளவும் என் மனம் தூண்டவில்லை. ஏனென்று கேட்கும் பக்ஷத்தில், கதைக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று சொல்லவேண்டும்.

விவாகம் பண்ணிக் கொள்ளாமல் இருந்தேனே ஒழிய, நாடோடி மாதிரி திரியவில்லை. பெரிய வியாபாரி ஒருவரிடம் கமிஷன் ஏஜெண்டாக இருந்தேன். நல்ல வரும்படி கிடைத்தது. என் வேலையின் நிமித்தம் அடிக்கடி பல ஊர்களுக்கு நான் செல்ல வேண்டி யிருந்தது. வந்தவாசி தாலுகாவில் ஒரு சிறிய கிராமம். 'பஸ்' ஓடும் ரோட்டிற்கும் அந்த ஊருக்கும் ஏழெட்டு மைல்களுக்கு மேல் இருக்கும். என்னோடு காலேஜில் படித்த நண்பன் அங்கேயே நிலம் நீரைப் பார்த்துக்கொண்டு ஸ்திரமாகிவிட்டான். நான் அடிக்கடி அந்தப் பக்கம் போவது வருவது வழக்கம், சரக்குப் பிடிக்க. அப்போதெல்லாம்

அவன் வீட்டில் இரண்டொரு நாட்கள் தங்கி இளைப் பாறிவிட்டே செல்வேன்.

அவனுடைய மனைவியும் நல்ல மாதிரி. பட்டிக்காட்டில் இருந்தாலும் பட்டணத்து நாகரிகமும் மட்டு மரியாதை யும் அவளிடத்து விசேஷமாகத் தென்பட்டன. வெளி வாரியாக இல்லாமல் உள்ளூறவே என்னையும் தன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனாகவே பாவித்து அவள் உப சரணைகள் செய்வாள். பெண்களுக்கே இது ஸ்வபாவத்தில் உண்டு என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு சமயம் அவள் என்னை, "ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள். ஒவ்வொரு தரமும் அங்கே செல்லும் போது இதையே அவள் கேட்டாள்.

"என் வார்த்தையைக் கேளுங்கள். இந்தச் சித்திரை யிலேயே எங்கேயாவது நல்ல பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டுவிடுங்கள். எத்தனை நாட்கள் இப்படித் தனியாக இருப்பீர்கள்? ஜுரம் வந்தது; கஞ்சி போட்டுத் தர யார் இருக்கிறார்கள்? பெண்டாட்டி ஒருத்திதான் அந்தரங்கமாக இந்த மாதிரியான காரியங்களைச் செய்வாள். அடுத்த வாட்டி எங்கள் அகத்துக்கு வரச்சே, சம்சார சகிதமாய் வரவேண்டும். அப்போதுதான் எங்களுக் கெல்லாம் சந்தோஷமாக இருக்கும்."

இந்த மாதிரி உபதேசங்களை என் சிநேகிதன் மனைவி ஒருத்தி மட்டுமா செய்தாள்? எந்த வீட்டிற்குப் போனாலும் தெரிந்தவர்கள், பந்துக்கள் - முக்கியமாகப் பெண்களே - என்னை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துவார்கள். ஆனால் நான் அதையெல்லாம் ஒரு காதால் வாங்கி மற்றொரு காது வழியாக விட்டுவிடுவேன். அதற்கப்புறம் ஒரு தடவை..மாசி மாதம் இருக்கும்— நான் என் நண்பன் ஊருக்குப் போயிருந்தேன். அப் போதும் நண்பனின் மனைவி தான் சொல்ல வேண்டிய தைச் சொன்னாள். ஆனால் இந்தத் தடவை, 'கிஞ்சித்து' அதிகமாக, "ஒரு நல்ல இடம் பார்த்திருக்கிறேன் உங்களுக்கு" என்றாள்.

நானும் வேடிக்கையாக, "எங்கே?" என்றேன்.

"திருவொத்தூரிலே ரத ஸப்தமி ரொம்ப விசேஷம். போயிருந்தேன். அங்கே ஒரு அகத்திலே ஒரு பெண்ணைப் பார்த்தேன். எனக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. அவளை ஸ்நேகம் பண்ணிக்கொண்டேன் உடனேயே. நாட்டுப்புறம் என்று நினைக்க வேண்டாம். பெண் நல்ல வளர்த்தி, உசரம், முகத்திலே லக்ஷ்மீகரம். நிறம் கொஞ்சம் கம்மியே தவிர, ரூபத்தில் ஆகட்டும், குணத்தில் ஆகட்டும் கீழ்த்தரமன்று. அவள் பேர்...மறந்து விட்டதே, இருங்கள்...'பவானி' என்று சொன்ன ஞாபகமாய் இருக்கு!"

நானும் குறும்புக்காகவே, "பேஷ்! அப்புறம் என்ன?" என்றேன்.

"உங்களைப்பற்றி அவளிடம் வர்ணித்துச் சொன்னேன். அவளைத்தான் உங்களுக்குப் பார்த்திருக்கேன்."

இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. திடுக்கிட்டு, "சட்டென்று அப்படிச் சொல்லிவிடலாமா? முன்பின் தெரியாது. கல்யாணம் என்றால் நினைத்த மாத்திரத்தில் முடிந்து விடுகிற கதையா?" என்றேன்

என் நண்பனின் மனைவி கபடமற்றவள். உலகமே தன் மனத்தைப் போல் வெள்ளையாக இருக்கிறதென்று எண்ணம். என்னைக் கேட்காமல் இவ்வளவு தூரம் காரியத்தை நடத்துவாள் என்று நான் எதிர்பார்க்க வில்லை. என்னுடைய சங்கடத்தை அவள் ஒருவாறு ஊகித்துக்கொண்டு, "அப்படி நீங்களே வலியப் பெண்ணைத் தேடுகிறீர்கள் என்று அந்தப் பெண்ணுக்கு எண்ணம் விழும்படியாக நான் செய்யவில்லை; வயசில் என்னை விட அவள் சின்னவளாய் இருந்தாலும், சம வயது ஸ்நேகிதியைப் போல் அவளிடம் உறவு கொண்டாடினேன். விஷயத்தைச் சட்டென்று கூறவில்லை நான். 'அவாளுக்கு (கணவன்) ஒரு ஸ்நேகிதர் இருக்கிறார். அவர் நடு நடுவே எப்போதாவது இந்தப் பக்கம் வந்து போகிறார். கண்ணுக்கு நன்றாக இருப்பார்.' இப்படித்தான் சமாசாரத்தை அவள் வீட்டாருக்கு

விட்டுப் பக்ஷியைப் பிடித்தேன். இனிமேல் உங்களுடைய சம்மதந்தான் பாக்கி. 'சரி' என்றால் நாளைக்கே மற்ற ஏற்பாடுகள் எல்லாம் முடிந்துவிடும்."

"அதெல்லாம் இருக்கட்டும். பெண் என்ன சொன்னாள்? அவள் இஷ்டப்பட்டாளா?"

"இத்தனை நாள் அவர் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் ஏன் இருந்தார் என்று என்னை அவள் கேட்டதற்கு, 'அவர் குஷியான பேர்வழி. கல்யாணத்திற்கு என்ன அவசரம் என்று இருப்பவர். இப்போது விவாகம் செய்துகொள்ள அபிப்பிராயம் இருப்பதாயும் உன்னைப்போல் ஓர் அடக்க ஒடுக்கமான பெண்ணையே விரும்புவார்' என்றும் சொன்னேன். அதற்குமேல் அவள் உங்களைப் பற்றி இரண்டொரு விஷயங்கள் விசாரித்தாள். வயசு என்ன? என்ன பாஸ் பண்ணி யிருக்கிறார்?—என்ன பாஸ் பண்ணி யிருக்கிறார் என்ற கேள்வியை மட்டும் இரண்டு தரம் கேட்டாள். பி. ஏ. பாஸ் என்றேன். அப்போது அவளுடைய முகத்தில் சந்தோஷம் பொங்கியது. அதனால் அவளுக்கு இஷ்டம் என்பதை உணர்ந்தேன். உத்தரவு கொடுங்கள், முடித்துவிடுகிறேன். ஜாதகம் வந்ததும் அவாள் மூலமாக உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்..என்ன?" என்றாள்.

அந்தச் சமயம் எப்படியோ ஒருவிதமாக அந்தத் தர்ம சங்கடத்திலிருந்து விடுபட்டுப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தேன். அப்புறம் இரண்டொரு வருஷ காலம் வந்தவாசிப் பக்கம் போக வேண்டிய ஜோலியே ஏற்படவில்லை. அதற்கு அடுத்த வருஷம் என் நண்பன் ஊருக்குப் போகவேண்டிய காரியம் இருந்தது.

சாயந்தரம். நண்பனின் மனைவி என்னை வரவேற்று, அப்போதுதான் நெய்யில் சுட்ட கை முறுக்கைத் தட்டு நிறைய எனக்குச் சமர்ப்பித்தாள். ஊஞ்சலில் ஆடிக் கொண்டே 'கடுமடு' என்று அதை வாயில் போட்டு நொறுக்கினேன். க்ஷேம லாபங்கள் விசாரித்த பிறகு அவள், "பவானியை மறந்துவிட்டீர்களா, என்ன?

நேற்று நான் திருவொத்தூருக்குப் போயிருந்த போது அவளைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்'' என்றாள்.

"ரொம்ப சரி'' என்றேன் விசாரமின்றி.

எனக்கு ஸ்வாரஸ்யம் முறுக்கின் பேரில்தான் இருந்தது.

"இன்னும் அவளுக்குக் கல்யாணம் ஆகவில்லை. ஏழைக் குடும்பம் அவர்களுடையது. முன்னே நின்று கல்யாணம் செய்து கொடுக்க ஓர் அக்காவைத் தவிர வேறு யாருமே திக்கு இல்லை. எத்தனையோ பேர் வந்து பார்த்தார்கள். வரதக்ஷிணை ரொம்ப இல்லை என்றதால் போய்விடுகிறார்கள். இந்தக் காலத்தில் பெண் லக்ஷணமாய் இருப்பதை யார் கவனிக்கிறார்கள்? பாவம், அவள் கொஞ்சம் சிவப்பாய் இருந்தால், ஏதாவது ஒரு வழி ஏற்பட்டிருக்கும். இப்போது கூட மூழ்கிப் போய் விடவில்லை. பாவம்! அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள உங்களுக்கு ஏதாவது தடை உண்டா? கல்யாணம் பண்ணிக்கொண்டால் ஓர் ஏழை நிரபராதிக்கு ஆதரவு ஏற்படும். இந்த வாட்டி அவளே உங்களைப் பற்றி மெல்ல விசாரித்தாள்—'இன்னும் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லையா அவர்?' என்று!"

நான் வியப்புற்று, "கேட்டாளா என்ன?" என்றேன்.

நண்பனின் மனைவி முகத்தைத் தாழ்த்தி இதழ்க் கடையில் மெல்லிய முறுவல் தோன்ற, "பல பேச்சுக் கிடையே உங்களுடைய சமாசாரத்தை மெல்ல நுழைத்தேன். நல்ல சம்பாத்தியம் உங்களுக்கு, கோபமே இல்லாத மனுஷ்யர் என்று சொன்னேன். அவள் உங்களைப் பற்றி ஒன்று விசாரித்தாள். அதைக் கேட்டால் உங்களுக்குச் சிரிப்பு வரும்'' என்றாள்.

"என்னவோ?"

"நீங்கள் சிவப்பா கறுப்பா என்று கேட்டாள்."

"அதற்கு நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்?"

"சிவப்பும் அல்ல, கறுப்பும் அல்ல. நடுத்தரமான நிறம் என்றேன்."

"அடாடா! எனக்குக் கல்யாணம் ஆக இருந்த 'சான்ஸை'க் கெடுத்துவிட்டீர்களே?" என்றேன்.

நண்பனின் மனைவி வருத்தப்படுபவள்போல் நடித்து, "இது ஒன்றும் பாதிக்காது. இந்த ஆனி மாதமே முடித்துவிடுகிறேன். அவளைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்" என்றாள்.

இந்த மாதிரியான சம்பாஷணைகள் யாவும் வெறும் விளையாட்டு என்றே நான் எண்ணினேன். பட்டணத்துக்கு வந்ததும் இதெல்லாம் அடியோடு மறந்து போய்விட்டது எனக்கு.

அந்த வருஷம் கடந்ததும் என் வாழ்க்கை வேறு பாதையில் சென்றது.

சொந்தமாகவே வியாபாரம் ஆரம்பித்தேன். முன் போல் சரக்குப் பிடிக்க ஊர் ஊராக அலைய வேண்டிய உபத்திரவம் இல்லை. கல்யாணமும் செய்துகொண்டேன். அதிரூபவதியான ஒரு பெண் எனக்கு வாய்த்தாள். அவளுடைய தகப்பனார் ஒரு பிரபல வக்கீல். 'இண்டர்' வரை படித்திருக்கிறாள் என் ஸஹதர்மிணி. திவ்யமான கண்டம். அவளுடைய பாட்டுத்தான் என்னை அவளுக்கு அடிமையாக்கிவிட்டது.

விவாகமாகி இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, என் மன ஆகாயத்தில் எழுந்த நிலவொளியில் ஒரு சிறு தாரகை மழுங்கி மறைந்துவிட்டது. என் மனைவி பிறந்தகம்போயிருந்தாள். நான் தனியாகத்தான் இருந்தேன். ஒரு 'கபே'யில் லேசாக டிபன் செய்துவிட்டு, மயிலாப்பூர் 'பஸ்'ஸைப் பிடிக்க எஸ்பளனேட் ஸ்டாண்டை நோக்கிப் போனபோது, என்னுடைய நண்பனையும் அவன் மனைவியையும் அகஸ்மாத்தாகக் கண்டேன்.

அவர்களை அணுகி, "ஏது, அத்தி பூத்தாற்போல்... எப்போ வந்தீர்கள் மெட்ராஸுக்கு? சௌக்கியந்தானே? உங்கள் இருவரையும் பார்த்து ரொ நாளாயிற்று" என்றேன்.

"நீங்கள்தான் ஒரே அடியாய் எங்களை மறந்து விட்டீர்களே?" என்றாள் நண்பனின் மனைவி, முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக்கொண்டு.

அப்புறம் எவ்வளவோ சொல்லி அவர்களைச் சாந்தப் படுத்தினேன். நண்பனுடைய மைத்துனி ராயபுரம் 'ஹாஸ்பிட'லில் சிகிச்சை செய்துகொள்ள வந்திருப்ப தாயும், அவளைப் பார்த்துவிட்டு, நியூ எல்பின்ஸ்டனில் ஓடும் 'வால்ட் டிஸ்னி'யின் 'ஸ்னோ ட்ராப்'பைப் பார்க்கச் செல்வதாகவும் சொன்னார்கள்.

"ஆனால் நானும் உங்களோடேயே வருகிறேன். நானும் நல்ல 'பிக்சரை'ப் பார்த்து வெகு நாளாயிற்று" என்று சொன்னேன். மயிலாப்பூர் பஸ் வந்து நின்றதும் எல்லாரும் ஏறிக்கொண்டோம்.

"கல்யாணம் பண்ணிக்கொண்டீர்களா?" என்று விசாரித்தாள் நண்பனின் மனைவி.

நான் இதற்கு என்ன பதில் சொல்வது என்று திண் டாடிக்கொண்டிருக்கையில் அவளே எடுத்தாள். "ஆக வில்லை என்று தெரிகிறது. அவாள் கூடச் சொன்னா—அப்படி இருந்தால் நமக்கு 'இன்விடேஷன்' அனுப்பா மலா இருப்பார் என்று?"

அதற்கு மேல், நடந்ததை அவர்களுக்கு ஒளிக்காமல் சொன்னால் என் பெரும் பிழையை ஒப்புக்கொண்டதாகும். அதனால் அவர்கள் மனசுக்கும் கஷ்டமாய் இருக்கும். அவள் கேட்டதற்குப் பதிலாக அர்த்தமில்லாத ஒரு சிரிப் பைச் சிரித்துவிட்டு, வாயை மூடிக்கொண்டேன்.

நியூ எல்பின்ஸ்டனில் 'ஸ்னோ ட்ராப்'பின் 'ஷோ' ஆரம்பித்தது. சிநேகிதன் மனைவி அதைப் பார்த்து விட்டு, "இதுதான் முதல் தடவை நான் 'கார்ட்டூன்' படத்தைப் பார்ப்பது" என்றாள். இன்டர்வல் மணி அடித்தது. என் நண்பன் காற்று வாங்கச் சற்று எழுந்து வெளியே சென்ற சமயம், ஏனோ என் கல்யாணத்தைப் பற்றி அவர்களுக்குச் சொல்லவில்லை என்ற ஒரு நினைவு என்னை வருத்திக்கொண்டே இருந்தது. வெளியிட

நான் வாயெடுக்கும் போது, அவளும் எதையோ சொல்ல ஆவல் படுவதை உணர்ந்தேன். "முன்னே சொன்னேனே —கவனம் இருக்கா, பாவம், அந்தப் பெண் பவானி?" என்றாள்.

"கவனம் இல்லாமல் என்ன?" என்றேன். அப்போது என் இருதயம் காரணமின்றித் திக் என்றது.

"இன்னும் பவானிக்குக் கல்யாணம் ஆகவில்லை. ஏழை வீட்டுப் பெண்களுக்கு விவாகம் ஆவதே கடினம் அல்லவா? பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே" என்றாள்.

பேச வேண்டுமே என்று நானும், "வாஸ்தவம்" என்றேன்.

"அவளோடு பேசும்போது பட்டணத்தைப் பற்றி வார்த்தை வந்தது. அவள் பட்டணத்தைப் பார்த்ததே இல்லை என்று சொன்னாள். நான் அதற்கு, 'இதோ சீக்கிரத்தில் பார்க்கத்தான் போகிறாய். அங்கே வசிக்கத் தான் போகிறாய்' என்றேன். இதைக் கேட்டதும், பாவம், அந்தப் பெண்ணின் முகம் பூரிப்படைந்தது. புத்திசாலி; அர்த்தம் புரிந்துகொண்டாள். அப்புறம் ரொம்பக் கூச்சத்துடன், 'உங்காத்துக்கு வந்து போவாரே அவர் இப்போது வருவதில்லையா?' என்று விசாரித் தாள். நான் சிரித்துவிட்டு, 'ஒன்று மட்டும் சொல்லு வேன்: அவர் இன்னும் கல்யாணம் பண்ணிக்கொள்ள வில்லை. அப்படி இருந்தால் எங்களுக்குக் கடிதம் போட் டிருப்பார்' என்றேன். அவள் அதற்கு மேல் பேசவில்லை. பாவம்! தன் மனத்துள் உங்களைத்தான் புருஷனாக வரித்துவிட்டாள். இன்னும் ஒரு சமாசாரம்; அதை நான் சொல்வது உசிதமல்ல. அவளை என்னுடன் பட்ட ணத்துக்கு அழைத்து வரலாம் என்றிருந்தேன். பவானிக் கும் ஆசைதான். ஆனால் தன் அக்கா சம்மதிப்பாளோ மாட்டாளோ என்று பயந்து 'வரவில்லை' என்று சொல்லிவிட்டாள். இப்போதுகூட மிஞ்சிவிடவில்லை. பவானிக்கும் சம்சாரம் பண்ண யுக்த வயதாகிறது. ஏழை என்று பார்க்கிறீர்கள்? அவளைப் பண்ணிக் கொண்டால் உங்களுக்குப் புண்ணியமாகும். அது மாதிரி

அமரிக்கையான சரக்குக் கிடைப்பது அரிது! யோசித்துப் பாருங்கள்'' என்றுள்.

இதற்குள் மணியும் அடித்தது. சிநேகிதன் தன் னிடத்திற்கு வருவதைப் பார்த்ததும் எங்களுடைய சம்பாஷணை பட்டென்று நின்றது.

எனக்கு விவாகம் நடந்தது என்பதைப் பற்றிச் சொல்ல எனக்குத் தைரியமும் இல்லை, மூஞ்சியும் இல்லை. "என் மனைவி ரொம்ப அழகி'' என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ள என் உதடு மட்டும் துடித்தது. ஆனுல் என் நண்பனின் மனைவி கூறிய அந்த உருக்கமான பேச்சைக் கேட்ட பிறகு, என் நாக்கை ஏதோ ஒன்று உள்ளே இழுத்துப் பிடித்துக்கொண்டது.

இந்த மாதிரி எல்லாம் ஏனோ இந்த உலகத்தில் நடக்கிறது? வெறும் விளையாட்டாகச் சொன்ன வார்த்தையைக் கேட்டு ஒன்றும் அறியாத நாட்டுப்புறப் பாவை ஒருத்தி தன் மனத்துள் என்ன எல்லாமோ கோட்டை கட்டிவிட்டாளே! யாரைச் சுற்றி அவளுடைய இந்தக் கனவுகள் சுழல்கின்றனவோ அவன் யாதொரு விசாரமும் இன்றி வேறு ஒரு பெண்ணை மணம் செய்துகொண்டு அவளோடு சுவர்க்க போகங்களை அனுபவித்துக்கொண்டு இருக்கிருனே!

பெருமூச்செறிந்தேன். திரையில் மறையும் 'ஸ்னோ ட்ராப்'பைப் போல் நான் நேரில் காணுத பவானியும் என் மனத்தை விட்டு மெல்ல அகன்றுள்.

# ஜோலார்த் தங்கம்

மங்களூர் ஓடு போட்ட, நீண்ட கட்டடம்—ஜோலார் 'மைனிங்' (Mining - சுரங்க) ஆபீஸ். அதற்கு அருகிலேயே 'எம்ப்ளாயீஸ்' (உத்தியோகஸ்தர்கள்) 'க்ளப்'. இருட்டிவிட்டதால், தங்கவயலில் கணக்கற்ற காந்தவிளக்குகள் எரிய ஆரம்பித்தன. 'மெல்டிங்' (தங்கம் உருக்கும்) ஷாப்பிலுள்ள, பெரிய 'பாய்லர்'கள் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன. எஞ்சின்கள் மும்முரமாக வேலை செய்யும் பேரிரைச்சல். சற்றுத் தொலைவில் கூலியாட்களின் பஸ்திகளில் காடா விளக்குகள் மினுக் மினுக் கென்று நடமாடின. ஆபீஸுக்கு வெளியேயுள்ள திறந்த இடத்தில் ஓவர்ஸீயர் அனந்தராவ் உலாவிக்கொண்டிருந்தான். கூலி 'ரிக்ரூடர்' (சேர்ப்பவர்) மணி 7-30 ஆகியும் பரபரப்பாக என்னவோ கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தார். பெரிய 'மாப்பை' (படம்) வைத்துக்கொண்டு 'ஸர்வேயர்' சிவப்புப் பென்ஸிலில் குறி வைத்துக்கொண்டிருந்தார்.

'க்ளப்'பின் ஓர் அறையில் தங்கவயலைச் சேர்ந்த குமாஸ்தாக்கள் 'ரேஸை'ப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். மற்றோர் அறையில் ஓர் இளைஞன் நல்ல சாரீரத்துடன் 'பக்கல நிலபடி' என்ற கிருதியைப் பாடிக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றி அவன் சகாக்கள் தலையசைத்துத் தாளம் போட்டனர். இளைஞன் தங்கவயல் க்ளப்பின் ஆதரவில் நடக்கும் டிராமாக்களில் ஸ்த்ரீபார்ட் போடுவது வழக்கம். இதனாலேயே அவனுக்கு 'லேபர் ரிஜிஸ்ட்ரார்' உத்தியோகம் கிடைத்தது. சம்பளம் ஸ்வல்பந்தான். இப்போது 'ரிட்ரெஞ்ச்மெண்ட்' (சிக்கனம்) ஆனபடியால் இன்னும் இரண்டு ரூபாய் கம்மியாகிவிட்டது.

ஜோலார் வயலின் பெரிய உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ஐரோப்பியர்கள். சற்றுத் தொலைவில், பரிஷ்கார

மான 'காங்க்ரீட்' (Concrete) பங்களாக்களில் தற்கால சுக வசதிகளுடன் அவர்கள் வசித்துவந்தனர். கூலியாட்கள், சாக்கடை ஓடும் பள்ளத்தாக்கில் பொத்தற் குடிசைகளில் காலம் கழித்தனர். அப்பப்பா! அங்கே கொசுவின் உபத்திரவம் சொல்லி முடியாது!

அனந்தராவ் உலாவிக்கொண்டே, ஹென்ரி போர்ட், எடிஸன் முதலியோர் எப்படிக் கீழ்த் தசையிலிருந்து முன்னுக்கு வந்தார்களோ அதுபோலவே தானும் முன்னுக்கு வர என்ன வழி என்றெல்லாம் மனக் கோட்டை கட்டிக்கொண்டிருந்தான். ராவ் இரண்டு வருஷங்களுக்கு முன்புதான், கிழிந்த சட்டையுடன், வாடி வதங்கி ஏதாவது வேலை அகப்படாதா என்று சேலத்திலிருந்து இங்கே உத்தியோக வேட்டைக்கு வந்தான். அவன் நல்ல காலம். மானேஜரும் சேலத்து ஆசாமியாக இருந்தார். 50 ரூபாய் சம்பளத்தில் ஓவர்ஸீயர் வேலை கிடைத்தது. ஆசை யாரைத்தான் விடும்? ராவ், தான் முன்னுக்கு வர ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வாய்க்காதா என்று எதிர் பார்த்திருந்தான்.

ஆபீஸுக்கு வெளியே எலெக்டிரிக் வெளிச்சத்தில் யாரோ இருவர் அவசரமாக வருவது தெரிந்தது. மானேஜரும் போர்மனும் என்று ராவ் அறிந்துகொண்டான். மானேஜர் ராவைப் பார்த்ததும், "அனந்தா! உன்னைத் தேடித்தான் வந்தேன்" என்றார். அவருடைய குரலில் திகிலும் கலவரமும் நிறைந்திருந்தன. "இன்றைக்கு 'பிட்'டில் (சுரங்கத்திலுள்ள வெடிமருந்தில்) தீப் பிடித்துக் கொண்டது. கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு காலெரி (தளவரிசை) யையும் பிடித்துக்கொண்டு வருகிறது. உள்ளே கூலிகளால் வேலைசெய்ய முடியவில்லை. பெரிய தீ மூண்டுவிட்டால் என்ன செய்வது?" என்றார் மானேஜர். போர்மன் கட்டை குட்டையான ஆள், பலிஷ்டன்; கைகளையும் கால்களையும் ஆட்டியாட்டி அவன், "ஆமாங்க, தெற்குப்பக்கத்தில் 'மென்ஸ்' (புருஷர்) 26-ஆம் பிட்டில் தங்க மணலுக்கு நஷ்டம் வந்துவிடும்போல் இருக்குது சாமீ. நாங்கள் ஜலம் ஊத்திப் பார்த்தோம். முடியலே, ஆவி சும்மா அடிக்குது. கிட்டேப் போவமுடியலே" என்று

கூறினன். மானேஜர் கோதண்டராம் நிதானஸ்தர். அவருக்கு நாக்கில் ஈரமே இல்லை. "அனந்தா, இதற்கு என்ன செய்யலாம்? இன்னும் கொஞ்ச நாழிக்கெல்லாம் மைனே வெடித்துவிடும். நான் துரைக்கு என்ன பதில் சொல்வது?" என்றார்.

ராவ், "நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் பேசாமல் பெரிய துரைக்குப் 'போன்' பண்ணிவிடுங்கள். அப்புறம் அவர்கள் பாடு. எனக்கு 3-ஆம் நம்பர் பிட்டில் அவசரமான வேலை. போகிறேன் ஸார்" என்று தட்டிக் கழித்துவிட்டு வெளியே சென்றான்.

பெரிய பெரிய இரும்புச் சட்டங்களால் குறுக்கும் நெடுக்கும் பிணைக்கப்பட்ட பூதாகாரமான 'கியர்ஹெட்' (யந்திரக்கம்பி) சுரங்கவாயிலில் நின்றுகொண்டிருந்தது. அதன் கீழே 300 அடி அகலமான பிரம்மாண்டமான பள்ளம் 'ஆ' வென்று வாயைத் திறந்துகொண்டிருந்தது. அதுதான் தங்கச் சுரங்கம். பள்ளத்தின் பக்கத்திலுள்ள மேட்டில் எஞ்சின் ஷெட்டும், பீட் க்ளார்க்கின் 'பங்கு'ம் (குடிலும்) இருந்தன. அறையில் ஒரு சின்ன மேஜை, ஒரு நாற்காலி. செந்நிற எலெக்ட்ரிக் 'பல்ப்' ஒன்று எரிந்துகொண்டிருந்தது. எதிரே எஞ்சின் 'சிம்னி' வழியாக 'புக்புக்' கென்று புகை சுழன்று போய்க்கொண்டிருந்தது. அடிக்கடி கரிப்புகையின் வாடை உள்ளே வீசிற்று. அந்த விஷ நாற்றத்தில் மூச்சுத் திணறும்போல் இருந்தது. 'பையர் ப்ளேஸ்' (நெருப்பிடம்) அருகில் ஒரு கூலிப் பெண் தன்னுடைய கூடையை அனலில் காய்ச்சிக்கொண்டிருந்தாள். 'பங்கி'னுள் சேரில் அனந்தராவ் மௌனமாக உட்கார்ந்திருந்தான். லேபர் ரெஜிஸ்ட்ரார் வேங்கடராமன் கூலிகளின் ஆஜர்ப்பட்டியை எழுதிக்கொண்டிருந்தான்.

பிட வாயிலில் மணி அடித்தது. டணங்...டணங். இது பள்ளத்திலிருந்து வேலையாட்கள் வெளியே வரும் சங்கேதம். வெளியே இருக்கும் 'ஸிக்னலர்', மணி யோசையைக் கேட்டதும் ஷ்வீ...இ...இ...க் என்று சீழ்க்கை அடித்தான். இந்தச் சமிக்ஞை எஞ்சின் டிரைவரைக் கூப்பிடுவது. பயங்கர சப்தத்துடன் எஞ்சின் வேலை

செய்ய ஆரம்பித்தது. 'கியர்ஹெட்டி'ன் பெரிய சக்கரங்கள் சுழன்றன. கனத்த கம்பியில் தொங்கிய வண்ணம் கேஜ் (இரும்புக் கூடு) 'ஜண ஜண' வென்று பாதாளத்திலிருந்து வந்தது. அதிலிருந்து நாலைந்து பணியாட்கள் இறங்கினர். வேங்கடராமன், "நீங்க எந்த காங்கி?" என்றான். "மின்சாமி ஆளுங்க" என்றனர் அவர்கள். எஞ்சின் நெருப்பு வெளிச்சத்தில், எலும்பெடுத்த விகாரமான அவர்களுடைய உருவங்கள், கரிய பிரேதங்களைப்போல விளங்கின. கரிய உடலில் இரண்டு கண்கள் மாத்திரம் வெளுப்பாக இமை கொட்டுவதைப் பார்த்தால் யாருக்கும் அச்சத்தை விளைவிக்கும்.

அனந்தராவ் தன் இடத்தில் உட்கார்ந்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். 'மைனிங்' (சுரங்க வேலை) பரீக்ஷையில் தான் கட்டாயம் தேருவதைப்பற்றி அவனுக்கு நம்பிக்கை இருந்தது. கனி (சுரங்க) விஞ்ஞானத்தைப் பற்றி அவனைத் தவிர்த்து இங்கே யாருக்கும் அவ்வளவாகத் தெரியாது. 'நல்ல சான்ஸ் (தருணம்) வந்திருக்கிறது; தீ மூண்டிருக்கிறது. இந்தச் சமயம் சற்றுப் பிசுவாக இருந்தால் காரியம் கைகூடும். ஏன் இந்த 50 ரூபாய்க்கு உயிரை விடவேண்டும்?' என்று அவன் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

டணங்...டணங்! மறுபடியும் சமிக்ஞை வந்தது. சுரங்கத்தில் மறுபடியும் பெட்டி இறங்கிற்று. மற்றொன்று சுரங்கத்தினின்று வெளியே வந்து, கடாக் என்று நின்றது. பெட்டியில் தங்க மணல் நிரம்பிய தொட்டி வண்டிகள். வேங்கடராமன், "எங்கேடா புல்மான் (தள்ளுபவன்)?" என்றார். 'ஹோ—ஓ' என்று பதில் கொடுத்துக்கொண்டே புல்மான் சிறிய தண்டவாளத்தின் மீது தொட்டி வண்டிகளைத் தள்ளிச் சென்றான். ஒரே ஓசை. இந்தப் பக்கம் சுரங்கத்தினின்று வரும் மணியோசையும், பெட்டி போவதும் வருவதுமாய் இருந்தது. கீழே இருந்த இருண்ட பாதாளத்திலிருந்து மனிதரின் குரல் மெதுவாகக் கேட்டது. ராவ் வேறு ஏதோ கவனமாக நாற்புறமும் கவிழ்ந்த இருட்டை நோக்கினான். கரிப்புகை சிம்னி வழியாகப் 'புகு புகு' வென்று வந்துகொண்

டிருந்தது. புதிய ரத்தக் காயம் போல நெருப்பு, எஞ்சினின் வயிற்றில் ஜ்வலித்தது.

*　　*　　*

சற்று நேரம் ஓய்வு. எஞ்சின் நின்றது. பெட்டி 'கியர்ஹெட்'டில் ஊசலாடிற்று. 'கீங்...கீங்' என்று கம்பிகள் சப்தம். 'பாய்லர்' மாத்திரம் கொதித்துக் கொண்டிருந்தது. ஸ்டீம் (நீராவி) வரும் அதிர்ச்சியால் ஷெட் குலுங்கிற்று. வெளியே பணியாட்களும் பெண் களும் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தனர்.

பணிப்பெண் ஒருத்தி வேங்கடராமனைப் பார்த்து, "சாமீ, ஒரு பாட்டுப் பாடுங்க. வேலை ஆரம்பிக்க இன்னும் நேரம் இருக்குது. ஒரு பாட்டுச்சாமி" என்றாள். அப் போது அந்தப் பொதுக்குப் போர்மன், "நீ ஆடு. ஐயா பாடுவார்" என்று குறும்பாகக் கூறினான். அந்தப் பெண் 'பகபக' வென்று சிரித்துவிட்டாள். "ஐயோ! மானுஜரு, ஐயாவுக்குத் தெரிஞ்சா, தோலை உருச்சுப் பூடுவார்" என்றாள். அப்போது கூலிகள் வேங்கட ராமனைப் பார்த்து, 'ஹோ' வென்று நகைத்தனர்.

பாயிலரின் கீழுள்ள அடுப்பில் தணல் பல வர்ணக் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தது. தூரத்தில் லோகமோடிவ் (ரெயில் எஞ்சின்) 'ஸைடிங் லைன்' (கிளைப்பாதை) வழியாகக் 'கூ...ஊ...கூ...ஊ' என்று கத்திக்கொண்டே, தங்க மணலைச் சுமந்துகொண்டு 'மெல்டிங்' (தங்கம் உருக்கும்) ஷாப்பிற்குச் சென்றது. மின்சார தீபம் மாலை மின்னும் பூச்சிகளைப்போல எங்கும் தெரிந்தன. மெல்டிங் ஷாப்பின் 'பொனல்' வழியாக அக்னிஜ்வாலை, சர்ப்பத்தின் பிளந்த நாக்கு மாதிரி 'திக் திக்' என்று கிளம்பிக்கொண்டிருந்தது. புகைச்சுருளைக் கீறிக்கொண்டு நெருப்புப் பொறிகள் அடிக்கடி தோன்றி மறைந்தன.

*　　*　　*

தங்க வயலில் திரும்பவும் கோலாகலம். எஞ்சின் வேலை செய்ய ஆரம்பித்தது. ஐந்து நிமிஷத்திற்கு ஒரு தரம் ஆட்களைச் சுமந்து பெட்டிகள் இறங்குவதும்,

மறுபடியும் தங்கத் துகளுடன் மேலே வருவதுமாய் இருந்தன. வேலையின் ஆர்ப்பாட்டத்தினால் நிச்சப்தமான இரவு நித்திரை கலைந்து விளங்கிற்று. தன்னையும் மீறிக் கண்ணயர்ந்த வேங்கடராமன், மணியோசை கேட்டதும் சட்டென்று வாரிப் போட்டு விழித்துக்கொண்டான். இரும்புப் பெட்டி முன்போலவே 'ஜண ஜண' வென்று இறங்கிற்று. அதில் செல்லும் பணிப் பெண்களின் உல்லாசச் சிரிப்பு கொஞ்சம் கொஞ்சமாக மங்கி மறைந்தது.

நடுநிசி. இயற்கையும் அயர்ந்து துயிலும் சமயம். வேலையாட்களின் கண்களில் நித்திரா தேவி உலாவ ஆரம்பித்துவிட்டாள். வேலை முன்போலத் துரிதமாக நடக்கவில்லை. தங்க வயலே ஓய்வை எதிர்பார்ப்பது போல் இருந்தது. அதோ கோடியில் மாளிகைகளில் தூங்கும் துரைமார்களுக்கு இங்கே இவர்கள் படும் அவதி என்ன தெரியப் போகிறது? யந்திர பூதங்கள் கூடத் தூக்க மயக்கத்தினால் ஓடமாட்டேன் என்று பிடிவாதம் செய்வனபோல இருந்தன! பாயிலரில் மாத்திரம் உஸ்... உஸ்...டுப்! என்று ஸ்டீம் விடும் ஓசை. எல்லோரும் அவரவர்கள் காரியஸ்தலத்திலேயே தலை சாய்த்தனர். ராவுக்கு மாத்திரம் தூக்கம் வரவில்லை. அவனுடைய மூளையில் ஏதோ ஒன்று குறுகுறுத்தது. தன் எதிரே வேங்கடராமன் நிச்சிந்தையாய்க் கண் வளருவதைப் பார்த்து அவன் பொருமை கொண்டான்.

டணங்......டணங். சங்கேத மணி அடித்தது.

வாச்மன் கண்கள் சிவந்தவனாய் 'ஹோ...உஷார்' என்று பதில் கொடுத்தான். கேஜ்மன், பாதித் தூக்கத்தில் 'சனியன்' என்று கூறியபடியே விழித்துக்கொண்டான். இஞ்சின் வேலை செய்ய ஆரம்பித்தது. பெட்டி மேலே வந்தது. பிட் க்ளார்க் ஸீதாபதி நாயுடு, வெளுத்து, கண்கள் பள்ளத்தில் ஆழ்ந்து, தாடை ஒட்டி வெளியே வந்தார். வேங்கடராமன் எப்போது தூங்கிவிட்டானே தெரியாது. அவன் எழுந்து கடிகாரத்தைப் பார்த்தபோது மணி இரண்டு. பிட் க்ளார்க் ஸீதாபதி நாயுடு, தூரத்திலுள்ள பங்களாக்களைப் பார்த்து, "தடியன்களுக்கு

என்ன கவலே? நம்ம தலையெழுத்து" என்று தம் தொழிலே நொந்துகொண்டே வந்தார். பாவம்! அவருக்கு உடம்பு கொம்பாகிவிட்டது. தலே 'நம நம' வென்று வலித்தது.

அவர் ராவைப் பார்த்து, "ஸார், வரவர உஷ்ணம் அதிகமாகிறது. கீழே ஆட்கள் யாரும் வேலே செய்ய மாட்டேன் என்கிருர்கள். காலரிகளுக்குத் தீ வந்தால் அதோகதிதான்" என்ருர்.

ராவ், "அதற்கு நான் என்ன செய்வது? மானேஜருக்குப் போன் பண்ணும். அவ்வளவுதான் நம்மால் முடியும்" என்ருன்.

அப்போது துரிதமாக வரும் பெட்டியிலிருந்து ஆட்கள் கும்பல் கும்பலாக வெளியே வந்தனர்.

கலவரத்துடன் பிட் க்ளார்க், "சரி, என் தலே எழுத்து, கீழே மடியவேண்டியிருக்கிறது" என்று அழமாட்டாக் குறையாகக் கூறிப் பெட்டியில் ஏறிக் கொண்டு சுரங்கத்தினுள் இறங்கினுர்.

ராவுக்குப் பளிச்சென்று என்னவோ தோன்றிற்று. உடனே 'டேவிஸ் லாம்பை' (சுரங்க வேலேக்கு அவசியமான காஸ் விளக்கு) எடுத்துக்கொண்டு கீழே சென்ருன். நாற்புறமும் சுவர் வேகமாகச் சரேலென்று செல்வது போல் இருந்தது. உடலில் கிறுகிறுவென்று ஓர் உணர்ச்சி பரவிச் சென்றது. மேலே செல்லும் பெட்டியையும் கடந்தாகிவிட்டது. எஞ்சின் செய்யும் ஆரவாரம் கீழே கேட்கவில்லே; கும் என்று இருந்தது. சுவரில் எங்கும் 'சத சத' வென்று ஈரம் கசிந்துகொண்டிருந்தது. வரவரப் பெட்டி செல்லும் வேகம் குறைந்து தட்டென்று தரையில் வந்து நின்றது.

அதே சமயம் மேலே வரும் பெட்டியும் வெளியே வந்து நின்றது. அதிலிருந்து ஒரு கூலிப் பெண் இறங்கினுள். வேங்கடராமன் அவளே நோக்கி, "தே தங்கீ, கீழே வேலேயை விட்டுவிட்டு இங்கே ஏன் வந்தே?" என்ருன். பெண்ணின் பெயர் தங்கம்மா; "சாமீ, உள்ளே ஓரே கொதிப்பு; அதுதான் ஓடியாந்துட்டேன்" என்று கூறிப்

பக்கென்று சிரித்துவிட்டு அவனருகில் வந்து கொஞ்சும் பாவனையில், "சாமி, ஒரு பாட்டு" என்ருள். வேங்கட ராமனுக்கு ஆத்திரம் வந்தது. அவன், "சீ போ கழுதே!" என்று வைதான். அவளா அதை லக்ஷயம் செய்வாள்? எஞ்சின் ஷெட்டுக்குப் பக்கத்திலுள்ள கரிக் குவியலின் பேரில் துணியைப் பிரித்துப் படுத்துக்கொண்டு, "ரொம்பக் கோவிச்சுக்கிறீங்கோ...சாமி?...ஆமா" என் ருள். வேங்கடராமன் பதிலே பேசவில்லை. தங்கம்மா எழுந்து அவனண்டை வந்து, "நீங்க நல்லாப் பாடுறீங்க ளாமே. எங்க நாயனு சொன்னுரு. கேட்டா யாரும் சொக்கிப் பூடுவாங்களாமே. நிஜமா சாமி?" என்ருள். இளமையின் வெள்ளத்தைத் தடுப்பவர் யார்? வேங்கட ராமனுடைய மனத்தில் புதிய மாறுதல்கள் தோன்றின. அது மோகமா? இல்லை, சற்று நேரம் இருக்கும் ஓர் அபூர்வ மயக்கம்! அவன் சிரித்துக்கொண்டே, "நான் பாட றேன். நீ பதிலுக்கு என்ன தருவே?" என்று கேட்டான். தங்கம்மா சற்று யோசனை செய்துவிட்டு, தலை நிமிராமல், முகம் நாணத்தால் சிவக்க, "காலமே ஒரு ரோஜாப்பூத் தாரேன் சாமீ" என்ருள் மெதுவாக. வேங்கடராமன், "சே! ரோஜாப்பூவை வச்சுண்டு என்ன பண்ணறது?" என்ருன். "ஏன் சாமி, உங்கொ கோட்டில் சொரிகிக் கொண்டால் அழவாயிருக்கும். நீங்க மாத்திரம் எனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுங்கோ" என்ருள். கீழ் ஜாதி மகளாயினும் அவளுடைய அழகிய கண்களில் ஓர் அபூர்வ ஜோதி மிளிர்ந்தது. கரும்பு வில்லாளிக்குக் கண் ஏது? காதல் உணர்ச்சி என்னும் மாரன் அம்பு அந்தப் பெண்மணியின் உள்ளத்தைக் கவர்ந்தது.

* * *

பெரிய 'டனல்' (குகை) வழியாக அனந்தராவ் பாதாளத்தில் போய்க்கொண்டிருந்தான். இருபுறமும் பல புரைகளையுடைய கறுப்புக் களிமண்ணின் வழுக்கிய ஓரங்கள் காஸ் வெளிச்சத்தில் கூரான கத்தியின் தகடு போலப் பளபளத்தன. அந்தக் காஸ் ஒளி சுற்றுமுள்ள இருளை இன்னும் இருட்டாக எடுத்துக் காட்டியது. புகையின் அடர்த்தியினுல் மூச்சுத் திணறிற்று. உஷ்ணம்

சகிக்க முடியவில்லை. ஆனால் இந்த அனுபவங்கள் யாவும் ராவுக்கு அற்புதமாய் இருந்தன. ஏன்? பின்னால் வரப் போகும் புகழின் அறிகுறி அவன் முகத்தில் பிரகாசித்தது. சற்றுத் தொலைவில் நீல நிறக் கொழுந்துவிட்டெரியும் தீயைப் பார்த்தான் அவன். அந்தப் பாதாளத்தில் மனிதரின் பேச்சுக்குரல் சுவர்களில் பிரதிபலித்துக் காதைப் பிளக்கும்படி இருந்தது. அந்தப் புழுக்கத்திலும் கூலியாட்கள் குடிவெறியினால் குதித்துக்கொண்டே மாடுகளைப் போல உழைத்தனர். என்ன வேண்டியிருக்கிறது இவர்களுக்கு இந்தப் பாழான வாழ்வில்! ராவ் மற்றொரு காலரிக்குச் சென்றான். அப்பப்பா! போக முடியவில்லை; ஒரே கந்தகப் புகை. அப்படியே நின்றுவிட்டான். அவன் உடனே திரும்பி வேலையாட்களை மேலே போகும்படி உத்தரவிட்டான்.

சுகமாக நித்திரை செய்யும் பெரிய துரை ட்ரம்மண்டிற்குத் தங்கவயலில் ஏற்பட்ட தீ விபத்து, போன் மூலமாக அறிவிக்கப்பட்டது. காரில் இரா உடையுடன் ஓடிவந்தார் அவர். சமாசாரத்தை நேரே கேட்டதும் இடி விழுந்துபோய்த் தலையில் கையை வைத்துக்கொண்டார். மானேஜர் கோதண்டராவ் பேந்தப் பேந்த விழித்தார். துரையும் மானேஜரும் அனந்தராவை ஏக்கத்துடன் பார்த்தனர். அப்போது ராவ், "நான் தங்கவயலைக் காப்பாற்றுகிறேன். ஆனால் தீப்பற்றின காலரிகளை எப்போதும் மூடிவிடவேண்டி வரும். அதனால் இதர காலரிகளுக்குப் பழுது வராமல் இருக்கும்" என்றான். பெரிய துரை ட்ரம்மண்ட் ராவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "இதனால் எவ்வளவு செலவானாலும் சரி. நீ உடனே காரியத்தைக் கவனி" என்று மன்றாடினார். ராவுக்குத் தன் கோரிக்கை பலித்துவிடும்போல் இருந்தது. ஆனால் அவன், "என் உயிருக்குச் சேதம் வந்தால்? என் கஷ்டத்திற்கு என்ன கூலி கொடுப்பீர்கள்?" என்றான். துரைக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு பெருமூச்சு விட்ட ட்ரம்மண்ட், "இதை நான் எதிர்பார்க்கவில்லை ராவ்" என்றார். ராவ், "ஸார், நான் கஷ்டப்படுகிறேன். நீங்கள் அதற்குக் கூலி கொடுக்கிறீர்கள். தானம் செய்துவிடவில்லையே?" என்றான்.

பெரிய துரை, "நீர் வேண்டுவதுதான் என்ன, சொல்லும்?" என்றார்.

ராவ், "ஓர் ஐரோப்பிய என்ஜினியர் இந்தக் காரியத்திற்கு எவ்வளவு வாங்குவாரோ அவ்வளவு எனக்குத் தரவேண்டும். என் சம்பளத்தை 50 ரூபாயிலிருந்து 200 ஆக ஆக்கவேண்டும்" என்று அழுத்தமாய்க் கூறினான். "எஸ்" என்று துரை தலையசைத்தார். ரீதிப்பிரகாரம் அக்ரிமெண்டும் எழுதிக்கொடுத்து ஆகிவிட்டது.

ராவ் உடனே நெருப்பை அணைக்கப் பச்சைக்கற்களும் ஈரக் களிமண்ணும் எடுத்து வரும்படி கட்டளையிட்டான்.

லாரி லாரியாகக் களிமண்ணும் கற்களும் வந்து குவிந்தன. இடைவிடாது பெட்டி கீழே சென்றது. நெருப்பு அணைக்கும் காரியம் தொடங்கிற்று. ஆனால் ஒரு பெரிய தடங்கல் ஏற்பட்டது. கூலிகள் யாரும் பள்ளத்தில் இறங்க மறுத்துவிட்டனர். பாவம், மேற்கொண்டு வேலை செய்ய அவர்களுக்குத் 'தம்' ஏது? ஆனால் மணிக்கு இரண்டு ரூபாய் என்றதும் அந்த நடைப்பிணங்கள் ஓடி வந்தன. சுரங்கத்தில் இறங்க ஆரம்பித்தன. அவர்களுக்கு உத்ஸாகம் ஊட்டத் தொழிற்சாலைச் சட்டத்தையும் மீறிச் சாராயம் வழங்கப்பட்டது. ராவ் யந்திரம் போல உழைத்தான்.

அலாரம் பெல் (ஆபத்து மணி) அடித்துக்கொண்டே இருந்தது. திடீரென்று என்ன நேருமோ என்று தங்க வயலைச் சேர்ந்தவர்கள் யாவரும் கண் விழித்து ஆயத்தமாய் இருந்தனர். கீழே மூச்சு அடைத்துப் போனவர்களுக்குச் சுவாசம் உண்டாக்க 'ஆக்ஸிஜன் ஸிலிண்டர்'கள், தயாராக இருந்தன. ராவ் ஒரு ஸிலிண்டரைத் தன் முதுகில் சுமந்து, ரப்பர்க் குழாயை அடிக்கடி மூக்கில் வைத்துக்கொண்டு, ஆட்களை மேய்த்துக்கொண்டும், தானே கற்களைச் சுமந்துகொண்டும் தீவிரமாக வேலை செய்தான். ஆட்களால் நீடித்து அந்தக் கந்தகப் புகையில் வேலைசெய்ய முடியவில்லை. அநேகர் பிரக்ஞையற்றுப் போய், மேலே நல்ல காற்றுக்குக் கொண்டுவரப்பட்டனர். வேங்கடராமனும் கீழே வேலை வாங்கிக்கொண்டிருந்தான்.

பின்புறமாக யாரோ அவனுடைய கண்களை இறுக மூடுவதுபோல இருந்தது. சட்டென்று உதறிவிட்டுத் திரும்பிப் பார்த்தான். தங்கம்மா சிரித்துக்கொண்டே, "சாமி, ஒரு பாட்டு..." என்று கொஞ்சினாள். நல்லகாலம், அங்கே யாரும் இல்லை. சிறுமியின் தாடையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு வேங்கடராமன், மற்றொரு 'காலரி'க்குச் சென்றான். அந்தப் பிடிவாதக்காரப் பெண் தங்கம்மா அவ்விடத்திலேயே கீழே புரண்டு அழத் தொடங்கினாள். இதற்குள் அவள் இருக்கும் காலரியைப் புகை சூழ்ந்து கொண்டது. எதிரே இருப்பதுகூடத் தெரியவில்லை. அழுகை ஓலம் மாத்திரம் எங்கிருந்தோ வருவது போல இருந்தது. வேலையின் கந்தர்கோலத்தில் இவளை யாருமே கவனிக்கவில்லை. ஆட்கள் இறைக்க இறைக்க அவள் இருக்கும் தளவரிசையை மூடிவந்தனர்.

வேங்கடராமனுக்குத் திடீரென்று தங்கியின் ஞாபகம் வந்தது. வேலை செய்யும் இடத்தில் அவளைக் காண வில்லை. அவன் மனது அப்போது எப்படி இருந்திருக்கும் என்று நீங்களே ஊகியுங்கள். அவன் ஐயோவென்று கூவிக்கொண்டே 25-ஆவது நம்பர் காலரிக்கு ஓடினான். அப்போது சுவர் முழுவாசியும் எழுப்பியாகிவிட்டது. "ஐயோ! இடியுங்கள் சுவரை! இடி இடி, உள்ளே ஆள்!" என்று உருக்கமாகக் கூவினான். உடனே ராவ் அவ னுடைய வாயை அழுத்தி மூடிவிட்டு, "கெட் ஔட்" என்று உக்கிரமாக மொழிந்தான். சற்று நேரம் வேங்கட ராமன் அவனையே நீர் தோய்ந்த கண்களுடன் பார்த் தான். ராவ் ஒரு கடிதம் எழுதி அவனிடம் கொடுத்து மேலே அனுப்பிவிட்டான். வேங்கடராமன், "ஐயோ! அந்தப் பெண் தங்கி" என்று துக்கத்துடன் கதறினான்.

* * *

மானேஜர் கடிதத்தைப் பார்த்துவிட்டு, வேங்கட ராமனுக்குச் சேரவேண்டிய சம்பளத்தையும் ஜோலார் எல்லையை விட்டு நீங்க 24 மணிகால நோட்டீஸையும் கொடுத்துவிட்டார்.

* * *

பெண்ணைக் காவு கொடுத்து, மேலே தீயை அணைக்கும் வேலை மும்முரமாகப் பூர்த்தியாகி வந்தது. நெற்றி வேர்வையைத் துடைத்துக்கொண்டே ராவ், "He loves her. (அவளை அவன் நேசிக்கிறான்.) மடப்பயல்! இந்த அற்பமான சிறுக்கிக்காகப் பார்த்தால் எல்லாக் காரியமும் கெட்டுவிடுமே" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். "டே! நன்னா அந்தக் காலரியை மூடுங்கடா. கொஞ்சங்கூடக் 'காஸ்' வெளியே வரக்கூடாது. ஜல்தி, ஆச்சா!" என்று ஆட்களை அதட்டினான். கடைசி காலரியும் அடைத்தாகிவிட்டது; அத்துடன் உயிருள்ள தங்கம்மாவையும்!

* * *

முன்போலவே ஜோலாரில் வேலை நடந்துவருகிறது. யந்திரங்கள் ஆர்ப்பரிக்கின்றன. கூலிகள் சம்பளம் வாங்கிக் கொள்ளுகிறார்கள். சூரியன் உதயமாகிக் கொண்டுதான் இருக்கிறான். இரவில் நக்ஷத்திரங்கள் இந்த அதிசயத்தைக் கவனித்துத்தான் வருகின்றன. துரைமார்கள் கவலையின்றிக் கொழுக்கின்றனர். பூமிதேவியின் வயிற்றைக் கீறிப் பொன் எடுப்பதும் ஓயவில்லை. எத்தனை எளிய மலர்கள் இதுபோலவே பாதாளத்தில் மறைந்து போகின்றனவோ?

ஆஹா! ஜோலார்த் தங்கத்திற்கு உள்ள மகிமையே மகிமை!

# கண்ணீர்த் துளிகள்

அவலக்ஷணமான தேகம்; அரூயை தரும் முகத் தோற்றம். அந்த எளிய புலவனை எவரும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. அவன் எதிர்ப்படுவதே அபசகுனம் என்று கருதினர். அவனை விரும்புவார் ஒருவருமே இல்லை; அசேதனப் பொருளாகவே இருந்தான்.

இயற்கையும் அவனை அலக்ஷ்யம் செய்தது. அந்த ஏழை இசைவாணனின் மேனி மையினும் கருமையானது. அனுதாபம் காட்ட உயிர் நண்பனோ ஆதரவு தர உடன் பிறந்தவர்களோ யாருமே அவனுக்கு இல்லை. அவனைப் பார்த்த போதெல்லாம் எல்லோர் வாயினின்றும் வசவும் ஏளனச் சொற்களுமே கிளம்பும். இவ்வளவையும் பொறுத்து அந்த விகாரமான புலவன் உயிர் வைத்துக் கொண்டு மறைவில் வாழ்ந்திருந்ததுதான் அதிசயம்.

அந்தக் கருமேனியினுள்ளும் மின்னொளி திகழ்ந்தது. அவனுடைய அழகற்ற பாழும் முகத்திலும் எப்போதாவது மெல்லிய சிரிப்பு உலவும். அந்த உருண்டையான விழிகளும் சிற்சில சமயம் பொலிவுடன் விளங்கும். அப்போது அகத்துள் மறைந்து கிடக்கும் ஓர் ஒளிப் பிழம்பு வெளிக் கருமையை விலக்கிக்கொண்டு வரத் தவிப்பது போல் இருக்கும். ஆனால் அந்த யாழிசைப்புலவனுடைய உள்ளத்தில் அடங்கியிருந்த விசித்திர விஷயங்களை யாரே அறிவார்? வெளித் தோற்றத்தைக் கண்டு அவனை அவமதித்தனர். இருள் தன் இருதயத்துள் வெளிச்சத்தைக் கரந்திருப்பது எவருக்கும் புரியவில்லை. இகழ்ச்சிக்கு இலக்காக இருந்தான் அந்த இசைவாணன். ஆற்றங்கரையின் தனிமையே அவனுக்கு ஆறுதலைத் தந்தது. அவ்விடத்தை நாடி அப்புலவன் தன் துக்கத்தைப் போக்கிக் கொள்வான். உள்ளத்திலிருந்து விம்மி யெழும் அழுகை ஓர் அபூர்வமான இசையாக அவன் கண்டத்திலிருந்து

எழும். அதைக் கேட்டு அனுபவிப்பவர் யார்? தீங்குரற் புள்ளினமே அழகை நிரம்பிய அவனுடைய இசைக்கு ஒத்துப் பாடும்.

புது வருஷந்தோறும் அரசனைக் காண நாட்டினர் அனைவரும் சென்றனர். குறுநில மன்னர் முதல் குற்றேவலாளர் வரையில் தம் காணிக்கையைச் செலுத்தினர். ஆனால் அந்த இசைப் புலவன் மட்டும் கடல்போன்ற அரசவையில் காணப்படவில்லை. வேற்று நாட்டினர் அரசனுக்கு அன்பளிப்பாக நிமிர்பரிப் புரவிகள் தந்தனர். வணிகர், மலையில் பிறந்த பொன்னும் மணியும் பரிந்து நல்கினர்; தென்கடல் முத்தும் குணகடற் பவளமும் கொண்டு குவித்தனர். சீனத்துப் பட்டும், யவனக் கலைப் பொருள்களும் அளவு கடந்து வந்தன.

வேந்தனுடைய நாட்டைப் பாடினர் சிலர். அவனுடைய கொடையைச் சிறப்பித்தனர் புலவருள் ஒரு சாரார். அவனுடைய வென்றியை உயர்த்திக் கூறினர் நாவலர் பலர். ஞிமிறென ஒலிக்கும் தம் சிறிய யாழை இழைத்துப் பாணர் அவன் புகழைப் பாராட்டி அவனிடமிருந்து பொற்றாமரை பெற்றனர். கலக விழி விறலியர் புரியும் ஆடலை வியந்து வேந்தன் அவர்களுக்குப் பொன் இழைகள் வெகுமதியாக அளித்தான். கூத்தர்கள் பல களியாட்டங்களைக் காட்டி மன்னனை மகிழ்வித்தனர். நாட்டு மக்கள் தத்தம் ஆற்றலைப் புலப்படுத்தி அரசனிடம் பரிசு பெற்றுச் சென்றனர். ஆனால் அந்த எளிய புலவன் மட்டும் ஏனோ அங்கு வரவில்லை? அவன் ஒருவன் இருக்கிறான் என்பதையே யாரும் ஸ்மரிக்கவில்லை.

வேந்தன் கழலடியில் கிடந்த பொற்குவையும் மணித்திரளும் கண்களைப் பறித்தன. அரசனைக் குறித்துப் பாவலர் பாடிய கோவையும் உலாவும் சித்திர கவியும் எவர் மனத்தையும் பரவசப்படுத்தின. கலைஞரின் நிகரற்ற ஓவியங்களும் சிற்பவேலைகளும் எவரும் பிரமிக்கும் படியாக இருந்தன. விறலியரின் அபிநயங்களைக் கண்டு ரசிகர்கள் ஆர்த்தனர். பாடகர்களின் இன்னிசையைக் கேட்டு அறிஞர்கள், ''அடாடா! உள்ளம் குளிர்விக்கும் அமிருதவர்ஷம்'' என்று மொழிந்தனர். யாழின்

வாசிப்பை ஒருமுகமாகப் புகழ்ந்தனர் பலர். சபையில் இருந்த மக்கள் ஏற்றத் தாழ்வின்றிக் களிப்பு மேலிட்டு அரசனை வாழ்த்தினர். அரசன் ஒவ்வொருவரையும் கவனித்து அவரவருக்கு ஏற்ற சம்மானங்களை வழங்கினான். அவற்றை மகிழ்ச்சியுடன் பெற்று யாவரும் தம் தம் இடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

சபை கலையும் தறுவாய். அச்சமயம் நாற்புறமும் ஒரு பரபரப்புத் தென்பட்டது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு அந்த வறுமைப் புலவன் ராஜ சபையினுள் புகுவது தெரிந்தது. அன்று உள்ளே வருபவர் எவரையும் தடுக்கக் கூடாது என்பது அரசனுடைய ஆக்ஞை. அதனால்தான் அந்தப் புலவனுக்கு ராஜ சாந்நித்யம் கிட்டியது.

புலவன் நேரே அரசன் முன் போய் நின்றான். என்ன தான் நடக்கிறதோ என்று பார்க்க வேண்டி வெளியே போகிறவர்களும் நின்றுவிட்டனர். யாவர் முகத்திலும் அசூயை நடமாடியது. ஏழைப் புலவன் உள்ளே நுழைந்த போது தற்செயலாய் அவனுடைய உடலைத் தீண்டியவர்கள் தம் தேகம் கூசினர். பகட்டான இழைகள் அணிந்த விறலியர் தம் கண்களைப் பொத்திக்கொண்டனர். விழிகள் தீக் கக்கக் காவிய சிரோமணிகள் வசையைப் பொழிந்தனர். பகை நரம்பு ஆர்த்தன, பாணர்களின் யாழில். ஆனால் அந்தத் தீனக் கவி எதற்கும் வாய் திறக்கவில்லை. எவரையும் நிமிர்ந்தும் நோக்கவில்லை. அமைச்சன், "ஏய், உனக்கு என்ன வேண்டும்?" என்று திரஸ்காரத்துடன் அவ்வெளியவனைக் கேட்டான்.

ஆனால் புலவனோ வேந்தனையே உற்று நோக்கினான்: "வேந்தர் ஏறே, இன்று நாட்டினர் யாவரும் உம் சேவடியில் தம் காணிக்கைகளைச் செலுத்தி, தங்கள் திருக்கரத்தால் அளித்த பரிசில்களைப் பெற்று ஏகினர். தங்களுடைய மக்களுள் இவ்வேழையும் ஒருவன். என்னுடைய சிறிய காணிக்கையையும் ஏற்று அருளவேண்டும்" என்றான் அந்தக் குரூபி.

"அது என்னவோ?" என்று அரசன் வினவினான்.

"பேரரசே! எனக்கு உள்ளது ஒரே செல்வம். அதை உமக்கு அளிப்பேன்."

"அச் செல்வம் யாதோ?"

"அதுவா? என் அழுகை!" என்றான் அந்த அதிசய மனிதன்.

"அழுகையா? அழுகையா?"—சபையினர் ஏளனமாக நகைத்தனர். நாலு பக்கத்திலிருந்தும் விரசமான குறிப்புக்கள் எழுந்தன. அனைவரும் சீறினர். எதற்கும் புலவன் அசையவே இல்லை. அரசன் முன்பு அமைதியுடன் நின்றிருந்தான்.

அரசனுக்கும் சிரிப்பு வந்துவிட்டது; "சரி, புலவரே, உமது வேண்டுகோளை அங்கீகரித்தோம். ஆரம்பியும்!" என்றான்.

அரசனுடைய வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்டனர் யாவரும். உலகம் இகழ்ந்த அக்கவிஞனைப் புரவலன் வெறுக்கவில்லை. "பொன்னும் மணியும் நல்கியவருக்கும், கவிதாமாலை சூட்டியவருக்கும் சமமாக இவ்வேழைக்கும் இடம் கொடுத்தானே அரசன்?" என்று எல்லோரும் புருவத்தைச் சுளித்தனர்; கைகளைப் பிசைந்துகொண்டனர். வானுறும் கதிரையும், தரையில் வளரும் சிறு புல்லையும் சமமாக நோக்குவன இறைவன் கண்கள் அல்லவா!

உறை மறைவிலிருந்து ஏழைப்புலவன் தன் யாழை எடுத்துச் சுருதி கூட்டினான். அதனின்றும் எழுந்த நாதம் அடக்கமாகவே இருந்தது. சபை நிரம்பச் சப்திக்கவில்லை. ஆனால் அவ் யாழின் ஒலிக்கு அவனுடைய அந்தரங்கம் மட்டும் இழைந்து எதிரொலித்தது. யாழ் நரலுவதைக் கேட்ட சிலர் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டனர். வேந்தன் கற்பதுமை போல் புலவனுடைய செயலைக் கவனித்துக்கொண்டிருந்தான். மழலை யாழின் இசை அரசனுடைய உள்ளத்தைத் தொட்டது.

இரு விழிகளும் மூடியவண்ணம் எளிய புலவன் பாட ஆரம்பித்தான். அழுகையாகத் திரண்டெழுந்த அவன்

வாழ்க்கையின் துயரம் பேரிசையாக மாறியது. "இந்த ஓலத்தையும் கேட்பவர் உண்டோ?" என்ற வார்த்தை கேட்டது சபையில். இசைவழியே மனத்தை வெளியிட்ட புலவனுக்கும், பூமி பாலகனுக்கும் அச்சொற்கள் செவியில் பாய்ந்தால்தானே? புலவனுடைய குரல், ஒலி அலைகளாகச் சபையைக் கம்பிக்கச் செய்து வானெங்கும் பரவியது. மனத்துள் பதுங்கிக் கிடந்த அவனுடைய வேதனையை அது காட்டியது ஒரு சமயம். லயத்துடன் இன்பத்தின் பெருக்காகத் துள்ளியது அவ்விசை, வேருெரு சமயம். மொட்டு அவிழும்போது மலர் படும் வேதனையைக் காட்டுவதுபோல் இருந்தது யாழின் துடிப்பு. சிலருக்கு அம் மதுர கீதம் செவிக்கு உணவாக இருந்தது. சிலர் அதைக் கர்ண கடூரமாகப் பாவித்தனர். தம் உள்ளத்தில்தான் அவ் வேதனை குமுறுகிறதோ என்று ஐயுற்றனர் சிலர்.

அபாரமான சங்கீதத்தைப் பாடிக்கொண்டிருந்தான் அந்தக் குரூபப் புலவன். அவன் இருதயத்துள் ஆழ்ந்திருந்த துக்கம் அனைத்தும் நீங்கிவிட்டது. "எவ்வாறு அவனுல் தன் மனவேதனையை இசை மூலமாகக் காட்ட முடிந்தது!" என்று பலர் ஆச்சரியப்பட்டனர். அதை வர்ணிக்கச் சொற்கள் இராத குறையால் பலர் கண்ணீர் பெருக்கினர்; நெக்குருகினர். அதன் சுவையை நுகராத செவிடர்களும் இருந்தனர். அந்த விகார மானிடன் தன் பாட்டை முடித்துவிட்டுக் கண்களைத் திறந்தான். அவனை மகிழ்விக்க ஆனந்த கோஷம் சபையில் எழவில்லை. ஆனுல் ஒரு பெரு மூச்சு மட்டும் அந்த ஜனத் திரளில் கேட்டது. அது உடனே மங்கிவிட்டது.

"புலவரே!" என்று அரசன் அந்த இசைப் புலவனை அழைத்தபோது அவனுடைய குரல் தழுதழுத்தது. "சே, சே, அரசனும் இப்படி அறிவை இழந்துவிடுவானு?" என்று சில 'மேதாவி'கள் துக்கப்பட்டனர். அரசன், "புலவரே! பரிசெல்லாம் வழங்கியாகிவிட்டதே! உமக்கு நான் எதைத் தருவது?" என்று விசனப்பட்டான்.

"மன்னர்பிரானே, பரிவெய்தவேண்டாம்! எனக்குப் பரிசு கிடைத்துவிட்டது" என்ருன் அவ்வேழைப்பாவலன்.

"எப்போது? புலவர் மணியே!" என்று வேந்தன் வினவினான்.

"இப்போதுதான், அரசே! தங்களுடைய கண்களில் அரும்பிய நீர்த்துளி இன்னும் உலரவில்லை. அதுவே எனக்குப் போதுமான வெகுமதி" என்ருன் கவிஞன்.

"தன்யனானேன், புலவர் பெருமானே" என்று கூறி, அரசன் தன் அரியாசனத்திருந்து இறங்கி வந்து விகார ரூபியான அவ் இசைவல்லுநனைத் தழுவிக்கொண்டான்.

பொருமையினால் ஒரு கவிஞன், "ஐயோ! இன்று காவியலக்ஷ்மி கைம்மை பூண்டாள்" என்று கூவினான். அனைவரும் வெளியேறினர், அரசன் கொலுவிலிருந்து. சபையில் அரசனும் அவ்வேழைப் புலவனுமே தனியாக நின்றனர்.

"என்னுடைய அற்பமான கண்ணீர்த் துளிகளைக் கொண்டு எவ்வாறு திருப்தி அடைந்தீர்கள்?" என்று மன்னவன் புலவனை அன்புடன் கேட்டான்.

அதே சமயம் கொலுவறைக்கு வெளியே பலர் வாயிலிருந்து, "இசையரசே, இதோ எளிய மக்களான நாங்களும் உம்முடைய இசையைக் கேட்டுக் கண்ணீர் உகுத்தோம். எங்களுடைய அல்லல்களையும் மறக்கச் செய்தது உமது கீதவெள்ளம். நன்றி செலுத்தக் கண்ணீர் சொரிகிரோம்" என்ற வாக்கியம் ஒலித்தது.

"இதைவிட வேறு என்ன வேண்டும்?" என்று அந்தக் குரூபிக் கவி உளம் மகிழ்ந்தான்.

# உத்தியோக பர்வம்

ஒரு நோயாளி மனைவி; நித்ய கண்டம் பூர்ண ஆயுளை உடைய பெண் குழந்தைகள் இரண்டு. "எத்தனை நாட்கள் இப்படி உட்கார்ந்து கொண்டு தின்பது? வேலைக்காக நான் பிரயத்தனப்படாத இடம் இல்லை. போடாத அப்ளிகேஷன் இல்லை. போன வருஷம் என் மனைவியின் ஒட்டியாணம் ஸ்வாஹா! இந்த வருஷம் எந்த நகைக்குத் தலை நோவோ......"

சட்டென்று ஒரு யோசனை வந்தது, மதராஸுக்குப் போய் முயற்சி பண்ணலாமா என்று. அவ்வளவு பெரிய சமுத்திரத்தில் குடிக்கப் பொட்டுத் தண்ணீர் கூடவா கிடைக்காது போகும்? போய்த்தான் பார்க்கலாமே.

என் மனைவியையும் குழந்தைகளையும் ஊருக்கு அனுப்பிவிட்டு, குழந்தையின் கை வளையலை விற்று எடுத்துக்கொண்டு நானும் சென்னைக்குப் பிரயாணமானேன். என் சகபாடியும் ஆப்த நண்பனுமான கிட்டு (கிருஷ்ண சாமி) பட்டணத்தில்தான் இருக்கிறான். அவனுடைய வீட்டிற்குச் சென்று தங்குவது என்று தீர்மானித்தேன்.

கிட்டுவின் வீட்டுக்குள் நான் பிரவேசிக்கையில் குழாயின் கீழ் அவன் ஸ்நானம் செய்துகொண்டிருந்தான். என்னை முதலில் அவன் அடையாளம் கண்டுகொள்ள வில்லை. "கிட்டு! என்னைத் தெரியவில்லையா?" என்று நான் கேட்ட போதுதான் அவன், "ராமுவா! ஏது இவ்வளவு தூரம்?" என்று ஈரக் குட்டையுடன் என்னை வரவேற்றான். உள்ளே போனேன். அப்போது இரண்டாம் கட்டில் யாரோ உரக்க, "இது யாரு இந்தச் சோற்றுப் பட்டன்?" என்று சொல்வது கேட்டது.

நான் வந்து மூன்று தினங்கள் ஆயின. கிட்டுவின் வீட்டிலேதான் எனக்குச் சாப்பாடு. அங்கே இருக்கும்

பத்திரகாளிக்குப் பயந்து நான் கிட்டுவுடனேயே சாப்பிட்டு விடுவேன். பிறகு ஊர் சுற்ற வெளிக்கிளம்பி விடுவேன். அன்று சாயந்தரம் பழக்கடையிலிருந்து பம்பாய்த் திராக்ஷை ஒரு சேர் வாங்கிக்கொண்டு வந்தேன். கிட்டுவின் பசங்களுக்கு அதைப் பகிர்ந்து அளித்தேன். பிய்த்துக்கொள் பிராண்டிக்கொள் என்று அந்த வானரப் படை என்னைக் கௌவிக்கொண்டது. இத்தனை நாட்களை இங்கே கழிக்கிறேமே, ஏதாவது வாங்கித் தராது இருந்தால் நன்ருக இருக்குமா ?

மறுதினம் கிட்டு வழக்கம்போல் ஒன்பது மணிக்குச் சாப்பிட்டுவிட்டுத் தன் உத்தியோகத்திற்குப் புறப்படத் தயாராக இருந்தான். நானும் என் உத்தியோக விஷய மாக அவனைக் கேட்க இதுதான் தக்க சந்தர்ப்பம் என்று அவனைப் பின் தொடர்ந்தேன். கிருஷ்ணசாமி தன் பின்னுல் நான் வருவதைப் பார்த்து, "ராமு! என்னேடு எங்கே வருகிருய்?" என்று கேட்டான். நான் வார்த்தை களை விழுங்கிக்கொண்டே, "உன்னை......ஒன்று...... கேட்கலாம் என்றிருக்கேன்" என்று பதில் அளித்தேன்.

"இதோ பார், ராமு! கடன் கிடன் கேட்டால் என்னிடத்தில் ஒன்றும் இல்லை. இதை முன்னுடியாகவே சொல்லிவிடுகிறேன்" என்ருன்.

"அட, அதற்காக நான் இங்கு வரவில்லையடா. நீ உத்தியோகம் பண்ணுகிறவனுயிற்றே. ஏதாவது உங்கள் ஆபீஸில் வேலை காலி இருக்குமோ என்று தான் கேட்கிறேன்" என்றேன்.

நாங்கள் இருவரும் இதற்குள் பிராட்வேயை அடைந்தோம். கிட்டு 'டிராம்' ஏறுவானே என்று பார்த்தேன். அவன் நடந்தே செல்லலானுன். 'டிராம்' வரவே நான், "டே கிட்டு! டிராம் வருகிறது. ஏறிக் கொள், போகலாம்" என்றபோது, "நான் நடந்தே என் உத்தியோகத்திற்குப் போவது வழக்கம். வா சீக்கிரம். எனக்கு 'டைம்' ஆகிறது. லேட்டானுல் அவன் வந்து விடுவான்" என்று கூறி மேலே நடக்கலானுன். "அப்படி யானுல் சரி" என்று நானும் அவனைப் பின் தொடர்ந்தேன்.

எனக்கு ஒரு வேலையைப் பற்றிக் கிட்டு யோசனை செய்கிறான் என்று எண்ணிக்கொண்டேன். அவன் மௌனமாக இருப்பதைப் பார்த்து, மறுகணமே அவன் கொல்லென்று சிரித்துவிட்டு, "யாரடா எனக்கு வேலை என்று உன்னிடம் சொன்னார்கள்?" என்றான்.

"ஆனால் நீ நித்தியம் ஒன்பது மணிக்குக் கோட்டு, தலைப்பாகையுடன் எங்கே கிளம்புகிறாய்?" என்று திடுக்கிட்டுக் கேட்டேன்.

"அட ராமா! அதை ஏன் கேக்கறே? அப்பா சாகும்போது எனக்கு அந்த வீட்டையும், பாங்கில் 4000 ரூபாய் ரொக்கத்தையும் வைத்துச் சென்றார். அதன் வட்டியை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் பண்ணுகிறேன். வீட்டில் மட்டும் நான் வேலைக்குப் போவதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எஜமானியும் நான் ரொம்ப சிரமப் பட்டுச் சம்பாதிக்கிறேன் என்று எண்ணிக்கொண்டிருக் கிறாள். இந்த நான்கு வருஷமாய் நானும் அலைகிறேன் ஒரு வேலைக்கு. அகப்பட்டால்தானே? வேலையில்லை என்று தெரிந்தால் என் சோற்று வாயில் மண் விழும். பையன் கள் இழைக்கும் நரக வேதனையிலிருந்து தப்பத்தான் இந்த வேஷம் போடுகிறேன், தெரிகிறதா? ஈசுவரா! என்னை நம்பிக்கொண்டா இந்த நடுச்சந்திக்கு வந்தாய்? ஆனால் சீக்கிரம் நட. இடம் போய்விடும்........இன்னும் கொஞ்ச தூரந்தான் ஸெனடாப் (Cenotaph)" என்றான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை; அவனுடன் செல் லலானேன். அதே சமயம் கோட்டைக் கடிகாரம் 10 அடிப்பது கேட்டது. "ஸெனட்டில் (Senate) உனக்கு என்ன வேலை?" என்று அவனை ஆவலுடன் கேட்டேன்.

"ஸெனட்டில் அல்ல; ஸெனடாப்பில். நான் நித்தியம் 10 மணிக்கெல்லாம் அங்கே போய் அங்குள்ள மேடை ஒன்றில் ஆனந்தமாய்ப் படுத்துத் தூங்குவது வழக்கம். அரை நிமிஷம் தாமதமானாலும் என்னைப் போன்ற ஓர் அசனத்வம்ஸம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுவிடும். அதற்காகவே நான் இவ்வளவு துரித

மாகச் செல்கிறேன். ஸெனடாப் அதுதான். 'சென்ற மகாயுத்தத்தில் இறந்த சென்னைவாசிகளின் ஞாபகார்த்தமாகக் கட்டியிருக்கும் குளிர்ந்த மண்டபம் அது" என்றான்.

அப்புறம் என் கதி? உத்தியோக பர்வத்திலிருந்து ஸ்வர்க்க ஆரோஹண பர்வந்தான். என்னுடைய மகா பாரதத்தில் இப்படி இருக்கிறதே!

# விநோத வேட்டை

காலேஜில் தலை காட்டிவிட்டு, பாலகிருஷ்ணன் மத்தியான்னமே ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்துவிட்டான். நித்தியம் இந்த மாதிரி 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வருவது அவனுக்கே சலித்துவிட்டது.

அன்றைக்கு அவனுக்கு மனசு என்னவோ மாதிரி இருந்தது. எதைக் கண்டாலும் வெறுப்பாய் இருந்தது. நாவல் ஒன்றைப் படிக்க எடுத்தான், அதுவும் பிடிக்கவில்லை. சற்றுத் தூங்கலாம் என்று படுக்கையில் படுத்தால் தூக்கம் வந்தால்தானே! அவன் மனசில் ஏதோ ஒரு சஞ்சலம் சுழன்றுகொண்டே இருந்தது. ஒருவேளை கல்யாணம் இன்னும் ஆகவில்லை என்ற கவலையா? இருக்கலாம். 'அயரன் ஸேப்' நிறையப் பணத்தோடு இடம் வந்தால்தானே அப்பா கல்யாணப் பிரஸ்தாபம் எடுக்கப்போகிறார்? 'அந்த மாதிரி வரப்போறதும் இல்லை, எனக்குக் கல்யாணம் ஆகப்போவதும் இல்லை' என்ற குறையே அவனைப் பாதித்தது.

"சாமி! உள்ளே இருக்கீங்களா?" என்று கூறிய வண்ணம் ப்யூன் கதிரேசன் பல்லை இளித்துக்கொண்டு மெள்ளக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். பாலகிருஷ்ணன் அவனைப் பார்த்ததும் சொள்ளென்று, "ஏண்டா, உனக்கு வேலை வங்களி கிடையாது? தூங்கப் போற சமயத்திலே தொந்தரவு கொடுக்க வந்துவிட்டாயா? என்ன சமாசாரம்; சொல்லித் தொலை" என்று எரிந்து விழுந்தான். கண்ணை மலர விழித்து ஏதோ யோசனையில் ஆழ்ந்து படுத்திருப்பது தூங்குவதன் லக்ஷணம் என்று மட்டிக் கதிரேசனுக்கு எப்படித் தெரியும்!—"சாமீ! கீழே பாக்ஸில் இந்த லெட்டர் இருந்தது. இது உங்களதுதானே?" என்றான்.

பாலகிருஷ்ணன் கையை நீட்டிக் கடிதத்தை வாங்கிப் பார்த்தான். தன்னுடைய சகபாடி ராமமூர்த்திக்கு வந்த

கடிதம் அது. ராமமூர்த்தியின் மேஜையின் பேரில் அதை வைக்கும்போது அவனுக்குச் சட்டென்று என்னவோ தோன்றிற்று. கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அவனுடைய நெற்றி சுருங்கிற்று; கண்கள் விரிந்தன; தனக்குள்ளேயே, "'லக்கீ சாப்' (அதிருஷ்டசாலி) இந்த ராமு" என்று சொல்லிக்கொண்டான். "ராமமூர்த்திக்கு விவாகம் ஆகி இன்னும் இரண்டு மாதங்கள்கூட ஆக வில்லை. இதற்குள் எத்தனை இடங்களிலிருந்து அவனுக்கு விருந்து வரவேற்பு! இந்தத் தடவை சின்ன மாமனார் அழைத்திருக்கிறார். அவர் அவனுடைய கல்யாணத் திற்கு வரவில்லையாம். அதனால்தான் இவ்வளவு ஆதர வுடன் அழைத்திருக்கிறார். ராமு பாடு ஜோர்தான். இன் னும் என்னவோ எழுதியிருக்கிறது. ஆனால் அடிக்கப் பட்டிருக்கிறது. நன்றாகப் புரியவில்லை. ராமு, உனக்கு என்ன குறைச்சல்? ஒரு வாரம் நல்ல 'ட்ரீட்'தான். கீர் பாயஸம், கேஸரி...நன்றாக ஜாய் (Joy). இரு— அவர்கள் யாரும் ராமுவைப் பார்க்கவில்லையே! நான் ஏன்..." என்று என்னவோ ஒரு முடிவிற்கு வந்தவனாய், "ஆல்ரைட்" என்று கூவி, பாலகிருஷ்ணன் ஒரு குதி குதித் தான். ராமுவின் கடிதத்தைத் தன் ஜோபியில் போட்டுக் கொண்டான்.

*　　　*　　　*

ராமு—எங்கேடா, ஷோக்கா மாப்பிள்ளையாட்டம் கிளம்பிவிட்டே? சினிமாவா?

பாலகிருஷ்ணன்—(சிரிப்பை வரவழைத்துக்கொண்டு) இல்லேடா, அப்பா என்னை உடனே வரும்படி எழுதி யிருக்கிறார். அதுதான் போறேன்.

ராமு—ஹீர்ரே......டே, என்கிட்டே கூட வா மறைக்கிறாய்? நல்ல இடந்தானா? கையில் எவ்வளவு? கடுதாசி மாத்திரம் போடு. உன் 'பிரெண்ட்ஸை' மறந்து விடாதே.

பாலகிருஷ்ணன்—நிச்சயமாகக் காரியம் கைகூடினால் நல்லதுதான். ஆனால் எனக்கு மாத்திரம் சந்தேகம். அப்பா பணப்பிச்சுவாச்சே.

ராமு—(சிரித்துக்கொண்டே) இதற்குள்ளே ஏண்டா 'டெஸ்பேர்' (Despair)? மனமுடைந்துபோறே. போ, உனக்கு ஜயம். 'ஷ்யூர்' (Sure.)

பாலகிருஷ்ணனுடைய இருதயம் 'திடுக் திடுக்' என்று அடித்துக்கொண்டது. அவன் செய்யப்போகிற காரியம் எப்பேர்ப்பட்டது? ஒரு துணிச்சலான மோசடி அல்லவா! 'ராமுவின் பெண்டாட்டி மாத்திரம் அங்கே இருந்தால், அதோகதிதான். அப்புறம் மானம் போய்விடும். மானம் போகிறதோடுகூட நல்ல உதையும் விழும். இருக்கட்டும், எதற்கும் போவதே சரி. அங்கே மூன்று நாளைக்குத்தானே தங்கப்போவது? தமாஷாகக் காலம் கழித்துவிட்டு நல்ல புள்ளையாட்டம் மரியாதையாகத் திரும்பி வந்துவிட்டால் போகிறது. அப்படி யார் அந்தப் பட்டிக்காட்டில் கண்டுபிடிக்கப் போகிறார்கள்? மாப்பிள்ளை வேஷம் போட்டுக்கொண்டு போக்தாவாக இரண்டு நாள் சாப்பிட்டுவிட்டு, அங்கே ஏதாவது குட்டிகள் இருக்காதா—அதுகளோடு விளையாடிவிட்டுச் சமர்த்தாய்த் திரும்பிவிட வேண்டியதுதான்' — இந்த எண்ணங்களெல்லாம் பாலகிருஷ்ணன் மூளையில் வேலை செய்துகொண்டிருந்தன.

* * *

வண்டியை விட்டு ஸ்டேஷனில் இறங்கி, பாலகிருஷ்ணன் தாழ்ந்த குரலில், "எல்லோரையும்போலவே என்னை ......" என்ற பாட்டைச் சொகுஸாகப் பாடிக்கொண்டே கிராமத்தை நோக்கி மெதுவாக நடந்தான்.

கைலாஸம் ஐயர் வீட்டை எப்படிக் கண்டுபிடிப்பது? சற்றுத் தொலைவில் மாடுகளை ஓட்டிக்கொண்டு வரும் பையனை நோக்கி, "தம்பீ! கைலாஸமையர் வீடு எது?" என்றான் பாலகிருஷ்ணன். மாட்டுக்காரப் பையன் புது ஆசாமியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "சாமி, நேராப் போங்கோ. தெரு மொனேலே ஐயா வூடு" என்றான்.

நேராகச் சென்றதும் தெரு முனையில் வீடுகள் இருந்தன. அதில் எந்த வீடு கைலாஸம் ஐயருடையது? ஒரு வீட்டில் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து, "கைலாஸ

மையர் வீடு எது?'' என்று கேட்டான். "அதோ தெரி கிறதே; கேட்டுப் போட்ட வீடு'' என்று சுட்டிக் காட்டி ஞர் அவர். பாலகிருஷ்ணன் திரும்பும்போது, "டே சேசு, பெரம்பை இங்கே எடுத்துண்டுவா''என்ருர். பாலகிருஷ்ண னுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பாவம், அவன் என்ன செய்வான்—குற்றமுள்ள நெஞ்சு!—திருப்பிப் பார்த்தான். அவனை அடிப்பதற்காக அல்ல; இரண்டு பையன்கள் பாடம் படித்துக்கொண்டிருந்தனர்; அவர் களைப் புடைக்கத்தான் எடுத்துவரச் சொன்ஞர்.

வீடு நெருங்க நெருங்கத் தொண்டையில் ஈரம் வற்றி விட்டது பாலகிருஷ்ணனுக்கு. பகவான் செயலில் எல் லாம் சரியாகப் போக வேண்டுமே! அவனுக்கு நடுக்கந் தான். கதவை மெள்ளத் தட்டினுன்; பதில் வந்தது. "யார்?''

"நான் தான்.''

கதவைத் திறந்துகொண்டு தங்கச் சாயலாக ஒரு கிழவர் வந்தார். அவர் பாலகிருஷ்ணனைப் பார்த்துத் திகைத்து நின்ருர்.

என்னவென்று தன்னை அவருக்கு அறிமுகமாக்கிக் கொள்வது என்று பாலகிருஷ்ணனுக்குத் தோன்றவில்லை. நடுநடுவே தன்னுடைய 'ஹம்பக்' எங்காவது வெளிவந்து விடுமோ என்ற அச்சம் வேறு. அப்படி இருந்தும் அவன் குறும்பு விடவில்லை. "மாமா, நான் தெரியவில்லையா? உங் கள் பேத்தி அகமுடையான்.'' 'கிழவரே, உங்களுக்கு இந்தத் தொல்லை எதற்கு? நான் யாராயிருந்தால் என்ன? கஷ்டமோ சுகமோ இரண்டு நாள் வேடிக்கையாகத் தானே வந்திருக்கிறேன்?' என்று மனசிலேயே சொல்லிக் கொண்டு, வெளிப்படையாகச் சிரித்த முகத்துடன், "நான் தெரியலே? ராமமூர்....'' என்று குழறினுன்.

கிழவர் சந்தோஷத்தோடு குதித்தார். "வாடாப்பா! வா, வா! உன்னை முன்பின் பார்த்திருந்தால்தானே நீ பலானவன் என்று தெரியப்போகிறது?'' என்ருர்.

பாலகிருஷ்ணனுக்கு 'ஜில்' என்று வேர்த்தது. நல்ல காலம்; அவன் பிழைத்தான். "உங்களையும் நான் பார்த்த

தில்லை. வீடு தெரியாமல் சுற்றி அலைந்து கடைசியில்...''
என்றான்.

அன்று பாலகிருஷ்ணனுக்கு நடந்த உபசாரங்களைக் கேட்கவும் வேண்டுமா? பாயஸம், பக்ஷண வகைகளுக்குக் கணக்கே இல்லை. மாப்பிள்ளையாண்டான் என்றைக்கோ வருகிறவன் என்பதால் பலத்த விருந்து. சந்தனம் பூசிய தொந்தியுடன் கிழவர் உள்ளே போனதும் அவருடைய சம்சாரம், ''நன்னா இருக்கு. பட்டணத்திலிருந்து வரும் தடிப்பயல்கள் எல்லாம் அகத்து மாப்பிள்ளைகளா? போரும் உங்கள் சமர்த்து. எங்கே போய் அடித்துக்கொள்றது?'' என்றாள்.

''என்னடீ, நீ சொல்றது ஒன்றுமே புரியல்லையே?''

''புரியல்லையா? எங்களுக்குக் கூடவா கண் அவிந்து போய்விட்டது? ராமுவை நாங்கள் கூடப் பார்க்கவில்லையா? ஏதோ ஒரு கேப்மாரி. மாப்பிள்ளை என்று சொல்லிக்கொண்டு வரதும், நீங்கள் அவனுக்கு உபசரணை செய்கிறதும்......பேஷ்..ராமுவுக்கு நெற்றிலே வடு உண்டே. இவன் நெற்றியில் ஒன்றையும் காணோமே. ராமு மாநிறமாச்சே. இவன் நல்ல செகப்பாக இருக்கானே. இவன் யாரு? மொள்ள அவன் 'குட்டை'க் கண்டுபிடிங்கோ; உங்களால் முடியலேன்னு சொல்லிடுங்கோ, நானே அவனை ஓட்டிவிடறேன்.''

''மொள்ளடீ, கூச்சல் போடாதே. ராமுவின் ஸ்நேகிதன் யாராவதாய் இருப்பான். இதோடு நிற்கட்டும். நீங்கள் யாரும் இதைக் கண்டுகொண்டதாக அவனுக்குத் தெரியவேண்டாம்.''

கிழவர் தலை எழுத்து, 'லொங்கு' 'லொங்கு' என்று ஒரு மைல் தூரத்திலுள்ள ஸ்டேஷனுக்கு ஓடிக் கீழ்க்கண்டவாறு தந்தி அடித்தார்: '—ராமமூர்த்தி லயோலா ஹாஸ்டல், சேத்பட், மட்ருஸ்: லலிதா அஸௌக்யம். உடனே புறப்படு. கைலாஸம் விரிஞ்சிபுரம்.'

* * *

சின்ன ஸ்டேஷன். பத்து அல்லது பதினைந்து பிரயாணிகள்தாம் இறங்கினார்கள். அவர்களுள் நாகரிகமான

உடை அணிந்தவன் ராமு என்று கிழவர் அறிந்து கொண்டு முன்னே வந்தார்.

அவனுடைய வாடின முகத்தைப் பார்த்ததும் கைலாசமையர், 'வாஸ்தவமாகவே இவன் முகத்தில் வருத்தம் தெரிகிறது. என்னப்பன் இந்த மாதிரி கதிகலங்கி வறதும், இங்கே அகத்தில் ஒரு தடிப்பயல் வேஷம் போட்டுக் கொண்டு தின்கிறதும்—' என்று எண்ணிக்கொண்டார்.

ராமுவின் இருதயத்தில் ஒரு பெரும்புயல் அடித்துக் கொண்டிருந்தது.

'அஸௌக்யம்? என்ன உடம்போ? லலிதா ஒரு வேளை செத்துப்போய்......எனக்குத் தேறுதல் சொல்ல அதோ அந்தக் கிழவர் முன்னுடியாக வருகிறாரா? ஐயோ! லலி! இந்தப் பட்டிக்காட்டில் வந்து சாகவேண்டும் என்று உன் தலையில் எழுதியிருந்ததா?' என்றெல்லாம் அவன் மனசில் சங்கை மூண்டது. தன்னையும் அறியாமலே அவனுடைய கண்களிலிருந்து நீர் ஆருய்ப் பெருகிற்று.

கிழவர் இதை எதிர்பார்க்கவில்லை. 'முழு விவரமும் அறியாமல் இவன் ஏன் இப்படிக் கண்ணீர் சிந்துகிருன்? இதோ லலிதா மறுவண்டிக்கே வரப்போகிருள். அப்போ? இந்தக் கண்ணீர் வெள்ளம் எங்கே ஒளிந்து கொள்ளும்?' என்று கிழவர் தமக்குள்ளேயே கெக்கலித்துக்கொண்டார். ராமுவை நெருங்கி அவர், "நீதானு ராமமூர்த்தி அப்பா?" என்ருர்.

"நான்தான்....நீங்கள்......?"

"லலிதாவின் சித்தப்பா கைலாஸம் என்னு சொல்லுவா என்னே." உடனே ராமு அவரைச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். கிழவருடைய பாதத்தில் ஒரு பொட்டுக் கண்ணீர் விழுந்தது. கிழவர் ராமுவைத் தட்டிக் கொடுத்து, "அடே, எதற்கு அழறே? யாருக்கும் ஒன்றும் இல்லே. லலிதா இதோ உன்பின்னுலேயே வரப்போருள். நீதான் வாஸ்தவமான ராமமூர்த்தி!" என்ருர். ராமு, "நீர் சொல்வதன் அர்த்தம்? ஆனல் லலிதா...!" என்று கூறித் தன் பாக்கெட்டிலிருந்து தந்தியை எடுத்தான். "ஆமாம், நான் தந்தி கொடுத்தது உண்மைதான்.

ஆனால் சமாசாரம் என்னமோ பொய். ஏதோ காரணத்தை உத்தேசித்துத்தான் இந்த மாதிரி செஞ்சிருப்பேன். எல்லா வேடிக்கையும் போகப்போகத் தெரியும்'' என்று சொல்லி நடந்த விஷயங்களை ஆதியோடந்தமாய் மொழிந்தார்.

ராமுவின் கண்கள் ஜொலித்தன. "ஸ்கௌண்ட்ரெல்'' என்று கூறிப் பெருமூச்சுவிட்டான்.

"ஆள் எப்படி இருக்கான் சொல்லுங்கோ? சுருண்ட மயிரா?''

"ஆமாம்.''

"இடது கண் கொஞ்சம் சின்னதா?''

"ஆமாம்.''

"ஆள் செகப்புத்தானே? (சற்று யோசித்து) 'ட்வில் ஷர்ட்' தானே போட்டிண்டிருக்கான்?''

"ஆமாம்.''

"அவன்தான் தடிப்பயல்! பாலகிருஷ்ணன்! என்னுடைய க்ளாஸ் மேட். என்ன டேரிங் (துணிச்சல்) பாருங்கோ? சற்று நாழிகைக்கெல்லாம் அவன் பாடு தெரியப்போகிறது.'' ராமமூர்த்தி ஆத்திரத்தினால் துடித்துக்கொண்டிருந்தான். கிழவர், "கொஞ்சம் பொறுத்துக்கொள். ஆத்திரப்படாதே, இதனால் உனக்கும் லாபமே ஒழிய, நஷ்டம் இல்லை. லலிதாவை இங்கே நீ பார்ப்பாய் என்று கனவிலாவது எண்ணினாயா?'' என்றார். அவன் சிந்தனையிலிருந்து தெளிந்தவனாய், "நீரே சொல்லும். இது யோக்கியனுடைய காரியமா? லலிதா மாத்திரம் இங்கே இருந்திருந்தால் என்ன விபரீதம் நடந்திருக்கும்!'' என்று கலக்கத்துடன் கூறினான் ராமு.

கிழவர் சிரித்துக்கொண்டே, "அப்படித்தான் இருந்தாள். அவளுக்கு என்ன கெடுதி வரும்? ஆசாமிக்குத் துடைப்பப் பூஜை நடந்திருக்கும். லலிதாவுக்குத் தன் புருஷன் யார் என்றுகூடத் தெரியாது போய்விடுமா? அதுதான் நான் சொல்றேன். ஆத்திரப்படாதே. ஒரு வேடிக்கை செய்யலாம் என்று எண்ணியிருக்கேன். ஒன்றும் தெரியாது போல நடிக்கலாம். அவனே அகப்பட்டுக்

கொள்ளட்டும். பிள்ளையாண்டான் வெறும் தமாஷ் பண்ணத்தான் வந்திருக்கிறான். கெடுதியான எண்ணம் அவனிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை'' என்றார்.

ராமு தன்னுடைய சிறிய மாமனார் அகத்தில் இறங்காமல் மற்றொரு வீட்டில் போய்த் தங்கினான். அன்று இரவே லலிதாவை அழைத்துக்கொண்டு மகாதேவனும் வந்துவிட்டான். ராமுவும் லலிதாவும் ஒருவரையொருவர் கண்டு உள்ளம் பூரித்தனர். அந்த இன்பத்தில் பாலகிருஷ்ணன் மேல் இருந்த கோபத்தையும் ராமு மறந்தான். அவன் பேரில் அவனுக்குப் பரிதாபம் ஏற்பட்டது. என்ன இருந்தாலும் சிநேகிதன் தானே!

* * *

இந்தப் பக்கம் பாலகிருஷ்ணன் சாப்பிடுவதும் தூங்குவதுமாய் இருந்தான். 'துப்பறியும் நாவல்கள் படித்த தன் பயனால் அல்லவோ இந்த நாட்டுப்புறத்தான்களைச் சுலபமாக ஏய்த்துவிட்டோம்!' என்ற கர்வம் அவனுக்கு. 'ஆனால், ராமுவின் மைத்துனிமார்கள் யாரும் நம்மிடம் ஏன் நெருங்கிப் பழகவில்லை?' என்று அவன் எண்ணுவான். ''நாட்டுப்புறமோ இல்லையோ? என் எதிரே வருவதற்கு வெட்கமாக இருக்கலாம். நேற்றுச் சாயந்தரம் துளியோ (துளசி) கிளியோ ஏதோ ஒரு பெண் வந்ததே. அவளைத்தான் எனக்குப் பிடித்து இருக்கிறது. இருந்தால் அந்தமாதிரி கண்ணும் கட்டழகும் இருக்கணும்'' என்று பெருமூச்சுவிட்டு, 'வேல்விழி......கொவ்வைச் செவ்விதழ்' என்றெல்லாம் பிதற்றிக் காவிய லோகத்தில் தன்மயமாகி இருந்தான்.

* * *

மாடி அறையில் பெரிய நிலைக்கண்ணாடி எதிரே பாலகிருஷ்ணன் ஸ்வயமாக முகக்ஷவரம் செய்துகொண்டிருந்தான். கண்ணாடியில் தனக்குப் பின்புறமாகத் தோன்றிய ஓர் அழகிய முகத்தைப் பார்த்து மயங்கி, தன் கன்னத்தில் 'கருக்' கென்று கத்தியால் கீறிக்கொண்டான். அதை அவன் லக்ஷ்யம் செய்யவில்லை. திரும்பிப் பார்த்தான். முல்லை முறுவலுடன் துளி நின்றிருந்தாள். சட்

டென்று தலையைக் குனிந்துகொண்டு, "என்ன சமாசாரம்?" என்றான்.

"சித்தப்பா உங்களைக் கூட்டிண்டு வரச்சொன்னா. சீக்கிரம் வரச்சொன்னா" என்றாள் துளசி.

பாலகிருஷ்ணன் திடுக்கிட்டான். எல்லா வண்டவாளமும் தெரிந்துவிட்டதோ? உதை கிதை ஏதாவது கொடுக்கத்தான் கூப்பிடுகிறார்களோ? தொண்டையில் ஈரமே இல்லை. வெலவெலத்துப்போய்விட்டான். "இதென்னடா சங்கடம்? ஏனோ நான்......" என்று தன்னையே வைதுகொண்டான். இவ்வளவிற்கும் இடையில் துளசியின் அழகிய முகவெட்டைக் கண்டு பாலகிருஷ்ணன் எதிரே வரும் ஆபத்தையும் மறக்கலானான். அரை குறையாக க்ஷவரம் செய்த மூஞ்சியுடன் கீழே போனான். அவனுடைய மார்பு, 'திடுக் திடுக்' என்று அடித்துக்கொண்டது. முகவாட்டத்துடன் கிழவரும் அவர் எதிரே மற்றொருவரும் கூடத்தில் உட்கார்ந்திருந்தனர். புதிய ஆசாமி தீக்ஷண்யமான பார்வையுடன் இவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீங்களா என்னைக் கூப்பிட்டது?" என்றான் பாலன்.

கிழவர், "ஆமாம், வா, உட்காரு" என்றார்.

புதிய மனிதரைப் பார்த்த பாலகிருஷ்ணன், "க்ஷவரங்கூடச் சரியாகப் பண்ணிக்கொள்ளவில்லை" என்று முகத்தில் அசடு வழிய மொழிந்தான்.

கிழவர் மிகவும் வேதனை நிறைந்த குரலில் பாலகிருஷ்ணனைப் பார்த்து, "இவர் உன்னை எதற்கோ தேடிக்கொண்டு வந்திருக்கிறார்" என்றார்.

வந்த ஆள் கம்பீரமான குரலில் நிதானமாக, "ட்யூடியைச் செய்யவேண்டுமே. எனக்குக் கஷ்டமான காரியத்தை நான் செய்ய வேண்டியிருக்கு (கிழவரைப் பார்த்து) பிள்ளையாண்டான் வந்து இரண்டு தினங்கூட ஆகவில்லை. உங்கள் எல்லோருக்கும் மனக் கஷ்டத்தைக் கொடுக்கிறேன்" என்றார்.

பிறகு பாலகிருஷ்ணனைப் பார்த்து வந்தவர், "ஏன் ஸார், நீர்தானே மிஸ்டர் ராமமூர்த்தி? உங்கள் பேரில் ஒரு வாரெண்ட் வந்திருக்கிறது. தயவு செய்து என்னுடன் தாணாவிற்கு வரவேண்டும்'' என்றார்.

பாலகிருஷ்ணனுடைய நிலைமை எப்படி இருக்கும்? நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். உயரத்தில் பறக்கும் ஆகாய விமானத்திலிருந்து ஒருவன் கீழே கடலில் விழுகிறான். ஒரு பெரிய திமிங்கிலம் வாயைப் பிளந்து கொண்டு அவனை விழுங்கச் சித்தமாக இருக்கிறது. அவன் நிலைமைதான் பாலகிருஷ்ணனுக்கும்.

''வாங்கோ, போகலாம்" என்றார் வந்தவர்.

''நான் பாலகிருஷ்ணன்......பால......ராமமூர்த்தி அல்லவென்று ருஜூ......'' என்று குழறினான்.

ஏளனச் சிரிப்புடன் ஸி-ஐ-டி ஆபீஸர், ''ஸார், அத்தாட்சி இல்லாமலா நாங்கள் உங்களை...'' என்றார்.

கிழம் இதையெல்லாம் ஊமைக்கோட்டான் மாதிரி கவனித்துக்கொண்டிருந்தது.

பாலகிருஷ்ணன் தைரியத்துடன், ''நான் அப்படி ராமமூர்த்தி அல்லவென்று ருஜூப்படுத்தினால்...?'' என்று கூறிக் கைலாஸமையருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு, ''மன்னிக்கவேண்டும் மாமா, நான் உங்களை ஏமாற்றி மோசத்தனமாக நடந்தேன். என் பேர் பாலகிருஷ்ணன். ராமுவின் 'க்ளாஸ்மேட்'. ஏதோ வேடிக்கையார்த்தமாகப் புத்தி பிசகி இதைச் செய்துவிட்டேன்'' என்று கண்ணீர் பெருக மன்றாடினான். வந்தவர் ஸ்தம்பித்துவிட்டார். ''இது இன்னும் திடுக்கிடும்படியான செய்தி. (கிழவரைப் பார்த்து) இந்தக் குற்றத்திற்காவது இவரைக் கை......?'' என்று சொன்னபோது, பின் புறத்திலிருந்து லலிதா, புன்சிரிப்புத் தவழும் முகத்துடன், ''போதும் சித்தப்பா, இவரை எங்களிடம் விட்டுவிடுங்கள். நாங்களே இவருக்குத் தகுந்த தண்டனையை விதிக்கிறோம்'' என்றாள்.

பாலகிருஷ்ணனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனுக்கு எல்லாம் ஒரே மர்மமாக இருந்தது. திரும்பிப்

பார்த்த போது ராமு நிற்பதைக் கண்டான். அவன் ஸி-ஐ-டியின் தோளைத் தட்டிக்கொடுத்து, "வேண்டாம், மகாதேவ். பாவம்! போனால் போகிறான்.—டே! பாலு, மாடிக்கு வா" என்றான்.

'ஓ! மகாதேவன் ராமு மைத்துனனா?'—பாலகிருஷ்ணனுக்குத் தலை கிறுகிறுத்தது. நாற்காலியோடு கீழே விழப்போனான். அப்போது வீடு தூளாகும்படி ஒரு ஹாஸ்ய கப்பம் உண்டாயிற்று. "ஹா—ஹா; ஹோ—ஹோ; ஹி—ஹி" எங்கும் ஒரே சிரிப்பு மயம்.

"ஹே பூமிதேவி, பிளந்து என்னை மறைத்துக் கொள்."—பாலகிருஷ்ணனுடைய மூளையில் ஒரு வண்டு 'விர் விர்' என்று துளைப்பதுபோல் இருந்தது. கண் எதிரே எல்லாம் கந்தர்கோளமாகி, மகாதேவன், கிழவர், ராமு, அனைத்தும் சேர்ந்து ரங்கராட்டினம் சுழல்வது போல் இருந்தது.

பாலகிருஷ்ணன் தன்னுடைய 'ஸூட் கேஸை' எடுத்துக்கொண்டு ஓட எத்தனிக்கையில் ராமு அவனைத் தடுத்து, "பாலு, சீ ஓடாதே" என்றான்.

"எதற்கு—இன்னும் ஏதாவது?..."

"இதைக் கேளுடா பாலு. உனக்கு என்ன தண்டனை விதித்திருக்கிறது தெரியுமா?"

வெறுப்புற்றவனாய்ப் பாலு, "ஆறு மாதம் மண்ணுக் குத்தானே?" என்றான்.

"இல்லேடா. ஆயுள் பரியந்தம் கைதிடா நீ!"

"யாருக்கு?"

"துளசிக்கு."

"அகப்பட்டால் அதிருஷ்டந்தான். வில்லொக்கும் நுதல் என்றாலும் வேலொக்கும் விழி என்றாலும்" என்று அளக்க ஆரம்பித்துவிட்டான் பாலு. இவ்வளவு நடந்தும் அவன் மனம் மட்டும் துளசியை நாடிச் சென்றது. "வாஸ்தவமா! இல்லாவிட்டால் என் மானத்தை வாங்க இன்னொரு கூத்தா?" என்றான் பாலகிருஷ்ணன்.

'ஷ் ஷ்' என்று உதட்டில் விரலை அழுத்தி, பக்கத்து அறையைச் சுட்டிக் காட்டி ராமு, "அதைக் கவனி" என்றான். அடுத்த அறையில் பின்வருமாறு இருவர் பேசுவது கேட்டது:

லலிதா: உனக்கு இஷ்டந்தானே?

துளசி: உம்.

லலிதா: உம் என்றால்?

துளசி: உனக்கு எது இஷ்டமோ அது!

லலிதா: எது இஷ்டம்?

துளசி: நீதான் சொல்லு.

லலிதா: நன்னாத் தெரிஞ்சிக்காதே ஏன் பதில் சொல்றே? கல்யாணம் பண்ணிக்க இஷ்டமா?

துளசி: யாரை? ராமு—அத்திம்பேரையா?

லலிதா: இதோ கொடுக்கிறேன் பார் சாப்பாடு!

துளசி: பின்னே சரியாகச் சொல்லேன்.

லலிதா: நோக்குக் கல்யாணம். ஆசாமி யார் என்று ஊர்ஜிதப்படுத்திக்கொள். பலே கெட்டிக்காரிடீ நீ!

துளசி: (தலையைக் கோணிக்கொண்டு) போடீ, நிஜமாவா கேக்கறே?

லலிதா: விளையாட்டில்லை, வாஸ்தவமாகத்தான்.

துளசி: யாரைப் பண்ணிக்க?

லலிதா: பாலகிருஷ்ணனை.

துளசி: அந்த......?-விதி இருந்தால் வேறே என்ன பண்றது!

லலிதா: ஆனால் சம்மதந்தானே? எல்லாருக்கும் சொல்லிவிடட்டுமா?

"அப்பப்பா, இதை என் வாயிலிருந்து வரவழைக்கணுமா?" என்று கூறிச் சிரித்துவிட்டுத் துளசி ஒரு சிறு தென்றல் எனக் கீழே ஓடிப் போய்விட்டாள்.

# கிருஷ்ணவேணி

குழந்தையும் கையுமாய்ச் சாமளா வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்ததும் அவளுடைய சிறிய நாத்தனுர் ஐமு ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டே உள்ளே ஓடிப்போய் இரைக்க இரைக்க, "அம்மா, அம்மா! மன்னி வந்தூட்டாடீ" என்ருள்.

அதற்குள் சாமளாவும் உள்ளே வந்து குழந்தையைத் தன் மாமியார் கையில் கொடுத்துவிட்டு அவளை நமஸ்கரித்தாள். கண்களினின்று ஆனந்தக் கண்ணீர் பெருகப் பேரனை அன்புடன் வாங்கி மடியில் வைத்துக் கொண்டு, "என்னிக்கும் மகராஜியா ஒரு குறையும் இல்லாதே இருடியம்மா!" என்று சாமளாவை ஆசீர்வதித்தாள் அவள் மாமியார்.

"மன்னி, கிருஷ்ணவேணி கன்று போட்டிருக்கே, நோக்குத் தெரியுமா? ரொம்ப அழகா இருக்கு, வந்து பாரேன்" என்று கூறி ஐமு சாமளாவின் கையைப் பிடித்து இழுத்தாள். சாமளாவின் மாமியார், "வந்ததும் வராததுமாய் அவளை ஏண்டி தொந்தரவு பண்றே? சாப்பிட்டு ஆன பிற்பாடு போய்க் காட்டு" என்று சொல்லிவிட்டுப் பேரனைக் கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

ஐமுவும் சாமளாவும் கிருஷ்ணவேணியைப் பார்க்க மாட்டுத் தொழுவத்திற்குச் சென்ருர்கள். கிருஷ்ணவேணி சாமளாவைப் பார்த்ததும் தலையை ஆட்டிக் கொண்டே கழுத்தை நீட்டிற்று. அதன் கன்று துள்ளித் துள்ளிக் குதித்துக்கொண்டே க்ஷணத்திற்கு ஒரு தரம் அதனிடம் வந்து ஊட்டிக்கொண்டிருந்தது. சாமளா அதை ஆவலோடு எடுக்கப் போனுள். கிருஷ்ணவேணி உறுமிக்கொண்டே அவளை முட்ட வந்தது. சாமளா கன்றுக்குட்டியைக் கீழே விட்டுவிட்டுத் தூர ஓடி வந்து விட்டாள். கிருஷ்ணவேணி கன்றை நக்கிக் கொடுத்து வாலால் ஈக்களை ஓட்டிக்கொண்டிருந்தது. சாமளா

அதன் அலைதாடியைத் தடவிய வண்ணம், "நான் வளத்தது! இப்போ அதன் கன்னுக் குட்டியைத் தொடறேன்னுட்டு என்னையே முட்ட வரது பார், துஷ்டு" என்று அதை வைதாள்.

கிருஷ்ணவேணி சாமளாவின் பிறந்தகத்துப் பசு. அது இங்கே எப்படி வந்தது என்றால்—அந்தக் கதையைத் தான் இப்போது சொல்லப் போகிறேன்.

சாமளாவிற்கு வயது எட்டாய் இருந்தபோது அவர்கள் வீட்டில் லக்ஷ்மி என்று ஒரு பசு இருந்தது. அதன் கன்றுதான் இந்தக் கிருஷ்ணவேணி. வால் மயிர் கறுப்பாய் இருந்ததனால் சாமளா அதற்கு அப்பெயர் வைத்தாள். வெயில் வேளையில் அவளும் அவள் தம்பி விச்சுவும் சேர்ந்துகொண்டு தங்கள் தோட்டத்தில் புல் செதுக்கி அதற்குக் கொண்டுவந்து போடுவார்கள். கிருஷ்ணவேணியின் நெற்றியில் முத்தம் இட்டுவிட்டுத் தான் இரவில் படுக்கச் செல்வாள் சாமளா. இப்படியே இரண்டு வருஷங்கள் கழிந்தன. சாமளாவிற்குக் கல்யாணம் செய்யும் வயது வந்துவிட்டபடியால் அவள் தகப்பனார் அவளைப் பார்க்கும் போதெல்லாம் ராஜாத்தியாட்டம் இருக்கும் தம் பெண்ணுக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டுமே என்று ஏங்குவார்.

ஆனால் அதற்காக அவர் அதிகச் சிரமப்படவில்லை. சீக்கிரத்திலேயே நல்ல வரன் அகப்பட்டது. தம்முடைய பால்ய நண்பரான மாங்காட்டுச் சந்திரசேகர சர்மாவின் ஒரே பிள்ளை நாகராஜனுக்கு நிச்சயம் பண்ணிவிட்டார். முகூர்த்த தினமும் குறித்தாய்விட்டது.

நாகராஜனுக்கு அப்போது வயது பதினாறு. பையனுடைய மூக்கும் முழியும் படத்தில் எழுதினாற் போல் இருக்கும். அந்த வருஷந்தான் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்குப் போயிருந்தான். கல்யாணம் நடப்பதற்கு இன்னும் ஒரு வாரந்தான் இருந்தது. ஒரு நாள் சாமளாவும் விச்சுவும் கிருஷ்ணவேணிக்குப் புல் செதுக்கிக் கொண்டிருந்தார்கள்.

விச்சு சாமளாவைப் பார்த்து, "உனக்குக் கல்யாணமானா, மாமியாராத்துக்குப் போய்விடுவாயே? அப்போ

கிருஷ்ணவேணி இல்லாதே உனக்கு வெறிச்சென்றிருக் காது, அக்கா?'' என்று கேட்டான்.

''ஆமாண்டா, விச்சு, நான் கூட அதைப் பத்தித் தான் யோசிக்கிறேன். என்ன பண்ணறதுன்னு தெரியலே யேடா?'' என்று வருத்தத்துடன் சொன்னாள் சாமளா.

விச்சு, ''நீ வருத்தப்படாதே அக்கா, எனக்கு ஒரு யுக்தி தோன்றது. அது மாதிரி செய்தாயானா நீ எப்பவும் கிருஷ்ணவேணியோடேயே இருக்கலாம்'' என்று சொல்லி அவள் காதோடு காதாய் ரகசியமாக என் னவோ சொன்னான். அதைக் கேட்டதும் சாமளாவின் முகம் மலர்ந்தது. அப்புறம் இருவரும் உத்ஸாகத்துடன் புல் செதுக்கலானார்கள்.

கல்யாணத்தன்று காலே. மாப்பிள்ளே பரதேசிக் கோலம் போய்த் திரும்பி வந்து மணப் பந்தலில் உட் கார்ந்தான். முகூர்த்தம் நெருங்கிவிட்டபடியால் வாத்தியார் தட்டிலிருந்த தாலியை எடுத்து மாப்பிள்ளே யிடம் கொடுக்க வந்தார். நாகராஜன் அதை வாங்கிக் கொள்ளாமல் கம் என்று இருந்தான். இதைக் கண்ட தும் நாகராஜனின் தகப்பனார் உரத்த குரலில், ''அபசகுன மாட்டம் ஏண்டா தாலியை வாங்கிக்காதே கம்முனு இருக்கே? முகூர்த்தம் தவறிப் போறது, வாங்கிக் கோடா'' என்று கத்தினார்.

அப்போதும் நாகராஜன் சும்மா இருந்தான். சந்திரசேகர சர்மா கோபத்துடன் பல்லே நறநறவென்று கடித்துக்கொண்டே அவன் அருகில் போய், ''ஏண்டா, சொல்றவன் மனுஷ்யன் இல்லே! ஏண்டா கையை மூடிக் கொண்டிருக்கே? கையிலே என்ன?'' என்றார்.

அதற்குள் சாமளாவின் தகப்பனார் அங்கே வந்து, ''சம்மந்திவாள், பையனைக் கோவிச்சுக்க வேண்டாம். அவனுக்கு ஏதானு வேணும்னு ஆசையிருக்கலாம்'' என்று சொல்லிக்கொண்டே நாகராஜன் அருகில் சென்று, ''என்னப்பா கோவம்? என்னிடம் சொல் லேன்'' என்று விநயமாகக் கேட்டார். நாகராஜன் தன் கையில் இவ்வளவு நேரம் மறைத்து வைத்திருந்த ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தான். அதைப் படித்து

விட்டு அவர் இடி இடி என்று சிரித்து, "இதுதானே! இதற்கா இவ்வளவு பிரமாதம்? அப்படியே செய்து விட்டால் போறது" என்றார்.

மாப்பிள்ளையின் தகப்பனார், "என்ன? என்ன?" என்று கேட்டார். சாமளாவின் தகப்பனார் கடிதத்தை அவர் கையில் கொடுத்தார். அதில் பெரிய பெரிய எழுத்துக்களில் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:

"அநேக நமஸ்காரம். எனக்குக் கிருஷ்ணவேணி மேலே ரொம்ப ரொம்ப ஆசை. அது இராதே நான் ஒரு நாள் கூட இருக்க முடியாது. கிருஷ்ணவேணியைக் குடுத்தாத் தான் தாலி கட்டுவேன்னு சொல்லணும். நான் சொன்ன படி செய்யணும்.

இப்படிக்கி,
சாமளா."

இந்தக் கடிதம் யார் மூலமாக மாப்பிள்ளையிடம் வந்திருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளலாம்.

# பாசமும் பக்தியும்

கருட நதிக் கரையில் ஒரு வைஷ்ணவ ஸ்தலம். பரம பக்தரான ஹரிதாஸ ஸ்வாமி அவ்வூரில் வாழ்ந்து வந்தவர். நல்ல மரபில் தோன்றிய அந்தணரான அவருக்கு இயற்கையாகவே துறவு மனப்பான்மை உண்டு. கருட நதியின் தீர்த்த மகிமையும் அதன் கரையில் செழுமையாக வளரும் துளசியின் விசேஷமும் வைராக்கியக் கொழுந்தை அவர் மனத்தில் சுடர் விட்டு எரியச் செய்திருக்கலாம். தகப்பனுருடைய வற்புறுத்தலின் பேரில் வேண்டா வெறுப்புடன் அவர் இல்லறம் நடத்தி வந்தார். தன்மேல் பித்துக் கொள்ளும் பக்தர்களைச் சோதனை செய்வதற்காகவே ஈசன் அவர்களைப் பல துன்பங்களுக்கு ஆளாக்குவான். ரூபவதியான மனைவியோடு அவர் குலாவியதெல்லாம் சில வருஷ காலமே. அந்தப் பாக்கியவதி ஓர் ஆண் மகவை ஈன்றதும் வைகுண்ட வாஸனின் திருவடி நிழலை அடைந்தாள். இந்த ஆறாத் துயர் போதாதென்று மற்றும் ஓர் அதிர்ச்சி! அவருடைய மகனும் இரண்டொரு வருஷங்களுக்குப் பிறகு தாயைப் பின் தொடர்ந்தான். அதற்குமேல் ஹரிதாஸருக்கு என்ன இருக்கிறது சம்சாரத்தில்? கசந்து போய்த் தாம் பிறந்த ஊரையும் உற்ருர் உறவினரையும் துறந்து கிருஷ்ண பகவான் அற்புதத் திருவிளையாடல்கள் நிகழ்த்திய பிருந்தாவனத்தை அடைந்து, அங்கே சாகும்வரையில் இருக்க உறுதி கொண்டுவிட்டார்.

போகும் முன் அவர் தம் உடைமைகளைப் பங்காளிகளுக்குக் கொடுத்துவிட்டார். தமக்குக் கடன் பட்டவர்களையும் கடன் தொல்லையிலிருந்து நீக்கிவிட்டார். அவர் மூலமாகக் கோயிலுக்கு எவ்வளவோ திருப்பணிகள் நடந்தேறின. ஏழை பாழையான குடிகள் அநேக சௌகர்யங்களை அடைந்துவந்தனர். அவர் திடீரென்று

இப்படித் துறந்து போவது சில நல்ல ஆத்மாக்களுக்கு வருத்தத்தையே கொடுத்தது. தாயாதிகளுக்கு மட்டும், உள்ளுக்குள் அவர் ஊரைவிட்டுப் போய்விடுவதைக் குறித்து அளவிலா மகிழ்ச்சியே. காமதேனுவைப் போன்ற தம்முடைய பசுவையும் கன்றையும் ஓர் எளிய பிராம்மணருக்குத் தானம் செய்துவிட்டார் அவர். துன்பம் வந்த சமயத்தில், தமக்கு இன்பத்தையும் ஆறு தலையும் தந்த திருமறைக்குச் சமானமான திவ்யப் பிர பந்தமும், வயிற்றிற்குச் சிறிது உணவும், உடுத்துக் கொள்ள வஸ்திரமும் அடங்கிய மூட்டை ஒன்றைத் தோள்மீது போட்டுக்கொண்டு, கையில் கிண்டியுடன் பிருந்தாவனம் இருக்கும் திசையான வடக்கு நோக்கிப் புறப்பட்டார். அவர் கருட நதிக் கரையை அடைந்து அங் குள்ள மயானத்தைப் பார்த்தபோது அவருடைய கண் களில் நீர் அரும்பிற்று. இறந்துபோன மனைவி, மகன் இவர்களின் நினைவு வரவே நெடுநாளைக்கு முன் அவர் நடத்திய இல்லறத்தின் சித்திரம் அவர் கண் எதிரே வந்தது. உடனேயே மனத்தில், 'ஆசையை விடு' என்று ஒரு குரல் கேட்கவே, கண்ணீரையும் இருதய துர்ப்பலத் தையும் உதறிவிட்டுப் பிரயாணத்தைத் தொடங்கினார்.

வழி மாளாது நாளுக்கு நாள் நீண்டுகொண்டே சென்றது. கிருஷ்ணத் தியானமும் பிருந்தாவனமுமே தம் முடைய லக்ஷ்யம் என்ற நினைவே, அவரை வழிக் கஷ்டங் களினின்று காப்பாற்றின. முதல் முதலில் அவருக்குப் பயம், பாதையில் கள்வர்கள் வழி மறிப்பார்களோ என்று. ஆனால் நாளடைவில் தாம் துறவி, பயந்து போற் றக்கூடிய பொருள் தம்மிடத்தில் என்ன இருக்கிறது என்ற துணிவு ஏற்பட ஏற்பட அவர் இரவு வேளை களில்கூட வழி நடக்கலானார். மனத்தில், 'நிற்கவேண்டும்' என்று தோன்றினால்தான் அவர் எந்த ஊரிலாவது தங்குவார். இல்லாவிட்டால் போய்க்கொண்டே இருப் பார். அவருடைய முக காந்தியைப் பார்த்துப் பலர் அவரைத் தங்கள் அதிதியாகக் கொள்ள விரும்பினர். ஆனால் சிலருக்கே அவருக்குப் பிக்ஷை அளிக்கும் பாக்கி யம் கிட்டியது. தொடர்பாக அநேக தினங்கள் அவர் எதுவும் உண்ணாத பட்டினியாகவே இருந்ததும் உண்டு.

அந்தக் காலங்களில் துளஸீ தளமும் ஜலமுமே ஆகாரமாய் இருந்தன. நெடிய மலைகளையும், கடத்தற்கு அரிய ஆறுகளையும், ஊர்களையும், நகரங்களையும் பின்னால் விட்டுச் சென்றார். காடுகளில் புகுந்து போகும்போதுதான் அவருக்கு நிம்மதி ஏற்படும். கிருஷ்ணனை நினைவில் கொள்வதற்கு அந்தத் தனிமையே அவருக்கு உகந்ததாய் இருந்தது. மலையினின்று இழியும் அருவிகளைக் காணுந்தோறும் அவர் அவற்றில் முழுகுவார். குளிர்ந்த நீரில் நின்று வெகுநேரம் வரையில் தியானத்தில் ஆழ்ந்திருப்பார்.

* * *

ஒரு சமயம் இருட்டுமுன் ஹரிதாஸர் பனந்தோப்பு ஒன்றில் புகலிடம் கொண்டார். தும்பியினது இறகின் நிறம் கொண்டு வெளிச்சமும் மங்கிக்கொண்டே வந்தது. மெதுவான தென்றலும் அவ்வந்திப் பொழுதின் அமைதியும் ஹரிதாஸரின் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டாக்கின. நெக்குருகித் தம் இஷ்ட தெய்வத்தை நினைந்து புலம்பினார். அவர் நாராயணனைத் துதித்துப் பாடிய போது, தாம் இழந்தவர்களைப் பற்றிய துக்கம் வந்து கண்டத்தை அடைத்தது. அவருடைய நீர் ஊறும் விழிகளில் வானில் ஒளிரும் திங்களது இளம் பிறையின் சிறிய பிரதிபிம்பம் துடித்தது. இப்படியே அவர் சோகத்தில் ஆழ்ந்துவிடவில்லை. உடனே கிருஷ்ணன்பால் சித்தம் வைத்தார். எங்கணும் பரவிய விசும்பைப் போன்ற அவனுடைய ஸாமீப்யத்தை வனமெங்கும் நிரம்பிய பிறைமதியின் கதிரின் தண்மையில் உணர்ந்தார் ஹரிதாஸர். ஆனால் தம் இஷ்ட தெய்வத்தின் முகத்தைப் பாவிக்கும் போதெல்லாம் நெருப்பில் இட்ட தனயனின் வதனமே அவர் முன் தோன்றியது. அதுதான் அவருடைய மனத்தில் பதிந்துவிட்டதே! வேறு எவ்விதம் அவரால் பாவனை செய்துகொள்ள முடியும்? தம் குழந்தையின் வடிவிலே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை அடைய அவர் விரும்பியதில் தவறு என்ன?

இம்மாதிரியான எண்ணங்களில் தம்மை மறந்து இருக்கும் போது அவருக்குக் கண் அயர்வு ஏற்பட்டது.

பேரின்பக் கனவுகள் கண்டு தூக்கத்தில் சிரித்தார். தம்முடைய மனைவியும் மகனும் ஸாக்ஷாத் வைகுண்டத்தில் ஒளி பெற்றவர்களாகத் திகழ்வதும், தாமும் அவர்களை அணுகி ஆனந்தத்தில் மூழ்கியிருப்பதும் ஸ்வப்னத்தின் மாயையே. மகனையும் மனைவியையும் ஓடி அணைத்துக் கொள்ளப் போனபோது கனவு சட்டென்று மறைந்தது. கண்களைத் திறந்து பார்க்கையில் பனஞ்சோலையினுள் சூரியனின் பொன்னொளி பாய்ந்துகொண்டிருந்தது. எழுந்து மூட்டையைத் தோள்மீது போட்டுக்கொண்டு ஹரிதாஸர் வழி நடக்கலானார். பாதையில் இரண்டொரு கிராமங்கள் குறுக்கிட்டபோதிலும் அவர் எங்கும் தங்கவில்லை. நடந்துகொண்டே இருந்தார். இரவில் ஏற்பட்ட கனவின் பலனோ என்னவோ, அவர் மனம் எந்த இடத்திலும் நிலைக்கவில்லை. ஏதோ மறைமுகமான சக்தி அவரை இழுத்துக்கொண்டு சென்றது.

பொழுது சாயும் தறுவாய். ஒரு சிற்றூரின் வீதி வழியே போகையில் களைப்பினால் அவருடைய தேகம் தள்ளாடியது. ஒரு வீட்டுத் திண்ணையில் சாய்ந்துவிட்டார். ஆனால் ஊரெங்கும் சந்தடியற்று இருந்தது. தெருவில் ஒருவராவது நடமாடக் காணோம். ஸந்தியா காலம் ஆகியும் மாடங்களில் விளக்கு வைக்க எந்த ஸ்திரீயும் வெளியே வரவில்லை. மாட்டின் குரலோ, மனிதரின் அரவமோ ஒன்றும் செவிகளில் படவில்லை. ஹரிதாஸருக்கு அதிசயமாக இருந்தது. ஊர் ஏன் இப்படிப் பாழடைந்து விளங்க வேண்டும் என்ற சந்தேகம் வரவே வீட்டினுள் சென்று விஷயம் என்னவென்று அறிய ஆவல் கொண்டார். உள்ளே கால் எடுத்து வைத்தவர் முன் கட்டில் ஒரு காட்சியைக் கண்டு திடுக்கிட்டு நின்றார். நாலைந்து சவங்கள் தரையில் அலங்கோலமாகக் கிடந்தன. திக்பிரமை தெளிந்து ஒவ்வொன்றின் அருகிலும் சென்று பரிசோதித்துப் பார்த்தார். ஒன்றுக்காவது உயிர் இருப்பதாகத் தோன்றவில்லை. எத்தனை நாட்கள் ஆயினவோ இவர்களெல்லாம் மரித்து! எந்தக் கொடிய நோய் இந்தக் குடும்பத்தினரை வாரிக் கொண்டு போய்விட்டதோ! இவ்வாறெல்லாம் அவர் நினைக்க நேர்ந்தது. வேறு ஏதாவது

ஒரு ஜீவன் நமனோடு போராடிக்கொண்டிருக்குமோ என்று கவனிக்க உட்புறம் சென்றார்.

ஓர் அறையில் பெண் ஒருத்தி மஞ்சத்தில் கிடந்தாள். அவள் அருகில் கிருஷ்ண விக்கிரகம்போல் ஒரு சிசு தனக்குத் தானே விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்தார் ஹரிதாஸர். சுவர் ஓரத்தில் தொங்கும் சிலந்திக் கூட்டைத் தொட அது கூச்சலிட்டுக் கைகளை நீட்டிக்கொண்டே இருந்தது. இந்தக் குழந்தை தனக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தையும் லக்ஷயம் செய்யாது இப்படிச் சிரித்துக்கொண்டு தவழ்ந்து விளையாடுவதைக் கண்டதும் பரம வைஷ்ணவரான ஹரிதாஸரின் உள்ளம் இரக்கத்தினால் உருகியது. அவரைப் பார்த்ததுமே குழந்தையும் 'பா...பா...உம்' என்று கொஞ்சிக்கொண்டே வந்தது. அதை எடுத்துத் தம் மார்போடு அணைத்துக் கொண்டார். சற்று முன்புதான் அதன் தாய்க்குப் பிராணன் போயிருக்கவேண்டும். குழந்தை தாய்ப்பால் இல்லாமல் இப்படிச் சுறுசுறுப்புடன் இருக்குமா என்று யோசனை வந்தது ஹரிதாஸருக்கு. அந்தப் பாவையின் தேகம் விகாரமின்றி அப்போதுதான் நித்திரைக்குப் போனது போல் இருந்தது. தன்னைச் சுற்றி மறலி உலவும்போது, இன்னும் சற்று நாழிகை வரையில் கவனிப்பாரே இராமல் இருந்தால் தன் கதி என்ன ஆகும் என்பதையும் உணராது விளையாடும் குழந்தையைப் பார்த்ததும் கருட நதிக்கரையில் அன்று ஒரு நாள் தான் கண்ட விந்தைக் காட்சி ஒன்று ஹரிதாஸர் ஞாபகத்துக்கு வந்தது. ஆற்றங்கரையில் ஒரு விதப் பூச்சிக் கூட்டம், சூரியனுடைய ஒளி எழுந்ததுமே, குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து விளையாடிவிட்டு வெயில் ஏற ஏற வெப்பம் தாளாமல் களியாட்டம் எல்லாம் அடங்கிப் போய்ச் சுருண்டு விழுந்து மடிந்ததைச் சிறுவயதாய் இருக்கையில் பார்த்திருக்கிறார் அவர். தற்செயலாகத் தமக்குக் கிடைத்த செல்வத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். குழந்தையின் பசியைப் போக்கப் பாலுக்கு எங்கே போவது? கிண்டியிலுள்ள ஜலத்தை இரண்டு வாய் குழந்தைக்குப் புகட்டினார். அதுவும் 'அவக், அவக்' என்று நெஞ்சு வறட்சியில் குடித்தது.

'திரும்பி வர மாட்டேன்' என்று ஊரைவிட்டுச் சென்ற ஹரிதாஸர் ஒரு குழந்தையுடன் பிறந்த இல்லத்திற்கே திரும்பி வந்துவிட்டார். ஊரில் அவர் வந்ததைப் பற்றி ஒரே அமளி குமளி. பல பேர் பல விதமாகப் பேசிக்கொண்டார்கள். எதையும் பொருட்படுத்தவில்லை அந்த விஷ்ணு பக்தர். ஆச்சரியம் என்னவென்றால் எல்லாவற்றையும் துறந்தவர் இப்போது தாயாதிகளிடம் சண்டையிட்டுத் தமக்குச் சொந்தமான நிலங்களையும் உரிமைகளையும் பிடுங்கிக்கொண்டு சம்சாரி ஆகிவிட்டார்.

அழிந்துபோன தோட்டங்களை மீண்டும் சீர்திருத்திப் பழையபடி தம் ஊரில் கோயில் கொண்டிருக்கும் பெருமாளுக்குப் புஷ்ப மாலைகளைச் சமர்ப்பிக்க ஆரம்பித்தார். பகவான் அருளால் கிடைத்த பிள்ளையைக் கண்ணினுள் மணிபோல் பாதுகாத்து வளர்த்து வந்தார். அவனை விட்டு அரைக்கணமும் அவர் பிரிந்து இருந்ததில்லை. தெருவில் செல்லும் மாட்டு மந்தை, பல்லக்கில் ஊர்வோர்கள், மணக் கோலங்கள் எல்லாவற்றையும் மகனுக்குக் காட்டி மகிழ்விப்பார். பர்வ உத்ஸவாதி தினங்களில் குழந்தையை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று அங்குள்ள அதிசயங்களைக் காண்பிப்பது அவர் வழக்கம். பெருமாள் வீதிவலம் வருகையில் வாத்திய கோஷங்களைக் கேட்டுப் பிள்ளையும் சிறு கை தட்டி ஆரவாரிக்கும், ஆடும். இவற்றைக் கண்டு பூரித்துப் போவார் அந்தப் பக்த சிரேஷ்டர். அவருடைய உறவினர்கள் துவேஷத்தினால் அவரைப்பற்றி, "ஸாது ஸாது என்ற சந்நியாசிக்குத் தடியாட்டமா இந்தப் பிள்ளை எங்கிருந்து வந்தது? எல்லாம் வாய்வேதாந்தந்தான்" என்றெல்லாம் கோள் சொல்லிக்கொண்டு திரிந்தனர். ஹரிதாஸர் காதுக்கும் இவை எட்டாமல் இல்லை. சிலர் மட்டும் அவர் திரும்பி வந்ததை ஊர் செய்த பெரும் புண்ணியம் என்றே கருதி அவரிடத்தில் அதிக மரியாதை காட்டிவந்தனர்.

தமக்குக் கிடைத்த பிள்ளையைப் பாதுகாப்பது வர வரக் கடினமான காரியம் ஆகிவிட்டது ஹரிதாஸருக்கு. அடிக்கடி குழந்தை தெருவில் தவழ்ந்துகொண்டே

போய்விடும். மாடு ஏதாவது முட்டித் தள்ளிவிடப் போகிறதே என்ற பயத்தினால் அவன் பின்னாலேயே அவர் ஓடுவார். தம்முடைய இஷ்ட தெய்வத்திற்குச் செய்யும் பூஜையையும் அரைகுறையாக நிறுத்திவிட்டு எந்தச் சமயத்தில் ஆபத்து வந்து அவனை இழந்துவிடுவோமோ என்றெல்லாம் அவருக்குத் திகில். பட்ட காலிலேதான் படும் என்ற வாக்கில் உள்ள உண்மை அவருக்குத் தெரியும்.

ஆசா பாசங்கள் ஒவ்வொன்றாக ஹரிதாஸரை மெல்ல மெல்லச் சுற்றிக் கொண்டன. இப்படியே ஆண்டுகள் பல கழிந்தன. அவருடைய வளர்ப்புப் பிள்ளைக்கும் வயது எட்டாகியது. அவன் செய்யும் துஷ்டத்தனங்களுக்கோ கங்குகரை கிடையாது. அந்தச் சிறு பிள்ளையினால் அவருக்கு ஓயாத தொல்லை. வேண்டாம் என்ற காரியத்தை அந்தப் பிள்ளை ஹடமாகச் செய்தே தீரும்.

மழைக்காலம் வந்துவிட்டால் ஹரிதாஸருக்குச் சங்கடம் அதிகம் ஆகுமே ஒழியக் குறையாது. தூற்றல் விழுவதுதான் தாமதம், பையன் தெருவில் சென்று தண்ணீரில் அளைய ஆரம்பித்துவிடுவான். மகனைப் பெயரிட்டு அவர், "அடா என் கண்ணு! கௌஸ்துபமணி! ஏண்டா இப்படித் துஷ்டத்தனம் பண்ணறே? வாடாப்பா, என்னைப் படுத்தாதேடா" என்றெல்லாம் செல்வமாகச் சொல்லி அழைத்துக்கொள்வார்.

வீட்டில்தான் இந்த உபத்திரவம் என்றாலோ ஊரார் வீடுகளிலும் கௌஸ்துபன் சேஷ்டைகள் புரிய ஆரம்பித்துவிட்டான். ஹரிதாஸர் பாலகனை எவ்வளவோ மிரட்டிப் பார்த்தார்; பயன்படவில்லை. அவனை அடித்து வழிக்குக் கொண்டுவர அவர் மனம் ஒப்பவில்லை. அவனால் அன்றோ அவர் தம் துயரை மறந்து மீண்டும் சம்சாரத்தைத் தம் மேல் தூக்கிப் போட்டுக்கொண்டார்!

ஊராரிடமிருந்து கௌஸ்துபனைப் பற்றிப் பலவிதமான கண்டனங்கள் வந்தன: ஒருவர் தோட்டத்தில் மாங்காய் திருடியதாகவும், மற்றொருவருடைய பிள்ளையை

னையப் புடைத்ததாகவும் இப்படியெல்லாம். ஹரிதாஸர் இவற்ருல் சிற்சில சமயம், 'பையன் அவனுடைய குல புத்தியைத்தானே காட்டுவான்? எந்தத் துன்மார்க்க னுடைய பிள்ளையோ இந்தத் தூமகேது?' என்று எண்ணுவதும் உண்டு. ஆனுல் வளர்த்த தோஷம்; பாசம் அவருடைய புத்தியை வந்து மறைக்கும். "என்ன பிரமாதத் தப்பை இவன் செய்துவிட்டான், இவர்கள் இப்படி முறையிடுவதற்கு! அவன்தானே எனக்கு எல்லாம்" என்று எண்ணுவார். அரை நிமிஷங்கூடத் தம் இஷ்ட தெய்வத்தைச் சிந்திக்க அவரை விடமாட் டான் கௌஸ்துபன்.

* * *

ஒரு நாள் அவருடைய அண்டை வீட்டாரான ரகுநாதர் அவரிடம் வந்து, "ஸ்வாமின்! பிள்ளை வளர்க் கத் தெரியாமல் இப்படிப் பிறருடைய அகங்களில் ஏன் விடுகிறீர்? நீர் பண்ணுவதுதான் பூஜை, நாங்கள் செய்வதெல்லாம் மண்ணு? உம்முடைய அழகான பிள்ளை செய்த அடாத காரியத்தை வந்து பாருமே! பகவானுக்கு நைவேத்தியம் செய்வதற்கு முன்பே நவ நீதத்தை அள்ளிக் கொண்டு போய்விட்டானே. பிள்ளையை உம்மால் அடக்க முடியாவிட்டால் நான் நொடிப் பொழுதில் அவன் கொட்டத்தை அடக்கி விடுகிறேனு இல்லையா, பாரும்" என்று கோபாவேசத் துடன் மொழிந்தார்.

சாந்தப் பிரகிருதியான ஹரிதாஸர் இதைக் கேட்ட தும் நிதானத்தை இழந்து, கௌஸ்துபனை வீடெங்கும் தேடிக் கடைசியில் புழக்கடையில் ஒரு புதர் மறைவில் வெண்ணெயை ஸ்வாரஸ்யமாக விழுங்கிக்கொண்டிருக் கும்போது கண்டுபிடித்தார். அவனைக் கை ஓயும் வரை யில் அறைந்தார். தன்னை அப்பா இப்படி வருத்துவார் என்று அந்தத் துஷ்டப் பிள்ளை கனவிலும் எண்ண வில்லை. "சனியனே, வீட்டை விட்டுப் போ! என் பெயரைக் கெடுக்க வந்தாயே! உன்னை ஏனே நான் வழியில் கண்டெடுத்தேன்? அதனுல் அன்ருே இப்படி ஊராரிடம் நான் பேச்சு வாங்கிக்கொள்கிறேன்? எங்கே

யாவது ஒழிந்து போய்விடு, என்னைப் பிடித்த சனியனே!'' என்று திட்டிவிட்டார். பிள்ளையின் முகத்தில் உலவிய துக்கமும் கண்களில் தோன்றிய ஏக்கமும் ஹரிதாஸரின் உள்ளத்தை வேதனைப்படுத்திய போதிலும் அவர் சற்றும் தம் மனச் சஞ்சலத்தைக் காட்டாமல் அவனை வெளியே தள்ளிவிட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

இளகிய நெஞ்சினரான அவருக்கு அந்தப் பிரிவு தாள முடியவில்லை. சில நாழிகைக்கெல்லாம் கதவைத் திறந்து கௌஸ்துபனைக் கூப்பிட்டார். ஆனால் பதில் குரல் வரவே இல்லை. வீட்டைச் சுற்றி நாலுபுறமும் தேடி அலைந்தார். அக்கம் பக்கத்து வீடுகளிலும் போய்ப் பார்த்தார். அங்கும் காணோம். ஹரிதாஸருக்குச் சொல்ல முடியாத வியாகுலம் வந்துவிட்டது. 'இருட்டு வேளை ஆகிவிட்டதே. பையன் எங்கேயாவது சென்று திரும்பி வர வழி தெரியாமல் தவிக்கிறானோ?' என்றெல்லாம் கவலை ஏற்பட்டது அவருக்கு.

கௌஸ்துபனைச் சமாதானப்படுத்த அவர் அன்று இரவுப் போஜனத்திற்காக அவனுக்குப் பிடித்த இரண்டொரு வியஞ்சன வகைகள் கூடச் செய்து வைத்தாரே; பாவம்! சிறுவன் காணாமல் போகவே அவருக்கு எதுவும் ருசிக்கவில்லை. ஸந்தியா பூஜையையும் மறந்துவிட்டார். பைத்தியம் பிடித்தவர்போல் இங்கும் அங்கும் அலைந்து, "கௌஸ்துபா, அப்பனே, எங்கேடா போனே?'' என்று கூவிக்கொண்டே தோப்புத் துரவுகளிலெல்லாம் ஒன்று விடாமல் தேடிப் பார்த்தார். பையனைப் பற்றி யாரைக் கேட்டாலும் "எனக்குத் தெரியாதே'' என்ற பதிலே வந்தது.

என்ன செய்வது என்று தோன்றாதவராய் ஹரிதாஸர் மீண்டும் தம் அகத்திற்கே வந்து மாட்டுக் கொட்டிலுக் கருகில் நின்று, "கௌஸ்துபா'' என்று அலறினார். ஒரு வேளை அவன் அங்கே பதுங்கிக்கொண்டு ரோஷத்தினால் பதில் தராமல் இருக்கிறானோ என்று கவனிக்க உள்ளே புகுந்து பார்த்தார்.

கௌஸ்துபன் வைக்கோல் போரில் படுத்துக்

கண் வளர்ந்திருப்பது தெரிந்தது. பிள்ளையைக் கண்டதும் கிழவர் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவரால் நிற்க முடியவில்லை. தாரை தாரையாக விழி நீர் பெருகத் தம் அருமைக் குழந்தையைக் கூளத்தினின்று எடுக்க முயன்றார். கௌஸ்துபனும் விழித்துக் கண்களைப் பிசைந்துகொண்டே அவரைப் பார்த்தான். பையனுக்கு ரோஷம் தணியவில்லை.

ஹரிதாஸரிடமிருந்து, "கண்ணு! உனக்குக் கோயிலிலிருந்து நல்ல பக்ஷணம் வாங்கித் தருகிறேன். உன்னை நான் இனிமேல் அடிக்க மாட்டேன். வாடா, என் மணியே?" என்ற ஆதரவான மொழிகள் வந்த பிறகுதான் அவனுடைய வருத்தம் ஆறியது.

கௌஸ்துபனின் நடத்தையிலும் அன்று தொட்டு ஒரு மாறுதல் தென்பட்டது. ஹரிதாஸர் அவனைத் தம் அருகில் அழைத்துக்கொண்டு பாகவதத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா செய்த லீலைகளைப் பற்றிச் சொல்லுவார். அவனும் அவற்றைக் கவனமாகக் கேட்பான். அதைப் பற்றிக் கற்பனைகளும் செய்துகொள்வான்.

* * *

ஒரு நாள் இரவு. பூஜை, பாராயணம் எல்லாம் முடிந்த பிறகு ஹரிதாஸர் கௌஸ்துபனுக்கு ஒரு ரஸமான கதையைச் சொன்னார்.

"மாதவபுரி என்று ஒரு சந்நியாசி இருந்தார். அவருக்கு இருந்த விஷ்ணு பக்தி யாருக்குமே கிடையாது. ஒரு சமயம் அவர் பிருந்தாவனத்தை அடைந்து அங்குள்ள குன்றைப் பிரதக்ஷிணம் செய்துவிட்டு இரவில் கோவிந்தகுண்டம் என்னும் குளக்கரையில் ஒரு மரத்தடியில் போய்த் தங்கினார். அப்போது ஓர் இடைப்பையன் ஒரு மண் குடுவையில் பாலுடன் அவர் எதிரே வந்து, 'ஐயா, நீங்கள் யாரோ தெரியவில்லை. யாரும் உங்களுக்கு ஆகாரம் தர வரவில்லை போல் இருக்கிறது. நாள் முழுவதும் பட்டினியாகக் கிடக்கிறீர்களே. இந்தப் பாலை அருந்தும்' என்றான். மாதவபுரி வியப்

புற்று, 'அப்பா! உனக்கு எப்படித் தெரியும் நான் பட்டினியாகக் கிடப்பது?' என்று கேட்டபோது சிறுவன் தன் முகத்தில் சிரிப்புத் தோன்ற, 'ஊர்ப் பெண்டுகள் நீர் கொண்டுவர இந்தக் குளத்திற்கு வந்தபோது உங்களைப் பார்த்தார்களாம். அதனால்தான் எனக்குத் தெரிந்தது. இந்த ஊருக்கு வருபவர்கள் யாரும் பட்டினியாகப் போகக்கூடாது. அந்தப் பெண்டுகளே என்னிடம் உங்களுக்குத் தரும்படி இந்தப் பாலைக் கொடுத்தனுப்பினார்கள். குடுவை இங்கேயே இருக்கட்டும். நான் திரும்பி வந்து எடுத்துக்கொண்டு போகிறேன்' என்றான்.

"பையன் போய்விட்டான். மண் பாண்டத்தை எடுத்துக்கொண்டு போக அவன் வரவே இல்லை. அன்று நடு நிசியில் மாதவபுரி ஒரு கனாக் கண்டார். ஒரு பாலகன் பக்கத்திலுள்ள ஒரு காட்டினுள் தம்மைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு செல்வது போலவும் அங்கே தம்மை நோக்கி அந்தச் சிறு பிள்ளை, 'மாதவா! வெகு நாளாக இந்தக் காட்டில் நான் இருந்து வருகிறேன். என்னைப் பூஜித்து வந்த பக்தன் மிலேச்சர்களுக்குப் பயந்து என்னை இங்கே கிடத்திவிட்டுப் போய்விட்டான். என்னைக் கவனிப்பார் யாரும் இல்லை. மழையினாலும் காட்டுத் தீயினாலும் நான் இங்கே கஷ்டம் அநுபவிக்கிறேன். என்னை உத்தாரம் செய்ய ஏதாவது ஒரு வழி செய். அப்பனே! உனக்காகத்தான் நான் வெகு நாட்களாகக் காத்துக்கொண்டிருக்கிறேன். கடைசியில் வந்துவிட்டாயே. சீக்கிரம் எனக்கு ஒரு வழி செய்' என்று சொன்னது போல் இருந்தது.

"அந்தக் காட்டிலேயே மாதவபுரி ஒரு மடத்தை ஸ்தாபனம் செய்து ஒரு கோயிலைக் கட்டுவித்துக் கோபாலகிருஷ்ண விக்கிரகம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்தார். ஸ்வாமியின் திருமஞ்சனத்திற்காகக் குளிர்ந்த சந்தனம் கொண்டுவரக் கேரள நாட்டிலுள்ள காடுகளில் அலைந்தார். அப்போது அவர் காட்டாற்றின் கரையிலுள்ள ஒரு சிறு விஷ்ணு ஆலயத்தில் இரவைக் கழிக்க நேர்ந்தது. அங்கு எழுந்தருளி யிருக்கும் கோபீநாத ஸ்வாமிக்குத் தீபாராதனை செய்து நைவேத்தியம்

ஸமர்ப்பிக்க வெகு நேரம் ஆகிவிட்டது. அர்ச்சகரை நோக்கி, அவர், 'இந்த ஸ்தலத்தில் ஸ்வாமிக்கு என்ன நைவேத்தியம் ஸாதிப்பதோ?' என்று கேட்டார். 'பெரிய வரே, இங்குள்ள தெய்வத்திற்கு க்ஷீரந்தான் நைவேத்திய மாக வைப்பது வழக்கம். அமிருதத்திற்குச் சமானமான சுவையுள்ள பாலைப் பன்னிரு மண் பாண்டங்கள் நிறைய இரவில் மூலஸ்தானத்தின் முன்னிலையில் வைத்து விட்டு வந்துவிடுவது வழக்கம்' என்று சொல்லிக் கொண்டே மணியை அசைத்துப் பூஜை செய்ய ஆரம் பித்துவிட்டார். அன்று மாதவபுரி கண்ணுரைக் கோபீநாத ரைத் தரிசித்துவிட்டுப் பட்டினியாக இருக்க வேண்டி இருந்தது. பகவானுக்கு அர்ப்பிதமான பாலைப் பிரஸாத மாகப் பெற அவரால் முடியவில்லை. அர்ச்சகரிடமும் தாம் பசியுடன் இருப்பதைத் தெரிவித்துக் கொள்ள வில்லை. அந்தப் பாலின் ருசிதான் எப்படி இருக்குமோ? அதைப்போல் பிருந்தாவனத்தில் உள்ள தம்முடைய இஷ்ட தேவதைக்கும் ஸமர்ப்பிக்கவேண்டும் என்ற ஆவல் மூண்டது அவருக்கு. கிருஷ்ண நாமமே அவருக்குச் சிறந்த பானமாய் இருந்தது அன்றிரவு.

"அதே ராத்திரி. கோயில் அர்ச்சகருடைய ஸ்வப் பனத்தில் ஸாக்ஷாத் எம்பெருமான் கோபீநாதன் தோன்றி, 'இந்த ஊருக்கு ஒரு சந்நியாசி வந்திருக்கிருர். அவர் பெயர் மாதவபுரி. அவருக்காக ஒரு க்ஷீர பாண் டத்தை நான் எடுத்து என் வேஷ்டியின் மடிப்பின் கீழ் மறைத்து வைத்திருக்கிறேன். என்னுடைய மாயை யிஞல் அதை நீ கவனிக்கவில்லை. அவர் நாள் முழு வதும் உணவின்றி வாடுகிருர். சீக்கிரம் கோவிலைத் திறந்து க்ஷீர பாத்திரங்கள் எத்தனை இருக்கின்றன என்று கணக்கிடு. இதன் உண்மை தெரியவரும்' என்று சொன்ன மாதிரி இருந்தது. மயிர்க்கூச்சிட அர்ச்சகன் ஓடிப் போய்க் கோயிலைத் திறந்து பார்க்கையில் பதிஞெரு க்ஷீர பாண்டங்களே இருந்தன. விக்கிரகத்தின் உடை மறைவில் மற்ருென்று பாலுடன் மறைந்து இருந்தது. பகவான் எவர் பொருட்டு இப்படித் தாமே அக்கறை கொண்டு பாலை மறைத்து வைத்தாரோ அந்த மகா புருஷரைக் கண்டறியப் பால் குடுவையுடன் அர்ச்சகர்

ஊரெங்கும் தேடினுர். கடைசியில் குளத்தங்கரையில் துளசிமணியை உருட்டிக்கொண்டு ஒருவர் ஹரி நாம ஸ்மரணையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்ததும் அந்த மஹாநுபாவர் இவராகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்து, அருகில் சென்று விநயமாக க்ஷீர பாத்திரத்தை நீட்டி, 'ஸ்வாமின்! உங்களைப் போன்ற பாக்கியவான்கள் மூவுலகிலும் இருக்கவே மாட்டார்கள். பாத தூளியைத் தாரும். என் முக்திக்கு வழியைக் காண்பியும். உமக்காக ஸாக்ஷாத் கோபீநாதரே இந்தப் பாலை மறைத்து வைத்திருந்தார். கனவில் தோன்றி அதை உம்மிடம் தருமாறு என்னை ஏவியுள்ளார். பருகும்' என்று சொல்லிச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார் அர்ச்சகர்.

* * *

கதையைக் கூறி முடித்தார் ஹரிதாஸர். கௌஸ்துபனும் மெய்ம்மறந்து சற்று நேரம் இருந்தான். ஒரு தெளிவு அவன் வதனத்தில் பிரகாசித்தது.

அப்புறம் அவன் ஹரிதாஸரை எந்த நேரமும், "அப்பா, அந்தக் கிருஷ்ணர் எங்கே தேடினுல் அகப்படுவார்? பிருந்தாவனத்தில் இருப்பாரா? போய்ப் பார்க்கலாமா?" என்று விசித்திரமான கேள்விகளைக் கேட்பான். ஹரிதாஸர் அவனுடைய சந்தேகங்களைத் தெளிவிக்க முடியாமல் திண்டாடினுர். அவை சாமான்யமான கேள்விகளா?

'பிருந்தாவனம் போகவேண்டும், கிருஷ்ணனேடு பழகவேண்டும்.' இதே ஏக்கம் பையனுக்கு. பையனுடைய உடல் இந்தக் கிருஷ்ணப் பைத்தியத்தினுல் வரவர இளைக்கத் தொடங்கியது. ஹரிதாஸர் மிக்க மனக்கிலேசம் கொண்டார். இதற்குப் பரிகாரம் செய்ய அவருக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை.

சில தினங்களுக்குப் பிறகு ஹரிதாஸர் பக்கத்துக் கிராமத்துக்குச் செல்ல வேண்டிய அலுவல் இருந்தது. கௌஸ்துபனையும் கூட்டிக்கொண்டு சென்றுல் கிருஷ்ணப் பிரமையைச் சற்று மறந்திருப்பான் என்று

அவர் எண்ணினார். பையனைப் பார்த்து, "அப்பா கௌஸ்துபா, பிருந்தாவனம், போகலாம் வருகிறாயா?" என்றார். உத்ஸாகத்தினால் பையன் பிரமையிலிருந்து துள்ளி எழுந்தான். "எத்தனை நாட்கள் பிடிக்கும் அப்பா?...கிருஷ்ணர் எப்படி இருப்பார்?" என்றெல்லாம் வினவலானான். பதில் ஒன்றும் பேசாமல் இருந்தார் ஹரிதாஸர். "நாளைக்கு நான் பிருந்தாவனம் போகப் போறேன்; கிருஷ்ணனோடு மாடு மேய்க்கப் போறேன். அவர் எனக்குப் புல்லாங்குழல் ஊதக் கற்றுக் கொடுப்பார்" என்று தன் மனத்திற்குள் சொல்லி உவகையில் பூரித்துக்கொண்டிருந்தான் அவன்.

அடுத்த நாள் அவனை அழைத்துக்கொண்டு ஹரிதாஸர் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டார். பாதி வழியில் ஒரு தோப்பில் பையனை உட்கார வைத்துவிட்டு, "கௌஸ்துபா, இங்கேயே இருந்தால் கொஞ்ச நாழிகைக்கெல்லாம் கிருஷ்ணர் மாட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு வருவார்; நீ அவரைப் பார்க்கலாம். அப்புறம் பழக்கம் ஏற்பட்டவுடன் பேசலாம். அவரோடு கூடவே போகவும் போகலாம்" என்று சாக்குப் போக்குச் சொல்லித் தம் காரியத்தைக் கவனிக்கச் சற்றுத் தொலைவிலுள்ள ஊருக்குச் சென்றார். கூடவே அழைத்துச் சென்றால் கௌஸ்துபன் தமக்குச் சள்ளையாக இருப்பான்; அவனைத் தோப்பினுள் விட்டுவிட்டுத் திரும்பி வரும்போது அழைத்துக் கொண்டால் போகிறது என்ற எண்ணம் அவருக்கு. பொழுது சாய்வதற்கு முன் ஹரிதாஸர் தம்முடைய காரியங்களைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வருகையில் தோப்பினுள் கௌஸ்துபன் அதே இடத்தில் இருப்பதைக் கண்டார். தந்தையைப் பார்த்ததுமே அவன் ஓடி வந்து, "அப்பா அப்பா, நான் கிருஷ்ணனைப் பார்த்தேனே....மாடுகளை ஓட்டிக்கொண்டு இந்தப் பக்கமாகப் போனார் அப்பா. என்னைப் பார்த்துச் சிரித்தார். அவர் தலையில் செருகியுள்ள மயில் இறகு என்ன அழகாய்க் காற்றில் ஆடுகிறது தெரியுமா? நீ பார்க்காது போய்விட்டாயே அவரை. நாளைக்கு என்னோடு வா, பார்க்கலாம்" என்றான் உண்மை ஒளியுடன். இடைப் பையன் எவனோ மாடு மேய்த்துக்கொண்டு அந்தப் பக்கமாகப் போனதைக்

கண்டு சிறுவன் கிருஷ்ணனுகை நினைத்துக்கொண்டு சொல்லுகிறுன் என்று ஹரிதாஸருக்கு முதலில் பட்டது. "நீ பார்த்தாச்சோ இல்லையோ? வா அகத்துக்குப் போகலாம்" என்று அவனை அழைத்துக்கொண்டு தம் ஊரை அடைந்தார் அவர்.

ஆனுல் பையன் சொன்ன விருத்தாந்தத்தை அவரால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. அவன் அடிக்கடி இதைப் பற்றிச் சொல்லவே வயதில் பெரியவரான ஹரிதாஸருக்கும் அது வாஸ்தவமா இல்லையா என்று பரிசோதிக்க வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. அடுத்த நாளும் பையனை அந்தத் தோப்பினுள் இருக்கச் செய்து விட்டுத் தாம் ஒரு புறமாக ஒதுங்கி நின்றுர் அவர். அந்தி நேரம் வரையில் காத்திருந்தார், ஏதாவது அதிசயம் தென்படுமோ என்று. மஞ்சள் வெயில் தோய்ந்த அந்திப் பொழுது நெருங்கும் சமயம், கௌஸ்துபன் ஓடிவந்து, "அப்பா அப்பா! அதோ தெரிகிறதா? மாடுகள் எல்லாம் புழுதியைக் கிளப்பிக்கொண்டு வருகின்றன. அவற்றின் பின்னுல் கிருஷ்ணர் குழல் ஊதிக்கொண்டே வருவார். பாரேன்...அதோ வந்துவிட்டன மாடுகள். சீக்கிரம் வா...இல்லாவிட்டால் போய்விடுவார்..." என்றதும் அரை நம்பிக்கையுடன் ஹரிதாஸர் ஒரு மரத்தின் மறைவில் நின்ற வண்ணம் எதிரே உள்ள புல் வெளியை நோக்கினுர். ஒன்றும் புலப்படக் காணும். ஆனுல் திடுதிடுவென்று மாடுகள் கும்பலாகப் போகும் சப்தம் மட்டும் அவர் செவிகளுக்குக் கேட்டது. கௌஸ்துபன் "அதோ—அதோ போகிறுர் கிருஷ்ணர்" என்று கூவினுன். "எதோடா, என்னுடைய கண்களுக்குத் தெரியவில்லையே......காற்று வீசும் சப்தந்தானே கேட்கிறது.. யாரையும் காணுமே" என்றுர் ஹரிதாஸர். "போ அப்பா. உனக்குத் தெரியலே...எனக்கு நன்னுத் தெரியறதே...பார் பார் கிருஷ்ணர்! என்னை 'வா வா' என்று கூப்பிடுகிறுர். அப்பா, நான் அவரோடு போகட்டுமா?" என்று சொல்லும்போது அவனுடைய கண்கள் எதையோ பின்பற்றிச் சென்றன.

அப்போது ஹரிதாஸர் இதுவரையில் கேட்டறியாத

வேய்ங் குழலின் இனிய நாதத்தைச் செவியுற்ருர். அந்த மதுரமான தொனி வானையும் வையகத்தையும் ஸ்தம்பிக்கச் செய்தது. கூடு திரும்பும் புள்ளினங்களும் தம் இசையை அடக்கிக்கொண்டு அந்த வேணுகானத்தில் லயித்தன. மரம் செடிகளும் இலைகள் அசையாமல் அதையே சிரவணம் செய்யும் பாவனையில் நின்றன. தம் செல்லப் பிள்ளை குழல் இசையிலேயே மனத்தைப் பறி கொடுத்து நிற்கும் விந்தையைக் கண்டதும் ஹரிதாஸருக்குப் பளிச்சென்று ஞானோதயம் ஆயிற்று. "கௌஸ்துபா...என் மாணிக்கமே, நீ வேறு யாரும் அன்று. ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே என் பிரமைகளை நீக்க உன் வடிவில் தோன்றியிருக்கிருர்.....நான் கண்டுகொண்டேன். சம்சாரத்தில் எனக்குள்ள பற்றுதலை அறுக்கவே வந்திருக்கிருய் அப்பனே!......எனக்குக் குரு நீதான். மோக்ஷத்திற்கு வழி காட்ட வந்திருக்கும் புண்ய புருஷன் நீ. பாவியான நான் இதுவரையில் உலக மாயையில் சிக்குண்டு கிடந்தேனே! உன்னை முன்னரே அறியாது போனேனே. கிருஷ்ணனை நேரில் காணும் பாக்கியம் குழந்தையான உனக்குக் கிடைத்துவிட்டது. நான் எவ்வளவு கற்று என்ன பயன்? பகவானை நான் வேறெங்கும் தேடவேண்டிய அவசியமே இல்லை. அவர் இங்கேயே என்னை ஆட்கொள்ள வந்திருக்கிருர். இந்த இடமே என்னுடைய பிருந்தாவனம்" என்று சொல்லி, ஹரிதாஸர் மெய்ம்மறந்து குழந்தை கௌஸ்துபனைத் தம் இரு கரங்களாலும் சேர்த்து அணைத்துக்கொண்டார்.

# ஜார்ஜெட் சேலை

ஸரளா இந்தக் காலத்துப் பெண். நவ நாகரிகத்தைப் பின்பற்றுபவள். டிராமிலும் பஸ்ஸிலும் தனிமையாகச் செல்லும் தைரியம் படைத்தவள். தானாகவே பல கடைகளில் புகுந்து சாமான்களை விலை பேசி வாங்கும் சாமர்த்தியம் அவளுக்கு உண்டு. ஆடவர்களைக் கண்டால் அனாவசியமான லஜ்ஜைக்கு இடம் கொடாமல் ஸங்கோசமின்றியே பழகுவாள். சங்கீதத்தில் நல்ல ருசி உண்டு, ரேடியோ உலகிலும் பெயர், இலக்கியத்திலும் அவ்வாறே. கலைகளைப் பற்றி அலாதியான அபிப்பிராயங்கள் உடையவள். அழகு சொட்டி வழியாது போனாலும் கண்ணைக் கவரும் தோற்றம் உடையவள். தற்கால நாகரிகத்தை அனுசரித்த உடைகளில் அவள் வரும்போது எவரும் அவளை ஒரு தரமாவது ஏற இறங்கக் கவனிக்காமல் போகார். மொத்தத்தில் ஸரளா உயர் ரகப் பெண் வர்க்கத்தைச் சேர்ந்தவளாகவே விளங்கினாள்.

ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் ஸரளா பழங்காலத்தவளாக இருந்தாள். அதாவது, அவள் விவாகமானவள். அதுவும் அந்த விவாகம் இக்காலத்திற்கு ஏற்றதாக நடக்கவில்லை. ஆனால் அதற்காக அவளைக் குறை கூறுவதில் பிரயோஜனமில்லை. ரங்கையர் ஸரளாவின் அப்பா; பெரிய மனுஷ்யர். ஸர்க்காரில் உயர்ந்த உத்தியோகத்தை வகித்துவிட்டு இப்போது 'பென்ஷன்' வாங்கிக்கொண்டு ஹாய்யாக ஒரு பங்களாவில் கடைசி நாட்களைக் கழிக்கிறார். காலேஜில் படிக்கும் சமயம் ஸரளாவின் மனம் சகாபடியான சந்திரசேகரின்மேல் சென்றது. இந்த நட்பு நாளுக்கு நாள் வளரத் தொடங்கியது.

சந்துருவுக்கு மூளை இருந்ததே தவிர மூல தனம் இல்லை. ரங்கையருக்கு இவர்களுடைய சேர்க்கை பிடிக்கவில்லை. ஆசாமி காசு இருப்பவனைத்தான் கண்ணெடுத்துப் பார்ப்பார். உடனேயே ஸரளாவுக்கு நல்ல இடத்தில்

ஒரு வரனைத் தேடிப் பிடித்தார். நிறையச் சொத்துக்கு அதிகாரியும் வம்சத்திற்கு ஒரே பிள்ளையுமான ராமசந்திர னுக்கு நிச்சயம் செய்தார். ராமுவும் அல்ப சொல்பம் ஆன வன் அன்று. டாக்டர் பரீக்ஷையில் தேறியவன். பி. ஏ. பட் டம் வாங்குவதற்குள் ஸரளா ராமுவின் ஸஹதர்மிணி ஆனாள். புதிதாக 'டிஸ்பென்ஸரி' ஒன்று அமைத் துக் கொடுத்தார்; சின்ன மோட்டார் ஒன்றும் வாங்கிக் கொடுத்தார் ரங்கையர் தம் மாப்பிள்ளைக்கு.

ஸரளா ராமுவிடத்தில் குறைப்படுவதற்கு ஒன்றும் இல்லை. காலேஜ் நண்பனான சந்துருவின் முகம் மெல்ல மெல்ல அவள் இருதயத்திலிருந்து விலகியது. ராமுவை விட்டுச் சற்று நேரம் பிரிந்திருப்பது இப்போதெல்லாம் நரகம்போல் இருந்தது. ஆனால் ஒரு சபதம் மட்டும் அவள் செய்துகொண்டாள்: ஜார்ஜெட் சேலையே இனிமேல் கட்டு வதில்லை என்று. சந்துரு ஒரு சமயம் அவள் உடலுக்கு ஏற்ற ஜார்ஜெட் சேலை ஒன்றைக் காதலின் காணிக்கையாகத் தருவதாக இருந்தான். துரதிருஷ்டவசமாக ஸரளா அப் போது அவனுடைய ஸம்ஸர்க்கத்திலிருந்து விலக வேண்டி யிருந்தது. சந்துருவின் மனோரதம் ஈடேறவில்லை. அந்த ஒரு துக்ககரமான நிகழ்ச்சியின் நினைவாகவே இந்தச் சங் கல்பத்தை ஸரளா மேற்கொள்ள நேர்ந்தது. ஆனால் இந்தப் பிரதிக்ஞையை அவள் கடைசி வரையில் காப் பாற்றவில்லை. அது எவ்வாறு நடந்தது என்பதை இந்தக் கதை விவரிக்கிறது.

மிஸ் அம்மு-ஸரளாவின் பழைய கூட்டாளி-அவளைப் பார்க்க வந்திருந்தாள். தன் காலாலேயே நிற்கக் கூடிய ஸ்திரீ இனத்தைச் சார்ந்தவள் அவள். கல்யாணம் இல்லாமலே காலக்ஷேபம் செய்யலாம் என்ற மனப் பான்மை உள்ளவள் அம்மு. நடை உடை பாவனைகளில் அதி நாகரிகம். வருங் காலத்துப் பாஷன்களை முன்கூட் டியே அறிவிப்பவள். காலேஜ் நாட்களைப் பற்றிப் பேசிய பிறகு அவள், "ஸரள், வருகிறேன். இன்றைக்கு முக்கிய மான ஷாப்பிங் இருக்கிறது. 'டைம்' ஆகிறது" என்றாள்.

"அப்படி என்ன அவசரம்?" என்று கேட்டாள் ஸரளா.

அம்மு சிரிப்பை அபிநயம் செய்து, "ஜார்ஜெட் ஸாரி ஒன்று வாங்கணும். அது அல்லவா இந்த 'ஸம்மரு'க்கு ஏற்ற 'வேரிங்'?" என்ருள்.

"அப்படியா?" என்ருள் ஸரளா.

அம்மு விடை பெற்றுக்கொண்டு சென்ருள்.

'ஜார்ஜெட்' என்றதும் சந்துருவின் முறுவல் பூத்த முகம் ஸரளாவின் கண்முன் தோன்றியது. பழைய காதல் நினைவுகள் ஒரு கணம் அவளுடைய கண்களில் ஒளிர்ந்தன. மறு கணமே வசீகரம் குன்றிக் கறுத்து விட்டது அவள் வதனம். ராமுவோடு வாழும்போது நண்பன் சந்துருவை நினைப்பது பாவம் என்று அவள் அவனை மறக்க முயன்ருள். பாழும் அந்த ஜார்ஜெட் சேலேதானே அந்த நினைவைக் கிளப்பி விட்டது? ஜார்ஜெட்டே அணிந்துகொள்ளக் கூடாது என்று மீண்டும் ஒரு முறை பிரதிக்ஞை செய்துகொண்டாள் ஸரளா.

அவளுடைய சபதக் கோட்டையை இடிக்க மற்ருெரு 'பாம்' விழுந்தது. ஸரளாவின் தங்கை லீலாவே அதைப் பிரயோகித்தவள். லீலாவுக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. அவளுடைய புருஷன் எஸ். ஆர். மூர்த்தி, ஐ. ஸி. எஸ்., ஒரு ஜில்லாவின் கலெக்டர்; நல்ல ஹோதா; ஸரளாவின் கணவனேக் காட்டிலும் அதிக வருமானம் உடையவன்; அழகிய மனேவி எதை விரும்பினுலும் அதைச் செய்யக் கூடியவன். அவளுக்கு மட்டும் அத்தகைய அதிருஷ்டம் வாய்த்ததே என்று ஸரளாவுக்குத் தன் தங்கை மீது சற்றுப் பொருமையே. இதனுல் அக்காவுக்கும் தங்கைக்கும் நிச்சப்தமாகவே போட்டி மூண்டது. நகை, உடை முதலிய விஷயங்களில் ஒருவருக்கொருவர் சளேக்க வில்லே. ஸரளா புது மோஸ்தரான வயிர 'ப்ரூச்' ஒன்று செருகிக்கொண்டதைப் பார்த்து உடனேயே லீலா அதைவிட அதி நாகரிகமானதும் விலே உயர்ந்ததுமான 'ப்ரூச்' அணிந்து காட்சி தருவாள். கலெக்டர் சம்சாரம், தன் காலில் போட்டிருக்கும் 'ஸாண்டலே'ச் சுட்டிக் காட்டி, "இதன் விலே ஐந்து ரூபாய்; இதை விடப் 'பாஷ'னில் 'லேடஸ்டு' கிடையாதடீ" என்று கர்வம் கொள்ளும்

போது, ஸரளா, "இவ்வளவுதானு நீ கண்டது?" என்று தன் கால் செருப்பைக் காட்டி, "இந்த மாதிரி மார்க்கட்டிலேயே அகப்படாது. நானே 'பாட்டர்ன்' கொடுத்துச் செய்யச் சொன்னேன். விலே என்ன தெரியுமா? ஸெவன் எய்ட்" என்பாள்.

நாளுக்கு ஒருவிதச் சேலே உடுத்துவாள் லீலா. ஜார்ஜெட் புடைவையில் ஒருநாள் அவள் பூலோக ரம்பை எனத் திகழ்வதைப் பார்த்த ஸரளாவின் திட சங்கல்பம் அசைந்து கொடுத்தது. "பிரமாதம், இந்த ஜார்ஜெட்டை யாரும் பார்த்ததில்லேயா, என்ன? இந்த மாதிரி ஒன்று வாங்க எனக்கு எத்தனே நாழியாகும்? பல பாஷனில் எனக்கும் கட்டிக்கொள்ளத் தெரியுமடீ" என்று தன் பழைய உறுதியை விடாமல் பேசுவாள் ஸரளா.

மூன்ருவது 'பாம்' ஸரளாவின் பால்ய ஸ்நேகிதி பார்வதியிடமிருந்து வந்தது. ஸரளாவைத் தன் கூட ஸினிமாவுக்கு அழைத்துச் செல்ல நேர்த்தியான ஜார்ஜெட் சேலே அணிந்து அலங்காரமாக வந்தாள். சேலேயிலுள்ள அழகிய பூவேலேயைப் பார்த்ததும் ஸரளா தன் சபதத்தையும் மறந்து, "ஏன் நாமும் இந்த மாதிரி ஒன்று கட்டிக்கொள்ளக்கூடாது?" என்று எண்ணினுள். அதற்கு ஏற்ருப்போல் பார்வதியும், "உனக்கு ஜார்ஜெட் சேலே ஒன்றுகூட இல்லேயா? எதை உடுத்துக்கொண்டு வரப் போகிருய்?" என்ருள்.

"ஜார்ஜெட்டே கிடையாதடீ, பெனுரிஸைத்தான் கட்டிக்கொண்டு வரவேண்டும்" என்ருள் ஸரளா.

"என்னடியம்மா அதிசயம்.....இந்தக் காலத்தில் ஜார்ஜெட் சேலே வீடு கூட்டுகிறவள்ளு வாங்கிக் கட்டிக்கொள்கிருள்! உனக்கென்னடி கேடு வாங்குவதற்கு? என்னுடைய சேலே பன்னிரண்டே ரூபாய்..." என்ருள் பர்வதம்.

"அவ்வளவு மலிவா?" என்ருள் ஸரளா தன்னே மீறி.

சந்துருவின் முகம் அவள் மனத் திரையில் மங்கலாக வந்தது. ஸரளா பெருமூச்செறிந்தாள்.

ஸினிமாவில் திரையில் காட்டப்பட்ட படம், காதல் வீணுகித் துன்புறும் ஒருவனுடைய வாழ்க்கையை ஒட்டியது. கதாநாயகன் தான் காதலித்த பெண்ணை அடையக் கொடுத்து வைக்கவில்லை. அவளுடைய தந்தை அவளை வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்து விடுகிருர். ஆசாபங்கமாகிக் கதாநாயகன் சில காலம் தேசாந்தரத்தில் பல இன்னல்களை அனுபவிக்கிருன். நல்ல காலம் வருகிறது. எந்த இடையூற்றிலும் தன்னைப் பின் தொடரும் ஒரு பெண்மணியைக் காதலின்றி மணந்துகொள்கிருன். நாளடைவில் அவள் மீது அவனுக்கு உண்மைக் காதல் மூள்கிறது. இடை இடையே பழைய நினைவுகள் வருகின்றன. அவனுக்குத் தன் மனைவியிடத்தில் வெறுப்பு ஏற்படுகிறது. கடைசியில் அவளுடைய பொறுமையே வெற்றி அடைகிறது. அவளே தனக்கு இனியவள் என்று உணர்கிருன்.

கதையின் ஸ்வாரஸ்யமும் நடிப்புத் திறனும் வெகுவாய் ஸரளாவின் மனத்தை உருக்கிவிட்டன. பல பலவென்று அவள் கண்ணீர் சொரிந்தாள். திரையிலுள்ள படம் மங்கிப்போய்ச் சந்துருவின் முகம் அங்கே தென்பட்டது. மார்பு இரண்டு மூன்று தரம் விம்மியது. வீடு திரும்பியதும் தன் கணவன் ராமு அவளிடம் பரிவுடன், 'படம் எப்படி இருந்தது?' என்று விசாரித்தபோது தான் அவள் மனத்தை அழுத்திய பாரம் ஒருவாறு விலகியது. தன்னை உண்மையாகக் காதலிக்கும் கணவன் ஒருவனுக்கே தன் இருதயத்தில் இடம் உண்டு. மற்றவனுக்கு இல்லை என்ற முடிவு கொண்டாள். 'எதற்காக ஜார்ஜெட் சேலையை வெறுக்க வேண்டும்? காதலித்தவனை மறந்துவிட்டு நான் வேறு ஒருவனை மணந்துகொண்டு சுகமாக வாழும்போது இந்த ஜார்ஜெட்டைத்தாஞ உடுத்தக் கூடாது?' என்று சிற்சில சமயம் அவளுக்கு மருள் ஏற்படும். எவ்வளவு பலமான அதிர்ச்சி உண்டான போதிலும் ஸரளாவின் பிரதிக்ஞை மாத்திரம் நிலை குலைவதாகக் காணும்; ஒரு விதமாகத் தலை தூக்கியே நின்றது.

மற்றொரு தரம் அவள் பாட்டுக் கச்சேரிக்குச் சென்றிருந்தாள். அங்கேயும் பெண்கள் எல்லோரும் ஜார்ஜெட்

மயம். ஸரளா ஒருத்தியே ஜார்ஜெட் அணியாதவள். தன் மானத்தை வாங்குவதற்காகவே அவர்கள் எல்லோரும் அன்று ஜார்ஜெட் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று ஸரளாவுக்குப் பட்டது. இருந்தும் அவள் தன் பிடியை விட்டுவிடவில்லை.

கடைசி அதிர்ச்சி ஒரு மோட்டாரிலிருந்து வந்தது. ஒரு நாள் 'டிஸ்பென்ஸரி'யின் வாசலில் மோட்டார் ஒன்று வந்து நின்றது. ஸரளா மாடியின் ஜன்னல் வழியாகக் கீழே நடப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தாள். கீழே இறங்கியவள் ஓர் அழகிய யுவதி. தன் புருஷன் ராமு புன்சிரிப்புடன் அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு மோட்டாரில் ஏறுவதையும் பார்த்தாள் ஸரளா. மோட்டாரினுள் அவள் கணவன் பக்கத்தில் வீற்றிருப்பதையும் கவனிக்காமல் இல்லை. உள்ளத்தில் மின்னல் பாய்வதுபோல் இருந்தது. சரேலென்று ஜன்னல் கதவை மூடிவிட்டாள். இந்த நிலையில் சந்தேகம் கொள்வது எவருக்கும் சகஜமே. வெளியே சென்றிருந்த கணவன் வீட்டிற்கு வந்ததும் ஸரளா கேட்ட முதல் கேள்வி, "சாயந்தரம் வந்திருந்தாளே, அவள் யார்?" என்பதுதான். ராமு மலர்ந்த முகத்துடன், "ஹாஸ்பிடல் நர்ஸ் அவள். ரொம்ப நல்ல மாதிரி. இன்றைக்கு ஒரு 'டீ பார்டி'. அதற்காக என்னைக் கூப்பிட வந்தாள். அவள் அழகாய் இல்லை?" என்று கேட்டான்.

"அழகாகத்தான் இருக்கிறாள். பகட்டான அந்த ஜார்ஜெட் சேலை அவள் அழகை இன்னும் எடுத்துக் காட்டுகிறது. அது மாதிரி எனக்கும் ஒன்று வாங்கித் தருகிறீர்களா?" என்று எப்படியோ கேட்டுவிட்டாள் ஸரளா.

"ஆகா, என்ன விலை இருக்கும்?"

"ரொம்ப இருக்காது. இப்போது மலிவாக விற்கிறதாம். பதினைந்து ரூபாய்க்குள்தான் இருக்கும். லீலா உடுத்துக்கொண்டு வந்ததை நீங்கள் பார்க்கவில்லையா? இப்பவே வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற அவசரம் இல்லை. உங்கள் செளகரியம்போல் ஆகட்டும்" என்றாள்.

மறுநாள் மிஸ் அம்மு வந்து தோன்றினாள். ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேச மறைவாக ஸரளாவை அழைத்துச் சென்றாள்.

''சமாசாரம் தெரியாதாடி உனக்கு! சந்த்ரு பட்டணம் வந்திருக்கிறாராமே? மாலதி எனக்குச் சொன்னாள். நீ பார்க்கப் பிரியப்பட்டால் புறப்படு. எனக்கு வேறு ஜோலி இருக்கு. இந்தா அவருடைய விலாசம். நீ அவரைப் பார்ப்பதனால் தவறு ஒன்றும் இல்லையே. என் 'ட்யூடி' உனக்குத் தெரியப்படுத்திவிட்டேன். அப்புறம் உன் இஷ்டம்'' என்று கூறிவிட்டு அகன்றாள்.

ஸரளாவுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. இவ்வளவு சமீபத்தில் இத்தனை வருஷங்களுக்குப் பிறகு அவர் வந்திருக்கிறார்; எப்படிப் போய்ப் பாராமல் இருப்பது? மங்கிய பழைய இன்பங்களின் ஞாபகங்கள் அவள் மனத்துள் கூடின. கன்னங்களில் ஊறல் எடுத்தது. சந்த்ருவைச் சந்திக்கச் செல்ல அவள் கால்கள் பதைத்தன. பனிக் காலத்திற்குப் பிறகு வசந்தம் வருவதுபோல் மீண்டும் பழங்காதல் அவள் உள்ளத்தில் துளிர்த்தது.

''அந்த ஜார்ஜெட் எனக்கு வேண்டியதில்லை. அவர் வந்ததும் அதை வாங்கவேண்டாம் என்று தடுத்துவிட வேண்டும்.'' — இவ்வாறு திடீரென்று அவளுடைய மனம் மாறியது. ''சந்த்ருவைப் பார்த்தே தீருவேன்'' என்றாள் தனக்குள் ஸரளா.

மத்தியான்னம். அன்று ஸரளாவின் புருஷன் ஏதோ ஒரு 'கேஸை'க் கவனிக்க வெளியே சென்றிருந்தான். அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு அவள் சந்த்ருவைச் சந்திக்க அம்மு கொடுத்த விலாசத்தின்படி அவ்விடத்தை அடைந்தாள்.

உள்ளே நுழையச் சற்றுத் தயங்கினாள். மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு உள்ளே சென்றதும் ஒரு குரல், ''யார், ஸரளாவா? ஏது இவ்வளவு கிருபை? சொல்லி அனுப்பினால் நானே வந்து பார்த்திருக்க மாட்டேனா? — உனக்கு ரொம்ப சிரமம் கொடுத்தேன். அது சரிதான், என்னை நீ மறந்துதான் போய்விட்டே, உன் கல்யாணக்

கடிதம் கூடவா அனுப்பக் கூடாது? உன்னை அடைய....'' என்று கூறும்போது அந்தக் கண்டத்வனியில் கம்பலை தோன்றியது. "உம்...ஏதோ கொஞ்சமாவது என்னைப் பற்றி நினைக்கிறாயே, அதுவே என் பாக்கியம்'' என்றான் சந்த்ரு.

பேசுவதற்கு நாவெழாமல் ஸரளா சந்த்ருவின் முகத்தையே பருகி விடுவது போல் இமை கொட்டாமல் பார்த்தாள்.

அதே சமயம் "ஹௌ ஆர் யூ டூயிங்?'' (உடம்பு எப்படி இருக்கிறது?) என்று விசாரித்துக்கொண்டே டாக்டர் ராமு உள்ளே வரவே, ஸரளா வெலவெலத்துப் போனாள். உடனேயே சமாளித்துக்கொண்டாள். ராமு ஸரளாவை அங்கே அதிசயமான நிலைமையில் கண்ணுற்றதும், "இங்கே எதற்காக வந்தே, ஸரளா?'' என்றான்.

"இவர் என்னுடைய காலேஜ் நாளைய சிநேகிதர். பட்டணத்திற்கு வந்திருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டு இவரைப் பார்க்கலாம் என்றுதான் வந்தேன். நீங்கள் தானே இவருக்கும் வைத்தியம் பார்க்கிறீர்கள்?'' என்றதும் வெளியே சென்றாள் ஸரளா.

ஸரளாவின் பின்னாலேயே ராமுவும் வந்து காரில் வைத்திருந்த காகிதப் பொட்டலத்தை அவளுக்குக் காட்டி, "நல்ல காலம், உனக்கு வாக்குக் கொடுத்து எங்கே பிசகிவிடுகிறேனோ என்று பயந்தேன். இவருக்கு நேற்று 'பில்' அனுப்பியிருந்தேன். பணம் கொடுத்து விட்டார். அதைக்கொண்டுதான் இன்று உனக்கு இரண்டு தினுசில் ஜார்ஜெட் சேலை வாங்கி இருக்கிறேன். பிரித்துப் பார்த்து உனக்குப் பிடிக்கிறதா இல்லையா, சொல்'' என்றான் ராமு, முகத்தில் சற்றும் விகாரம் இல்லாமல்.

ஸரளாவின் விழிகள் சுழன்றன. இதற்கு அவள் என்ன பதில் தருவாள்? வாயடைத்து நின்றாள்.

# மழையும் வெயிலும்

பெருஞ் சூறுவளியினின்று தப்பப் பரசுவின் வீட்டினுள் அடைக்கலம் புகுந்தேன். மாடி அறையின் கண்ணாடிச் சாளரத்தின் மூலம் வெளியே திகழும் இயற்கையின் பயங்கரத் தாண்டவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தமாதிரி ஒரு காற்றை நான் கண்டதில்லை. செந்தூளியால் ஆகாயத்தைக் கப்பிக்கொண்டு 'ஓ' என்ற இரைச்சலுடன் வந்தது ஒரு பெருங்காற்று. தொலைவில் ஏதோ மள மளவென்று முறியும் சப்தம் கேட்டது. எந்த மரத்தின் கிளையோ, மரமேதானோ?

இத்தனை நாள் நீலமாக இருந்தது வானம். ஒரு மூலையிலாவது மேகத்தைக் காணவில்லை. இன்று திடீரென்று முன் அறிவிப்பின்றி அடிவானத்தில் ஒரு கறுப்புப் புள்ளி தென்பட்டது. வரவர அது, 'எது பூமி, எது ஆகாசம்' என்று புரிபடாமல் புழுதியைக் கிளப்பிக்கொண்டே வந்தது.

நான் அறையினுள் நுழைந்தபோது நண்பன் பரசு சொஸ்தமாகக் காற்றின் ஆரவாரத்தையும் லக்ஷ்யம் செய்யாமல் ஏதோ ஒரு புஸ்தகத்தை ஊன்றிப் படித்துக் கொண்டிருந்தான். அவனும் என் ஈடுதான். நாங்கள் இருவரும் சிறுவயது முதற்கொண்டே ஒன்ருய் ஓடி விளையாடினவர்கள்.

மை தீட்டினாற்போல் விளங்கியது ஆகாயம். காற்றின் மும்முரம் சற்று அடங்கியதும் புழுதித் திரையைத் துளைத்துக்கொண்டு மழைத்துளி படபடவென்று விழ ஆரம்பித்தது. வருஷ முதலில் வரும் முதல் மாரி. சரேல் என்று ஒரு மின்னல் வெட்டியது. கண் பூத்துவிட்டது. அண்டகோளம் நடுங்கும்படியான ஓர் இடி. பதினைந்து நிமிஷத்திற்குள் ஆலங்கட்டிகளாக வர்ஷித்துவிட்டு ஆகாயம் நிர்மலமாகிப் பளிச்சென்று வெயிலும் தோன்றி

யது. கூரையிலிருந்து தூம்புகள் மூலமாக வீதியில் சோ வென்று மழைநீர் வீதியில் விழுந்து வழிந்து ஓடியது.

பெய்த மழையினால் வீதியில் இருக்கும் ஜலத் தேக்கத்தைப் பார்த்து, "இந்த மாதிரி மழை பெய்ததை இது வரையில் நான் பார்த்ததாகக் கவனம் இல்லை" என்றேன்.

அப்போது பரசு, "நீ சொல்வது வாஸ்தவம். ஒவ்வொரு வருஷமும் கோடைக்காலத்தில் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதை எடுத்துப் பார். 'இந்த மாதிரி இதற்கு முன் வெயில் காய்ந்ததே இல்லை' என்றுதான் இருக்கும். பனிக்காலத்தில், 'இதைவிடப் பனிவாடை முன்பு இருந்ததாகத் தெரியவில்லை' என்று இருக்கும். ஒவ்வொரு வருஷமும் இப்படித்தான் காற்று அடிக்கிறது; மழையும் பெய்கிறது. அந்த அந்தச் சமயத்திற்கு அது பிரமாதமானதுதான். ஆனால் ஒரு வருஷம் நான் மிகவும் பயங்கரமான புயல் காற்றைப் பார்த்து நடுங்கிப் போயிருக்கிறேன். சொல்லட்டுமா, அந்தச் சமாசாரத்தை?" என்றான்.

"ஆமாம் சொல்லு. இந்தப் பாழும் காற்று மழையினால் இன்றைக்குப் 'புட்பால் மாட்ச்' வாயில் மண்ணுத்தான். பொழுதாவது போகும்; சொல்லு."

பரசு சொல்லத் தொடங்கினான். அவன் சொன்ன விஷயம் எனக்கு முன்னமே தெரிந்ததுதான். இதை அறியாமல் பரசு என்னிடம் புதிதாக அதை அளக்க ஆரம்பித்துவிட்டான். அது பரசுவின் உறவினளாகிய ஒருத்தியைப் பற்றியதுதான்.

அப்போது நான் நிரம்பச் சின்னவன். அவள் என்னை விட ஏழு அல்லது எட்டு வயது பெரியவள். எங்களுடைய வீடு அவளுடைய வீட்டிற்குப் பக்கத்திலேயே இருந்தது. அவள் பெயர் மீனா. இந்தப் பெயர் கொண்ட இரண்டொரு பெண்களைப் பார்த்த பிறகு இது ஆகிவராத பெயர் என்று முடிவுக்கு வந்தேன். ஒருத்தியாவது வாழ்க்கையில் சுகப்படவில்லை. இப்போது சொல்லும் மீனா சற்றுக் கறுப்புத்தான். ஆனால் குரூபி அல்ல. நல்ல அழகியும் அல்ல. ஏதோ சுமாராகப் படித்தவள். அவளுடைய பெற்றோர்களும், 'ஓஹோ' என்ற ஸ்திதியில் இல்லை. அதனால்

பெரிய இடம் அவளுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையே எவரும் கொள்ளவில்லை. அழகும் அந்தஸ்தும் இராமற் போனாலும் வீட்டுவேலையில் கெட்டிக்காரி மீனு. குடித்தனம் பண்ணும் பெண்களுக்கு இந்த ஒரு யோக்கியதாம்சம் இருந்தாலே போதும்.

அவளுடைய விவாக தினத்தன்று எல்லோரும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துவிட்டனர். அவளுக்குக் கிடைத்த வரன் அவ்வளவு சுந்தரவடிவுடையவனாய் இருந்தான். மன்மதனை யாரும் பார்த்ததில்லை. அவனுக்கு ஒப்பிடலாமாம் மாப்பிள்ளையை. நல்ல சிவப்பு, உயரம், அதற்கேற்ற தாட்டி. ஏராளமான சொத்துக்கு அதிகாரி. 'இந்த மாதிரி ஒரு சௌபாக்கியம் கிட்டுவது மிகவும் அபூர்வம். எளியோர் வீட்டில் பிறந்த மீனுவுக்குச் சுக்கிர தசைதான்' என்று எல்லோரும் எண்ணிப் பூரிப்படையலாம். ஆனால் உள்விஷயம் என்னவோ வேறு. கல்யாணதினத்தன்று மீனுவைப் பார்த்து, "அம்மா, நீ செய்த பூஜாபலனடீ; இந்த மாதிரி அகமுடையானை அடையக் கொடுத்துவைத்தாய்" என்று எவருமே சொல்லிப் பூரிப்புக் கொள்ளவில்லை. அத்தகைய அழகு வாய்ந்த கணவனைப் பார்த்து மீனுவின் முகம் பொலிவுறவே இல்லை. அதற்கு மாறாகக் கண்களில் துயர நீர் அரும்பியது. அவளைப் பெற்றவர்கள் முகத்திலும் யாதோர் உவப்பும் தென்படவில்லை.

மேள தாளங்களுடன் வந்த பிள்ளைவீட்டார் கல்யாணம் முடிந்ததும் மணப்பெண்ணைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். நான் அவளுடைய கல்யாணத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது லோகவிஷயங்களை அறியச் சக்தியற்ற சிறுவனான எனக்கும் அந்த விஷயம் வேதனையையே தந்தது. அவளுக்கு நடந்த அநியாயத்தைத் திரும்பவும் சரிப்படுத்த, வாழ்க்கை ஒரு கடிகாரமா என்ன? அவள் மீள்வதற்கு வழியே இல்லை. அவளுடைய கணவனுக்குப் பைத்தியம் பிடித்திருந்தது! அதை மூடிவைத்து அவனுக்குச் சற்றுத் தெளிந்த சமயமாகப் பார்த்துக் கல்யாணத்தை முடித்துவிட்டார்கள். குணமாகாத பைத்தியமாம். பணத்துக்கு ஆசைப்பட்டுச் செய்த காரியம் அது. மீனு தன் பெற்றோரை வைவதா? தன் விதியை நொந்து கொள்வதா?

அப்புறம் மீனுவை நான் அநேகந் தடவை பார்த்திருக்கிறேன். கண்முன் நிரபராதியான ஒருத்தி நாளுக்கு நாள் வேதனையினால் உருக் குலைந்து போவது எனக்கு ஆத்திரத்தை மூட்டியது. மீனு எவ்வளவோ வைத்தியம் பார்த்தாள், தன் கணவனுக்கு. அது தீருகிற பைத்தியம் ஆனால் தானே? நாளுக்கு நாள் அது விருத்தியடைந்ததால் பல விதமான கொடூரங்களுக்கு ஆளானாள் அவள். பைத்தியக்காரன் ஒரு பக்கம் மூஞ்சி முகம் தெரியாமல் அவளை அடிப்பதும், ஒரு பக்கம் மாமியார் துன்புறுத்துவதுமாக இவ்வாறு அவள் உடலும் மனமும் குன்றிக்கொண்டே வந்தன. குளிர்ந்த நாட்களில் புத்தி சற்று ஸ்வாதீனத்திற்கு வரும் மீனுவின் கணவனுக்கு. அவளுக்கு விழும் உதையும் குத்தும் சற்றுக் குறையும். உடம்பில் தழும்புகள் மறைவதற்குள் வெயில் காலமும் வந்துவிடும். மறுபடியும் உடலெல்லாம் கணவன் செய்யும் அட்டூழியத்தினால் கன்றிவிடும். அந்தச் சமயங்களில் டாக்டரை வரவழைப்பார்கள். மீனுவின் கணவனுடைய சிகித்ஸைக்கு அன்று, மீனுவின் ரத்தகாயங்களை ஆற்றத்தான்.

இந்தப் பைத்தியக்காரனுக்கும் மீனுவுக்கும் எப்படித்தான் ஒற்றுமை ஏற்பட்டதோ? இவர்களுக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்தன! ஆண் ஒன்று, பெண் ஒன்று. அப்பனுடைய ரூபத்தை அப்படியே உரித்துக்கொண்டு வந்திருந்தன. மக்களைப் பெற்றும் அவர்களுடைய ஆசை முகங்கள்கூட மீனுவுக்குத் தெம்பை உண்டாக்கவில்லை: வாழ்வதை ஒரு கடமை என்றே பாவித்து உயிர் வைத்திருந்தாள். அவள் பெற்ற குழந்தைகளுக்குத் தகப்பனுடைய வியாதி தொத்திக்கொள்ளாது என்பது என்ன நிச்சயம்? ஒரு விஷயத்தில் குழந்தைகளை ஈன்றெடுத்த பிறகு அவளுக்குச் சௌகரியமே. மாமியார் இழைக்கும் கொடூரம் சற்று மட்டுப்பட்டது.

கண்ணீரும் சலிப்பும் நிரம்பிய வாழ்வில் இதற்கு அப்புறமே சற்று அமைதியாவது கிடைத்தது. வெயில் காலங்களில் பைத்தியம் வீட்டை விட்டு வெளியே எங்கேயாவது கிளம்பிவிடும். இரண்டு மாசம் அல்லது மூன்று மாச காலம் ஊர் ஊராகச் சுற்றி அலைந்துவிட்டு எலும்பும் தோலுமாக உடல் இளைத்துப்போய் வந்து விழும் வீட்டில்.

பைத்தியம் போகும்போது நாடக பாணியில், "நான் திரும்பியே வரப்போவதில்லை" என்று மீனுவுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுச் செல்லும். இப்போதாவது மன நிம்மதிக்கு ஓர் இரண்டு மாச காலம் க்ஷேத்திரங்களை யேனும் தரிசித்துவிட்டு வரலாம் என்ற ஆசைக்கு இடம் இல்லை. திடீரென்று திரும்பி வந்து காட்சி அளிக்கும், அந்தப் பிசாசு.

பைத்தியம் வர வர உஷ்ணமாசங்களில் தேசாந்தரம் போவது வழக்கம் ஆகிவிட்டது. முன்போல் திடீரென்று திரும்புவதில்லை. அதன் மனமும் ஒரு மாறுதலை அடைந்தது. மழைக்காலம் தொடங்கிய பிறகே வற்றிச் சுண்டி ஊருக்கு வரும். இது வழக்கமாய்ப் போய்விட்டதால் மீனு இதைக் குறித்து மண்டையை உடைத்துக்கொள்ளவில்லை. கணவன் போய்விட்டானே என்ற வருத்தமும் இல்லை. அவன் எப்போது வருவான் என்ற ஏக்கமும் இல்லை. வாழ்க்கை அது சுழலும் வழியில்தான் சுழன்றது! பைத்தியம் வீட்டில் இராத நாட்களிலெல்லாம் மீனுவின் தேகத்திற்கும் மனத்திற்கும் ஓய்வு. அது திரும்பியே வராமல் ஒரு நாள் போய்விடாதா என்ற சிறு நம்பிக்கை மீனுவுக்கு உண்டாகி இருக்கலாம். ஆனால் வரவேண்டிய சமயத்தில் எலும்புக்கூடுபோல் அது வந்து தோன்றும். அதற்குச் சுச்ரூஷை செய்து உருப்படியாக்கும் வேலை ஆரம்பித்து விடும் மீனுவுக்கு. பைத்தியத்திற்குச் சொந்தமான தன்மை ஒன்று உண்டு. வெயில் நாட்களில் மீனுவை எவ்வளவு வாட்டியதோ குளிர் காலத்தில் அவள்மேல் அவ்வளவு பாசமாய் இருக்கும் அது. வயது முதிர முதிர இந்த நற்குணம் அதிகமாகத் தென்பட்டது. ஆதியில் அவளை அடித்து ஹிம்ஸிப்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டியதோ அவ்வளவு இப்போது கடைசி நாளில் அவளிடத்தில் ஆசையும் அனுதாபமும் காட்டியது. மீனுவுக்கு இந்த ஆசை அவள் பட்ட அடியைக் காட்டிலும் எரிச்சலைத் தந்தது. ஆசையிலும் பைத்தியக்காரனுடைய வெறி தென் பட்டது.

ஒரு வேனிற் காலம், மீனுவின் பைத்தியக்காரக் கணவன், தேசாந்தரம் போனவன், திரும்பியே வரவில்லை. ஒரு வருஷம் கழிந்தது. பதினொரு வருஷங்களும் சென்றன

மீனு சுமங்கலியாகவே இருந்தாள். அவளுடைய குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிவிட்டனர். பள்ளிக்கூடம் போய் வர ஆரம்பித்தனர். மூளைக் கோளாறு ஒன்றும் இதுவரையில் அவர்களிடத்தில் புலப்படவில்லை. போகப் போக எப்படி இருக்குமோ? அது எப்படியாவது போகட்டும். மீனுவுக்குக் கடைசியிலாவது சுகம் ஏற்பட்டதே. புருஷன் போய்ப் பதினொரு வருஷங்கள் ஆயின. மாமியார் வைகுண்டம் போய்ப் பத்து வருஷங்கள் ஆகின்றன.

* * * *

பரசு சொன்ன இந்தக் கதையை நான் ஊன்றிக் கவனிக்கவில்லை. எனக்கு இது தெரிந்த கதைதானே? ஆனால் இந்தக் கதை எனக்கு மீனுவின் கவனத்தை மூட்டி விட்டது. என் மனத்தில் பழைய காட்சிகள் எல்லாம் - மீனுவின் துயர் நிரம்பிய வாழ்வில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் - மிதந்து வந்தன. நான் அவளைப் பார்த்து வெகு நாட்கள் ஆயின. குழந்தையாக இருக்கும் போது என்னைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு கொஞ்சிய மீனு அல்லவா அவள்?

"அப்புறம் அந்தப் பைத்தியம் திரும்பிவந்ததா?" என்று பரசுவைக் கேட்டேன்.

"இல்லை."

"சரி. இன்னும் உன்னுடைய சித்தி சுமங்கலியாகத் தானே இருக்கிறாள்?" என்றேன்.

"இரு; சொல்கிறேன் மேலே."

வெளியே கரேலென்று இருந்தது இரவு. மீனுவின் கவனம் என் மனத்தை விட்டு அகலவில்லை.

இப்போது போலத்தான் இருக்கிறது. பட்டணத்தில் ஒரு பேட்டையில் ஒரு சிறிய வீடு. மிகவும் வறுமையான நிலை. 'காஸ்' விளக்குகள் இரண்டு எரிந்துகொண்டிருக்கின்றன. வீட்டில் வருவோர் போவோர் எவர் முகத்திலும் வருத்தக் குறி. ஓர் இருண்ட அறையில் தேம்பி அழுது கொண்டிருக்கிறாள் ஒரு பாலிகை. பாண்டு வாத்தியத்துடன் மாப்பிள்ளை வருகிறான்; மன்மதனைப் போல வடி

வழகன். கண்ணைப் பறிக்கிறது பிள்ளை வீட்டுப் பெண்டு களின் நகையும் நட்டும்.

இன்னும் எவ்வளவோ ஞாபகத்தின் துணுக்குகள். நான் அப்போது சிறுவனாக இருந்த நினைவும் அவற்றோடு ஒன்றியிருந்தது. நிரானந்தம் மனத்தில் குடிகொண்டது. வெளியே வந்தேன். மழைத்தூற்றல் அதைப் பன்மடங்கு ஆக்கியது. துஸ்வப்னம் கண்டவன்போல் நடந்து சென்றேன். பரசுவும் என்னுடன் வந்தான். பட்டணத்துச் சந்தடியில்கூட மனத்தின் ஒரு மூலையில் பதுங்கியிருந்த துயரம் மீண்டும் எட்டிப் பார்த்தது.

"அப்புறம் என்னடா?" என்றேன் பரசுவைப் பார்த்து.

"இன்னும் நான் கதையை முடிக்கவில்லையேடா. கேள்: எங்கள் சித்திபுருஷன் காணமற்போய் நாலைந்து வருஷங்கள் கழித்து ஒரு நாள் டிராமில் மௌண்ட் ரோட் பக்கமாகச் சென்றுகொண்டிருந்தேன். அப்பா, ஒரு காற்றுமழை அடித்தது; அதை என்னவென்று சொல்லுவேன்! டிராம் தலைகீழாகக் கவிழ்ந்துவிடும்போல் இருந்தது. மடமடவென்று இறங்கி எதிரே இருந்த ஒரு கட்டிடத்திற்குள் புகுந்துகொண்டேன்.

"மழை விட்டதும், திரும்பி வரும்போது ரோட்டில் ஒரு பெரிய மரத்தின் கிளை சற்று முன் அடித்த காற்றில் முறிந்து கீழே விழுந்து கிடந்தது. அங்கே கும்பலாக ஜனங்கள் இருப்பதைப் பார்த்து என்னவென்று அறிய ஆவல் கொண்டவனாய் நானும் போய்ப் பார்த்தேன். யாரோ ஒருவன்-பைராகி போல் தோன்றியது-மழைக்கு ஒதுங்கி மரத்தடியில் நின்றவன், முறிந்த கிளையின் கீழே அகப்பட்டுக் கொண்டு உடல் நசுங்கி இறந்து கிடந்தான். அருகில் சென்று பார்த்தேன். என் சித்தியின் புருஷன்!" என்றான்.

"அப்புறம் ?"

"இதை நான் என் சித்திக்குச் சொல்லவே இல்லை. சொல்லி என்ன ஆகவேண்டும்? நம் தேசத்தில்தான் விதவையின் வாழ்விற்கும் சுமங்கலியின் வாழ்விற்கும் ஆகாச பாதாள வித்தியாசம் இருக்கிறதே. இதை வெளியிட்டால்

சித்தியின் தாலியை அறுத்து, அவளைப் பண்ணுத கோல மெல்லாம் செய்வார்களே. புருஷன் உயிருடன் இருக்கும் போது வேண்டியதுதான் பட்டாளே. விதவையாகி இன்னும் படவேண்டுமா துன்பம்? அவன் செத்தாலும் ஒன்றே; இருந்தாலும் ஒன்றே. என் சித்தி நித்திய சுமங்கலி.''

''சீ, அவனுக்குக் கடைசிக் கிரியைகள் செய்யவேண்டாமா?''

''இதையெல்லாம் எடுத்தால் வீண் சச்சரவு ஏற்படும். சும்மா இருந்துவிடுவதே மேல். கடைசியில் சோம்பேறிப் பயல்கள் பிச்சை எடுத்து அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் செய்துவிட்டார்கள் என்று வைத்துக்கொள்ளேன்!''

''இது சுத்த அநியாயம்! மக்கள், மனுஷ்யர்கள் இருக்கும்போது இந்த மாதிரி வேணும் என்று விட்டது தவறு. கடைசியில் அநாதைப் பிணமாகவா போகவேண்டும்?'' என்றேன்.

''வேறு வழி? பிரேத ஸம்ஸ்காரம் செய்யும் உரிமையைவிட வாழ்நாள் முழுவதும் வருந்தி வாடின ஓர் ஆத்மாவைச் சுகத்தில் நிறுத்தும் கடமையே பெரிது என்று எண்ணி இவ்வாறு செய்தேன்'' என்றுன் பரசு.

இதனுல் பரசுவின்மேல் எனக்குக் கோபம் வரவில்லை. ஆனுல் ஒன்று மட்டும் என் மனத்தைத் துளைத்துக் கொண்டே இருந்தது. 'இன்று ஏன் இவன் இதை வெளியிட்டான்?' என்பதே அது. நான் பளிச்சென்று என் மனத்தில் பட்டதைக் கேட்டுவிட்டேன்; ''இத்தனை நாள் மூடிவைத்ததை இப்போது ஏனடா வெளியிட்டாய்?'' என்றேன்.

''ஏனு? இன்று சித்தியின் புருஷன் காணுமற் போய்ப் பன்னிரண்டு வருஷங்கள் பூர்த்தியாகின்றன. சாஸ்திரத்தின்படி இந்தக்கால அளவுக்குப் பிறகும் பதி பத்தினிகள் ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருந்தார்களானுல், கணவன் உயிருடன் இருந்தபோதிலும் அவனுக்குக் கடசிராத்தம் செய்துவிட வேண்டும். சித்திக்கு இன்றைக்குத்தான் விதவைக்குச்செய்யவேண்டிய 'விமரிசை'களை யெல்லாம் செய்து முடித்து வெள்ளாடை கொடுத்தார்கள்!'' என்று சொல்லிப் பரசு சிரித்தான்.

# திரை மறைவில்

கல்யாணம் பண்ணிக்கொண்டேன்; தொல்லைதான் ஆனாலும் அந்தத்தொல்லையில் இன்பம் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? என் மனைவி அப்படி ஒன்றும் ரூப வதி அன்று. கிட்டத்தட்டக் கறுப்பு. இதற்காக அவளை ஒருநாளும் நான் இழிவாக நினைத்ததே கிடையாது. 'நமக்குக் கிடைத்தது அவ்வளவுதான்; போதும்' என்ற திருப்தி. அந்தக் கருமணியிடத்தில் எனக்கு அளவிறந்த ஆசை. என் கண்ணுக்கு அவள் ரதியாகவே தோன்றினாள்.

பட்டணத்தின் இரைச்சல் இராத ஒரு கோடியில், வீடு அமைத்துக்கொண்டேன். வெளி ஜோலியே அதிகம் கிடையாது எனக்கு. சள்ளையில்லாத உத்தியோகம். என் ஆபீசில் யஜமானன், குமாஸ்தா எல்லாம் நானே. மாலை ஐந்து மணிக்கெல்லாம் வீட்டில் ஆஜர் ஆகிவிடுவேன். நான் வருகிற வேளை அவளுக்குத் தெரியும்...மாடி ஜன்னலிலிருந்து ஓர் ஆசை முகம் கீழே நோக்கும். நாங்கள் வாயால் பேசிக்கொள்வதில்லை...எல்லாம் கண் ஜாடையால்தான். உள்ளத்தில் செல்லும் விஷயங்கள் விழிகள் மூலமாகத்தான் வெளிப்படுகின்றன. நான் வந்தவுடன் அவளையே சற்று நேரம் பார்த்துக்கொண்டிருப்பேன். பின்னால் நிலைக் கண்ணாடியில் அவளுடைய 'ஜம்பரி'ன் பக்கவாட்டும் பூச் சூடிய கூந்தலின் 'ஒழுங்கும்' என் கண்ணைப் பறிக்கும். 'காப்பி ஆறிப் போகிறதே' என்று சமிக்ஞை செய்யும்போதுதான் என் மயக்கம் தெளியும். அதற்குமேல் என் சொந்தக் காரியம்.

* * *

சொல்ல மறந்துவிட்டேனே. இலக்கிய சர்ச்சையில் எனக்கு ருசி உண்டு. பத்திரிகாசிரியர்கள் நான் எழுதிய கதைகளையும் கட்டுரைகளையும் சில சமயம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டால் என்ன? நான் மட்டும் என்

அப்பியாசத்தை விடவில்லை. இப்போது இல்லாவிட்டாலும் வருங்காலத்திலாவது என்னுடைய யோக்கியதை வெளிப்பட்டே தீரும். நீலமான சமுத்திரத்தைக் காணும் போது பாதாள லோகத்தின் அதிசயங்கள் என் கற்பனைத் திரையில் எழும். மாணிக்கச் சுடர் விடும் பளிக்கறையில் முத்துப் பந்தரின் கீழ்ப் பவள மஞ்சத்தின்மீது சயனித்த வண்ணம் அலையின் தாலாட்டுக்கு இசைய ஒரு கன்னிகை கண்வளரும் அழகைக் காண்பேன். வர்ணங்களை வாரி இறைத்து மெல்லத் திரட்டும் அந்தி வானம் மற்றொரு சித்திரத்தைக் காட்டும் எனக்கு. பசுமையான பூமியிலிருந்து தன் பொன் மேலாப்பை மெல்ல இழுத்துக்கொண்டு, கங்குலின் மறைவில் விண்மீன் விளக்கேந்தி, தென்றல் அசைவதுபோல் குறியிடத்தை நோக்கிக் காதலி ஒருத்தி செல்வதாகப் பாவனை செய்துகொள்வேன். நடுநிசியில், தன்னந்தனியே மாய உலகில் சஞ்சரிக்கும் சந்திரிகை, தொலைவில் ஒலிக்கும் குழல் இசை போல், வியாகுலமும் குதூகலமும் கலந்த பழைய நினைவுகளைக் கிளப்பி விடும். சில நேரம் இந்த மாதிரிப் பாவனைகளில் மூழ்கியிருப்பேன்.

* * *

வளையல் குலுங்கும் ஓசை கேட்டது. என் கற்பனை ஆயிரம் சுக்கலாக வெடித்துப் போயிற்று.

நீலாதான் வருகிறாள். விளக்கை அணைத்துவிட்டு ஈஸிசேரில் சாய்ந்து கண்ணை மூடிக்கொண்டேன் வேண்டுமென்றே. அவளுடைய காலடி மெல்ல என்னை அணுக அணுக என் இருதயமும் பின்னும் வேகமாகத் தன் இறகை அடித்துக்கொண்டது. நீலாயதாக்ஷி பின்புறமாக வந்து மெத்தென்ற தன் கையை என் கண்மேல் வைப்பாள். நான் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வேன். அப்புறம் மயிர்க்கூச்சல்...நித்தியம் இந்த மாதிரி விளையாட்டு.

நான் இவ்வளவு அன்பு செலுத்தினாலும் நீலாவுக்கு மட்டும் ஒரு குறை; தான் ஏனோ சிவப்பாய் இல்லை என்று. அவள் இதை வெளிக்குக் காட்டாமற் போனாலும் நான்

கண்டுகொண்டேன். நித்தியம் ஒரு தினுசாகத் தலையை வாரி முடித்துக்கொள்வாள். நகை நட்டுக்களில் மட்டும் சற்று மோகம். உடல் நிறத்திற்கு ஏற்ற 'ஸாரி'யை அணிவாள். ஸாரியின் நிறத்திற்கு 'ஜம்பர்'; விதவிதமான கைவெட்டு. இதெல்லாம் எதற்கு என்று எனக்குத் தெரியும். என்னை மயக்குவதற்கே! நான் திடீரென்று அவள்மீது வெறுப்புக் கொண்டுவிட்டால்? அவள் கறுப்பாச்சே!

வீட்டில் பெரியவர்கள் வற்புறுத்தினாலும் கொசாம் புடைவை கட்டிக்கொள்ளாமல் எனக்குப் பிடிக்கும் என்று மாம்பழக் கட்டாகவே உடுத்து என் முன் உலவுவாள் நீலா.

'உன் எண்ணம் இதுதானே?' என்று எப்போதாவது கேட்டுவிட்டால், பேதையின் முகம் வாடிவிடும். அந்தப் பெரிய விழிகளில் வேதனையின் வெள்ளம் இறங்கும். நான் உடனேயே சிரித்துவிடுவேன். மீண்டும் அந்த வதனத்தில் இந்திர வில் தோன்றும். அவளை என் அருகில் இழுத்துக் கொள்வேன்; என் இருதயத்தின் அருகே!

இந்த மாதிரியான பல மேடு பள்ளங்களைக் கடந்து எங்களுடைய தாம்பத்திய வாழ்க்கை இனிய சந்தத்துடனே சென்றது. எங்கள் இருவரையும் இன்னும் பிணைப்பதற்குக் குழந்தை என்ற பாலம் இல்லாமல் போனாலும் இந்தப் பத்து வருஷ காலத்திலும் எங்களுக்கிடையில் பள்ளம் எதுவும் ஏற்படவில்லை. கைகோத்தே இருவரும் செல்கிறோம்.

* * *

நீலாவின் ஸ்பரிசம் பட்டு என் உள்ரத்தம் குதித்தது. அந்தத் துடிப்பினால் சில கணம் பேசாமல் இருந்தேன். நான் இருந்த நிலைக்கு ஒத்துவராத ஒரு விஷயத்தை எடுத்தாள் அவள். "கதை எவ்வளவு தூரம் ஆச்சு?" என்றாள். "இனிமேல் எழுதுவதையே நிறுத்திவிடலாம் என்று இருக்கிறேன், நீலா! உன்னை நெருங்கி மேலும் இன்புற்றிருக்க என்னை விடாமல் தடுக்கிறது இந்த வேலை" என்றேன்.

நீலா தன் விரல்களால் என் 'கிராப்பை'க் கோதிக் கொடுத்தாளே தவிர ஒன்றும் பேசவில்லை!

"நீலா!" என்று கூப்பிட்டேன்.

"என்ன?"

"திடீரென்று கதையின் மேல் உனக்குக் கவனம் போவானேன்?"

நீலா, பக்கத்து வீட்டு ஜன்னலில் தொங்கும் மெல்லிய திரையைச் சுட்டி, "அதன் மறைவில் நடக்கிற ரகசியத்தை ஒரு கதை மூலமாக வெளிப்படுத்தப் போவதாக நீங்கள் சொல்லவில்லையா?" என்றாள்.

"ஆமாம்; அந்தத் திரையின் பின் கேட்கும் குரல், வாஸ்தவத்தில் அதிசயமானது என்றே சொல்ல வேண்டும். மனிதகண்டத்தில் அவ்வளவு உருக்கமும் உணர்ச்சியும் தொனிப்பதை இதுவரையில் நான் கேட்டதில்லை. அந்தக் குரல் ஓசையைத் தவிரத் திரை மறைவில் நடக்கும் வேறு ஒன்றும் தெரியவில்லையே. நாம் இந்த இடத்திற்கு வந்து ஐந்து மாதங்கள் ஆயின. அடுத்த வீட்டில் யார் குடியிருக்கிறார்கள்? அவர்கள் எந்த மாதிரி? எதுவுமே தெரியவில்லையே. நிழலாவது தெரியுமோ என்று பார்த்தால் அதையும் காணேமே. குரல் ஓசையைக்கொண்டே ஓர் அழகியை என் கற்பனை உண்டுபண்ணியிருக்கிறது."

"வேடிக்கை...நானும் அப்படித்தான் அந்தக் குரலிலிருந்து கற்பனை செய்துகொண்டேன்."

* * *

பக்கத்துவீட்டுத் திரைமறைவிலிருந்து மறுபடியும் அந்தக் குரல் கேட்டது. நான் காதைத் தீட்டிக்கொண்டேன். "ஏன் இத்தனை நாழி?" என்ற வார்த்தை வந்தது. "அப்படி நாழி ஒன்றும் ஆகிவிடவில்லையே......" என்றது ஆண் குரல்,

"சரிதான். ஏதாவது வயிற்றுக்குச் சாப்பிடுங்கள். பண்ணிவைத்து எவ்வளவோ நாழி ஆகிறது. ஆறி அவலாய்ப் போயிருக்கும். இப்படி நாழிகை கழிச்சு வருவானேன்?" என்றது பெண் குரல்.

"என்மேல் உனக்கு என்ன சந்தேகம்? இப்படிக் கேட்கிருயே? வெளியிலே போனுல் நாழிதான் ஆகும். இதை நீ சகித்துக்கொள்ளவில்லையே! உன்னைக் கட்டிக்கொண்டு இந்த ஏழு வருஷமாய் அழுகிறேனே? நான் சகிக்கிறேனே......"

"என்னை ஏன் இப்படிச் சொல்லிக் காட்டி நோகப் பண்ணுகிறீர்கள்?"

பெண் குரலில் கம்பலை தோன்றியது. அதற்குமேல் ஒரு பேச்சும் கேட்கவில்லை என் காதுக்கு. என் மனத்துள் பலவித எண்ணங்கள் தோன்றின. அந்தப் புருஷன் காட்டு மிராண்டியாக இருக்கவேண்டும். பின் எந்தக் கேள்விக்கு எந்தப் பதில்?

அந்த ரகசியத்தின்மீதுதானே என் கதையின் கட்டுக்கோப்பு நிற்கிறது! கதாநாயகியைத்தான் அதிரூபவதியாகச் சிருஷ்டித்துவிட்டேனே. ஏனென்ருல் நான் அவளை நேரில் கண்டதில்லை! கதையில், 'அடுத்தது என்ன?' என்ற ஆவலை எழுப்பும் கட்டத்தை எழுத முற்பட்டேன்.

எவ்வளவு ஆற்றல் இருந்தும், கதைக்கு ஜீவனைக் கொடுக்க முடியாமல் போயிற்று. கதையில் உள்ள உத்ஸாகத்தைவிடத் திரையின் பின்னுல் நடக்கும் உண்மையில்தான் என் கவனம் யாவும். கதைமேல் புத்தி ஓடவில்லை. நானும் நீலாவும் கண்ட ஒரு காதல் இன்பத்தை அடிப்படையாகக்கொண்டே அந்தக் கதை ஆரம்பமாகி நின்றுவிட்டது.

* * *

மறுநாள் சாயந்தரம். அன்றைக்குச் சற்று அலைச்சல். சரீரமும் மனமும் களைப்புற்று வீடு திரும்பினேன். நீலாவை 'ஸ்ட்ராங்'காகக் காபி போடச் சொல்லிவிட்டுப் படுக்கையில் போய்ச் சற்றுப் படுத்தேன். இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் நீலா உள்ளே வந்தாள். என்னையே சற்று நேரம் நோக்கிவிட்டுத் திகிலடைந்தவளாய், "என்ன உடம்பு?" என்று கேட்டுக்கொண்டே நெற்றியையும் கழுத்தையும் தொட்டுப் பார்த்தாள்.

ஆவி விடும் காபியைப் பருகின பிறகு எனக்கு வேர்த்தது. பழைய தென்பு எனக்கு வந்துவிட்டது. அப்போதுதான் நீலாவின் முகத்தில் உலவிய இருளும் விலகியது.

"இன்றைக்கு ஒரு அதிசயத்தைக் கண்டேன். அடுத்த வீட்டுக்காரியை நான் பார்த்தேன். ஐயோ! என்னவென்று சொல்லுவேன் அவள் அழகை?" என்று நீட்டினாள்.

நான் எழுந்து உட்கார்ந்தேன். கையைத் தேய்த்துக் கொண்டேன். நல்ல காலம். அவள் சொல்லப்போகும் விஷயம் என் கதைக்கு வாட்டமாய் இருக்கும் என்று சந்தோஷம் அடைந்தேன்.

"நீலா, கதையில் நான் வர்ணித்ததுபோல் அவ்வளவு அழகா? குரலிலிருந்து அவளுடைய அழகை ஒருவாறு நான் ஊகித்ததுதான் சாமர்த்தியம்" என்றேன்.

"அட ராமா, இதற்குள் இவ்வளவு ஜம்பம் அடித்துக் கொள்வானேன்? அவளைப் பார்த்தவுடன் எனக்கு ஓக்காளம் வந்தது. அந்த மாதிரிகூட ஒரு ரூபத்தைக் கடவுள் படைத்தாரே என்று ஆச்சரியப்படுகிறேன். அசல் பிரேதம்" என்றாள்.

என் அருமையான கதை மேஜையின்மேல் அப்படியே கிடந்தது. அவள் சொன்னதைக் கேட்டதும் எனக்குச் சப்பிட்டுவிட்டது.

"பாவம், அந்த மனுஷ்யன் அவளை இத்தனை வருஷங்களாக எப்படிச் சகித்துக்கொண்டிருக்கிறானோ? ரொம்பப் பொறுமைசாலியாக இருக்கவேண்டும். அந்த மாதிரியான கோர ரூபத்தைக் கடிந்துகொண்டால்தான் என்ன? புருஷன்தானே, எவ்வளவோ சலிப்படைந்து சொல்லியிருக்கலாம். அதை ஒரு தப்பாகக் கொள்ளக்கூடாது. ஐயோ, உங்கள் கதையில் வரும் கட்டழகி இப்படி அவலக்ஷணமாகவா மாறிவிடுவாள்?" என்றாள். தான் கறுப்பு என்பதை நீலாயதாக்ஷி மறந்தே போய்விட்டாள்.

* * *

நடு நிசி. நீலா அயோமயமாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். ஆகாயத்தில் வெண்ணிலா வழிந்து ஓடியது.

சீதளக்கிரணங்கள் கண்ணாடிக் கதவின் மூலமாக உள்ளே புகுந்து பலவிதக் கோலங்களைப் புனைந்தன. எதிரே திறந்த மாடியில் அவை கேட்பாரற்று விளையாடின. எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பக்கத்து வீட்டு ரகசியமே என் மூளையில் வேலை செய்துகொண்டிருந்தது. வெளியே தாழ்வாரத்தில் போய் நின்றேன்.

பக்கத்து வீட்டின் திரையிட்ட அறை அந்த இடத்திற்குச் சமீபந்தான். என்ன ஆச்சரியம்! நான் எழுந்து வந்தபோது, திரை விலகியிருந்தது. அறையினுள் இருந்ததெல்லாம் நன்றாகத் தெரிந்தது. அங்கே பேச்சுக் குரலும் கேட்டது. ஜன்னல் வழியாக ஒரு முகம் தெரிந்தது. எனக்கு நிமிர்ந்து நோக்கத் தைரியம் இல்லை. இருந்தும் நீலா வர்ணித்தவள் தானோ என்று சந்தேகம். கழுத்துச் சுளுக்கேறியதுபோல் திரும்பிப் பார்த்தேன். நெற்றியை விரலால் அழுத்திக்கொண்டு ஓர் ஆண் உருவம் நின்றிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்தாம்! அவரும் என்னை நோக்கினார். பாவம், ஏதோ சங்கடத்தில் ஆழ்ந்திருப்பதை அவர் முகம் காட்டியது. அவரே முதலில் பேச ஆரம்பித்தார்.

"ஸார், ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா? என் மனைவி என்னவோ மாதிரி கிடக்கிறாள். சற்று அடுத்த தெருவுக்குப் போய் டாக்டர் ராவைக் கூட்டிக்கொண்டு வருவீர்களா? இவளைத் தனியாக விட்டுச் செல்வது எப்படி? அதைத்தான் யோசிக்கிறேன். அறிமுகம் இல்லாமல் போனாலும் உங்களைத்தான் வேண்டிக்கொள்ள வேண்டும். ஆபத்தான விஷயம்......"

முகத்தில் சுரத்தே இல்லாமல் போனாலும் சிரிப்பை வரவழைத்துக்கொண்டார். அந்தக் காட்சி பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"இதற்கென்ன ஸார். மனுஷ்யனுக்கு மனுஷ்யன் உதவி செய்யாவிட்டால் அப்புறம் என்ன?" என்று சொல்லிவிட்டு நான் சந்தடி பண்ணாமலே வீட்டைவிட்டு வெளியே போனேன்.

டாக்டரை அழைத்துக்கொண்டு அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். பாவம், அந்த மனுஷ்யன் முகத்தில்

ஈ ஆடவில்லை. எங்களை அந்த மாடி அறைக்குள் இட்டுச் சென்றார்.

"எப்படி இருக்கிறது?" என்றேன்.

"இன்னும் பேச்சு மூச்சே காணோம்........" என்று சொல்லும்போதே அவர் குரல் உடைந்துவிட்டது.

"டாக்டர் நோயாளியைப் பரிசோதித்தார். இரண்டு மூன்று தரம் அவளை இப்படியும் அப்படியுமாகப் புரட்டி விட்டு, "பிராண பயம் இல்லை. ரொம்ப 'எக்ஸர்ஷன்' தான் காரணம். 'ஹிஸ்டீரியா'தான். இன்னும் அரைமணி நேரத்தில் 'நார்மல்' நிலை வந்துவிடும். இந்த அம்மாளிடம் 'ஷாக்' (அதிர்ச்சி) வரும்படியாக எந்த விஷயத்தையும் சொல்லக் கூடாது" என்று சொல்லிவிட்டு அந்த வீட்டுக் காரரைப் பார்த்தார் டாக்டர்.

நெடியான ஒரு திராவகத்தை நோயாளியின் மூக்குக்கு நேரே சற்று நேரம் பிடித்தார். அவளுக்கு மூச்சுத் தடைப்பட்டுக்கொண்டே வர ஆரம்பித்தது. "பயம் இல்லை. 'டானிக்' ஒன்று எழுதித் தருகிறேன். அதை நிரந்தரமாகக் கொடுத்தால்தான் உடம்பு தேறும்" என்றதும் விடை பெற்றுக்கொண்டார்.

டாக்டர் போனவுடன் நான் அந்தத் திக்கற்ற மனிதனைப் பார்த்து, "இந்த மாதிரி அடிக்கடி வருகிறதா?" என்று கேட்டேன்.

அவர் இடிந்துபோன குரலில், "இன்றைக்குத்தான். இதற்கு நான்தான் காரணம், ஸார். ஆபீஸிலிருந்து வருவதற்குச் சற்றுத் தாமதம் ஆகிவிட்டது. அவள் நாலைந்து வருஷகாலமாகவே துர்ப்பலம் ஆகிக்கொண்டு வருகிறாள். இரண்டு பிள்ளை பெற்றுத்தான் இந்த மாதிரி ஆகிவிட்டாள். நானும் மனுஷ்யன்தானே. சள்ளென்று ஏதோ சொல்லிவிட்டேன். அவளுக்கு அது ரொம்பவும் உறைத்து விட்டது. என்னோடு பேசவில்லை. நான் படுத்துக்கொள்ள உள்ளே வந்தபொழுதும் என்னோடு பேசவில்லை. நானும் பேசவில்லை. கடைசியில் அநாவசியமாக அவளைப் புண் படுத்தின அந்த வார்த்தையை ஏன் சொன்னோம் என்று தோன்றியது........"

நான் குறுக்கிட்டு, "அப்படி நேரும்படி என்ன சொன்னீர்களோ?" என்றேன்.

"'பிரேதம் மாதிரி இருக்கும் உன்னைக் கட்டிக் கொண்டு அழுகிறேனே' என்று சொல்லிவிட்டேன்."

"சொல்லக்கூடாதுதான், ஸார்!"

"என் கமலா ஒரு சமயத்தில் எவ்வளவு அழகாய் இருந்தாள் தெரியுமா? என் கமலா இந்தப் பாழும் வியாதியால் உருக் குலைந்துவிட்டாள். பகவான் என்னைப் பல வழியில் சிறுமைப்படுத்திவிட்டார், போங்கள்!" என்றார்.

'டங்' என்று கடிகாரத்தில் மணி ஒன்று அடித்தது. எங்கோ தொலைவில் வேகமாகச் செல்லும் மோட்டாரின் 'ஹாரன்' கேட்டது. அவர் பேசத் தொடங்கினார்: "அவள் குரங்காய்ப் போனாலும், அவள் மேல் எனக்கு ஆசை சற்றும் குறையவில்லை. என்னை வேறு வழிக்குப் போகாமல் தடுத்தது அந்த ஆந்தரிகமான பாசந்தான்."

அப்போது 'ஊம் ம்...ம்' என்று ரொம்பப் பலஹீனமான த்வனி கேட்கவே நாங்கள் நோயாளியின் பக்கத்தில் போய் நின்றோம்.

"கமலா, கமலா" என்று கூப்பிட்டார் அவர். பதில் இல்லை. அழுகை தொண்டையில் கடைய, "அவளுக்குத்தான் இப்படிக் கோரம் ஆகிவிட்டோமே என்ற வருத்தம். நான் எங்கேயாவது அவள்மேல் ஆசை வைக்காமல் போய் விடுவேனோ என்ற திகில். நான் வரச் சற்று நேரம் ஆகி விட்டால் சந்தேகந்தான் அவளுக்கு. வந்தவுடன் தன்னை வாட்டும் நோயையும் மறந்துவிட்டு, இன்முகத்துடன் என்னை உபசரிப்பாள். அசடு. என்னை என்னவோ என்று எண்ணிவிட்டாள். என் உள்ளத்துள் இருப்பது அவளுக்குத் தெரியவில்லையே. காரணம் இல்லாமல் அழுதுவிடுவாள். 'கமலா, நீதான் எனக்குப் பிரபஞ்சம். ஏழு வருஷ காலமாக உன்னை என் கண்ணைப்போலவே பாதுகாக்கும் நானா வேறு கல்யாணம் செய்துகொள்வேன்? சே அசடே! ஏழு ஜன்மத்திற்கும் நீதான் எனக்கு மனைவியாக வரப்போகிறாய். நான்தான் உனக்குப்

புருஷனுக வரப்போகிறேன்' என்ற உறுதியைக் கொடுத்த பிறகுதான் நிம்மதி அடைவாள்'' என்ருர்.

மறுபடியும் 'ஊம்' என்ற வேதனையின் குரல். படுக்கையின் சமீபமாகச் சென்று அவர், "கமலா, கூப்பிட்டாயா? என்ன வேணும்?'' என்ருர். உடலை முறித்துக் கொண்டே, அவள் எலும்பெடுத்த தன் இரு கைகளையும் தூக்கினுள். "எங்கே இருக்கிறீர்கள்?'' என்ருள் நிஸ்த்ராணையாக. அந்தக் குரலின் உருக்கந்தான் என்னே! மெல்லத் தன் கழுத்தில் அவளுடைய கைகளை எடுத்துவைத்துக்கொண்டு அவர், "இதோ உன் கிட்டத்தான் இருக்கேன்...கமலா...கமலா! என்ன வேணும்?'' என்ருர் ஆதரவுடன்......அதை வர்ணிக்க என்னுல் முடியாது. என்னையே நான் மறந்துபோய்விட்டேன். அறையில் மூன்ருவது மனுஷ்யன் இருப்பதைக்கூடப் பாராமல் அவர் அவளைத் தழுவிக்கொண்ட காட்சி எனக்குப் புதியதோர் உலகையே காட்டியது. சரீர இச்சையை மீறிய தூய காதல் ஒளிரும் அற்புத உலகை!

"என் மனம் நோகும்படி எந்த வார்த்தையும் சொல்லக் கூடாது. நான் தாளமாட்டேன்...'' என்ருள் அவள்.

என்னைப் பார்த்துப் பேதைபோல் சிரித்தார் அவர். அந்தச் சிரிப்பில்தான் எவ்வளவு வேதனை இருந்தது? இது வரையில் திரைமறைவில் நடந்த நாடகத்தின் முடிவை நேரில் கண்டதும் நான், "போய் வருகிறேன்'' என்று கூறிவிட்டு வீட்டை அடைந்தேன்.

* * *

நடந்த ஒவ்வொரு விஷயமும் என் கண்முன் வந்து நின்றது. எப்படித்தான் அந்த மனுஷர், பாவம்! இதையெல்லாம் சகித்துக்கொண்டிருக்கிருரோ என்று நினைத்தேன். மனிதனுடைய மனமே விசித்திரமானது. நரகத்தையும் ஸ்வர்க்கமாகச் சிருஷ்டிக்க வல்லது.

அடுத்த வீட்டு ஜன்னலை ஒரு முறை நோக்கினேன்... அதன் திரை விலகிவிட்டது......அங்கே ரகசியம் ஒன்றுமே இல்லை. ஒன்றை ஒன்று சுற்றிக்கொண்டிருக்கும் இரண்டு அதிசய இருதயங்கள் தாம்!

நீலா தூங்கிக்கொண்டிருந்தாள். அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன், சற்று நாழிகை.

மெதுவாகக் கட்டிலின்மேல் உட்கார்ந்தேன். நீலா கண் வளரும் அழகையே உற்று நோக்கினேன். என்னையே நம்பியிருக்கும் நீலா அல்லவா? எந்தச் சலனமும் அதில் தென்படவில்லை அந்த மாசற்ற வதனத்தில். எவ்வளவு இன்பக் கனவுகளைக் கண்டோம், நாங்கள் இருவரும் அந்தப் பஞ்சணையின்மேல்! இந்த இன்பங்கள் யாவும், வெறும் அந்த உடலின் வனப்பின் மேலுள்ள மோகத்தினுல் பிறந்தனவா, வேறு அபூர்வமான அன்பின் எதிரொலியாலா? கமலாவின் கோர ரூபத்தைப் பார்த்த பிறகு என் நீலா என் கண்ணுக்கு ஊர்வசி மாதிரியே தோற்றினுள். எதனுலேயோ என் உடல் சிலிர்த்தது. நீலாவின் முகத்தைக் கவிந்து நோக்கினேன். பாவம், என் கருமாணிக்கம் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். கட்டிலை மெல்ல அசைத்தேன். நீலாவின் தூக்கம் கலைந்துவிட்டது. மலர்ந்தன கண்கள்; பூத்தது முறுவல். "இதென்ன திருட்டுத்தனம்......திடீரென்று உங்களுக்கு?" என்றதும் என் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். நான் திணறிக் கொண்டே, "இல்லை நீலா, உன்மேல் எனக்குள்ள ஆசை இவ்வளவு அவ்வளவல்ல. அதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன்" என்றேன்.

"போங்கள், நடுநிசியில் பிதற்ற ஆரம்பித்துவிட்டீர்களா என்ன?" என்று சொல்லிக்கொண்டே தன் முகத்தை என்பால் நீட்டினுள்.

என் மனத்துள் மூண்ட ஸமஸ்யைக்கு விடை கிடைத்துவிட்டது. காதலுக்குக் கண் இல்லைதான்!

# ரகுராமனின் கல்யாணம்

## 1

ரகுராமன் காலேஜ் மாணவன். ஆள் மிகவும் ஒல்லி. ஆனால் நல்ல உயரம். ரகுராமன் வீட்டிற்குப் பக்கத்திலேயே டாக்டர் சந்திரமௌளியின் வீடு. அவர் அந்த இடத்திற்குக் குடி வந்து சில மாதங்களே ஆயின. ரகுராமனுக்கும் அவருக்கும் அந்யோந்யம் ஏற்பட்டது. சந்திரமௌளி ரகுவை விடப் பத்து வருஷம் பெரியவராய் இருப்பார். ரஸிகரானதால் இளைஞருடன்தான் அவர் பழகுவதெல்லாம். ரகுவும் அவரும் ஆப்த நண்பர்களான தில் விசித்திரம் ஒன்றும் இல்லை.

சந்திரமௌளிக்கு மாமனார் இல்லை-கல்யாணம் ஆகாத ஒரு மைத்துனி இருந்தாள். அவளைக் கட்டிக்கொடுக்கும் பொறுப்பு அவர் தலையில் விழுந்தது. ரகுராமனுக்கு மெல்ல அவளை எவ்வாறு மாட்டிவிடலாம் என்று சிந்திக்கலானார். இதன் பொருட்டே ரகுராமனுடன் அதிகமாக அவர் இழைய நேரிட்டது. எப்பொழுதோ ரகுராமன் உளறிக்கொட்டியதிலிருந்து, அவனுக்குப் பாங்கில் பத்தாயிரம் ரூபாய் இருப்பதை அறிந்துகொண்டார் சந்திரமௌளி. போதாக்குறைக்கு ரகுவுக்குப் பெருந் திக்கு யாருமே இல்லை; தனி ஆள். பெரிய வீட்டுக்குச் சொந்தக்காரன். இவை யாவும் சந்திரமௌளியின் வேட்டைக்கு வாட்டமாய் அமைந்தன.

நல்ல யௌவன தசையில் இருப்பதால், இடம் பொருள் ஏவலுக்கு ஏற்றவாறு காதல் நோய் நாளுக்கு நாள் விருத்தியடையும் லக்ஷணம் ரகுராமனிடத்தில் தென் பட்டது.

ஒரு நாள் திடீரென்று ரகுராமன் எங்கேயோ யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டான். அவனுடைய நண்பர்களுக்கெல்லாம் இது ஆச்சரியமாய் இருந்

தது. அவன் மாயமாய் மறைந்தது போலவே திடும் என்று ஒரு நாள் திரும்பிவிடவே அவர்களுக்கு இதன் மர்மம் புரியவில்லை.

டாக்டர் சந்திரமௌளிக்கும் இது புரிபடாத விஷயமாகவே இருந்தது. ரகுராமனே உன்மத்தம் பிடித்தவன் போல், அலங்கோலமான கிராப்புடன் முகம் கூம்பிச் சந்திரமௌளியிடம் வந்து, "டாக்டர், காதல் நோய் என்னைப் பிடித்திருக்கிறதே" என்று புலம்பினுன்.

தாம் போட்ட 'பிளான்' தவறிவிடுமோ என்ற சங்கை மூண்டது டாக்டருக்கு.

ரகுராமன் எதையும் ஒளிக்காமல், நடந்ததை டாக்டரிடம் கூறிவிட்டான். "என்னவோ தோன்றியது; கிளம்பினேன் பங்களூருக்கு. டாக்டர், மனிதனை உயர்வாகச் செய்வதும் பாதாளத்தில் தள்ளுவதும் காதலே. ஆனுல் அதனுல் விளையும் ஒரு பயன் என்னவென்ருல், இவ்வுலகிலுள்ள எல்லா விகாரங்களும் நம் கண்ணுக்கு அழகாகவே தோன்றுகின்றன. இன்று உலகம் அத்தகைய உணர்ச்சியால் எனக்கு வர்ண மயமாகவே காட்சி அளிக்கிறது — இன்பம் - இன்பம் - இன்பம்" என்ருன்.

சந்திரமௌளி தமாஷ் பண்ணும் பாவனையாக, "காமாலை நோய்க்கு இது ஒரு லக்ஷணமாகும்" என்ருர்.

"நான் என்னவென்று சொல்வேன் அந்தத் தெய்விகக் காட்சியை! அமிர்தம் பருகுவதுபோல் இருந்தது" என்ருன் ரகு.

"நாக்குத் தித்தித்தால் பித்தக் கோளாறுக்கு அடையாளம். கசப்பாக ஏதாவது உட்கொண்டால்தான் வாங்கும் 'சிராடாவோ க்வினைனே'."

"வேடிக்கையா என்ன, வாஸ்தவமாக ரத்த வேகம் என்னுள் துள்ளுகிறது, அடங்கவில்லையே."

"ஸாசுரேடட் ஸொல்யூஷன் ஆப் மாக்ஸல்ப்..."

"இதயம் கிடுகிடுவென்று அடித்துக் கொள்ளுகிறதே அவளை நினைத்துக்கொள்ளும் போதெல்லாம்."

"கொஞ்சம் 'கார்டியக் ஸ்டிமுலண்ட்' சாப்பிடு."

"விளையாட்டல்ல டாக்டர். நீங்களும் நானும் ஸ்நேக மாகிச் சில நாட்களே ஆகின்றன. நான் இந்தப் பாழும் நோய்க்கு ஆளான பிறகு என் அந்தரங்க நண்பராகவே உம்மைப் பாவித்துவிட்டேன். எகத்தாளி பண்ணவேண்டாம். நீங்களே ஏதாவது சொன்னால் தற்கொலை புரிந்து கொள்ளவேண்டும் என்று ஆத்திரம் வருகிறது......நான் காதல் கொண்டிருப்பது அவ்வளவும் உண்மையே. என் வார்த்தையை நம்புங்கள்."

"நம்பாமல் என்ன? இந்தக் காதல் விஷயம் எப்பேர்ப் பட்டது தெரியுமோ? காட்டாற்று வெள்ளம் போன்றது. திடீரென்று பொங்கிவரும், திடீரென்று அடங்கிவிடும். நிலையற்றது."

"டாக்டர்வாள், நீங்கள் லாஜிக் படித்திருந்தால் இந்த மாதிரி தவறான கொள்கைக்கு இடம் கொடுத்தி ருக்க மாட்டீர். 'பால்ஸ் அனாலஜி' (False analogy)யினால் உண்மை உணர முடியாமல் போய்விடுகிறது."

"அனாலஜி போலியாய் இருந்தாலும் பேதாலஜி (Pathology) பொய் ஆகாது."

"அதாவது நீங்கள் சொல்லுவது என்ன?...என்னை இந்தக் காதற் கனல் அறவே சுட்டெரித்துவிடும். அது தானே?"

"சந்தேகம் என்ன?"

"என்ன டாக்டர்வாள், சூரியனைப்போல் ஒளி விடுவதும் வெம்மையானதுமான இந்தக் காதல் நிலையானதன்று? சூரியன் அழியக்கூடியதா? சொல்லும்."

"பெண் யார், அதைச் சொல். இந்தத் தத்துவத் தைப் பற்றிப் பிறகு பேசலாம்."

"டாக்டர், என்னை நோய் வாட்டும் இடத்தைச் சரியாகக் கண்டுபிடித்தீர், உங்களிடம் ஒளிப்பாட்டமேன்? பெரிய சங்கடத்தில் சிக்கிக்கொண்டேன், போம். அவளைப் பார்த்த மாத்திரத்தில் மயலானேன். ஆனால் அவள் யார் என்பதை நான் அறியேன். கப்பன் பார்க்கில் உட்கார்ந் திருந்தபோது என் எதிரில் பூங்கொடி மறைவிலிருந்து

ஆவிர்பவித்தாள் அந்த மோகினி. எனக்கென்றே இந்த மாயா ரூபிணி தோன்றினுளோ என்றெல்லாம் எண் ணிக்கொண்டேன். என்னுல் இருக்க முடியவில்லை. அவளையே பின் தொடர்ந்து சென்றேன். இருப்பிடத் தையும் தெரிந்துகொண்டேன்.''

''அந்த மோகினி கல்யாணம் ஆனவளா ஆகாதவளா?''

''எனக்கு எப்படித் தெரியும்?''

''வீட்டு விலாசம் என்ன?''

''சாந்தி குடீரம்.''

''சாந்தி குடீரமா?'' சந்திரமௌளிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''சாந்தி குடீரமா? நிஜமாகவா, ஆச் சரியமாய் இருக்கே-அப்புறம்...என்ன நடந்தது சொல்லு'' என்ருர்.

''அவளைப் பார்த்து நான், 'ஏ தேவி' என்று அழைத் தேன். அதற்குமேல் எனக்குப் பேச்சு எழவில்லை.''

''அவள் பதிலுக்கு ஏதாவது பேசினுளா?''

''இல்லை, சிறு முறுவல் மட்டும் செய்தாள்.''

''இப்போது நீ என்ன செய்யவேண்டும் என்கிருய்?''

''உங்கள் யோசனையைக் கேட்கத்தான் வந்தேன்.''

''பெண்ணைப்பற்றி ஏதாவது தகவல் தெரியுமா?''

''ஒன்றுமே தெரியாது.''

''அவளை நீ கல்யாணம் செய்துகொள்ள ஆசைப் படுகிருய், அதுதானே!''

''அந்த ஆசை நிறைவேறும் என்பது என்ன நிச்சயம்?''

''பேஷாக நிறைவேறும்; நான் சரிப்படுத்திவிடு கிறேன்.''

''கேலி செய்கிறீர்களா என்ன டாக்டர்வாள்?''

''கேலியல்ல, 'ஸீரியஸ்'ஸாகவே சொல்லுகிறேன்.''

''நீங்கள் பெங்களூருக்குப் போகப் போகிறீர்களா?''

"அடுத்த வாரமே."

"நானும் வரவேண்டி இருக்குமா?"

"இதென்ன வேடிக்கை. நீ வராமல்....? இன்றைக்கே புறப்படு நீ."

"உங்களை எங்கே சந்திப்பது?"

தான் தங்கப் போகும் இடத்தைப்பற்றிப் பேசாமல் சந்திரமௌளி ரகுராமனைப் பார்த்து, "நீ எங்கே தங்க உத்தேசித்திருக்கிறாய்?" என்று மட்டும் விசாரித்துக் கொண்டார்.

"மாடர்ன் ஹோட்டலில்."

"அங்கேயே வந்து உன்னைப் பார்க்கிறேன்."

## 2

டாக்டர் சந்திரமௌளி குறித்த தினத்தன்று பங்களூரில் இருக்கும் தம் மாமனார் வீட்டில் போய் இறங்கினார். மாடர்ன் ஹோட்டலுக்குப் போய் ரகுவைச் சந்தித்தார். இருவருமாகக் கப்பன் பார்க்கிற்குச் சென்றனர். அங்கே உல்லாசமாகச் சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது திடுக்கிட்டவனாய் ரகுராமன், "அதோ வருகிறாள் - அவள் தான்" என்று பரபரப்புடன் உடல் புளகிக்கக் கூறினான்.

"ரகு, சரியான வேட்டை, ப்யூட்டி!" என்றார் டாக்டர்.

"இந்த மாதிரி அழகியைப் பார்த்த பிறகு யார்தான் மயங்க மாட்டார்கள்?"

"இல்லை இல்லை. உன்னைத் தப்பாக எண்ணியது தவறுதான், புத்திசாலிதான் நீ."

"புத்தி இருந்தால் மட்டும்? அவளை அடைவதற்கான வழி என் புத்திக்கு எட்டினால்தானே?"

"அந்தத் தொல்லை உனக்கு ஏன்? என்னிடம் விட்டுவிடு. காரியத்தை முடித்துவிட்டேனானால் என்ன வெகுமானம் எனக்கு?"

"உம்மிடம் சிகித்ஸை பெற அளவற்ற பேர்களைக் கொண்டு வருவேன்."

"சரி, இன்னொரு விஷயம்: அந்தப் பெண் பிராமண ஜாதியாய் இல்லாமல் போனாலோ?"

"இன்டர்காஸ்ட் மாரேஜ்தான் என்னுடைய நோக்கமும்."

"அப்புறம் இந்த வார்த்தையை மாற்ற மாட்டாயே?"

"இதோ ஆணையிட்டுச் சொல்லுகிறேன். வாக்குக் கொடுத்துவிட்டுப் பிசகமாட்டேன்."

"ஸத்தியமாக?"

"ஸத்தியமாக!"

## 3

இரவு பன்னிரண்டு மணி இருக்கும். சந்திரமௌளி ரகுராமனிடம் வந்து, "முடித்துவிட்டேன். இனிமேல் கடவுள் விட்ட வழி" என்றார்.

"என்ன, இவ்வளவு சீக்கிரத்திலா முடிந்துவிட்டது, ஏது?"

"சாமர்த்தியம் இல்லாமல் போனால் இதில் தலையிட்டிருப்பேனா?"

"நடந்ததை ஒன்றுவிடாமல் சொல்லும்."

"எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்ல முடியாது. தெய்வம் இருக்கிறது என்பது உண்மை."

"நீர் தெய்வத்தின் பெயரை இழுப்பது எனக்கு என்னவோ சந்தேகத்தையே தருகிறது. நல்ல சமாசாரந் தானே? அதை முன்னால் சொல்லுமே."

"பெண் என்னவோ பிராமண ஜாதி; கோத்திரமும் சரியாக இருக்கிறது. பெண் வீட்டாருக்கும் சம்மதமே. ஆனால்—"

"ஆனால் என்ன டாக்டர்வாள்?"

"பெண் வீட்டாருக்கு ஆஸ்திபாஸ்தி ஒன்றுமே இல்லை. ஒரு சமயத்தில் நல்ல ஸ்திதியில் இருந்தவர்கள்."

"வரதக்ஷிணையைப்பற்றி நான் ஏதாவது தயங்குவேன் என்று எண்ணுகிறீர்களா? நான் அந்தக் கொள்கைக்கு விரோதி ஆச்சே."

"உன்னைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. அந்தப் பெண்ணைப் பற்றித்தான்."

"அவளைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் என் கண்ணைப்போல் வைத்துக்கொள்வேன்."

"வைத்துக்கொள்ளாமல் என்ன? விஷயம் அதுவல்ல. 'பெண்ணின்பேரில் ஏதாவது எழுதிவைப்பானு' என்று தாயார் அபிப்பிராயப்படுகிருள் போலத் தெரிகிறது. உனக்கு ஏதாவது ஆக்ஷேபம் உண்டா என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டாமா நான்?"

"ஆக்ஷேபம்! என் ஆஸ்தியெல்லாம் அவளுடையது தானே."

"அது இருக்கட்டும் ஒரு பக்கம். பிற்காலத்தைப் பற்றி இப்போது பேசவில்லை. இப்போது நடக்க வேண்டிய விஷயத்தைப்பற்றித்தான் நான் பேசுவதெல்லாம். உனக்கு இதனுல் ஏதாவது அசௌகரியமாய் இருக்கலாம். மனசு விசாலமாக இருந்தால் பணப்பையைத் தாராளமாகத் திறந்துவிடலாம்."

"இதை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா?"

"நான் இல்லையப்பா! பெண்ணைப் பெற்றவர்களுடைய அபிப்பிராயம் இது."

"எவ்வளவு எழுதிவைக்க வேண்டுமாம்?"

"ஒரு நாலாயிரமோ, ஐயாயிரமோ முன்னுல் அவள் பெயரால் பாங்கில் கட்டிவிட வேண்டும்."

"சரி கட்டிவிடுகிறேன். இவ்வளவுதானே 'கண்டிஷன்'?"

"இவ்வளவுதான், காரியம் முடிந்தாற்போல்தான்."

“டாக்டர், இவ்வளவு சுலபமாக முடித்துவிடுவீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை. என்னுள் மட்டும், “அவளை அடைவாய்; அடைவாய்” என்று ஒரு வாக்கு, சொல்லிக்கொண்டே இருந்தது. சாகுந்தலம் நீங்கள் படித்திருப்பீர்கள். துஷ்யந்தன் சகுந்தலையைப் பொழி லிடைக் கண்டபோது—”

“நிசி வேளை ஆகிறது; துஷ்யந்தன் காதல் வரலாறு இந்த அவ வேளையில் கேட்கக் காதுக்கு இனிமையாக இராது.”

“தெரியும் ஐயா, டாக்டர்களே எப்போதும் இப் படித்தான். மனிதனுடைய இருதயம் அவர்கள் வரைக்கும் ஒரு யந்திரந்தானே - ஜடபிண்டந்தானே! இருதயத்துள் அனுபவிக்கும் சுக துக்கங்களைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியப்போகிறது? ஆனால்—”

“சில சமயம் தெரிந்துகொள்கிறோம். ஆனால் உண் மையில் அதில் ஓர் அர்த்தமும் இல்லை.”

“அர்த்தமே இல்லையா?”

“உனக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ண வந்த இடத் தில் எனக்கும் கல்யாணம் செய்துகொள்ள ஆசை உண் டாகிறது.”

“உங்களுக்குத்தான் கல்யாணம் ஆகியிருக்கிறதே.”

“ஆகியிருந்தால் என்ன? உனக்கு வரும் பெண் தத் ரூபம் என் மனைவியாட்டமே இருக்கிறாள்.”

“நல்ல குடும்பத்துப் பெண்ணைப்பற்றி இவ்வாறு கன்னாபின்னா என்று பேசுவது உசிதமாய் இல்லை.”

“நான் டாக்டர் அல்லவா, எனக்கு உணர்ச்சி ஏது?”

“அதனால் பாதகம் இல்லை. அந்தப் பெண் எனக்கு வாழ்க்கைப்படப் போகும் விஷயம் உமக்குத் தெரிந்தும் இப்படிச் சொல்லலாமா?”

“தெரிந்ததால்தான் எனக்கு உன்னைக் கண்டால் பொறுமையாக இருக்கிறது.”

“இது நிஜமான வார்த்தையா விளையாட்டா?”

"அப்கோர்ஸ், விளையாட்டுத்தான். இல்லாவிட்டால் உனக்கு அவளை முடித்திருப்பேனா? நானே அடித்துக் கொண்டு போய்விட்டிருக்கமாட்டேனா!"

"சரி, அவள் பேரில் அந்தத் தொகையை நான் 'ட்ரான்ஸ்பர்' செய்துவிடுகிறேன். நீர் இந்த வாரத்திற்குள் கல்யாணத்தை முடித்துவிடவேண்டும். உறுதி கொடும்."

"ஆஹா, உறுதி தந்தேன்."

## 4

சுப விவாகம் இடையூறின்றி நிறைவேறியது. ஆனால் ரகுராமனின் முகத்தில் மட்டும் ஈ ஆடவில்லை. சிந்தையில் ஆழ்ந்து விளங்கினான். சந்திரமௌளி அவனைக் குஷிப்படுத்த எவ்வளவோ முயன்று பார்த்தார். கடைசியில் எவ்வளவோ ஆறுதல் மொழியெல்லாம் கூறிய பின்பே முகத்தில் 'சுரத்' வந்து அவன் பேச ஆரம்பித்தான்.

"டாக்டர்!"

"என்ன?"

"இவ்வளவு சாமர்த்தியமாக இந்தக் காரியத்தை மூடி வைப்பானேன்?"

"கடமையின் பொருட்டே செய்தேன்... உன்னை நான் ஏமாற்றி ஏதாவது படுகுழியில் தள்ளிவிட்டேனா? சொல்லு."

"அது ஒன்றும் இல்லை, எனக்குத் தலை இறக்கமாய் இருக்கிறது."

"அது ஒன்றும் இல்லேன்னா...லிவர் சரியாக ஆக்ட் பண்ணாமல் இருக்கும், வேறு ஒன்றும் இல்லை."

"ஆனால் தலை இறக்கம் அன்றோ?"

"ஒருபோதும் இல்லை."

"கடைசி வரைக்கும் இதை எல்லாம் என்னிடம் ஒளிப்பானேன்? நான்தான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வருந்தி மேல்விழுந்து முயன்றேனே."

"அந்த ஆர்வத்தை ஜாஸ்தியாக்கவே இவ்வாறு செய்தேன். முதலிலேயே வெளியிட்டிருந்தால் விஷயம் கைகூடாமல் போயிருக்குமே."

"எப்படி?"

"உனக்கு அது புரியாது. ஐவர் இதற்குமுன் உன்னைப் போலவே அதிகமான மோகம் கொண்டு, கடைசியில் கையை விரித்துவிட்டார்கள்."

"எனக்குமுன் ஐந்துபேரா? அவர்களும் என்னைப் போல் அவளைக் காதலித்தார்களா என்ன?"

"இல்லை, இல்லை. உத்தியான வனத்தில் தனிமையில் சந்தித்தால் என்ன நிகழும் என்பதை எப்படிச் சொல்வது?"

"நீங்கள் சொல்வது அவ்வளவும் வாஸ்தவம். இப்படிச் சந்திப்பதுதான் முடிவில் பெருந் தொல்லையாக மாறுகிறது. அவள் என்ன செய்வாள் பாவம்?"

"ஏது, இதற்குள் இவ்வளவு அனுதாபம்?"

"அனுதாபமா? என்னைப்போன்ற சுகி இந்த உலகத்தில் வேறு யாருமே இல்லை, இன்று."

"இந்த எண்ணம் இருக்கும்வரையில் உனக்கு ஆரோக்கியக் குறைவே வராது."

"ஆனால் என்னிடத்தில் மட்டும் சற்று அவநம்பிக்கை கொண்டீர் – அல்லவா?"

"ஒருபோதும் இல்லை."

"பணத்தை முன்னதாகவே ஏன் ஸரளாவின் பேருக்கு எழுதிவைக்கச் சொன்னீர்?"

"அது உன் பேரில் உள்ள சந்தேகத்தினால் அல்ல. ஸயன்ஸை நம்புவதன் பயனாகவே அவ்வாறு செய்தேன்."

"அப்படி யென்றால்?"

"அதாவது ஒரு 'ஸயண்டிபிக்' பரீக்ஷை. மோகம் பெண்ணிடத்தில் முதலில் தோன்றினால் மாப்பிள்ளைக்கு அதிருஷ்டம் அடிக்கிறது. இதுவே புருஷனிடத்தில் முத

வில் உதித்தால் பெண் கொடுத்துவைத்தவள் ஆகிருள். இதைத்தான் உங்கள் விஷயத்தில் ஆராய்ச்சி செய்தேன்.''

''உங்கள்பேரில் எனக்குக் கோபந்தான். ஸரளாவைக் கொண்டு உம்முடைய காதை அழுத்திக் கிள்ளச் சொல்லுகிறேன் பாரும்.''

''ஐயோ, அதை ஏன் கேட்கிருய்! நான் முன் ஜாக்கிரதையாகவே ஒரு பொய்க் காதை வைத்துக்கொண்டு காத்திருக்கிறேன். ஆனல் என் காதில் கைவைக்குமுன் கையை 'ஸ்டெரிலைஸ்' (Sterilise) பண்ணிக்கொள்ளச் சொல்லு அவளை. நானும் காதை ஸ்டெரிலைஸ் பண்ணிக் கொள்கிறேன். சரிதானு? அப்போதாவது உன் கோபம் தணியட்டும்'' என்றுர் சந்திரமௌளி.

# கவியின் தாபம்

மதயானைகள் நடமாடும் உஜ்ஜயினியின் விசாலமான ராஜ வீதிகளில் ஈ காக்கை இல்லை. நடுப் பகல். கோடையின் வெம்மையான மூச்சு, சந்தி, சதுக்கம் எல்லாம் புழுதித் தேரைக் கிளப்பியது. கதவு, சாளரம் எல்லாவற்றையும் அடைத்துக்கொண்டு நாகரிகர்கள் குளிர்ந்த அந்தப்புரத்தினுள் அடைக்கலம் புகுந்தனர். வசந்தச் சோலைகளிலுள்ள மாமரங்களின் இருண்ட தளிர்க் குவைக்குள் குயிலினம் இசை ஓய்ந்து கிடந்தன. கடைத் தெருக்களில் ஒரு நாயின் நிழல்கூட ஓடவில்லை. அரசனுடைய மாளிகை வாயிலுக்கு வெளியே பட்டுடை பூண்ட யவனக் காவலன் வெயில் தரும் துன்பத்தால் முகம் சிவக்க, உடலிலிருந்து வழியும் வேர்வையைச் சற்றைக்கு ஒருதரம் வழித்துக்கொண்டே இருந்தான்.

அரமியத்துள்ளோ, வேறு விதமான காட்சி. பெரிய சபா மண்டபங்கள் இருட்டாகவே தோன்றின. இன்னும் உட்புறத்தில் பனித்துளி துளிக்கும் சந்திர காந்தக் கற்களால் அமைந்த அலங்காரமான கொலுவறையில் சத்துருஜித்தான விக்கிரமாதித்திய மகாராஜா, தரைமீது சாய்ந்த வண்ணம், அன்னத்தூவி அணை எதுவும் இன்றி, உடம்பில் உத்தரீயங்கூட இல்லாமல் கிடந்தார். அவர் கையை நீட்டும்பொழுதெல்லாம், ஓர் அவந்திசுந்தரி குளிர்ச்சியான ரதிபலம் என்னும் பானத்தை அடிக்கடி கிண்ணத்தில் ஊற்றித் தந்துகொண்டே இருந்தாள். சாலேக வாயில்களில் தொங்கும் வெட்டிவேர்ப் பாய்களின்மீது யவனப் பெண் ஒருத்தி நீரை வாரி இறைத்தும் அரசனுக்கு வேர்வை ஆறுகப் பெருகியது.

மணமார்ந்த தாம்பூலச் சுருளை ஏந்தி இருந்தாள் ஒரு மடந்தை. மயில் இறகு விசிறியை வீசினுள் கட்டழகி ஒருத்தி.

அரசனுக்குக் கால்பக்கமாகச் சற்று ஒதுங்கியே

இளமை பொங்கும் ஓர் ஆள் வீற்றிருந்தான். அழகாக வாரிய சிகை; கழுத்தில் ஸ்வர்ணகண்டி; தோள்களில் புஜ கீர்த்தி; பரந்த நெற்றியில் காச்மீர சந்தனம்.

இருவரும் பேசாமல் இருந்தனர். விக்கிரமனுடைய விழிகளில் லேசான கலக்கம். ஆனால் தூக்கம் இல்லை. யுவகனுக்குச் சந்தேகம், ஒருவேளை மகாராஜா கட்டாந் தரைமீதே கண் வளருவாரோ என்று. ஆனால் சட்டென்று பார்த்திபனே பேச ஆரம்பித்தான்.

"ஸகே, காளிதாஸ!"

"தேவரீர் உத்தரவு என்னவோ?"

"ஏது, இன்று ரசமான பேச்சையே காணேமே?"

"மகாராஜாவின் சுக நித்திரையைக் கலைக்க எனக்கு இஷ்டமில்லை."

அரசன் எழுந்து உட்கார்ந்தான். சரசரவென்று ஒரு தாஸி, மெல்லணையைப் பின்புறமாக ஊன்றிக் கொள்ள வைத்தாள். "சே, நான் தூங்கவில்லையே! இன்றைக்கு என்ன வெயில் போ! திணறுகிறது" என்றான் விக்கிரமன்.

"ஆமாம், மகாராஜா, துளி காற்று ஏது? இந்த இடத்திலேயே இப்படி இருக்கிறதே—" காளிதாசன் ஆமோதித்தான்.

இப்படியெல்லாம் பேசுவது, பாரத நாட்டின் சிரேஷ்ட மகிபனான விக்கிரமனுக்கும் சரி, கவிகுல திலக மான காளிதாசனுக்கும் சரி, அழகாக இல்லை. என்ன செய்வது? வெயிலில் யாருக்குத்தான் மூளை வேலை செய்யும்? வேர்வை கசகசவென்று உடம்பில் ஒட்டிக்கொள்ளும் பொழுது எவர்தாம் ரஸிகத் தன்மையில் ஈடுபடுவார்கள்?

கொட்டாவி வரவே, அரசன் ஒரு சிட்டிகை பொடி போட்டுக்கொண்டே, "ஸகே காளிதாச, உள்ளே சென்று சற்று நிம்மதியாக இருக்கலாம் என்றால், மகிஷி அந்தப் புர வாயிலின் இரண்டு தாழ்களையும் போட்டுக்கொண்டு

விட்டாள்; என்ன பண்ணுவது? இடை இடையே ஏதாவது வந்துவிடுகிறது அவளுக்கு!'' என்றான்.

"உம்!''

"இதுதான் இன்றைய விசேஷம்!''

"அரசே, தங்கள் மகிஷி ஒருத்தி மட்டும் இப்படி இருக்கிறாள் என்று நினைக்கிறீர்களா?''

ஆவல் தூண்ட, அரசன், "என்ன, என்ன சொல்லு! ஏன் மறைக்கிறாய்? உன் ஆத்துக்காரிக்கும் ஊடல்தானா - நீ வேறு யாரையாவது—'' என்றான் விக்கிரமன் நிமிர்ந்து.

"இந்த மாதிரியான சங்கடம் எனக்கு இதுவரையி லும் நேரவில்லை, நல்ல காலமாய்'' என்றான் காளிதாசன்.

வியப்புற்று அரசன், "என்ன வயஸ்ய, என்னிடத் தில் கூடவா ஒளிப்பாட்டம்? எனக்குக் கேள்வி: கவி பத்தினி எப்போதும் பிரம்பும் கையுமாக இருப்பாள் என்று! அது வாஸ்தவந்தானே?''

காளிதாசனுக்குக் குரல் தழுதழுத்தது.

"கண்டபடி யெல்லாம் கயிறு திரிப்பார்கள் விடர் கள். அதற்கெல்லாம் தாங்கள் செவி சாய்க்கக்கூடாது. தம்பதிகள் அந்யோந்யமாக இருப்பதைப் பார்க்க அவர் களுக்குச் சகிக்கவில்லை. என் துணைவி வேத்ரவதியல்ல, வேந்தே! அவள் பெயர் விலாசவதி......நல்ல பெண்!'' என்றான்.

விக்கிரமாதித்தியன் தயங்காமலே, "ஸகே, ஏன் மழுப்புகிறாய்? உன் பத்தினி நல்லவளாக இருக்கலாம். உன்னிடத்தில் அபாரப் பிரேமையும் வைத்திருக்கலாம். ஆனால் உனக்கு மட்டும் ஏதனாலேயோ அவளிடத்தில் பயமும் இருக்கிறது. என்ன, நான் சொல்வதில் பிசகு உண்டா?'' என்றான்.

காளிதாசன் திடத்துடன், "அதெல்லாம் ஒன்றும் இல்லை. அவள் என் கிருஹிணி, தோழி, பிரியை, சிஷ்யை, ரஸிகை எல்லாம். நான் அவளுக்குப் புகட்டக்கூடிய வித்தை எதுவும் இல்லை. இத்தகைய பெண்ணை மனைவி

யாகப் பெற்ற பின்பு எனக்குச் சபலம் ஏன் உண்டாகப் போகிறது?'' என்றான்.

கவிபத்தினியின் கலா ஞானம் அரசனுக்குத் தெரியாத விஷயம் அன்று. அவனும் சிரித்துவிட்டு, ''நண்ப, நீயே சுக புருஷன். என்னுடைய மஹிஷியைப்போல் வார்த்தை எடுத்ததற்கெல்லாம் மூஞ்சியைக் கோணிக் கொண்டு சீறி விழுகிற பெண் அல்ல உன் சம்சாரம். ஆனால் இவ்வளவு பாக்கியம் இருந்தும் இன்று உன் முகத்தில் வாட்டம் ஏன்? கடுமையான வெயிலினாலா......?'' என்றான்.

நொடிப் பொழுது காளிதாசன் பேசாமல் இருந்துவிட்டு, ''அரசே, விரகக் கனலில் வெந்து போகிறேன் நான்'' என்றான்.

கண்கள் விரிய விக்கிரமன், ''என்ன, கவிப்பிரியை பிறந்தகத்திற்குப் போய்விட்டாளா என்ன?'' என்று கேட்டான்.

''இல்லை, இல்லை, அவள் உஜ்ஜயினியில் கவியின் கிருகத்தில்தான் இருக்கிறாள்.''

''ஆனால்? காதலி பக்கத்தில் இருக்கும்பொழுது இந்த விரக வேதனை எப்படி வந்தது? வயிறாரப் பத்து விதக் கூட்டும், பதினெட்டு வகைக் கறியும், பாயசம், தயிரன்னமும் உண்டுவிட்டா பசி அடங்கவில்லை? பேஷ், பட்டினி கிட, இரண்டு நாள்! இந்தப் பசியெல்லாம் பறந்து போகும்!''

இதற்குப் பிறகு வெகு நேரம், அரசனும் புலவனும் மௌனம் சாதித்தனர். கடைசியில் விக்கிரமனே பேசத் தொடங்கினான் :

''ஸகே, நீ எழுதிய 'ருது ஸம்ஹார' காவியத்தில் கிரீஷ்ம காலத்தைப் பலவாறாக வர்ணித்திருக்கிறாய். ஆனால் இந்த மாதிரி அகாலத்தில் தோன்றிய ஒரு கோடையில் ஊடல் விளைந்தால், எப்படிக் காலத்தைக் கடத்துவதென்ற விஷயத்தை நீ அதில் குறிப்பிடவில்லையே! வசந்த காலம் முடிவதற்குள் இவ்வளவு வேதனையானால், நல்ல வெயில் நாளில் இன்னும் எப்படி இருக்குமோ?

கவிதை ஊற்று வற்றி ஆவியாகப் போயிருக்கும். காவிய லக்ஷ்மி வறண்டு போய், எலும்புக்கூடாகத்தான் இருப்பாள்......"

கவி திலகம் தலையசைத்து, "அப்படி யெல்லாம் என் வாணி மெலிந்துவிட மாட்டாள். ஒரு புதிய காவியத்திற்கு வேண்டிய விஷயத்தைத்தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன். இரண்டொரு நாளில் என் கல்பனையில் சிக்கிவிடும்" என்றான்.

"இந்தக் கொளுத்துகிற வெயிலிலா கல்பனை குதிரப் போகிறது? விஷயம ஏதாவது ரௌத்திர ரசத்தை அடிப் படையாகக் கொண்டதோ?"

"இல்லை, அரசே! மழைக் காலத்தை நிலைக்களனாகக் கொண்டு பொங்கி எழும் விரக வெள்ளந்தான் விஷய வஸ்து."

விக்கிரமன் உரக்கச் சிரித்து, "காளிதாச, நீ ஏன் கவி ஆனாய்? விதூஷகனாகப் போயிருந்தால் நன்றாயிருந்திருக்கும். இன்னும் சித்திரை மாதங்கூட முடியக் காணோம். இதற்குள் எங்கிருந்து இறங்கிவிடப் போகிறது மழை! இல்லாள் பக்கத்திலேயே இருக்கிறாள். பிறந்தகத்திற்குக் கூடப் போகவில்லை. இதற்குள் காவியத்தின் விஷயம் விரக வர்ணனை என்றால் யாராவது நகைப்பார்கள். ஏதாவது புத்தி மாறாட்டமா என்ன?" என்றான்.

காளிதாசன் பதில் எதுவும் சொல்லவில்லை. மெல்லச் சிரித்தான்.

* * *

அந்தி வேளை. தெய்வ வழிபாடு முடிந்ததும் கவி தன் வீட்டு மேல் மாடத்திலுள்ள நிலா முற்றத்தில் அமர்ந்திருந்தான். கைபிடிச் சுவர் ஓரமாகத் தளிர் மேனியும், மலர் முகமும், தந்தச் சாயலும், அன்ன நடையுமாக நடந்து வந்து கணவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ஆந்தரிகமாய், "என்ன சிந்திக்கிறீர்கள்?" என்று வினவினாள் கவியின் இல்லாள்.

கனவு காண்பவன்போல் காளிதாசன், "என்ன

சிந்தனையா? ஆம், பல சிந்தனைகள்'' என்றதும் இடுப்பில் மெல்லக் கைகொடுத்து அவளைத் தன் அருகில் இழுத்துக் கொண்டான்.

அடுத்த கணமே, தன்னை விடுவித்துக்கொண்டு விலாசவதி, "உங்கள் முகத்தில் இன்று ஒரு புது மாறுதலைக் காண்கிறேன். நித்தியம்போல் வந்ததுமே என்னிடம் பேசாமல் அலக்ஷ்யமாக இருந்தீர்கள். நிச்சயமாய் எந்த மான்விழியாள் மயலிலோ சிக்கித்தான் நினைவழிந்து இருக்க வேண்டும். அவள் யார், என்ன பருவத்தாள், எத்தகைய அழகி?'' என்றெல்லாம் அடுக்கினாள்.

சிருங்கார ரசத்தில் துளைந்தாடும் கவியைப்பற்றிப் புகார் ஏன் இருக்காது? போதாக் குறைக்குக் காளிதாசன் சுந்தர புருஷன் வேறு; நாடெங்கும் புகழ் ஏந்திய புலவர்மணி. வேல்வேந்தன் ஆருயிர் நண்பன். கேட்க வேண்டுமா, ஊர் வாயை?

ஆனால் கணவனிடத்தில் அவளுக்குத் துளிகூடச் சந்தேகம் இல்லை. தாரகைகள் விடும் ஒளியில் விலாசவதி, தன் புருஷனின் முகபாவத்தைக் கண்டவுடன் நாணிக் கண் புதைத்தாள்.

காதல் பொங்க, மடந்தையின் இருட் குவை போன்ற கூந்தலை நீவிக் கொடுத்து, "என் இன் அமுதே, உனக்கு ஒரு காவியக் கதை சொல்லுகிறேன், கேள்'' என்றான் காளிதாசன்.

"சொல்லுங்கள்.''

காளிதாசன் கதை சொல்ல ஆரம்பித்தான்: "ஏறக்குறையப் பத்து வருஷங்களுக்கு முன்னால் நடந்த விஷயம். நன்றாகக் கற்றறிந்தவளான ராஜகுமாரி ஒருத்தி இருந்தாள். கல்வியோடு அழகும் சேர்ந்திருந்தது. அவளுடைய புகழ் எத்திசையிலும் பரவியிருந்தது. அரசர்கள் எத்தனையோ பேர், வித்தையில் வல்லவர்கள் எத்தனையோ பேர், அவளைப் பாணிக்கிரகணம் செய்துகொள்ளப் போட்டியிட்டனர். கடைசியில் எல்லாரும் போட்டியில் தோற்றுப் போயினர். அந்தத் திவ்ய சுந்தரி, முட்டாளான ஓர் இளைஞன் கழுத்தில் மாலை போட்டாள்.

படுக்கை அறைக்கு வந்த பின்புதான் தன் மணாளன் நிரக்ஷரகுக்ஷி என்பதைக் கண்டாள். அவமானம் தாளாமல் பொழுது புலர்வதற்குள் அந்தப் பிராம்மண யுவன் தேசாந்தரம் போய்விட்டான்.''

கண்ணீர் வெடித்து வந்தது விலாசவதிக்கு. ''ஆர்ய புத்ர!'' என்றாள். காளிதாசன் குறுக்கிட்டு, ''இன்னும் கதை முடியவில்லையே!'' என்றான்.

கடைசியில் அந்தப் பிராம்மண யுவனுக்குச் சரஸ்வதி தேவியின் கடாக்ஷம் ஏற்பட்டது. அவன் கவி மழை பொழிந்தது, அரசன் மகளுடைய மனத்தைக் கவர்ந்தது, இவற்றை ஒன்றுவிடாமல் சொல்லி நிறுத்தினான்.

''அந்த ராஜகுமாரிதான் இதோ பக்கத்திலேயே இருக்கிறாளே. பின் என்ன சிந்தை? அதைத்தான் சொல்லுமே?'' என்றாள் விலாசவதி.

கல்பனை அடர்ந்த கண்களை வானிடையே நிறுத்திக் காளிதாசன், ''பிரியே, அவமானப்பட்டுச் சென்ற போது இந்த முட்டாள் பிராம்மணனுக்கு ராஜகுமாரியின்மேல் உள்ளூற ஆசை பிறந்தது. நீண்ட நாள் பிரிந்திருந்ததால் அது இன்னும் ஆழமாயிற்று. ஊடலின் துயரிடையே கூடலின் இனிமையை அவன் அனுபவித்தான்'' என்றான்.

குரலில் நடுக்கம் தோன்ற, ''நீங்கள் மனத்தை விட்டுச் சொல்லுங்களேன், அதன்படி நடக்கிறேன்'' என்றாள் கவிபத்தினி.

''சொல்லுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று பெருமூச்செறிந்து கவி மௌனமானான்.

நித்திரை வரவில்லை காளிதாசனுக்கு. பழைய நினைவுகளெல்லாம் படிப்படியாக மனத்துள் எழுந்தன. மனைவிக்கு இன்னும் இளமை, அழகு, அன்பு எல்லாம் இருக்கின்றன; தனக்கும் ஆசை குறையவில்லை. இருந்தும் என்னவோ ஒரு குறை - ஓர் அதிருப்தி.

கங்குல் தன் தோகையை விரித்தது. தாரா கணங்கள் பீலியின் கண்கள் போல் இமைத்தன. மேகத்தின்

சுவடே தென்படவில்லை. உஜ்ஜயினி நகரமே துயில் கொண்டு விளங்கியது.

அந்த நள்ளிரவில் கவி திடீரென்று படுக்கையை விட்டு எழுந்து வேறு அறைக்குள் சென்று விளக்கைப் பிரகாசமாக ஏற்றினான். ஓலைச்சுவடி, எழுத்தாணி எல்லா வற்றையும் வைத்துக்கொண்டு வரைய ஆரம்பித்தான், "கஶ்சித் காந்தா விரஹ குருணா" என்று.

விடியற்காலம் கவிபத்தினி விழித்துக்கொண்டு, கணவன் பக்கத்தில் இல்லாததை உணர்ந்து எழுந்து போய்ப் பார்த்தாள். வெளி யுலகையே கவி மறந்திருந் தான். எழுதுகோல் கரகரவென்று ஓலைமீது ஓடியது. அபூர்வமான காவியம் ஒன்று உருவாகிக்கொண்டிருந்தது.

தன் எதிரே விலாசவதி நிற்பதைக்கூடக் காளி தாசன் கவனிக்கவில்லை. காவியச் சுவையில் தன்மயமா கத் திளைத்திருந்தான்.

அன்று சபையில் கவியைக் காணாது போகவே, அரச னிடமிருந்து ஆட்கள் சமாசாரம் என்னவென்று அறிய வந்துகொண்டே இருந்தனர். அவந்தீசுவரன் நேரில் வந்து அழைத்தால்கூடக் காளிதாசன் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டான்போல் இருந்தது. மிகுதியான எட்டு ரத்தினங் களை வைத்துக்கொண்டு ஒருவிதமாகக் காலத்தைக் கழித் தான் விக்கிரமாதித்தியன்.

பகலிலும் இதே கவிதை வெறி. பசி தாகம் இல்லை. மாலையில்தான் கவி எழுந்துபோய்த் தன் மனைவி இரவுச் சமையலுக்காக அடுப்பை மூட்டுவதைப் பார்த்து, "ரொம்ப நாழி ஆய்விட்டதா என்ன! பொழுது போனதே தெரியவில்லை எனக்கு!" என்றான்.

கவியின் துணைவி சுருக்கமாக, "சீக்கிரம் குளித்து விட்டு வாரும், இலை போடுகிறேன். அப்புறம் கேட் கிறேன் நீங்கள் எழுதியதை" என்றாள்.

சாப்பிட்டானதும் பழையபடியே காவிய மோகினி காளிதாசனைப் பிடித்துக்கொண்டாள். இப்படி ஒரு நாளும் அவர் இருந்ததை விலாசவதி பார்த்ததில்லை.

நடுநிசியும் வந்தது. மறுநாள் பொழுதும் அலர்ந்

தது. காளிதாசன் தென்புடன் வந்து, "பிரியே, என் காவியத்தை எழுதி முடித்துவிட்டேன்" என்ருன்.

காவியத்தின் பெயர் மேக தூதம். குபேரனிடம் ஒரு யக்ஷன் பெரிய தவறு செய்ததனுல் நாடு கடத்தப்பட்டுக் காதலர்களுக்கு இன்பம் தரும் மழைக் காலம் எல்லாம் ராமகிரியில் தனிமையில் வாட வேண்டியதாயிற்று. ஆடி மாதம் வானிடையே முதல் மழை மேகம் தென்பட்ட பொழுது ஏக்கத்தால் அவன் அதை விளித்து, "கார்முகிலே! நீ வடக்கேதானே போகிருய்? அளகாபுரியில் என் இல்லாள் பிரிவாற்ருமையால் வளை நெகிழ, பசலை அவள் மேனியை உண்ண, என்னை எதிர்நோக்கி இருப்பாள். அவளிடம் சொல்லு, நான் இங்கே படும் வேதனையை" என்று தூது விடுத்தான்.

காளிதாசன் நின்று நிதானமாக ஒவ்வொரு செய்யுளையும் சுவைத்துப் படித்தான். மேகப் புரவி தாண்டிச் செல்லும் பிரதேசத்தின் விசித்திர வர்ணனையை யெல்லாம் விலாசவதி கேட்டுச் சொக்கிப் போனுள்.

அடுத்த பகுதி காவியத்தில், உத்தரமேகம். அளகாபுரியை நண்ணியதும் மேகம் காணும் திவ்யக் காட்சிகள். அந்தக் குபேர பட்டணத்தில் பெண்கள் நித்திய யுவதிகள், மரங்கள் என்றும் மலர்கள் சொரிவன. பிரணய கலகம் தவிர அங்கே சண்டை சச்சரவு எதுவும் கிடையாது.

போகம் நிரம்பிய அந்நகரில் யக்ஷனுடைய இனியாள் மட்டும் தனிமையில், கண்படையில்லாமல் யக்ஷனையே நினைந்து உருகிப் போகிருள். யாழை மீட்டித் தன் புருஷன் இயற்றிய கீதங்களை வாசிக்கப் பார்க்கிருள். கண்ணீர்த் துளி தந்திமேல் சொட்டி, யாழின் சுருதி குறைந்துவிடுகிறது.

இன்பம் பெருகி ஓடும் அந்த நாட்டில் யக்ஷ சுந்தரி மட்டும் மனம் புழுங்குவதைக் கேட்டு விலாசவதி வாஸ்தவமாகவே பலபலவென்று கண்ணீர் விட்டாள். தான் பிரிவாற்ருமையால் கழித்த பழைய நாட்கள் அவள் நினைவுக்கு வந்தன. மனத்துள்ளேயே இறைவனிடம் வேண்டிக்

கொண்டாள், மீண்டும் இந்த வேதனை வராமல் இருக்கும்படி.

* * *

காவியம் அரங்கேற்றுபடி ஆயிற்று. அரசன், மற்றப் புலவர்கள், மகாஜனங்கள் யாவரும் ஆனந்த பரவசராயினர்.

காளிதாசனும் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான். உள்ளே நுழைந்ததும், "பிரியே, வெற்றி பெற்றேன்! என் காவியம் சார்த்தகமாயிற்று" என்றான். அரசன் தன் கழுத்தில் இட்ட முத்துமாலையையும் பரிசாகக் கொடுத்த பொன் தாமரையையும் அன்பு வழியத் தன் இனியாளிடம் கொடுத்தான். ஆனால் இவ்வளவு இருந்தும் கவியின் உள்ளத்தில் மட்டும் ஒரு வேதனை மறைந்து திரிந்தது. என்ன குறையோ, யாருக்குத் தெரியும்?

இரவில் படுக்கையில் விலாசவதி கவியை நோக்கி, "அன்ப, உங்களுடைய யக்ஷனின் விரகம் கடைசியிலாவது தீர்ந்ததா?" என்றாள்.

வேதனை தொனிக்க, "இல்லை, என் கண்ணே! இன்னும் விரகத் தீயில் உருகிச் சாகிறான்" என்றான்.

"என்ன?"

"கண்ணே, இரண்டு மாத காலம் நீ உன் பிறந்தகம் போய் இரேன்."

"எதற்காக?"

"விரகம், வெறும் பிரிவினால் உண்டாவதல்ல. கூடல் உவகையிலும் விரக வேதனை மண்டிக் கிடக்கிறது. நீ என்னோடு வருஷக் கணக்காகச் சகவாசம் செய்கிறாய். பிரிந்து கூடுவதில் இருக்கும் ஓர் இன்பச் சிலிர்ப்பை உணரும் நற்காலம் எனக்கு வாய்க்கவில்லை."

காளிதாசனை வியப்புடன் நோக்கினாள் விலாசவதி.

"நல்லது, அப்படியே ஆகட்டும்" என்றாள். காளி

தாசன் நிச்சிந்தையாகப் படுத்துக் கண்ணயர்ந்துவிட்டான்.

விலாசவதிக்கு மட்டும் தூக்கம் பிடிக்கவில்லை. பஞ்சணை முட்புதர் போலவே உறுத்தியது. சாளரத்தின் மூலம் தெரியும் தாரகை சிமிட்டும் நீள் வானை நோக்கியவாறு தன் நெஞ்சோடு புலம்பினாள்: "நான் எவ்வளவு கற்று என்ன, கவி அல்லவே! எனக்கு இந்த விசித்திர நோய் புரிபடவில்லை. இரண்டு மாத காலம் என் தோள்களை நீங்கி அவர் இந்த வேதனையில் என்ன தான் இன்பத்தைக் காணப் போகிறாரோ!"

# வண்டும் மின்மினியும்

காட்டிலே ஒரு பூப் பூத்தது - வன லக்ஷ்மி வரைந்த சித்திரக் காவியம் போல். வாசனையிலும் வர்ணத்திலும் வனப்பிலும் இணையற்ற மலர். நாலுபுறமும் சுற்றிப் பார்த்தது அந்தக் கான மலர் - எந்தப் பக்கத்திலும் இன்பம் பெருகி ஓடியது. ஆனந்த உத்ஸவம்! வானிலும், மெல்லிய தென்றலிலும், ஒளிக் கதிர்களிலும் இளமையில் பிறக்கும் ஒரு வேதனை. வியப்பு மேலிட மேலிட மலர் கண் கொட்டாமல் இயற்கையைப் பார்த்து இன்புற்றது.

தொலைவில் ஓர் இன்னிசை கேட்கிறது. வர வர அந்த ரீங்காரம் அணித்தாக வருகிறது - விசித்திரமான பாட்டு. "வனலக்ஷ்மியின் கனவின் உருக்கொண்டு வந்த வண்ணப் பாவாய், நீ எங்கே? கதிரினம் பாடும் வேளையில் மையலுற்றேன் உன்மேல்" என்ற கருத்து அந்தப் பாட்டுக்கு. மலரின் செவியோடு ஒரு சிறு கார் வண்டு, "மேனி நிறைய வர்ணக் கோலம். என் கண்ணைக் கவரும் இந்திர ஜாலம். ஏறிட்டுப் பாராயோ என்னைச் செவ்வொளி படர் காலையிலே, மலர்ப் பெண்ணே? உன் அழகைப் பாட வந்த சுரும்பினத்துக் கவி நானே" என்று காதல் பொங்கப் பாடிற்று.

முகம் சிவந்து கான மலர் கேட்டது : "நீ யாரோ?"

"நான் ஓர் ஏழைக் களிவண்டு."

"நீ வந்த காரியம் என்னவோ?"

"வந்த காரியம் என்னவென்பேன்? உன் இதழைப் பருகி மணத் தேன் உண்ணத்தான் பறந்தோடி வந்தேன். மெல்லியளே, வெட்கம் ஏன்? இயற்கையின் வழி இது அல்லவோ?"

மலர் நாணித் தலை குனிந்தது. காம்பின்மேல் அதன் உடலை வளைத்துக்கொள்ளப் பார்த்தது. வண்டு வட்ட

மிட்டு வட்டமிட்டு அதன் நாணத்தைப் போக்க, "செவ்விதழ் திறவாய் வனமலரே! செவ்வியை வீண்செய் வார் உண்டோ அவனியிலே?" என்று கீத வலை பின்னியது.

அதன் காரியம் முடிந்தது......சிறகின் ஓசை தொலைவில் சென்று மறைந்தது.

* * *

வண்டார் போனதும் - ஆச்சரியம்! - மலரின் இன் துயில் கலைந்தது. அதன் உள்ளத்தில் எதிரொலி கேட்டுக் கொண்டே இருந்தது. "செவ்விதழ் திறவாய் வன மலரே" என்ற பாட்டின் அடி. "மீண்டும் காதலன் வரமாட்டானா!" என்று அதன் மனம் குறைப்பட்டது, ஆனால் அவன் திரும்பவில்லை. அதன் பெருமூச்சு காலையில் வீசும் மாருதத்தில் கலந்தது. அதன் கண்ணீர் பனித் துளியில் துடித்தது. பகலெல்லாம் எதிர் நோக்கியது, 'வருவானோ' என்று. அந்தியும் நண்ணியது. ஆனால் காதலன் எங்கே?

"அதோ வருவது யார்?"

இருள் போர்த்துக்கொண்டது வானையும் புவியையும். உள்ளம் வாடிய அந்த மலர் வாழும் புதல் அருகே மினுக் என்று ஓர் ஒளிப் பொறி சென்றது.

வனமலர் குரல் தழுதழுக்கக் கேட்டது: "யாரப்பா நீ?"

"நான் ஒரு மின்மினி."

ஆவலுடன் மலர் மேலும் வினவிற்று: "என் காதலனைப் பார்த்தாயா?"

"யார் அவன்?"

"இன்று வைகறையில் என் செவியில் இன்னமுதைப் பாய்ச்சியவன்."

"செவ்விதழ் திறவாய் - என்றானே அவனா?"

"ஆம், அவனை எதிர்நோக்கியே இருக்கிறேன் - அவன் இன்னும் திரும்பக் காணேன். உனக்கு அவனைத் தெரியுமா?"

"ஞாபகம் இல்லை."

பணிவுடன் அந்தக் காட்டுப் பூ, "அவனை நீ பார்க்க நேரிட்டால், சொல்லு நான் படும் வேதனையை" என்றது.

"பார்த்தால் சொல்ல மாட்டேனா!" இதைக் கூறியதும் மின்மினி மறைந்தது புதலுள். இருள் பின்னும் இருண்டுவிட்டது.

அப்புறம் மாலைப் பொழுது, ஒளி ஒடுங்கும் நேரம். மின்மினி வந்தது, வனமலரின் வீட்டருகே. "அகப்படவில்லையே உன் காதலன்" என்றது.

மலர், "என் காதலன்? யார் அவன்?" என்றது முகம் சிடுத்து.

"நேற்றுச் சொன்னாயே அவனைத்தான்."

"நேற்று நான் இங்கே இல்லையே - இன்றே தோன்றினவள் அல்லவோ நான்!"

"ஆனால் நேற்று அலர்ந்த அந்த அணிமலர் எங்கே?"

"வாடி உதிர்ந்துவிட்டதே; அதன் பக்கத்துக் காம்பில் முளைத்தவள் நான்."

மின்மினி பேச்சற்றது.

புதிய மலர் அத்தருவாயில், "ஆனால் உனக்குத் தெரியுமா அந்த ஆள்?" என்று கேட்டது.

"யார் அவன்?"

"இன்று காலையில் என் செவியருகே

'இதழைத் திறவாய், வனமலரே
வீண்போக் காதே உன்வனப்பை'

என்று இசைத்தானே அவன்தான்! அவனுக்காக நாள் முழுவதும் காத்து வாடுகிறேனே! பார்த்தால் வரச் சொல்லு! மறந்து போவாயா?"

"பார்த்தால் சொல்ல மாட்டேனா? -" மெதுவாகச் சிரித்தது மின்மினி. ஒளித் துளி ஒன்று இருளோடு மறைந்துபோயிற்று.

# வீரத்தியாகி

ஸ்ரீவார் ராணு ராஜஸிம்ஹன், சயன அறையில் ஒரு சுகாசனத்தில் சாய்ந்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். சிவந்த அந்தியின் முகமும் கறுத்தது. ராணுவின் ஆக்ஞையின்படி வேலையாள் அறையில் ஒரே விளக்கை ஏற்றி வைத்துவிட்டு அகன்றான். அதன் மெல்லிய ஒளியும் காற்று உலவும் அவ்விசாலமான அறையின் ஏகாந்தமும் ராணுவுக்குச் சற்று அமைதியைத் தந்தன.

இளவரசு ஜயஸிம்ஹனுக்குப் பட்டம் சூட்டும் தினமும் நெருக்கத்தில்தான். பிரஜைகள் இந்த மாறுதலை எங்ஙனம் வரவேற்பர் என்பதைக் குறித்து அவருக்கு ஒன்றும் புரிபடவே இல்லை. மீவாரே அன்று திமிலோகப் படும். ஜயஸிம்ஹனின் தாய், தன் ஆசைக்குப் பாத்திரமான இளைய ராணி, இன்பக் கடல் ஆடுவாள். ஜயஸிம்ஹனே தென்பினால் ஊதிப் போவான் - என்றெல்லாம் மகாராணு ஆகாயக்கோட்டை கட்டி மெய்ம் மறந்து இருந்தார். சயன அறையின் கதவு மெல்லத் திறந்தது. பட்ட மஹிஷி கமலகுமாரி அவர் எதிரே வந்து நின்றாள். அவளைக் கண்டதும் ராணு சற்றுத் திடுக்கிட்டார். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து, அவளைத் தம் பக்கத்தில் அமரச் செய்து, "ஏது இந்தச் சமயத்தில் இவ்வளவு தூரம்...?" என்றார். தன் வேதனையைக் காட்டாமல், "என்ன செய்வது, வந்துதானே ஆகவேண்டியிருக்கிறது? நீங்கள் கண்ணில் அகப்பட்டால்தானே? நான் ஒரு அதிசய சமாசாரம் கேள்விப்பட்டேன். அது வாஸ்தவமா என்று தெரிந்துகொண்டுபோகத்தான் இங்கே வந்தேன்" என்றாள் பட்ட ராணி.

"என்னவோ?"

"நீங்கள் இருக்கும்பொழுதே ஜயஸிம்ஹன் சிம்மா

சனத்திற்கு வரப் போகிருனுமே, நிஜந்தானு?......அப்படி நேருமானுல் மீவார் துருக்கர் கையில் சிக்கிவிட்டதென்றே சொல்லலாம்!''

ஜயஸிம்ஹனைக் குறித்து இவ்வளவு ஏளனமாகப் பேசுவது ராணுவுக்குச் சற்றுக் கஷ்டமாகத்தான் இருந்தது. அவருடைய செல்லப் பிள்ளை அல்லவா ஜயஸிம்ஹன்?'' "சமாசாரம் அதுவன்று. ஜயஸிம்ஹன் ராஜ்யத்திற்கு ஆசைப்படவில்லை. நானே அவனுக்கு அதைத் தானம் செய்கிறேன்'' என்ருர் ராணு.

"ஓஹோ, இதற்குள்ளா வனவாசம்? அதற்கு வயசாகவில்லையே! இளையவளும் நல்ல யௌவனத்தில் இருக்கிருளே! அது போகட்டும்: மூத்த பிள்ளைக்கு முடி சூட்டாமல் இளைய மகனுக்கு முடி சூட்டும் வழக்கம் இதுவரையில் மீவார்ச் சரித்திரத்திலேயே காணேமே...... நீங்கள் இளையவனுக்கு முடிசூட்டுவது அழகாக இல்லை, நியாயமும் அன்று; சொன்னேன்.''

பட்ட மஹிஷி சொன்னதென்னவோ உண்மையான பேச்சு. ராணுவுக்கு மட்டும் அது பிடிக்கவில்லை. "பீமஸிம்ஹனும் ஜயஸிம்ஹனும் ஒரே நாளில் பிறந்தவர்கள். ஏதோ சில நாழிகை வித்தியாசம் இருக்கலாம். மூத்தவன் இளையவன் என்பதற்கு என்ன இருக்கிறது? இரண்டு பேரில் யோக்கியதை உள்ளவனுக்கே ராஜ்யத்தின் உரிமை. ஜயஸிம்ஹனே இதற்குத் தகுதியுடையவன் என்பது என் திட நம்பிக்கை'' என்ருர் ராணு.

"இருக்கலாம்......ஒன்று மட்டும் சொல்லுவேன்! காலக்கிரமமாக வரும் நியமத்தை மீறிப் போக வேண்டாம். ஒரு நிமிஷம் முன்னுல் பிறந்தாலே போதும். அவனே மூத்தவனுகிருன்; அவனுக்கே ராஜ்யம் சொந்தம். லவ குசர்களைப் பாருங்கள். இரட்டைப் பிள்ளைகள் தாம். ஆனுல் குசன் மட்டும் பட்டத்துக்கு வருவானேன்? அதுவும் போகட்டும். யோக்கியதையைப் பார்த்தால்கூட என் பீமஸிம்ஹன் எதிலே குறைந்து போய்விட்டான்? சௌரியத்திலா, புத்தியிலா, ஒழுக்கத்திலா? இந்த மீவாரின் வீர சைனிகர்கள் யாருடைய ஆக்ஞைக்குக் கட்டுப் படுவார்கள் தெரியுமா? ஜனங்கள் யாரிடம் உயிராய்

இருக்கிறார்கள்? கண்ணை மூடிக்கொண்டு எதையும் செய்ய வேண்டாம். மீவாரின் சரித்திரமே ரத்தக் கறை பட்டுப் போகும்!''

இந்த வார்த்தை ராணாவுக்கு உள்ளூற உறைத்து விட்டது. கடுமையான குரல் எடுத்து, ''போதும், அதிகம் ஓட்டாதே, நிறுத்து!'' என்றார்.

''நெஞ்சைத் தொட்டுப் பாரும்! பிள்ளைகள் இருவரும் பிறந்த நாளை இதற்குள் மறந்துபோய்விட்டீரோ?...'' அதற்குமேல் கமலகுமாரியினால் பேச முடியவில்லை. தீவிரமான ஆக்கிரோஷம் அவள் தொண்டையை அடைத்தது. சட்டென்று நினைவு இருபது வருஷங்கள் பின்னால் சென்றது. அன்று நடந்த விஷயங்கள் பளிச் சென்று மனத்திடையே உதித்தன.

ஒன்றும் அறியாத இளம் பேதை அவள் ஒரு காலத்தில். இன்றோ கணவன் வெறுக்க, உரிமை இழந்த, ராணியின் நிழலே அவள். இரண்டிற்கும் என்ன வித்தியாசம்! ஆண் மகவைப் பெற்றதும், கணவன் வந்து அத்துடன் கொஞ்சிக் குலாவுவான் என்று எதிர்பார்த்து ஏமாந்து போன அசடி. அன்று ராணா வராது போகவே கமல குமாரியின் உள்ளம் வாடிவிடவில்லை. கடைசியில் ஒரு தாதி வந்து சொன்னாள், ''இளைய ராணி சஞ்சல குமாரிக்கும் அதே சமயம் ஒரு பிள்ளை பிறந்தது. மகாராணா அந்தக் குழந்தையின் காலில் வீரக் கழலை மாட்டிக் கொண்டிருக்கிறார். அது முடிந்ததும் வருவார்'' என்று.

தாய் வயிற்றினின்று மூத்த மகன் பூமியிலே விழுந்ததும், அவன் காலில் வீரக் கழலை அணிவது மீவார் வம்சத்தவர்களிடையே ஒரு சம்பிரதாயம். தகப்பன் இந்தப் பிள்ளையைத் தனக்குப் பிறகு அரசுரிமைக்கு ஏற்றவன் என்று அங்கீகாரம் செய்துகொள்வதே இதன் அர்த்தம். கமலகுமாரியின் பிள்ளைதானே முதலில் ஜனித்தவன்? இருக்க இளையவனுடைய காலில் ராணா கழல் அணிந்ததைக் கேட்டதும் அவளுக்குப் பற்றி எரிந்தது. கமலகுமாரியின் கண்ணீர்ப் பெருக்கில் அன்று ஜயஸிம்ஹனுக்கு முதல் பட்டாபிஷேகம் ஆயிற்று. கணவன் தன்னிடம் அன்பாக இல்லை என்ற விஷயம் ஆதியில் அவளை

அவ்வளவாகப் பாதிக்கவில்லை. இன்று அவளுடைய சந்தேகம் தெளிந்துவிட்டது. - அரசனுடைய அன்பு எந்தத் திசையே படர்கிறது என்ற விஷயம். ஒப்புக்குப் பிள்ளையைப் பார்க்க வந்தார் ராணு அன்று பிரசவ அறையில்.

கமலகுமாரி எதுவுமே பேசவில்லை. பேசத் தெரியாத பேதை, நிஷ்கபடி. அப்புறம் சில தினங்களுக்கெல்லாம் மர்மம் வெளிப்பட்டது. இளைய பிள்ளை என்று தெரிந்தே ராணு ஜயஸிம்ஹனுக்குக் கழலைச் சூட்டவில்லை என்று. தாதிகள் செய்தி சொன்ன குழப்பத்தில் சஞ்சல குமாரியின் பிள்ளையே முதலில் பிறந்தவன் என்று எண்ணித் தவருக இந்தக் காரியத்தைச் செய்தாராம். இது மெய்யோ பொய்யோ! இதைப் பற்றி ராணுவை ஒரு நாள்கூட அவள் கேட்டுத் தெரிந்துகொண்டதே இல்லை. ஜயஸிம்ஹனுக்குக் கழல் அணிவதன் நோக்கம் அவனை இளவரசன் ஆக்குவதே என்று அவள் தெரிந்துகொண்டபோதிலும் பெண்களுக்குரிய அழுக்காறு அவளிடத்தில் தோன்றவில்லை. தான் பீமஸிம்ஹனின் தாய் - அதிருஷ்டஹீனமானவள் - தன் வயிற்றில் இந்தப் பிள்ளை பிறப்பானேன் - என்ற வியாகுலமே தென்பட்டது. அன்று தொட்டே கமலகுமாரி மாறிப் போய்விட்டாள். தன் பிள்ளைக்காகக் கணவனுடன் சண்டை போடக்கூடத் துணிந்துவிட்டாள்.

ராணி, "நீர் மட்டும் எதையும் மறைக்காதவராயிற்றே. மூத்தவனுக்கு இட வேண்டிய கழலை இளையவனுக்குப் போட்டதும் அல்லாமல், வேறு விதமாகவும் நாலு பேரிடம் கூறவில்லையா?" என்ருள்.

"யாரைப் பற்றியும் எனக்கு அவசியமில்லை. ஒவ்வொன்றையும் உனக்குச் சொல்லிவிட்டு நான் செய்யத்தான் வேண்டும் என்பதில்லை. அப்படி ஜனங்களுக்குப் பயந்து இதைச் செய்திருந்தால் ஜயஸிம்ஹனுக்கு முடிசூட்ட முன் வந்திருப்பேனு? நான் இந்த மீவாருக்கு அரசன். என் இஷ்டம்: ஜயஸிம்ஹன் தான் பட்டத்துக்கு வரவேண்டும்" என்ருர்.

"நீர் அரசனுக இருக்கலாம்; அதற்காக நீதி தவறி நடப்பது அழகல்ல. உங்கள் இஷ்டப்படி யாருக்கு

வேண்டுமானாலும் ராஜ்யத்தைக் கொடுத்துவிட முடியுமா ? மகாராணா, நீங்கள் எந்த வம்சத்தில் தோன்றியவர் ? தசரதன் தன் ஆருயிர் மகனை ராமனை ஒரு சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுக் காட்டுக்கு அனுப்பினானே, அந்தச் சூர்ய வம்சம் அல்லவா ? ஆஹா ! குலத்தின் பெயரைக் கெடுக்க வந்துவிட்டீரே !'' என்றாள்.

சொல் அம்பை ஏவிவிட்டு, சட்டென அறையை விட்டு அகன்றாள் ராணி கமலகுமாரி.

பட்டமஹிஷி சென்றதும் அந்தக் கூர்மையான சொல் ராணாவின் மூளையைத் துளைத்தெடுத்தது. 'தசரதன் தன் ஆருயிர் மகனை ராமனைக் கானகத்திற்கு அனுப்பியது எதற்காக? சத்தியத்தைக் காப்பாற்றவே! அந்தக் குலத்தில் தோன்றியவர் அல்லவா நீர்...' ராணாவுக்குத் தலை சுழன்றது. பிரதாபசாலியான ராஜஸிம்ஹன் சின்னக் குழந்தை போல் கதிகலங்கிப் போயிருந்தார். "சீ, சீ! என்ன காரியம் செய்தேன்! என் குலத்தின் பெயர் அல்லவோ கெட்டுவிடும்...?" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார். ராணாவுக்குக் கண் திறந்தது. தன் பிழையை உணர்ந்தான். அன்று இரவு அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பொழுது விடிந்ததோ இல்லையோ, காவலாளைக் கூப்பிட்டு, "போய் யுவராஜா பீமஸிம்ஹனை இங்கே அழைத்து வா" என்று உத்தரவிட்டாள்.

தகப்பனார் கூப்பிடுகிறாரென்று கேட்டவுடன் பீமஸிம்ஹனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"இது ஏது, என்றுமில்லாத புதுமை! ஒரு நாள்கூட என்னைப் பார்க்க வராதவர் திடீரெனக் கூப்பிடுவானேன்? ஜயஸிம்ஹனை அரசனாக்கிவிட்டு என்னை அவனுக்குச் சேவகம் புரியச் சொல்லி ஏதாவது ஆக்ஞை இடத்தானோ? ஹா! இந்த வாள் என் கையை விட்டு நழுவாத வரைக்கும் ஜயஸிம்ஹன் ராஜ்யத்தைக் காண மாட்டான். இது தெரியவில்லையே என் தந்தைக்கு......" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டே தந்தையிடம் சென்றான்.

மகாராணுவை ஏற இறங்கப் பார்த்தான் பீமஸிம்ஹன். மிடுக்கு எதுவுமே தென்படவில்லை அவரிடம். வேதனையின் நிழல் முகத்தில் கவிந்திருந்தது. தொங்கிய புருவம் சிந்தாகுலத்தைக் காட்டியது. அன்பு கனியும் நோக்குடன் தம் மூத்த மகனை நோக்கினார் அவர். பீமஸிம்ஹனுடைய கோபராசி எங்கோ போய் ஒளிந்து கொண்டது. அவன் மனமும் இளகத் தலைப்பட்டது. புதல்வனின் வீர வடிவம் ராணுவின் உள்ளத்தைக் கவர்ந்தது. எரி முகத்துடன், குற்றத்தைச் சுட்டிக் காட்டிப் பாணம் தொடுப்பானென்று எதிர்பார்த்தார். அதற்கு மாறாக, பீமஸிம்ஹன் பொறுமையின் உருவாகவே விளங்கினான். ராணுவுக்கு வெட்கம் தலை நிமிர முடியாமல் இருந்தது.

"அப்பா, பீமா" என்று அழைத்தார். இதில் உருக்கம் தொனிப்பதைக் கேட்டுப் பீமஸிம்ஹன் பிரமித்துப் போனான். இதுவரை அவர் அந்த விதமாகப் பாசத்துடன் அழைத்ததே இல்லை. கவனம் வந்தது அவனுக்கு- இளமையில் தானும் ஜயஸிம்ஹனும் உத்தியானவனத்தில் விளையாடிக்கொண்டிருக்கையில், தன்னை ஏறிட்டுக்கூடப் பாராமல், ஜயஸிம்ஹனுக்கே முத்தம் தந்துவிட்டுச் சென்றது, இதைத் தாளாமல் தாயின் மடியில் தான் ஆறுதல் பெற்றது யாவும். கடைசியில் இன்றுதான் இந்த வாஞ்சை ததும்பும் சொல் அவர் வாயிலிருந்து வந்தது. "குழந்தாய் பீமா!" பீமஸிம்ஹனுடைய உள்ளத்தில் ஒரு புயல் அடித்தது. குரல் தழுதழுக்க, "அப்பா" என்றான்.

ராணு நீர் வடியும் கண்களுடன் மகனைத் தொட்டு, "குழந்தாய், உன் விஷயத்தில் நான் அநியாயமாக நடந்து கொண்டேன். என்னை மன்னித்துவிடு" என்றார்.

பீமஸிம்ஹனுடைய வீர மொழிகளிலும் கண்ணீர் துளித்தது. "அப்பா, இத்தனை நாள் நான் உங்களிடம் அண்டிப் பழகாதது என்னுடைய பெரும் தவறு. நானே குற்றம் செய்தவன். என்னை மன்னித்தருள்வீர்" என்றான்.

ராணு தன் பிள்ளையின் அருகில் வந்து, "பீமா, என்னை நீ மன்னிக்காது போனால் இதோ என் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்கிறேன். நீ என்

மூத்த மகன். இந்த ராஜ்யத்தின் உரிமையை உனக்கே தருகிறேன். ராஜ மகுடம் உன் சிரத்தை அலங்கரிக்கும். ஆனால், பெரும் தடங்கல் ஒன்று குறுக்கிடுகிறது. ஜய ஸிம்ஹனுக்கே பட்டம் சூட்டுவதென்று பறை அறைந்து விட்டேன். இப்போது நான் மாறி நடந்தால் அவன் என்னை லகுவில் விடமாட்டான். கிளர்ச்சி செய்து நாட்டில் கலவரத்தை உண்டுபண்ணுவான். இதிலிருந்து மீளுவதற்கு வழி எதுவுமே இல்லை. என் பிசகு எல்லாம்'' என்றதுமே உறையிலிருந்து வாளை வீசி எடுத்தார் ராஜ ஸிம்ஹன். இளம் வெயிலில் வாள் பளபளத்தது. பீம ஸிம்ஹனிடம் கொடுத்து, "இதைப் பிடி, உன் தம்பியின் இருதயத்துள் ஆழமாகப் பாய்ச்சு. அவன் சிந்தும் ரத்தம் இந்த மீவாரை ரத்தப் பெருக்கில் அடித்துச் செல்லாமல் காக்கும். அப்பா, நடுங்காதே, கடமையின் எதிரே எது நிற்கும்? அன்புக்கு இங்கே மதிப்பில்லை. ஆகட்டும்!'' என்றார்.

ராஜஸிம்ஹனின் குரலில் நடுக்கம். இந்தப் பயங்கர உண்மை அன்றுதான் அவருக்கு உள்ளூற உறைத்தது. பீமஸிம்ஹன் மரமெனச் செயலற்று நின்றான். மகாராணாவின் மனவேதனை அவனுக்குத் தெளிவாகப் புலப்பட்டது. கடமைக்கு உடன்பட்டு, தம் கண்போன்ற ஜயஸிம்ஹனை இழக்க அவருக்கு எப்படித்தான் துணிவு வந்ததோ? பீமஸிம்ஹன் வியந்தான் தன் தந்தையின் உதார குணத்தை. என்ன பதில் சொல்வதென்று பீம ஸிம்ஹனுக்குத் தோன்றவில்லை. மகாராணா, "அப்பா, நடுங்காதே. இந்தக் கொலையால் பாவம் எதுவும் வராது. நீதியை நிலைநிறுத்தவும், தேசத்தின் நன்மைக்காகவும் இதைச் செய்கிறாய். இதனால் பாவம் யாருக்கு? - உனக்கு அல்ல, எனக்குத்தான்! என் கட்டளையை நிறைவேற்று!'' என்றார். அப்பொழுதுதான் பீமஸிம்ஹனுக்குப் பேசும் உணர்வு வந்தது. தந்தையின் கையில் இருந்த வாளை வாங்கி அவர் காலடியில் வைத்துவிட்டு, "அப்பா, வாளை உறையிவிடும். இது அவசியமில்லை. என் விஷயமாக நீங்கள் செய்த அநீதங்களுக்கு ஏற்ற தண்டனையை அனுபவித்து விட்டீர்கள். இதோ உம்முடைய கடமையை நீர் செலுத்தியாகிவிட்டது. இனிமேல் என்னுடைய பாகம்.

என் கடமையை நிறைவேற்றுகிறேன். ராஜ்யத்தில் என்னால் ரத்தக் களறி உண்டாகாதபடியும், ஜயஸிம்ஹ னுடைய மனத்தில் எந்த விதமான குரூர எண்ணமும் முளைக்காமல் இருப்பதற்கும் நான் ஒரு வழி கண்டு பிடித்து இருக்கிறேன். இன்று எனக்கு நீர் தந்த அர சுரிமையை நான் ஜயஸிம்ஹனுக்கே கொடுத்துவிடு கிறேன்! இங்கேயே தங்கினால் ஒருவேளை எனக்கு ராஜ் யத்தின்மீது ஆசை மூண்டாலும் மூளும். ஆகவே, மீவாரைத் துறந்து செல்கிறேன்!" என்று கூறி, மகா ராணா தடுப்பதற்கு அவகாசம் கொடுக்காமல், தந்தையின் பாதங்களைத் தொட்டுச் சபதம் செய்துவிட்டான்.

அந்தத் தினமே பீமஸிம்ஹன் ஜயஸிம்ஹனுக்கு இள வரசுப் பட்டம் சூட்டிவிட்டு, பிறந்த நாடான மீவாரின் எல்லையில்கூடத் தங்காமல் போய்விட்டான். திரும்பவே இல்லை.

# 'இவாகுவேஷன்' விசித்திரம்

காலையில் வந்த தினசரியின் தலையங்கத்தைப் படித்து விட்டுச் சங்கரநாராயண ஐயர் உரத்த குரலில்... "பஞ்சு... பஞ்சநதம்!..." என்று கூப்பிட்டார்.

பஞ்சநதம் உருண்டு அடித்துக்கொண்டு தன் தமையன் முன்பு வந்து பயபக்தியுடன் நின்றான். அண்ணுவுக்குக் கோபம் வந்துவிட்டால் வீடு திமிலோகப்படும் என்பது பஞ்சுவுக்குத் தெரியும். அவர் அரசாங்க இலாகா ஒன்றில் உயர்ந்த பதவி ஏற்று ஆறு மாதங்களே ஆயின. பதவி ஏற்றத்துடன் அவருக்கு இருந்த முன் கோபமும் ஏறத் தொடங்கியது. புது மாறுதல்கள் அவரிடத்தில் தென்பட்டன. இப்பொழுதெல்லாம் வேஷ்டி கட்டிக்கொள்வதில்லை; நிஜார்தான்! குடுமி மெல்ல, 'ஸம்மர் கிராப்' ஆகிவிட்டது. வெகு நாளாகக் குடியிருந்த அந்தச் சஞ்சீவிராயன் தெருவில் இருக்கும் வீடு திடீரென்று அவருக்குப் பிடிக்காமல் போய்விட்டது. மயிலாப்பூர் பக்கத்தில் காற்றோட்டமான பங்களா ஏதாவது கிடைக்குமோ என்று பார்த்துக்கொண் டிருந்தார். நீண்ட நாளாகச் சமையலும் வீட்டு வேலையும் செய்து வந்த தாயார் சேசிப்பாட்டிக்கு ஓய்வு ஏற்பட்டது. பாலக்காட்டுப் பரிசாரகன் ஒருவனை அமர்த்திக்கொண்டார். ஏதாவது புது மாடல் மோட்டார் வாங்கவேண்டும் என்று யோசனைதான் அவருக்கும். யுத்தகாலமோ இல்லையோ, மோட்டார்கார் விலை அதிகமாக ஏறிவிட்டபடியால், இந்தக் கோரிக்கை மட்டும் நிறைவேறவில்லை. வீட்டில் இருப்பவர்கள்மீது சொள்ளென்று எரிந்து விழுவது போலவே, தம் கீழ் வேலை செய்யும் எளிய குமாஸ்தாக்களையும் கடுமையாகக் காய்ச்சி வந்தார்.

பஞ்சநதம் தமையனைப் பார்த்து, "என்ன அண்ணு?" என்றான்.

கண்கள் வட்டமாக விரியச் சங்கரநாரயண ஐயர் அதாவது எஸ். என். ஐயர். "என்னிக்கித்தான் இந்தக் குடும்பத்தைப் பற்றி உனக்கு அக்கறை பிறக்கப் போகிறதோ!" என்ருர்.

"நீ கூப்பிட்டவுடனேயே வந்து விட்டேனே, அண்ணு."

"நீ வரலேன்னு நான் உன் மேல் பழி சுமத்தவில்லையடா! பேப்பரில் என்ன சமாசாரம் வந்திருக்கு. பார்த்தாயா?"

"நீ படிச்ச பிறகுதானே அண்ணு, பேப்பர் எங்கள் கைக்கு வரும்?"

"இது ஒரு சாக்கு. போடா போ! நித்தியம் பத்திரிகையில் வரும் முக்கியமான செய்திகளை வீட்டுப் பெண்களுக்கும் எட்டவிட வேண்டாமா?"

"அப்படியே அண்ணு! நாளைக்கே ஒரு தமிழ்த் தினசரிக்குச் சந்தா கட்டிவிடுகிறேன்."

கடைசியில் எஸ். என். ஐயருடைய அந்தப்புரத்திலும் வெளியுலகச் செய்தி புகும் நற்காலமும் பிறந்தது. பின்கட்டுக் கூடத்தில் ஐயர்வாள் ஈஸிசேரில் சாய்ந்த வண்ணம் "பஞ்சு" என்று கூப்பிட்டார்.

"இதோ வந்துவிட்டேன் அண்ணு!"

தமிழ்த் தினசரியை அவனிடம் நீட்டி, "கண்ணுடி இல்லாமல் படிக்க முடியவில்லை. நீயே படித்துவிட்டு விஷயங்களைச் சொல் எல்லாருக்கும். 'தென் பர்மாவில் விரோதிகள்' என்பதற்கு மேலே படி...!" என்ருர்.

"விரோதிகளின் படை டென்ஞஸரிமில் கால் வைத்தது."—இந்தச் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் எஸ். என். ஐயர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"வந்துவிட்டார்களா? இதுகூடவா புரியவில்லை உங்களுக்கு? இன்னுமா மூளையில் அடித்துச் சொல்ல வேண்டும்?" என்ருர்.

"என்ன அண்ணு?"

"இந்தச் சம்சாரத்தின் சுகதுக்கங்களைக் கவனிப்பது என் ஒருத்தன் தலைப் பொறி மட்டுமா? என்றைக்கு உங்களுக்கெல்லாம் அக்கறை விழப்போகிறது!"

அவர் தம் மனைவியை அழைத்து, ''என்னு! காதிலே விழுந்ததா சமாசாரம்...இனிமேல் பட்டணத்தில் இருப்பது ஆபத்து......நல்ல காலம். அந்தப் பங்களாவுக்கு 'அட்வான்ஸ்' கொடுக்காமல் தப்பினேனே, கஷ்டமோ நிஷ்டூரமோ, எல்லோரும் சீக்கிரம் எங்கேயாவது நூறு மைலுக்கு அப்பால் போய்க் கொஞ்சநாள் வாசம் செய்ய வேண்டியதுதான்" என்று கூறியதும் எஸ். என். ஐயர் விடுவிடுவென்று எழுந்து முன் கட்டிற்குப் போய்விட்டார். பஞ்சநதமும் தினசரியைப் போட்டுவிட்டுத் தன் ஜோலியாக வெளியே சென்றுன்.

நெருங்கி வரும் பேராபத்தைக் குறித்துப் பலவிதமான வம்புகள் எஸ். என். ஐயர் அந்தப்புரத்தில் உலாவி வந்தன.

மார்கழி மாதம். ஆசாரம் மிகுந்த சேசிப் பாட்டி அதிகாலையிலேயே ஸ்நானம் செய்துவிட்டுத் தனுர் மாதப் பூஜைக்கு உட்கார்ந்துவிட்டாள். நைவேத்தியத்திற்குப் பிறகு விநியோகிக்கப்படும் சூடான வெண்பொங்கலுக்காக அவளுடைய பேரன் பேத்திகள் காத்துக்கொண்டிருந்தனர். குளிர்காலத்து வெயில் சேசிப் பாட்டிக்கு இளங் குழந்தையின் ஸ்பரிசம் போல் ஆனந்தமாக இருந்தது. குழந்தைகளெல்லாம் வட்டமாக உட்கார்ந்து நெய் ஒழுகும் பொங்கலை ருசியுடன் புசித்துக்கொண்டிருந்தனர். அதே சமயம் அடுத்தகத்து விசாலாக்ஷி மாமி அங்கே வந்து சப்பரம் போல் பேச உட்கார்ந்துவிட்டாள்.

"சேசிப் பாட்டி, என்ன சமாசாரம்? தனுர்மாசப் பூசையெல்லாம் முடிஞ்சுதோன்னே?" என்றுள்.

"சமாசாரமா? அதை ஏன் கேக்கறே, பட்டணத்துக்கு ஆபத்து வந்துவிட்டதாம்டீ. கட்டையிலே போறவன் எவனே வரானும். சுகமாய் இருந்த இடத்தை விட்டு ஓட வேண்டும்! எந்தப் பட்டிக்காட்டில் போய்

அவதிப்படத் தலையில் எழுதியிருக்கோ?'' என்றாள் சேசிப் பாட்டி.

"என்ன என்ன, எங்கே போகப் போகிறீர்கள்?" என்றாள் மாமி.

"யமலோகத்திற்கு! பேப்பர்லே என்னமோ போட்டிருந்ததாம். அதை நம்பிக்கொண்டு சங்கரன் வாள் வாள் என்று நேற்றெல்லாம் எல்லார் பேரிலும் எரிந்து விழுந்தான். ஆயிரம் மைலுக்கு அப்பால் எவன் குரல் வளையை எவனோ பிடித்துக்கொண்டு சண்டை செய்கிறானாம். அதனால் பட்டணத்துக்கு என்ன கேடு வருமோ தெரியவில்லை. சொஸ்தமாக இருந்த இடத்தைக் கலைத்து விட்டால் அப்புறம் இந்தக் குடித்தனம் பழையபடியே சௌக்கியமாக ஒன்று சேரும் என்று என்ன நிலையடீ! முன் கோவக்காரன் என் பிள்ளை. என் பேச்சு அவன் காதுக்கு ஏறுதடீ! (சுற்று முற்றும் பார்த்துவிட்டு) அவள் இருக்காளே, அவனைப் பம்பரமா ஆட்டி வைக்கிறாள். அவனும் ஆடுகிறான்'' என்றாள்.

எஸ். எஸ். எல். ஸி. படிக்கும் பேத்தி ஒருத்தி இவர்களுடைய பேச்சுக்கிடையே குறுக்கிட்டு, "இல்லை பாட்டி, பட்டணத்துக்கு ஆபத்துத்தான். ஜப்பான்காரன் ஆகாய விமானத்தில் வந்து குண்டு போட்டால் ஜனங்கள் செத்துத்தானே போய்விடுவார்கள்? முன் ஜாக்கிரதையாக ஆபத்து வராத இடமாகப் போய்விடுவது நல்லதுதானே பாட்டி? அப்பாவை ஒன்றும் அம்மா ஆட்டிவைக்கவில்லை!'' என்றாள் தன் தாய்க்குப் பரிந்துகொண்டு.

"அடியம்மா, சண்டையைப் பற்றி நேக்கென்னடீ தெரியும்? பழங்காலத்துக் குட்டிச்சுவர் நான். பருத்தியூர்க் கிருஷ்ண சாஸ்திரிகள் ராமாயணம், மஹாபாரதம் சொல்லுவார். யுத்தத்தைப் பற்றி அதில்தான் கேட்டிருக்கிறேன். நீ இந்தக் காலத்துக் குட்டியோன்னோ! பதினைஞ்சு ரூபாப் பரீக்ஷைக்கு வேறு போகப் போகிறாய்'' என்றாள் சேசிப் பாட்டி.

உண்மையில் எஸ். என். ஐயர் மனைவியான கோமதிக்கும் பட்டணத்தை விட்டுப் போக மனம் ஒப்பவில்லை. ஆனால் அகத்துக்காரர் உத்தரவு இட்டிருக்கிறாரே, அன்று

சாயந்தரத்திற்குள் எந்த எந்தச் சாமான்களைக் கூடவே எடுத்துச் செல்வது போன்ற விஷயங்களை ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரும்படி? என்ன செய்வாள், பாவம்! வீட்டிற்குப் பெருந் திக்கான சேசிப் பாட்டியைக் கேட்டால் ஒரு யோசனையும் வரப் போவதில்லை. முன் கோபம் நிறைந்த அகமுடையானைப் பெற்றவள் எப்படி இருப்பாள்?

அண்டை வீட்டுக்காரியான விசாலாக்ஷி கோமதியைப் பார்த்து, "கடைசியில் எந்த ஊருக்குக் கிளம்புவதாகப் 'பிளான்' போட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"எனக்கு என்னம்மா தெரியும்? காஞ்சீபுரமோ வேலூரோ?"

"காஞ்சீபுரமா? கொடலை இட்டலி தண்டியாகக் கிடைக்கும்."

"இட்லியும் ஆச்சு, மண்ணுங்கட்டியும் ஆச்சு! இதற்கு வீங்கியா அங்கே செல்கிறோம்! பட்டணத்தில் இல்லாததா? இத்தனை நாள் இங்கே வாழ்ந்து விட்டு அங்கே போவதென்றால் எனக்கு என்னவோ பயமாகத் தான் இருக்கு. என்னவோ சொல்லுவாளாம், காவேரி காத தூரத்தில் இருக்கச்சே—" என்றாள்.

பெண்களெல்லாம் ஒன்று கூடி ஒரு முடிவுக்கு வந்தனர். புருஷர்கள் என்ன பயம் காட்டினாலும், பட்டணத்தை விட்டு நகரக்கூடாது என்ற உறுதியே! சமுத்திரக் காற்றும் பீச்சுக் கரையும் எலெக்ட்ரிக் விளக்கும் சினிமா தியேட்டர்களும்—இவற்றையெல்லாம் எப்படி மனமார விட்டுச் செல்வது? அழகான பட்டணத்தை விட்டுப்போனால் பட்டிக் காட்டில் இங்கே இருப்பது போன்ற எதேச்சை வாழ்வு பெண்களுக்குக் கிட்டுமா?

* * *

எஸ். என். ஐயர் ஆபீஸ் அறைக்குள் அடுக்குப் பைல்களை அக்குளில் வைத்துக்கொண்டு ஹெட் கிளார்க் ஆபதுத்தாரணம் நுழைந்து யஜமானருக்கு ஒரு 'குட் மார்னிங்' வைத்தார். பிரசன்ன முகமாகவே ஐயரும் குமாஸ்தாவை ஏறிட்டுப் பார்த்து, "வாரும்" என்றார்.

சகுனம் சரியாக இருப்பதைப் பார்த்து ஆபதுத்தாரணத்திற்கு வியப்பு மேலிட்டது. தட்டுத் தடுமாறிக் கொண்டே, "ரத்னவேலு அண்ட் கம்பெனியின் கேஸ்—'கோல்' (கரி) சப்ளையைப் பற்றியது—" என்று இழுத்தார்.

"பேபர்களை எல்லாம் சரியாகப் பார்த்துவிட்டீர்களோ இல்லையோ? சட்டத்திற்கு விரோதமாக எதுவும் இல்லையே? இதோ 'ஸைன்' பண்ணிவிடுகிறேன்" என்றார் ஐயர்.

இன்று எஜமானன் இவ்வளவு அனுகூலமாக இருப்பது, இதுவரையில் வசவு வாங்கிவந்த தலைமைக் குமாஸ்தாவுக்கு வியப்பினும் வியப்பாக இருந்தது. ஆனால் காரிய சாதகார்த்தமாகத்தான் இந்த மெருகெல்லாம் என்பதைப் புரிந்துகொண்டார்.

"உம்மை ஒன்று கேட்கிறேன். காஞ்சீபுரந்தானே, உங்கள் ஊர்?" என்றார் எஸ். என். ஐயர்.

"ஆமாம். என்ன தேவை உங்களுக்கு?"

"ஊர் எப்படி? வாசத்திற்கு யோக்கியமானதா?"

"ஆரோக்கியமான ஊர், குடிப்பதற்கு நல்ல ஜலம்."

"எல்லாம் சரிதான். கொசு உபத்திரவம் ஜாஸ்தி என்கிறார்களே? மலேரியா இருக்குமோ?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. அகலமான தெருவில் கொசு அவ்வளவாக இராது. ஏழெட்டு வருஷ காலமாக நான் அங்கே இருந்தபோதும், எனக்கு மலேரியா ஜுரம் வந்ததே இல்லை."

"ஆனால் சரி. எலெக்ட்ரிக் விளக்கு இருக்கிற வீடு வாடகைக்குக் கிடைக்குமோ இல்லையோ? மாடி வீடாய் இருந்தால் தேவலை."

"வீடுகளுக்கு என்ன ஸார்? நான் ஏற்பாடு செய்கிறேன். உங்களுக்கு ஏன் அந்தக் கவலை? குழாய் உள்ள வீடாகப் பார்க்கிறேன், போங்கள்."

"சாமானெல்லாம் கிடைக்குமோ இல்லையோ?"

"மலிவா கிடைக்கும்ணு. பட்டணத்தை விட இரண்டணு மலிவாகவே! ரூபாய்க்கு நாலு படி பால் வாசலிலேயே கறந்து தருகிருன்ணு!"

"பேஷ்! பங்களா மாடலில் நல்ல காற்ருேட்டமான இடத்தில் ஒரு வீடு பாருங்கள். 'ரென்ட்'டைப்பற்றி அக்கறை இல்லை. சாக்கடை நாற்றம் இருக்கக் கூடாது. என்ன?" என்ருர் ஐயர்.

"அதற்கென்ன, வேண இடம் காலியாக இருக்கிறது."

"'தாங்க்ஸ்'! வர சனிக்கிழமை உங்களோடு வருகிறேன். ஊரைப் பார்த்துவிட்டு வரலாம்."

"அதற்கென்ன ஆக்ஷேபம்! பேஷாகப் போவோம்!" என்ருர் ஆபதுத்தாரணம்.

எஸ். என். ஐயர் ஒரு கொட்டாவி விட்டு, சுழலும் சேரில் ஒரு தரம் சாய்ந்து சோம்பல் முறித்தார்.

* * *

மார்கழி மாதத்து அந்திப்பொழுது. செங்கிறமாகத் தாழும் ஞாயிறு. தன் அறையில் திறந்த சாளரத்திற்குச் சமீபமாக நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு பஞ்சு உட்கார்ந்திருந்தான். அவனுடைய கவனமெல்லாம் எங்கோ சுற்றிக்கொண்டிருந்தது. மேஜைமேல் டம்ளரில் இருந்த ஆவிவிடும் சூடான காபியின் மணங்கூட அவன் கவனத்தைக் கவரவில்லை. கதவைத் திறந்து கொண்டு பூவின் மணம் போல் உள்ளே ஒரு காரிகை நுழைந்தாள். பஞ்சு காபியை அருந்தாமல் இருப்பதைப் பார்த்து, "காபி ஆறிப்போறதே......என்ன தியானமோ?" என்ருள் அந்த ரூபவதி.

பஞ்சநதம் பெருமூச்சுடன், "உன்னுடைய தியானந்தான். அண்ணு பிடிச்சால் ஒரே பிடிவாதம். அடுத்த வாரம் நீ காஞ்சிபுரம் போய்விடப் போகிருய்—" என்ருன்.

"எல்லாருமே போய்விட்டால் அப்புறம் இங்கே யார்—? பெரியவா (பெரிய மைத்துனர்) ஆபீஸிலிருந்து

வந்தவுடன், சுச்ருஷை செய்ய யாருமே இல்லாமல் போனால் அவருக்குக் கஷ்டமாக இருக்குமே?''

''அண்ணாவின் கஷ்டம் உங்களுக்கெல்லாம் பெரிசாகத் தோன்றுமே ஒழிய, என்னைப் பற்றி ஏன் சிந்திக்கப் போகிறீர்கள்? கட்டின பெண்டாட்டியான நீகூட இந்தக் கோஷ்டியில் சேர்ந்துகொண்டாய். நான் பண்ணின அதிர்ஷ்டம் அவ்வளவுதான்'' என்றான் பஞ்சு.

பஞ்சுவின் இனியாள் முகத்தில் முறுவல் அரும்ப அவனை அணுகி, ''உங்களுடைய வருத்தம் எனக்குத் தெரியாதா என்ன? நான் அவர்களோடு போகாமல் இங்கேயே நின்றுவிட்டால் அவாளெல்லாம் என்னமாவது நினைத்துக்கொண்டால்!'' என்றாள்.

''அண்ணா தன் சுகத்தைத்தான் பார்க்கிறான். படித்துவிட்டு வேலை வெட்டி இல்லை என்றுதானே என்னை இப்படி அலக்ஷ்யம் செய்கிறீர்கள்? சம்பாதிக்கிற புருஷன் அவன். அவனுக்குத்தான் எல்லாரும் நடுங்குவீர்கள். அவனுடைய கஷ்டந்தானே கண்ணில் உறுத்தும்? என் மனசில் புகுந்து பார்த்தால்தானே தெரியும், நான் அனுபவிக்கும் அந்த நரக வேதனை?''

''அதற்கு என்ன பண்ணுவது? கொஞ்ச காலம் பல்லைக் கடித்துக்கொண்டிருங்கள். இரண்டொரு மாஸ காலத்தில் மச்சினருக்கே வெறுத்துப்போய்விடும். பழைய குருடி கதவைத் திறடீ என்று பட்டணத்துக்கே திரும்பி விடுவார்.''

பஞ்சு கப்பென்று சரளாவின் கையைப் பிடித்துக் கொண்டு தன் முகத்தோடு அவள் முகத்தை அழுத்தித் தழுதழுத்த குரலில், ''அறுபது வருஷ காலம் அகமுடையானோடு வாழும் பாட்டிகூட இப்படிப் பேசமாட்டாள். நமக்குக் கல்யாணமாகி இன்னும் சரியாக இரண்டுவருஷங் கூட ஆகவில்லை. நீ இப்படிப் பேசினால்—'' என்றான்.

அருவிபோல் ஒலி செய்யும் சிரிப்புடன் சரளா, ''கொஞ்ச நாள் நாம் பிரிந்து இருந்தால்தான் ஒருவர் மேல் ஒருவருக்கு ஆசை அதிகரிக்கும்'' என்றாள்.

''அடி! உன் நெஞ்சம் கல்லா? உன்னைக் காஞ்சீ

புரத்திற்கு அனுப்பிவிட்டு, பிரிவு தாளாமல் நான் துடிப்பதைவிட ஜப்பான் குண்டு கொடூரமாக இருக்காது என்று எண்ணுகிறேன். உனக்கு அந்த வேதனை இல்லையா ?''

சரளா தலையை அசைத்து, ''இந்த அகத்தில் கால் எடுத்து வைத்த பிறகு எனக்கு வேதனையோ தென்போ எதுவுமே கிடையாதே! உங்களை இங்கே தனியாக விட்டு விட்டுக் காஞ்சிபுரத்தில் ஹாய்யாகக் கொடலை இட்லி தின்பதற்குத்தான் போகிறேன்!'' என்றாள்.

''நான் கொடுத்த இனிய வஸ்துக்கள் உனக்கு ருசிக்கவில்லையாக்கும்!''

''ருசிக்காமல் என்ன; நான் என்றைக்காவது உதறித் தள்ளியது உண்டா நீங்கள் அதைக் கொடுக்க வரும் போது? இந்தப் புனைசுருட்டுத்தனந்தான் ஆகாது.''

சரளாவின் இதழைப் பருக அவன் முகத்தைத் தூக்கிய பொழுது அங்கே மதனி திடீரென்று வந்துவிட்டாள்.

''அவா என் பேச்சைக் காதில் போட்டுக்கொண்டால்தானே? எனக்கு இந்த இடத்தை விட்டு நகரத் துளிக்கூட இஷ்டமே இல்லை. புருஷாளை ஆபத்துக்கு விட்டு எங்களுக்கு மட்டும் என்ன வேண்டியிருக்கிறது இந்த உசிரை வைத்துக்கொள்ள ?'' என்று ஆரம்பித்தாள் கோமதி.

''என்ன செய்யறது, மன்னி? அப்படி ஆபத்து நேரிடுமானால் புருஷா எப்படியாவது தப்பித்துக்கொண்டு விடுவோம். மைல் கணக்காக ஓட முடியும் எங்களால்... உங்களால் எல்லாம் முடியுமா? கைகால் ஆடாமல் ஒரே இடத்தில் அல்லவோ நின்றுகொண்டிருப்பீர்கள் ?''

''உன்னைத் தனியாக விட்டுவிட்டு வரச் சரளாவுக்கு மனசு ஒப்பவே இல்லை. அவள் கண் கலங்குவதைப் பார்த்தால் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. ஏனோ இந்தச் சங்கடமெல்லாம் வர வேண்டும்! பகவானே! குண்டு போட்டால் ஒரே இடத்தில் செத்துப் போகலாமே! நீ கூட வந்தால்தான் அவள் மனசு பாட்டில் போடும். சிறிசான நீங்கள் பிரிந்திருக்கவே கூடாது.''

"மன்னி, நான் அங்கே வந்து என்ன காரியம் சாதிக்கப்போகிறேன்? ஊர் சுற்ற வேண்டியதுதான்."

"துணைக்கு யாராவது புருஷா வேண்டாமா என்றதற்கு அவாளும், 'பஞ்சுவை வேணுமானுல் அழைத்துக்கொண்டு போயேன். சரளாவை விட்டு அவன் அரை நாழி இருப்பானு? பஞ்சு என்னவோ தைரியசாலி என்று எண்ணினேன். புட்பால், கிரிக்கெட் முதலிய விளேயாட்டுக்களில் கெட்டிக்காரனுக இருந்தும் என்னே விடக் கோழை என்று தெரிகிறது' என்ருர்."

"மன்னி, பட்டணந்தான் எனக்கு ஆகிவந்த இடம். உங்கள் பின்னுல் வர என்னுல் முடியாது. கிரிக்கெட் ஸீஸன் வந்துவிட்டதே. பிராணம் போவதாக இருந்தால் கூட வரமாட்டேன்."

"அவாதான் பிடிவாதம் பிடிக்கிருள் என்ருல் நீயும் அதற்கு மேல் இருக்கிருயே. உம்!" என்று கூறிக்கொண்டே, வந்த காரியம் பலிக்காமல் போய்விட்டாள் மதனி.

கோமதி மதனி சென்றதும் பஞ்சு ரோஷம் கொண்டவன் போல் நடித்து, சரளாவைச் சுடும் பாவனேயாகப் பார்த்து, "நீதான் இதற்கெல்லாம் மூல காரணம்!" என்ருன்.

"எதற்கு? உங்களே வரவேண்டாம் என்று நான் தடுத்தேனு?"

"இந்தப் பொம்மனுட்டிகள் 'டக்'கெல்லாம் எனக்குத் தெரியாமல் போகவில்லே."

"என் மேல் ஏன் எரிந்து விழ வேண்டும் நீங்கள்? எல்லாம் உங்கள் அண்ணு செய்யும் கந்தர்கூளம்! அவர் எண்ணமெல்லாம் என்ன தெரியுமோ? நான் ரொம்பத் தைரியசாலி. அக்காவுக்குத் துணேயாக நான் இருப்பேன் என்பதுதான். உங்களேப் பெருங்கோழை என்று நிச்சயம் செய்துவிட்டார். அதனுலேயே எங்கள் பின்னுல் அனுப்ப உத்தேசித்திருக்கிருர்."

"பார்க்கலாம்! அந்தக் காஞ்சிவரத்திற்கு என்னே

எப்படி அனுப்புகிருயோ பார்க்கலாம்! கோழையா நான்?'' என்று பஞ்சு முணுமுணுத்தான்.

சரளா இளமுறுவல் தோன்ற, “இந்த வீருப்பெல்லாம் அப்புறம் ஆகட்டும்! அந்தக் காபி ஆறிப்போகிறதே; குடியுங்கோன்னு. நான் வந்து ரொம்ப நாழி ஆகிறது'' என்ருள்.

* * *

இரவு சமையல் கூடத்தில் எஸ். என். ஐயர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். சேசிப் பாட்டி, தன் பிள்ளை எதிரே வந்து, “அடே சங்கரா!” என்ருள்.

“ஏனம்மா?”

“ஏண்டா! ஆனல் ஊரை விட்டுப் போகத்தான் போகணுமோ?”

“ஆமாம், அம்மா! இந்த இரண்டு நாளைக்குள் இந்தப் பட்டணத்தை விட்டு எத்தனை குடும்பம் வீடுகளைக் காலி செய்துவிட்டு, வெளியூர்களுக்குப் பறக்கிறது தெரியுமோ? ரயில் வண்டியில் உட்காருவதற்கு இடமே கிடைக்கலையாம், போ!...நாம் இப்படி யோசனை பண்ணிக்கொண்டிருந்தால் கடைசியில் விழிக்க வேண்டியதுதான். காஞ்சிபுரத்தில் ஜாகை பார்த்தாகிவிட்டது. நாளைக்கே முக்கியமான சாமான்களை எடுத்துக்கொண்டு கிளம்ப வேண்டியதுதான். இந்த ஊரில் ஈ காக்கை இராது அப்புறம்.”

கோமதி அவர் இலையில் அன்னம் படைத்துக்கொண்டே, “ஆமாம், ஈ காக்கை இராமலே போய்விடப் போகிறதாக்கும்! இந்தப் பூச்சி மிரட்டல் யாரண்டெ? பெண் ஜன்மங்களான நாங்கள் உசிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போவது, ஆதரவாக இருக்கும் புருஷாளான நீங்கள் இங்கே மடிவதா?......ரொம்ப லக்ஷணம்......நீங்களும் 'லீவ்' எடுத்துக்கொண்டு எங்களோடேயே வந்துவிடுகிறதுதானே?”

“பேஷ்! உன் யோசனையைக் கேட்டால் நான் உத்தி

யோகத்தை ஏறக்கட்ட வேண்டியதுதான்......ஆபீஸை விட்டுப் போகக்கூடாது என்று கடுமையான உத்தரவு சர்க்கார் போட்டிருக்கிறார்களே!''

"மனுஷ்யாளுடைய உசிர் முக்கியமா, வேலை முக்கியமா? அப்பேர்ப்பட்ட உத்தியோகம் வேண்டாமே! எங்கேயாவது உழைத்து, அரை வயிற்றுக் கஞ்சி குடித்தால் போகிறது!''

எஸ். என். ஐயர் இடி இடியென்று நகைத்தார். "இப்போச் சொல்லுவேடீ, இந்த வேதாந்தமெல்லாம். காபி ஒருவேளை இல்லாமல் போய்விட்டால் உன்னால் இருக்க முடியவில்லை!'' என்றார்.

"பொம்மனாட்டிகள் என்றால் புருஷாளுக்கே கிள்ளுக்கீரை. எங்கள் மனசு வேதனைப்படுவதெல்லாம் உங்களுக்கு என்ன தெரியும்?''

அடுத்த நாள் மாலை மணி நாலு இருக்கும். எஸ். என். ஐயர் வீட்டு வாசலில் இரண்டு ஜட்கா வண்டிகளும் ஒரு டாக்ஸியும் காத்துக்கொண்டிருந்தன.

வீட்டினுள்ளே ஒரே பரப்பு, இரைச்சல். சிறு பிள்ளைகள் புது உடைகள் அணிந்துகொண்டு ஊருக்குப் போகும் குதூகலத்துடன் முன்னதாகவே மோட்டாரில் இடத்தைப் பிடித்துக்கொண்டார்கள். பெரிய பெரிய டிரங்குப் பெட்டிகள் ஏழெட்டு வெளியே வந்தன. இன்னும் எதைதை எடுத்துக்கொள்வது என்ற தர்க்க குதர்க்கம் ஓயவில்லை, பெண்களிடையே.

"இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் ரயிலைக் கோட்டை விட வேண்டியதுதான்'' என்று எஸ். என். ஐயர் ஒரு ஹுங்காரம் செய்தார். அப்போதுதான் அவருடைய மூத்த பெண் மூன்றாவது தடவையாக முகத்தைச் சோப்பால் அலம்பிக்கொண்டிருந்தாள். "சீக்கிரம் ஆகட்டுமேடீ'' என்று தாயார் அதட்டுவதும், "பஞ்சு எங்கே விட்டடிச்சான் சமயம் பார்த்து!'' என்ற ஐயர்வாளின் கேள்வியும், "சாப்பாடு ரெடீ'' என்ற சமையற்காரனுடைய குரலும், வாசலில் வண்டிக்காரன் "எத்தனை நாழி சாமி'' என்று போடும் கூச்சலும், டாக்ஸி

டிரைவர் சற்றைக்கு ஒரு தரம் அடிக்கும் 'ஹாரன்' ஓசையும் ஒன்று கலந்து களேபரமாய் விளங்கியது, அந்தப் பிரயாணப் புறப்பாடு.

இரண்டு ஜட்காக்களிலும் கொண்ட அளவுக்குப் பெட்டிகளும் மூட்டை முடிச்சுகளும் ஏறின. டாக்ஸியைப் புளி அடைப்பதுபோல் எஸ். என். ஐயர் குடும்பம் மொத்தமும் நிரப்பிக்கொண்டது. எல்லோருக்கும் மூச்சுத் திணறிற்று.

இந்தச் சங்கடத்திற்கு இடையே, "என் மடிசஞ்சியை எடுத்துப் பத்திரமாக வச்சையோடீ?" என்று சேசிப் பாட்டி போடும் அவசரமான கேள்வி வேறு.

"பஞ்சு எங்கே போயிருப்பான்! ஸ்டேஷன் வரைக்குமாவது வரக்கூடாதோ ஒரு பிள்ளை?" என்று கோமதி கூறியபொழுது சரளாவின் கண்களில் நீர் பளபளத்தது, துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது.

"அவன் எங்கே போனுனே...அவனுக்கு என்னடீ அக்கறை?" என்ருர் ஐயர்.

"பயந்தாங்கொள்ளி என்று நீங்கள் அடிக்கடி சொல்வதாலேயே அவன் ரோஷம் தாளாமே போய்விட்டிருப்பான்!" என்ருள் சேசிப் பாட்டி.

* * *

பார்க் ஸ்டேஷன். காஞ்சீபுரம் போகும் வண்டி வந்துவிட்டது. பெட்டி படுக்கை எல்லாவற்றையும் இரண்டாம் வகுப்பில் ஏற்றிவிட்டு எஸ். என். ஐயர் தம் குடும்பத்துடன் செளகரியமாக உட்கார்ந்துகொண்டார். பச்சை 'ஸிக்னலு'ம் கொடுத்தாகிவிட்டது. வண்டி நகரும் தருணம். பஞ்சு, சரளா உட்கார்ந்திருக்கும் ஜன்னல் அருகில் கையை ஊன்றிக்கொண்டு, "இருக்கட்டும், என்னை வருந்திக் கூப்பிட்டாலும் நான் வருகிறேனு பார்! போ...போ!" என்று கூறியபோது அவன் முகத்தின் நிறம் பல விதமாய் மாறிக்கொண்டே இருந்தது.

"நான் ஒன்றும் விட்டுவிட்டுப் போகவில்லை உங்களை.

உங்கள் அண்ணுவுக்குத் தெரியணும் இதெல்லாம்" என்ருள் சரளா.

மின்சார ஊதல் வீரிட்டது. வண்டியும் வேகமாய்ச் செல்ல ஆரம்பித்துவிட்டது. சரளாவின் கைகளை ஒரு தரம் அழுத்தமாகப் பிடித்து விட்டான் பஞ்சு. ஜன்னலி லிருந்து முகத்தை வெளியே நீட்டிய வண்ணம் சரளா கண்களில் நீர் திவலை இட, ப்ளாட்பாரத்தில் நிற்கும் பஞ்சுவையே பார்த்துக்கொண்டு இருந்தாள். பஞ்சுவும் உணர்ச்சியற்றவன் போல் தள்ளாடிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தான்.

*        *        *

இவாகுவேஷன் மும்முரம். பட்டணத்தின் வசீக ரமே குறைந்துகொண்டு வந்தது. கிஜு கிஜுவென்று ஜன சந்தடியாக இருக்கும் சைனு பஜார், மௌண்ட் ரோடு முதலிய இடங்கள் களையற்றுப் போயின. 'காபி ஹோட்டல்'கள் பல இருந்த இடம் தெரியாமலே மறைந்துவிட்டன. பிராட்வேயிலும் மற்றும் வியாபார நெருக்கமான இடங்களிலும் கடைகள் யாவும் தாழிடப் பட்டிருந்தன. சர்க்கார் இலாகாக்கள், ரெயில்வே ஆபீஸ் கள் இவைகளிலும் பல, தொலைவான இடங்களுக்கு மாற் றப்பட்டதால், உத்தியோகஸ்தர்கள் தலையும் தலைப்பாகை யுமாகச் செல்லும் காட்சி பார்ப்பதற்கு அரிதாகிவிட் டது. சினிமாத் தியேட்டர்களெல்லாம் ஜனங்களுக்காக ஏங்கி நின்றுகொண்டிருந்தன. பெண்கள் எல்லாம் பத்தி ரத்திற்காக வெளியூர்களுக்குப் போய்விட்டதனுல், பட்ட ணத்திற்கு லக்ஷ்மீகரமே போய்விட்டது. பட்டணத்தி லேயே தங்க வேண்டும் என்ற விதியுள்ளவர்கள் மட்டும் எப்படியோ, பாவம், சகித்துக்கொண்டிருந்தனர்.

தனிப் பக்ஷிகளைப்போல் எஸ். என். ஐயரும், பஞ்சு வும் சமையல்காரனை வைத்துக்கொண்டு ஒரு விதமாய்க் காலத்தைக் கழித்தனர். வாரத்திற்கு ஒரு முறை தம் அகத்துக்காரியையும் குழந்தைகளையும் பார்த்துவிட்டு வராமல் போனுல் ஐயருக்குத் தலை வெடித்துவிடும்போல் இருந்தது. ஒவ்வொரு சனிக்கிழமையும் பஞ்சுவுக்கு ஏதா

வது சாக்குச் சொல்லிவிட்டு எஸ். என். ஐயர் கிளம்பி விடுவார் காஞ்சீபுரத்திற்கு. இந்த மாதிரி இரண்டொரு மாத காலம் சென்றது.

சமையற்காரனுக்கும் சம்சாரம் உண்டு அல்லவா! பாலக்காட்டுக்குப் போய் வெகு நாள் ஆனதால் சமையற்காரன் திடீரென்று ஒரு நாள் மலபார் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறி விட்டான். ஐயர் சாயங்காலம் ஆபீசிலிருந்து வந்ததும் வழக்கம்போல் 'ஸ்ட்ராங்' காபியுடன் பரிசாரகன் ஆஜர் ஆகாததைக் கண்டு, பஞ்சுவைக் கூப்பிட்டு விசாரித்தார். பஞ்சு சமாசாரத்தைச் சொல்லிவிட்டான்.

"சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவது? மடப் பயல், இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டானே?" என்றார்.

"அதுதான் பொம்மனாட்டி யாராவது இங்கே இருந்தால் இந்தக் கஷ்டமெல்லாம் ஏற்பட்டிருக்காது" என்றான் பஞ்சு.

எஸ். என். ஐயருக்கு என்ன பதில் தருவது என்று தோன்றவில்லை. "உம்......எங்கேயாவது 'மெஸ்'ஸில் ஏற்பாடு செய்துகொள்வோம்" என்றார்.

"'மெஸ்'ஸில் கண்டதையெல்லாம் கலந்து அடிக்கிறான், அண்ணா? நோக்கு உடம்புக்கு ஆகுமா?"

"என்ன செய்யறது, கொஞ்ச நாளைக்கு? அவர்களுக்கு என்ன நம் கஷ்டத்தைப் பற்றி? ஹாய்யாகக் காபியும் டிபனும் பண்ணிச் சாப்பிடுவதும் தூங்குவதுந்தான் அவர்கள் வேலை. பசங்கள் ஏதாவது எழுதியிருக்கிறார்களா?" என்றார்.

"விச்சு எழுதியிருக்கிறான், 'அப்பா, இந்த ஊர் எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. இந்த ஊர்ப் பையன்கள் விளையாட எங்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. நல்ல டாக்கியே வருவது கிடையாது. கோவிலைத் தவிரச் சுற்றுவதற்கு வேறு இடமே இல்லை. எப்போ பட்டணம் வரப் போகிறோம் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறோம்' என்று. அண்ணா, பேசாமெ எல்லாரையும் அழைத்து

வந்துவிடேன். பசங்களுக்கும் படிப்புக் கெட்டுவிடுகிறது. இரண்டு இடத்தில் சம்சாரம் நடத்துவது இரட்டிப்புச் செலவுதானே, சொல்லு? நான் போய் அழைத்து வந்துவிடுகிறேன்'' என்ருன் பஞ்சு.

"போடா! உனக்கென்ன தெரியும்?...நம் துரதிர்ஷ்டம்; எல்லோரும் திரும்பி வந்தவுடன் வந்துவிட்டாலும் வந்துவிடும் ஆபத்து. அப்புறம் பறிகொடுத்து நிற்க வேண்டியதுதான் குழந்தைகளையும் குட்டிகளையும்!'' என்ருர் ஐயர்.

"நாளைக்கு நான் வேணுமாளுல்போய் அவர்களுடைய யோசனையையும் கேட்டுக்கொண்டு வருகிறேனே?''

"இதற்காக இரண்டு ரூபாய் செலவு செய்ய வேண்டுமா?''

"அண்ணு, நான் போய்விட்டுத்தான் வரேனே?... என்ன?''

தமையனர் இதற்கு வாயைத் திறக்கவே இல்லே. படுத்துக்கொள்ளப் போய்விட்டார். அடுத்த நாள் சனிக்கிழமை ஆதலால் அண்ணு காஞ்சீபுரத்திற்குப் போய் விடுவார் என்பது பஞ்சுவுக்குத் தெரியும்.

பாவம், என்ன செய்வான்? விரக வேதனையை யாரிடம் சொல்லி அழுவது! "பாவி! இவனுக்கு மட்டும் இருப்புக் கொள்ளவில்லே. வாரம் தவருமல் போய் வருகிருன், பெண்டாட்டியையும் பிள்ளைகளையும் பார்க்க. நானும் மனுஷ்யன் தானே? எனக்கு ஆசை இருக்காதா? சரளா எப்பொழுதும் என் எதிரே வந்து நிற்பது போலவே பிரமை ஏற்படுகிறது. நான் படும் வேதனை இவன் மூளைக்கு என்றைக்குத்தான் உறைக்கப் போகிறதோ. இவன் சுகமாகப் போவது! நான் மட்டும் இங்கே பூதம்போல் வீட்டையும் உடைமைகளையும் காத்துக்கொள்வது......பேஷ்!'' இவ்வாறெல்லாம் பஞ்சுவின் மனத்தில் புரட்சி ஏற்பட்டது. எதற்கும் சகித்துக்கொண்டிருந்தான், காலம் தனக்கும் வரும் என்று.

* * *

அந்தத் தடவை அண்ணு ஒரு வாரம் லீவ் எடுத்துக் கொண்டு போய்விட்டார். பஞ்சுவும் வேலைக்கார மாசிலாமணியுமே பட்டணத்து வீட்டில் இருந்தனர். மட்டி மாசிலாமணிகூடப் பஞ்சுவின் மனவேதனையை உணர்ந்துகொண்டான். "நீங்க ஒரு தரங்கூடப் போகலீங்களே ஊருக்கு......ஏஞ் சாமீ!" என்ருன்.

"எனக்கு உடம்பு இன்னிக்குச் சற்றுச் சரியாய் இல்லையடா, உடம்பெல்லாம் குடைச்சல் எடுக்குது. ஜுரம் வரும்போல் இருக்கு" என்ருன் பஞ்சு.

"ஆமாங்க, சின்னையா......அதுதான் கால் கை எல்லாம் சுடுது" என்ருன்; பஞ்சுவின் காலையும் கைகளையும் தொட்டுப் பார்த்து. "ஆமாஞ் சாமி...நீங்க ஒரு தரம் ஊருக்குப் போய்விட்டு வந்தா, உடம்பு லகுவாகும். சின்னம்மாளுக்கும் சந்தோஷமாக இருக்கும்" என்ருன் மாசிலாமணி.

பஞ்சுவுக்குப் பழைய துக்கமெல்லாம் பொங்கி எழுந்தது. படுக்கையில் குப்புறப் படுத்துக்கொண்டு மடைவிண்டு வருவதுபோன்ற கண்ணீரை மறைத்துக்கொண்டான் தலையணையில்.

"சாமி......நாளைக்கே கிளம்புங்கோ...நான் ஊட்டைப் பாத்துக்கறேன்......இளம் வயசிலே இப்படிப் பிரிஞ்சு இருக்கக் கூடாது......அண்ணுத்தை திடீரென்று வந்துவிட்டால் நான் பதில் சொல்லிக் கொள்ளுவேன்—'சின்னையாவுக்கு ஜுரம்!—யார் சாமி அவரைக் கவனிச்சுக்க; ஒரு வாய் கஞ்சி போட்டுத் தர-ஊருக்குப் போனரு' என்று சொல்லிவிடுகிறேன்" என்ருன்.

சற்றுமுன் பஞ்சுவுக்கு இருந்த பலவீனமெல்லாம் எங்கேயோ பறந்தோடிவிட்டது. முகத்தில் 'ஸுரத்' ஏற்பட்டது. அன்று இரவு இன்பக் கனவுகளையே கண்டான். அடுத்த நாள் விடியற்காலையில் மாசிலாமணி வந்து, "சாமி, டயமாச்சு வண்டிக்கு; எழுந்திருங்க" என்று எழுப்பினன்.

உள்ளம் இன்பத்தில் திளைத்திடச் சுக நினைவுகளால்

உடல் சிலிர்த்திடப் பஞ்சு படுக்கையை விட்டுக் குதித்தெழுந்து ஒழுங்காக அலங்காரம் செய்துகொண்டு, ஸ்டேஷனுக்குக் கிளம்பினான். ஏழு மணிக்கு வண்டி. பொன்னிறமான வைகறையின் இளங்காற்று அவனுக்கு மேலும் உத்ஸாகத்தைக் கொடுத்தது. சிங்கப்பெருமாள் கோவில் ஸ்டேஷனில் காஞ்சீபுரத்திலிருந்து வரும் வண்டியும் பஞ்சு செல்லும் வண்டியும் சந்தித்தன.

"இதென்னடா சங்கடம்!......அந்த வண்டியில், எனக்கு நேரே உட்கார்ந்திருப்பது அண்ணாதானா? ஐயோ, பார்த்துவிட்டாரோ என்னவோ? இருக்காது..." என்று எண்ணிக்கொண்டே தன் முகத்தைப் பத்திரிகைத் தாளினால் மறைத்துக்கொள்ள முயன்றான் பஞ்சு.

என். எஸ். ஐயர் பஞ்சுவைக் கண்டும் காணாது போல் இருந்துவிட்டார். ஆனால் வண்டி நகரும்போது இருவரும் ஒருவரை ஒருவர் கடைக் கண்ணால் பார்த்துக் கொள்ளாமல் இருக்கவில்லை.

பஞ்சு மட்டும் நினைத்துக்கொண்டான்: "என்னைப் போல் எத்தனையோ பேர் கிராப்பும் தலையுமாக இருக்கிறார்கள். அண்ணாவுக்கு நான்தான் என்று எப்படித் தெரியப்போகிறது?"

என். எஸ். ஐயர் தம் மனத்துக்குள்ளேயே சிரித்துக்கொண்டு, 'அசட்டுப் பையன். என்னிடத்தில் பயம் என்ன? சரளாவைப் பார்க்கப் போகவேண்டும் என்றால் நான் ஏன் தடுக்கப் போகிறேன்? இதற்குத் திருட்டுத்தனமாக ஏன் இப்படி மூஞ்சியை வைத்துக்கொண்டு ஓடிப் போகணும்! ஐயோ ராமா!' என்று எண்ணிக்கொண்டார்.

முற்றும்

மதுரை காமராசர் பல்கலைக்கழக... அன்பளிப்பு தி.க. சண்முகம் ... திருநெல்வேலி

# கலைமகள்

## வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| **இலக்கியம்** | | | |
| காவியமும் ஓவியமும் - கி. வா. ஜகந்நாதன் | ... | 2 | 8 |
| நாடோடி இலக்கியம் ,, | ... | 2 | 0 |
| புது மெருகு - ,, | ... | 1 | 8 |
| **கட்டுரை** | | | |
| மீண்டும் வாழ்ந்தால்... ? - மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் | ... | 2 | 0 |
| தமிழ்நாட்டில் காந்தி - டாக்டர் ராஜன் | ... | 1 | 12 |
| **நாடகம்** | | | |
| சுயம்வரம் - ஆர். ஜகந்நாதன் | ... | 2 | 8 |
| சின்ன தேவி - (மூன்றும் பதிப்பு) தி. நா. சுப்பிரமணியன் | ... | 0 | 12 |
| ரிஷப விஜயம் - கே. வி. பஞ்சநத ஐயர் | ... | 0 | 12 |
| **சரித்திரம்** | | | |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் - கி. சந்திரசேகரன் | ... | 8 | 0 |
| சீனத் தலைவர் சியாங் கே-ஷேக் - ப. ராமஸ்வாமி | | 3 | 0 |
| மகாதேவ கோவிந்த ரானடே - எஸ். ஆர். வேங்கடராமன் | ... | 1 | 8 |
| வ. வே. ஸு. ஐயர் - டாக்டர் தி. சே. சௌ. ராஜன் | | | |
| **வைத்தியம் - விஞ்ஞானம்** | | | |
| வீட்டு வைத்தியர் - டாக்டர் தி. சே. சௌ. ராஜன். | | 7 | 0 |
| ஆலய மணி - ஆர். கே. விசுவநாதன் | ... | 2 | 8 |
| **டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்கள்** | | | |
| மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை சரித்திரம் - பாகம் I & II | ... | 4 | 0 |
| வித்துவான் தியாகராசச் செட்டியார் | ... | 2 | 0 |
| உதயணன் சரித்திரச் சுருக்கம் | ... | 1 | 8 |
| மணிமேகலைக் கதைச் சுருக்கம் | ... | 1 | 4 |
| புத்த சரித்திரம் | ... | 1 | 4 |
| நினைவு மஞ்சரி - பாகம் I | ... | 1 | 4 |
| ,, ,, பாகம் II | ... | 2 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| நல்லுரைக் கோவை - *பாகம்* I - II ஒவ்வொன்றும் | 1 | 0 |
| புதியதும் பழையதும் ... | 1 | 0 |
| நான் கண்டதும் கேட்டதும் ... | 0 | 8 |
| கனம் கிருஷ்ணையர் ... | 0 | 8 |
| கோபாலகிருஷ்ண பாரதியார் ... | 0 | 8 |
| மகாவைத்தியநாதையர் ... | 0 | 6 |
| திருவள்ளுவரும் திருக்குறளும் ... | 0 | 6 |

## ரவீந்திரர் நூல்கள்

| | | |
|---|---|---|
| வீடும் வெளியும் - *கி. சாவித்திரி அம்மாள்* ... | 3 | 8 |
| காரும் கதிரும் - *த. நா. குமாரஸ்வாமி* ... | 2 | 0 |
| நாலு அத்தியாயம் - *த. நா.* ஸேனுபதி ... | 1 | 12 |
| இரு சகோதரிகள் (*இரண்டாம் பதிப்பு*) ... | 1 | 8 |
| டாகுரின் கடிதங்கள் - *த. நா.* ஸேனுபதி ... | 1 | 4 |

## வி. ஸ. காண்டேகர் நூல்கள்- *கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பு*

| | | |
|---|---|---|
| வெறும் கோயில் (*இரண்டாம் பதிப்பு*) ... | 2 | 0 |
| சுகம் எங்கே ? ( ,, ,, ) ... | 2 | 0 |
| அரும்பு ... | 1 | 4 |

## எப். டபிள்யூ. பெயின் நூல்கள்

(*கி. சாவித்திரி அம்மாள் மொழிபெயர்ப்பு*)

| | | |
|---|---|---|
| காலைப்பிறை (*நான்காம் பதிப்பு*) ... | 1 | 0 |
| நீர்க்குமிழி ... | 1 | 8 |
| அபராஜிதா (*இரண்டாம் பதிப்பு*) ... | 1 | 8 |

## பிற மொழிபெயர்ப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| ஸஞ்சீவினி - 'ஸோபான்' - அ. கி. *ஜயராமன் மொழிபெயர்ப்பு* ... | 3 | 8 |
| குஸுமா (*2-ஆம் பதிப்பு*) *சரத்சந்திரர் - அ. கி. ஜயராமன் மொழிபெயர்ப்பு* ... | 2 | 0 |
| நாடகராணி - பிரேம்சந்த் - கா. ஸ்ரீ. ஸ்ரீ. ... | 1 | 4 |
| முதற் காதல் - ஐவான் டர்ஜனீவ் 'இலங்கையர்கோன்' ... | 1 | 0 |
| ஜவாஹர்லால் நேருவின் கடிதங்கள் - *எஸ். ஆர். வேங்கடராமன் மொழிபெயர்ப்பு* ... | 2 | 0 |
| துவாதசோபநிஷத் - *ராஜாராமையர் மொழிபெயர்ப்பு* | 3 | 0 |

*தபால் செலவு தனி*

---

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை

## வெளியீடுகள்

### ...ய மொட்டு

வி. ஸ. காண... டகரின் இந்த நாவல் காமநுகர்ச்சியை ஆராய்ச்சிக்கு விஷயமாகக் கொண்டு அதன் வெவ்வேறு இயல்புகளை அலசிப் பார்த்து இல்லற இன்பத்தின் சூக்ஷ்ம நிலையை உணர்த்துகிறது. இது சுவைப் பிசகின்றிப் புரட்சிகரமான தோரணையில் எழுதப் பட்டுள்ளது. இந்த இரண்டாவது பதிப்பில் கா.ஸ்ரீ.ஸ்ரீ. தம் மொழிபெயர்ப்பு நடையைப் பின்னும் அழகுறச் செய்திருக்கிறார். ரூ. 3/8

### நந்துவின் பிறந்த நாள்

'குமுதினி' எழுதிய சிறுகதைகள் இப்போது புத்தக உருவில் வெளிவருகின்றன. சிறுவர் மனஸ்தத்துவத்தையும் ஆண்பெண்களின் தனிப்பட்ட மனப்பான்மைகளையும் கருத்திலே கொண்டு அமைந்த இந்தச் சிறுகதைகள் தமிழில் ஒரு புதிய பாணியைத் தோற்றுவிக்கின்றன. ரூ. 2/-

### ஆசா

நா. ஸீ. பட்கே அரசியல் நாவல்கள் எழுதுவதில் புகழ் பெற்ற மகாராஷ்டிர ஆசிரியர். உல்லாச வாழ்க்கையிலே மிதக்கும் ஓர் இளைஞன் தன் கம்பெனி முதலாளிகளுக்கு எதிராகச் சத்தியாக்கிரகம் செய்யும் ஓர் இளம் பெண்ணுடன் பழக நேருகிறது. ஆனால் சதிகாரனான மற்றொரு வாலிபன் அவளிடம் ஆசை கொண்டிருக்கிறான் .... இப்படி ரஸமாக ஓடுகிறது கதை. மொழி பெயர்த்தவர் கோ. ரா. புணதாம்பேகர். ரூ. 5/-

தபால் செலவு தனி

காரியாலயம், மயிலாப்பூர், சென்னை